சக்தி

து.94-A

லியோ டால்ஸ்டாய்

இனி

செய்ய வே

2768

மகாத்

"நான் டால்ஸ்டாயின் பு

படிக்கத் தொடங்கினேன்.

யாது?', 'சுவிசேஷங்களி

யின் புத்தகங்கள் என் ம

யு. ப.
பாகனேரி
11-5-40.

3468

Y.M.C. ASSOCIATION PAGANERI
பாகனேரி

3468

PRESENTED BY
L. M.
CHETTIAR

# இனி நாம் செய்ய வேண்டுவது யாது?

3468.

Y. M. C.
ASSOCIATION
PAGANERI.
பாகனேரி

லியோ டால்ஸ்டாய் இயற்றிய

# இனி நாம் செய்ய வேண்டுவது யாது?

(WHAT THEN MUST WE DO?)

3468.

மொழிபெயர்ப்பாளர் :

ரா. விசுவனாதன் அவர்கள்

திருவண்ணாமலை

சக்தி காரியாலயம்

52, அரமனைக்காரத் தெரு, சென்னை

பதிப்புரிமை] [விலை அணா 12

முதற் பதிப்பு: பிரமாதி, மாசி

2000 பிரதிகள்

சக்தி பிரஸ் லிமிடெட், (சாந்தி பிரஸ்), சென்னை.

## பதிப்புரை

'இனி நாம் செய்ய வேண்டுவது யாது ?' எனும் இம் மொழிபெயர்ப்பு நூலை தமிழ் மக்களுக்கு முதலாவது சக்தி மலராக அளிக்கின்றோம்.

இந்நூல் ருஷியப் பெரியார் லியோ டால்ஸ்டாய், மக்களின் அறிவுக் கண்ணைத் திறப்பதற்காக எழுதிய **What then must we do?** என்னும் நூலின் மொழிபெயர்ப்பாகும்.

இந்நூலை திருவருணையில் வதியும் ரா. விசுவநாதன் அவர்கள் இனிய தமிழில் மொழிபெயர்த்து உதவியிருக்கிறார். அவருக்கு எங்கள் மனமார்ந்த நன்றி.

தமிழ் மக்கள் இந்நூலை வாங்கிப் படித்து, நாங்கள் இன்னும் இம் மாதிரி நூல்களை வெளியிட ஊக்கமளிக்க வேண்டுகிறோம்.

★

**சக்தி காரியாலயத்தார்**

# இனி நாம் செய்ய வேண்டுவது யாது?

## அத்தியாயம் 1

என் வாழ்நாளில் வெகுகாலம் வரை நாட்டுப் புறத்திலேயே வசித்து வந்தேன். முடிவில் 1881-ம் வருடம் மாஸ்கோ நகருக்கு வந்து குடியேறினேன். குடியேறிச் சில நாட்கள் கழியு முன்னரே அந்நகரின் பரம தரித்திரதசையைக் கண்டு திடுக்கிட்டேன். நாட்டுப்புறத்து ஏழை மக்களின் கஷ்டங்களை நன்கு பார்த்தறிந்திருந்த போதிலும் நகரத்து ஏழைமக்களின் உண்மையான நிலைமையைப் பற்றி அணுவளவும் நான் அறிந்திருக்க வில்லை.

மாஸ்கோ நகரத்தில் எந்தத் தெரு வழியாகப் போனாலும் பிச்சைக்காரர்களைப் பாராமற்போக முடியாது. இவர்கள் கிறிஸ்துவின் நாமத்தை உச்சரித்துக்கொண்டு கையில் ஒரு பையுடன் போகும் நாட்டுப்புறத்துப் பிச்சைக்காரர்கள் போன்றவர்களுமில்லை; அவர்களிடம் பையுமில்லை, அவர்கள் பிச்சை

கேட்பதுமில்லை. ஆனால் யாராவது ஒருவரைப் பார்த்தால் அவர்கள் முகக்குறிப்பைக் கவனித்து அதற்குத் தகுந்தபடி நடந்து கொள்வார்கள்.

பணக்காரரா யிருந்து வறுமையுற்ற ஒருவரை நான் பார்த்தேன். அவர் கிழவர். நொண்டி நொண்டி மெதுவாகக் கஷ்டத்துடன் நடப்பார். யாராவது ஒருவரைப் பார்த்தால் நொண்டிக் கொண்டே வணங்குவார். அவர் வணங்குவதைக் கவனித்து நிற்பதைக் கண்டால் உடனே மறுபடியும் வணங்கி மரியாதையுடன் பிச்சை கேட்பார். அவரைக் கவனியாது சென்று விட்டாலோ தானும் அவரைப் பாராதது போற் சென்று விடுவார்.

அநுபவமுள்ள மாஸ்கோ நகரப் பிச்சைக்காரன் இவ்வாறு தானிருப்பான். முதலில் இவர்கள் ஏன் வெளிப்படையாகப் பிச்சை கேட்பதில்லை யென்று யோசித்தேன். பிறகுதான் அதன் காரணத்தை அறிந்து கொண்டேன்.

ஒரு நாள் ஒரு போலீஸ்காரன் நீர்வியாதி வாய்ந்த ஓர் கிழவனை ஒரு வண்டிக்குள் தள்ளினான். அவன் என்ன செய்தானென்று நான் போலீஸ்காரனைக் கேட்டேன். போலீஸ்காரன் "அவன் பிச்சையெடுத்துக் கொண்டிருந்தான்" என்று விடையளித்தான். "அப்படியானால் பிச்சை யெடுப்பது கூடாதெனச் சட்டமா?" என்று கேட்டேன். "அப்படித்தான்" என்று சொல்லிக்கொண்டு போலீஸ்காரன்

போய்விட்டான். பிச்சை யெடுப்பதை உண்மை யாகவே தடுத்திருக்கிறார்களா? எதற்காக? என்று தெரிந்துகொள்வதற்காக நானும் ஒரு வண்டி யமர்த்திக்கொண்டு தொடர்ந்தேன். ஒருவன் மற்றொருவனிடம் போய் ஏதாவது ஒரு பொருளைக் கேட்பதைத் தடுப்பது எப்படி நியாயமான காரியமென்று எனக்குப் புலப்படவில்லை. பிச்சை யெடுப்பது எங்கும் பரவியுள்ள ஓரூரில் இதைச் சட்ட விரோதமென்றுங் கருதுகிறார்களா என்றும் சந்தேகித்தேன்.

போலீஸ் ஸ்டேஷனுக்குள் நுழைந்து கையிற் பட்டாக்கத்தியும் கைத்துப்பாக்கியும் வைத்திருந்த ஒரு உத்தியோகஸ்தரை நோக்கி அந்தப் பிச்சைக்காரனை எதற்காகக் கைது செய்தார்கள் என்று கேட்டேன். அதற்கு அவ்வுத்தியோகஸ்தர் என்னை உற்று நோக்கி, "நீ யார் அதைக் கேட்பது?" என்றார். ஆனால் உடனே அவர், "அதிகாரிகள் இவனைப் போன்றவர்களைக் கைதுசெய்ய வேண்டுமென்று உத்தர விட்டிருப்பதால் கைது செய்வது அவசியமாயிற்று" என்று பதிலளித்தார்.

நான் திரும்பிப் போகும்போது அப்பிச்சைக்காரனைக் கைது செய்த போலீஸ்காரனைச் சந்தித்து "அப்படியானால் கிறிஸ்துவின் நாமத்தாற் பிச்சை கேட்பது கூடாதென்று தடுத்திருப்பது உண்மை தானா?" என்று கேட்டேன். தூக்கத்திலிருந்து சரேலென விழித்தாற்போல் அவன் எழுந்திருந்து "அதிகாரிகளின் உத்தரவு அப்படி, நாங்கள் என்ன செய்வது?" என்றான். இத்துடன் நான் வண்டியேறி வீடுபோய்ச் சேர்ந்தேன்.

அதுமுதல் பல முறை ஏழைப் பிச்சைக்காரர்களைப் போலீஸார் இழுத்துக்கொண்டு போவதைப் பார்த்திருக்கிறேன். இவர்களை முதலில் போலீஸ் ஸ்டேஷனுக்கும், பின்னர் இவர்களுக்காக ஏற்பட்டதோர் தொழிற்சாலைக்கும் கொண்டுபோவது வழக்கம். ஒரு சமயம் முப்பது பிச்சைக்காரர்களைப் போலீஸார் இட்டுச் செல்வதைப் பார்த்தேன்.

தெருவெல்லாம் பிச்சைக்காரர் கூட்டமா யிருந்த போதிலும், கோயில்களுக்குச் சமீபத்தில் வரிசை வரிசையாய் அவர்கள் கூடி யிருந்தபோதிலும் மாஸ்கோவில் பிச்சை யெடுப்பது கூடாதென்பது சட்டம். இப்படியிருக்கச் சிலரை மாத்திரம் கைதுசெய்து மற்றவரைச் சும்மா விட்டுவிடுவதேன்? ஒன்று, பிச்சைக்காரர்களுள் யோக்கியர்கள் அயோக்கியர்கள் என்னும் பிரிவிருக்கவேண்டும்; இன்றேல் எல்லோரையும் கைதுசெய்தல் முடியாத காரியமா யிருக்கவேண்டும்; அல்லது கைதுசெய்யச் செய்ய மேன்மேலும் பிச்சைக்காரர்கள் வந்துகொண் டிருக்கவேண்டும்.

மாஸ்கோவில் விதவிதமான பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள். பிச்சை யெடுத்தே ஜீவிப்பவர்களுமுண்டு. மாஸ்கோ வந்து சேர்ந்து திரும்பச் சொந்த ஊருக்குப்போக வழியின்றி உண்மையாகவே கஷ்டப்படும் பிச்சைக்காரரு முண்டு.

பிந்திய வகுப்பைச் சார்ந்த பல நாட்டுப்புறத்தார்களை நான் பார்த்திருக்கிறேன். நோயினால் வைத்தியசாலையில் தங்கியிருந்து குணமானதும் வெளியேறி உண்ண உணவோ சொந்தவூர் செல்லப்

பணமோ இல்லாமல் தவிப்பவர்களுமுண்டு. சிலர் குடியர்களானவர்கள். சிலர் வயது முதிர்ந்தவர்கள். வேறு சிலர் குழந்தை குட்டிகளுடன் கஷ்டப்படுங் கைம்பெண்கள். வேறு சிலர் நல்ல வேலை செய்யக் கூடிய திடகாத்திரர்கள்.

நான் மாஸ்கோவுக்கு வந்தது முதல் 'குருவி மலை' என்னுமிடத்திற்குப் போய் அங்கே தினந்தோறும் தேகப் பயிற்சிக்காக ரம்பக்காரர் இருவருடன் சேர்ந்து மரமறுப்பது வழக்கம். திடகாத்திரர்களான இப்பிச்சைக்காரர்களிடம் இடுப்புத் துணியைத் தவிர வேறு சொத்தில்லை. இவர்கள் அன்றன்று மிகப் பாடு பட்டு வேலை செய்து சம்பாதிப்பதோடு கொஞ்சம் சேர்த்தும் வைப்பார்கள்.

ஆகையால் தெருவில் திடகாத்திரர்களான பிச்சைக்காரர்களைப் பார்க்கும் போதெல்லாம், ஏன் இவர்களிற் சிலர் மாத்திரம் உழைப்பாளிகளாகவும் மற்றவர்கள் சோம்பேறிப் பிச்சைக்காரர்களாகவும் இருக்கின்றனர் என்று யோசித்தும் எனக்குத் தெரிய வில்லை. இத்தகைய பிச்சைக்காரர்களைப் பார்க்கும் போது, அவர்கள் எப்படி அந்நிலைமைக்கு வந்தார்க ளென்று கேட்பேன். ஒரு நாள் திடசரீரியான ஒரு குடியானவனைப் பார்த்து, "நீ யார்? எங்கிருந்து வந்திருக்கிறாய்? ஏன் பிச்சை யெடுக்கிறாய்?" என்று கேட்டேன். அவன், கலூகா என்னுமிடத்திலிருந்து வேலைக்காக வந்ததாகவும், சின்னாள் வரை மரமறுக் கும் வேலை கிடைத்து வந்ததாகவும், கடந்த இரண்டு வாரங்களாக வேலை யகப்படாமல் வருந்துவதாகவுங்

கூறினான். ரம்பம் வாங்கக்கூட அவனிடம் பண மில்லை.

ரம்பம் வாங்குவதற்காக அவனிடம் பணம் கொடுத்து எவ்விடத்திற்கு அவன் வரவேண்டுமென் பதையுங் கூறினேன். "வேண்டிய வேலை இருக் கிறது. கட்டாயம் வந்து சேர்" என்று நான் சொன்னதற்கு அவன், "என்ன ஐயா! வேலை கிடைக் கும்போது பிச்சை யெடுப்பதில் என்ன சுக மிருக் கிறது" என்று உறுதி கூறிப் போனான். மறுநாள் அவன் வருவானென்று நான் எதிர்பார்த்த தெல்லாம் வீணாயிற்று. அவன் வரவேயில்லை. இவ்வாறு நான் அடிக்கடி மோசம் போயிருக்கிறேன்.

ஊருக்குப்போக வழிச்செலவுக்கு மாத்திரம் கொஞ்சம் பணவுதவி வேண்டுமென்று கேட்டு வாங் கிக்கொண்டு அதே ஊரில் பல நாட்களுக்குப் பின் னும் தெருக்களிற் சுற்றிக்கொண்டு என்னைப் பலர் ஏமாற்றி யிருக்கிறார்கள். இவர்களிற் சிலர் மறதியாக என்னிடமே மீண்டும் மீண்டும் பழைய கதையையே சொல்வதும், நான் யார் என்று தெரிந்ததும் வெட்கித் தலைகுனிந்து போவதுமுண்டு. ஆகவே பிச்சைக்கார னென்று சொல்லித் திரிபவர்களில் இத்தகைய போக் கிரிகள் பலர் இருந்ததைக் கண்டுகொண்டேன்.

போக்கிரிகளா யிருந்தபோதிலும், இவர்களைக் கண்டு இரங்கவேண்டி யிருந்தது. இவர்களனைவரும் உடுத்தத் துணியுங் குடிக்கக் கஞ்சியுமில்லாது திரியும் ஏழைகள். குளிரில் விரைத்துத் தெருக்களில் இறந்து போகிறவர்களும், இவ்வாழ்வின் இன்னல் தாங்காது

சுருக்கிட்டு உயிரை மாய்த்துக் கொள்பவர்களும் இவர்களைப் போன்றவர்களே.

---

## அத்தியாயம் 2

இக்கொடிய வறுமையைப் பற்றி எனது நண்பர்களுடன் நான் பேசினபோது அவர்கள், "இது வரை தாங்கள் பார்த்தது ஒன்றுமேயில்லை. பஞ்சத்தில் அடிபட்டவர்களைப் பார்க்க வேண்டுமானால் கித்ரோப் மார்க்கெட்டுக்கும் சத்திரங்களுக்கும் போகவேண்டும்" என்றார்கள்.

எனது நண்பரொருவர் வேடிக்கையாக, "அங்கே பஞ்சத்தில் அடிபட்டவர்களின் கூட்டம் மாத்திரமல்ல, ஒரு பெரிய சேனையே இருக்கிறது" என்றார். அவர் சொன்னதும் சரியே. ஏனெனில், மாஸ்கோவில் ஐம்பதினாயிரம் பிச்சைக்காரர்களிருந்தனர். நகரத்தினர், சரியாக இத்தனைப் பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள், அவர்கள் படுங் கஷ்டங்களிவை என்பதுபற்றி விளையாட்டாகப் பேசுவார்கள். நான் லண்டனுக்குப் போனபோதும் அங்குள்ளவர்களும் அந்நகரின் வறுமையைப்பற்றி இம்மாதிரியே பெருமையுடன் பேசுவதைப் பார்த்திருக்கிறேன்.

கித்ரோப் மார்க்கெட்டுக்குப் போகவேண்டுமென்று தீர்மானித்தேன். ஆனால் அங்குபோகும் போது எனக்கு வருத்தமும் அவமானமும் மேலிட்டன. இவர்களுக்கோ நாம் உதவிசெய்யவில்லை; இவர்களுடைய கஷ்ட நிஷ்டூரங்களைப் பார்ப்ப

தெதற்கு என்று என் மனத்தில் ஓரெண்ணம் உதித்தது.

இருந்தாலும் சில சமாதானங்களால் மனத்தைத் தேற்றிக்கொண்டு குளிர்ந்த நாளொன்றில் வறுமைக்கே இருப்பிடமான கித்ரோப் மார்க்கெட்டை நோக்கி நடந்தேன். அப்பொழுது மாலை நாலுமணியிருக்கும். தங்கள் நிலைக்குப் பொருந்தாத பலவித உடைகளை யுடுத்தியிருந்த பலரைக்கண்டேன். சுற்றிலுமுள்ளவர்கள் தங்களைப்பற்றி என்ன நினைப்பார்கள் என்னும் எண்ணம் சிறிதும் அவர்களுக்கில்லை. அவர்கள் கூட்டங் கூட்டமாக ஒரே திசையிற் போவதைப் பார்த்து, அவர்களைத் தொடர்ந்து கித்ரோப் மார்க்கெட் சேர்ந்தேன். வயதான மாதரும் இளம்பெண்களுமாகப் பலர் கந்தைகளையும் அவலக்ஷணமான துணிமணிகளையு மணிந்து அங்குமிங்கும் அலைந்து கொண்டு சில்லறைச் சாமான்களை விற்றுக்கொண்டு ஒருவரை யொருவர் வைதுகொண்டிருந்தனர்.

சந்தை கலைந்தும் ஜனங்களிற் பெரும்பான்மையோர் ஓரேமார்க்கமாய்ப் போய்க்கொண்டிருந்தனர். நானும் அவர்களோடேகினேன். போகப் போகக் கூட்டம் அதிகரித்தது. அதில் ஒரு வயதானமாதும் இளம்பெண்ணொருத்தியும் பேசிக்கொண்டு போவதைக் கவனித்தேன். அவர்கள் பேசுவதெல்லாம் கெட்டவார்த்தைகள். சுற்றியிருந்தவர்கள் அதைக் கவனியாது சென்றதிலிருந்து அவ்வாறு பேசுவது எப்பொழுதும் அவர்களுக்கு வழக்கமென்று அறிந்து கொண்டேன். இரவு தங்குவதற்கான விடுதிகளில் அக் கூட்டத்தின் பெரும்பான்மை நுழைந்தது. வாயி

னுக்கு வலது பக்கம் பெண்டிரும் இடது பக்கம் ஆடவருமாக எல்லோரும் கதவு திறப்பதற்காகக் காத்திருந்தனர். தினந்தோறும் மாலை ஐந்து மணிக்குக் கதவு திறப்பது வழக்கம். நான் ஒரு ஓரத்தில் நின்று கொண்டிருந்தேன். எனக்கருகே யிருந்தவர்கள் இமைகொட்டாது என்னை உற்று நோக்கினர். அவர்கள் என்னைப்பார்த்து, "நீர் எங்களைச் சேர்ந்தவரல்லவே! எங்கிருந்தோ இங்கு வந்தவரன்றோ! எங்கள் கோலத்தைக் கண்டுகளிக்கவும் எங்களைப் பார்த்துப் பொழுதுபோக்கவும் ஏளனஞ் செய்யவும் வந்தீரோ தாங்கள்? அல்லது எங்களைக் கண்டிரங்குபவரா? எங்களைக்கண்டு இரக்கப்படுவோர் ஏதேது! இவ்வுலகிலும் இருக்கிறார்களா?" என்று கேட்பது போலிருந்தது.

அவர்களில் யாராவது ஒருவரிடம் பேச எனக்கு விருப்பமாயிருந்தது. ஆனால் நானும் பேச முன்வரவில்லை; அவர்களும் வரவில்லை. சமூகத்தில் அவர்களுக்கு மெனக்கும் எவ்வளவு பேதமிருப்பினும் முடிவில் நான் பேசத் தொடங்கினேன். எனக்கடுத்தாற்போல் சிவந்த தாடியும் வீங்கிய முகமுமுள்ள ஒருவனிருந்தான். அவனுடுத்தி யிருந்தது கந்தை. அவனுடைய ஊரெது வென்று நான் விசாரிக்கத் தொடங்கவும் எங்களைச் சுற்றிக் கூட்டம் கூடிவிட்டது. அவன் வேலை செய்து வரி முதலியவற்றிற்குப் பணமீட்டப் பக்கத்து கிராமத்திலிருந்து வந்ததாகச் சொன்னான். சிப்பாய்கள் எல்லாவேலைகளையுங் கைப்பற்றிக் கொண்டதால் வேலையகப்படவில்லை; ஆகையால் இரண்டுநாளாகப் பட்டினி யென்றான். பக்கத்தில் சில சிற்றுண்டிகளை

விற்றுக்கொண்டிருந்த ஒரு சிப்பாயை அவனுக்குச் சிறிதுணவு கொடுக்கச் சொன்னேன்.

பெரும்பாலும் எல்லோர் கதையும் இதுபோன்றது தான். தொடக்கத்தில் வேலைகிடைத்துப் பின்னர் கிடைக்காது கஷ்டப்படுபவர்களும், பணப்பையைத் தவறவிட்டு அல்லது பறிகொடுத்துச் சொந்தவூருக்குத் திரும்ப முடியாதவர்களுமாயிருந்தனர். இவர்களைத் தான் கைது செய்வது வழக்கம். கைதியாவதுகூட இவர்களுக்கு ஒரு பரிகாரமாகத் தோன்றியது.

நீண்ட மூக்கும் வெளுத்த முகமுமுள்ள ஒரு மெலிந்த வாலிபன் கூட்டத்தை விலக்கிக் கொண்டு குளிரால் நடுங்கியவாறு எனக்கருகே வந்தான். அவனுக்கும் சிற்றுண்டி சிறிது வழங்கச் செய்தேன். மொட்டைத் தலையனும் கரியவனுமான பெரிய ஆள் ஒருவன் இவனைத் தள்ளிக்கொண்டு வந்து உணவு கேட்டான். குடிகாரனொருவனும் குளிரால் முழங்கால் கிட்டிபோட்டுக் கொண்டிருந்த ஒருவனும், மூக்கறையனொருவனும் இன்னும் பல குரூபிகளும் குளிராலும் பசியாலும் வருந்துவோர் பலரும் வந்தனர். அவர்கள் யாவரும் வணக்க வொடுக்கத்துடன் கூட்டமாக உணவுக்காகக் கெஞ்சலாயினர். இதற்குள் இருந்த உணவெல்லாம் செலவாகிவிட்டது. ஒருவன் சிறிது பணங்கேட்டான்; கொடுத்தேன். இரண்டாவது, மூன்றாவதென கூட்டம் முழுவதும் பணத்திற்காக என்னை நெருக்கத் தொடங்கியது. அடுத்த வீட்டுக்காரன், கூட்டத்தைப் பார்த்துவிட்டு, "என் வீட்டிற்குமுன் கூட்டம் போடாதீர்கள், விலகுங்கள்" எனவே எல்லோரும் விலகிக்கொண்டனர்.

ஒவ்வொருவனும் கெஞ்ச ஆரம்பித்தான். யாருக் கிரங்குவதெனத் தெரியவில்லை. ஒருவனைக் காட்டிலும் ஒருவன் பஞ்சத்திலடிபட்டும் வாட்டமுற்றுந்தோன்றி னான். என்னிடமிருந்த பணத்தையெல்லாங் கொடு த்துவிட்டேன். பிறகு எல்லோருடனும் சேர்ந்து அவ் வீட்டிற்குள் நுழைந்தேன். வீடு விசாலமாகவும் நான்குபாகங்க ளுள்ளதாகவு மிருந்தது. மேல்மாடி யில் ஆண்களும் கீழ்பாகத்தில் பெண்களுமிருந்தனர். பெண்டிர் தூங்குவதற்காக வென்றிருந்த இடத் திற்கு முதலிற் போனேன்.

கந்தையணிந்த எல்லாவயதுப் பெண்டிரும் கூட் டங்கூட்டமா யுள்ளே நுழைந்தனர். பின்பு மாடிக் குப் போனேன். அங்கே அதேமாதிரி மனிதர்க ளிருந் தார்கள். என்னிடம் பணம் வாங்கிக்கொண்ட ஒரு வனைக் கண்டதும் சங்கோசத்துடன் சரேலெனக் கீழே இறங்கி வந்தேன்.

பிறகு வீடுபோய் சமக்காளங்கள் விரித்த தரை மீது நடந்து சென்று உடைகளைக் களைந்து ஐந்துவிதங் களாகச் சமைக்கப்பெற்ற உணவை வயிறாரவுண் டேன். அப்போது பாரிஸில் முப்பது வருடங்களுக்கு முன் நடந்த சம்பவமொன்று நினைவுக்கு வந்தது. ஆயிரக்கணக்கானவர்கள் வேடிக்கை பார்த்திருக்க ஒருவன் தூக்கிடப் பட்டான். தூக்கப் பட்டவன் பெரிய குற்றவாளிதான். இதுபோன்ற சந்தர்ப்பங் களில் மரணதண்டனை விதிப்பது நியாயந்தானென்ப வர்களின் வாதங்களையெல்லாம் எவ்வளவு கேட்டிருந் தாலும் தலைவேறு உடல்வேறாக வெட்டப்பட்ட போது நான் மெய்சிலிர்த்தேன், திடுக்கிட்டேன்.

மரணதண்டனை விதிப்பது முற்றிலும் அசுரத்தனமான வழக்க மென்று தெளிவாயுணர்ந்தேன். மரணதண்டனை விதிப்பது நியாயமென்பது கொடிய பொய். அது படுகொலையேயன்றி எக்காலும் நியாயமான காரியமாகாது. அதற்கு என்ன பெயர் கொடுத்த போதிலும் அது உலகத்திலேயே மிகக் கொடிய பாப மாகிய கொலைபாதகமே யாகும். நான் பேசாமலும் தலையிட்டுத் தடுக்காமலும் இருந்ததால் அப் பாபத் திற்கு உடந்தையும் பங்காளியுமானேன்.

இக் கூட்டத்தின் துன்பம் பசிக்கொடுமை முத லியவற்றையும் இவர்கள் துச்சமாய் நடத்தப்படுவதை யும் பார்த்ததும் அக்காலத்தில் ஏற்பட்டது போன்ற ஒரு உணர்ச்சியுண்டானது. இவ்விஷயம் என் புத்திக்கு எட்டியதோடு மாத்திரம் நிற்கவில்லை. என்னே! ஆயி ரக்கணக்கானவர்கள் மாஸ்கோவில் சொல்லொணுத் துயரத்தில் ஆழ்ந்திருக்க, நானும் என்னைப் போன்ற ஆயிரக்கணக்கானவர்களும் சகல சுகபோகங்களையும் அனுபவித்துக் கொண்டு, குதிரைகளை மிகச்சாவதான மாய் கவனித்துக்கொண்டு, பட்டு விரிப்புக்களையும் ரத்னகம்பளங்களையும் வீட்டுத் தரையில் விரித்து வாழ்ந்துவருவதா?

உலகத்திலுள்ள நுட்பமதியினரும் கல்வியாள ரும் என்ன சொன்னலும், உலகின்போக்கை மாற்ற முடியாதென வாதித்திட்டாலும், கெட்டவாழ்க்கை கெட்டவாழ்க்கையே. அதிக சுகபோகங்களைத் தேடுவ தால் நான் பிறரை வறுமையிலும் துயரத்திலும் ஆழ்த்துகிறேன்.

பாரிஸில் கொலை நடந்த சமயம் நான் செய்திருக்கக் கூடியதெல்லாம், கொலையாளிகளை நோக்கி, "நீங்கள் செய்வது படுகொலையேயன்றி வேறில்லை. நில்லுங்கள்! நில்லுங்கள்!" என்ற கூக்குரலேயாகும். ஆனால் ஏழைகளின் விஷயத்திலோ என் கையிலிருந்த பணத்தை மாத்திரமன்றி, என் துணிமணிகள் வீட்டிலுள்ள பொருள்கள் எல்லாவற்றையுங் கொடுத்துதவியிருக்கவேண்டும். ஆனால் நான் அப்படிச் செய்யவில்லை. அதுபற்றி மிக வருந்தினேன்; இப்போதும் வருந்துகின்றேன். பிறர் உணவில்லாது வருந்தும்போது நான் உணவைச் சேகரித்து வைத்துக்கொண்டு சும்மாவிருக்கும் வரையும், பிறர் உடையில்லாதபோது நான் அளவுக்கு மிஞ்சிய உடைகளையுடுத்திருக்கும் வரையும், ஏழைகளைத் துன்புறுத்திய கொடிய பாதகம் என்னைச் சாராதிருக்காது என்பதை மறக்கவும் முடியாது.

---

## அத்தியாயம் 3

அன்று மாலையே எனது நண்பர் ஒருவரிடம் எனது அனுபவங்களை எடுத்துரைத்தேன். அதற்கவர் "இதென்ன ஒரு ஆச்சரியமா? நகரங்களிலெங்கும் இம்மாதிரி தானிருக்கும். நாகரிக தேசங்களெங்கும் இவ்வாறுதா னிருக்கும். லண்டனில் இதைவிட மோசமாயிருக்கிறது. ஆகையால் இது இயற்கைக்கு விரோதமொன்றுமில்லை. இதுபற்றிக் கவலைப்பட வேண்டியதுமில்லை" என்று விடையளித்தார்.

எனது நண்பருடன் நான் இது விஷயமாய் அதிக உற்சாகத்துடனும் சில சமயங் கோபத்துடனும் என்னையறியாமலே உரத்த குரலில் தர்க்கித்தேன். அடுத்த அறையிலிருந்த என் மனைவி என்ன நடந்து விட்டதோவென்று பார்க்க வந்துவிட்டாள். நான் பேசியதெல்லாம், இனி நாம் இத்தகைய வாழ்க்கை நடத்தக் கூடாது. இவ் வாழ்க்கை அதர்மமானது என்பது பற்றியே. ஆனால் நான் அவசியமின்றி ஆத்திரப்படுகிறேனென்றும் கோபங்கொள்கிறேனென்றும், ஏழைகள் கஷ்டப்படுவது பற்றி நான் வருத்தப்படுவதும் பிறரை வருந்தச் செய்வதும் சரியன்றென்றும் சொன்னார்கள்.

அவர்கள் கூறியது சரியென்று அச்சமயம் வாயை மூடிக்கொண்டேனேயன்றி என் மனத்திற்குள் நான் தர்மவழியிலிருக்கிறேனென்றும், என் மனச் சாக்ஷியின் உத்தரவை அலக்ஷியஞ் செய்வது முடியாதென்றும் புலப்பட்டது. முதலிற் சுகமாயும் விநோதமாயுங் காணப்பட்ட நகரவாழ்வும் அதன் சுக போகங்களும் இப்பொழுது நரக வாழ்வைப்போல் என்னை வாட்டின.

எனது வாழ்க்கை முறையிற் பிசகொன்றுமில்லையென எவ்வளவுதான் என்னைத் தேற்றிக்கொள்ள முயன்றாலும், அளவுக்கு மிஞ்சிய விலையுயர்ந்த ஆடைகளை யுடுக்கும்போதும், அறுசுவை யுண்டிகளை அருந்துங்காலும், உயர்ந்தஜாதிக் குதிரைகள் பூட்டிய வண்டிகளிற் செல்லும்போதும், நாடகங்களைப் பார்க்கும்போதும், சங்கீதக் கச்சேரிகளிலிருக்கும் போதும், பசியாலும் குளிராலும் நோய்களாலும்

வருந்தும் ஏழைகளின் ஞாபகம் வரும். உடனே நாங்கள் அழிக சுகங்களைத் தேடித்திரியும் வழக்கத்தாலேயே இத்தகைய ஏழைகள் பெருகுகின்றனர் என்று உறுதியாகப் புலப்பட்டே வந்தது.

இவ்வெண்ணம் எப்பொழுதும் என் மனத்தை யுறுத்திக்கொண்டிருந்த போதிலும் நடுவே வேறொரு எண்ணம் இதைச் சற்று மறைத்தது. என் சிநேகிதர்களோடு இதைப் பற்றிப் பேசியபோதெல்லாம் அவர்கள் எல்லோரும் ஒரே ரீதியாய் "இது உலக வியற்கையான சமாசாரம். நீவிர் அன்பு பெருகும் நெஞ்சத்தினரா யிருப்பதால் இவ்வாறு வருந்துகின்றீர்" என்று ஓயாது சொல்லிவந்ததிலிருந்து நானே எனது நல்ல சுபாவத்தைப் பற்றியும் ஏழைகளிடம் எனக்குள்ள அனுதாபத்தைப் பற்றியும் மேன்மையா யெண்ணிக்கொண்டேன்.

இதன் பயன் யாதெனின், முதலில் என் வாழ்க்கையில் எனக்குற்ற வெறுப்பு மட்டுப்பட்டு எனது பரோபகார சிந்தையை மற்றவர்களுக்கு வெளிக்காட்டும் ஆசையும் உண்டானது. 'என் வாழ்க்கையை மாற்றிக் கொள்வதால் என் சுற்றத்தாருக்கும் நண்பர்களுக்கும் மனவருத்த முண்டாகுமே யன்றி உலகத்தின் வறுமையுந் துயரும் குறைந்துவிடாது. ஆகவே என் சுக வாழ்க்கையை நான் வெறுத்து விடுவதால் ஒன்றும் நடவாது. இருந்த நிலைமையில் இருந்துகொண்டே கூடியமட்டும் ஏழைகளுக்கு உதவ வேண்டும்' என்றெண்ணத் தொடங்கினேன்.

நான் மிகவுந் தர்மசீலன்; தன்னுயிரைப் போல் மன்னுயிரையும் பேணுபவன் என்று எண்ணிக்

கொண்டேன். எனது நற்குண நற்செயல்களை எல்லோரும் போற்றும்படியான பரோபகார வேலை யொன்றை மேற்கொள்ள விரும்பினேன். ஆயினும் மனத்திற்குள்ளே என் வாழ்க்கைமீதிருந்த கசப்பு மாறவில்லை. பற்பல எண்ணங்கள் மனத்திற்றோன்றி மனச்சாக்ஷியின் சத்தத்தை அமுக்கிவிட்டன. ஜனத் தொகைக் கணக்கெடுக்குங் காலமும் நெருங்கி வந் தது. இந்தச் சந்தர்ப்பத்திற் பெருங்கீர்த்தி பெற்று விட வேண்டுமென் றெண்ணினேன்.

மாஸ்கோவில் பரோபகாரச் சங்கங்கள் பலவுள. நான் செய்ய உத்தேசித்த வேலைக்கு முன் இவை யாவும் தூணுக்கு முன் துரும்புபோற் காணப் பட்டன. நான் செய்ய வுத்தேசித்தது யாதெனில், பெரியதோர் நிதி சேர்த்து இவ்வுபகார வேலையில் ஈடு பட விரும்பியவர்களைச் சேர்த்துக்கொண்டு, ஜனத் தொகைக் கணக்கர்களுடன் சென்று ஏழைகள் வசிக்கு மிடங்களை யெல்லாம் பார்த்து, அவர்களோடு பழகி, அவர்கள் தேவைகளை யுணர்ந்து, பணவுதவி வேண்டியவர்க்குப் பணமும் வேலை செய்யக்கூடிய வர்க்கு வேலையுங் கொடுத்து அவர்களுடைய மக்களைப் பள்ளிக்கூடங்களுக் கனுப்பி, வயோதிகரை யாதரித்து இன்னும் இயன்றமட்டும் உதவி செய்யவேண்டு மென்பதுதான்.

வறுமை தலை காட்டாமல் விரட்டுவதற்காக சாசுவத சங்கமொன்று நிறுவி, சங்கத்தைச் சார்ந்த அங்கத்தினர் மாஸ்கோவின் ஒரு பாகத்திற் பரோபகார வேலையைப் பொறுப்பாய் மேற்கொள்ள வேண்டும் என்றுந் தீர்மானித்தேன். இனி வறுமையுந் துன்பங்

களும் ஓடிப்போம். ஏன்? டால்ஸ்டாய் இவ்வேலையை மேற்கொண்டு விட்டாரல்லவா! ஆகவே எங்கள் சுக போகங்களில் நாங்கள் முன்போலவே அழுந்தியிருக்கலாம் என்றெண்ணி எனது திட்டத்தைப் பற்றிப் பிரசுரமொன்று அச்சிட்டு வெளியிட்டேன்.

பிறகு சில பெரிய மனிதரிடஞ் சென்று என் திட்டத்தைப் பற்றிய விவரங்களையும் எனது நோக்கங்களையுங் கூறிப் பணவுதவி வேண்டினேன். அவர்கள் என்பால் வைத்திருந்த மரியாதையினால் நான் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தனரே யன்றித் தமக்காக இதிற் பற்றுதல் சிறிதும் கொண்டிலர். ஆதலின் அவர்கள், "தாங்கள் சொல்வதெல்லாம் மிகவும் நல்லதுதான். எனக்கும் அதே அபிப்பிராயந்தான். ஆனால் ஊர்க்காரர்கள் எங்கே வழிக்கு வரப்போகிறார்கள். அவர்களுக்கு அதிற் சிரத்தையிருப்பதாகவே தெரியவில்லையே" என்று சொல்லி விட்டனர்.

அவர்களால் இக்காரியத்திற்கு உதவமாட்டோமென்று மறுக்க முடியவில்லை. உண்மையாக உதவி செய்ய விருப்பமுமில்லை. ஆதலால் அவர்கள் கொடுப்பதாகச் சம்மதித்த பணத்தை கொடுக்கவே யில்லை. காரியத்திற் பேரவா இருந்தாலன்றோ உதவி செய்ய முன் வருவர்? தங்களன்பிற்குகந்த ஒரு மாதைப் பார்க்க ஏதாவது வாங்கிச் செல்லவேண்டி யிருந்தாற் கூசாது பணத்தைச் செலவிடுவர்.

பணக்காரரிற் பலர் கோடீஸ்வரர்களா யிருந்தும் ஏழைகளுக்குதவ முன்வரவில்லை. சிலர் தங்களாலியன்ற தான தருமங்களெல்லாஞ் செய்தாய் விட்டதென்றும் கைவசம் போதிய பணமில்லை யென்றுங்

கூறிவிட்டனர். வீடுபோய் படுத்தேன். என் வேலை எங்கே சரிவர நிறைவேருது நின்றுவிடுமோ வென்று கவலை யுற்றேன். இருந்தாலும் எடுத்த காரியத்தைக் கைவிடுதல் அபகீர்த்தி என்றெண்ணி, மறுநாள் ஜனத் தொகை எடுப்பவர் கூட்டத்தில் என் திட்டத்தைப் பற்றிய பிரசுரத்தைப் படித்தேன். எனது அபிப்பிரா யங்கள் பெரும்பான்மையும் பைத்தியமானவை யென்று எல்லோரும் அபிப்பிராயப் பட்டதாக அவர் கள் முககுறி கூறிற்று. இது பரோபகார வேலை யாதலின் யாரும் கண்டித்துப் பேசவில்லை. ஆயினும் ஒவ்வொருவரும், "பொதுஜனங்கள் உற்சாகமற்ற கல்நெஞ்சர்களா யிருக்கிருர்களே" என்று பேசிக் கொண்டனரே யன்றி, அப் பொதுஜனத்தில் தானு மொருவன் என்பதை அவர்கள் உணரவில்லை.

நான் தொடங்கிய வேலை என் மனதிற்குகந்த தன்று. ஆயினும் என் திட்டத்தை அச்சிட்டு வெளி யிட்டு விட்டபடியால் யாது பயன்வரினும் தொடங் கியதை முடித்துத் தீரவேண்டு மென்று எண்ணி னேன்.

---

## அத்தியாயம் 4

மாஸ்கோவிலேயே துன்மார்க்கமும் வறுமையுங் குடிகொண்ட பெரிய சத்திரமொன்றில் ஜனத் தொகைக் கணக்கு நான் எடுக்கும்படி என் விருப்பப் படி ஏற்பாடானது.

ஜனத்தொகைக் கணக்கெடுக்கும் தினத்திற்கு முன்பே ஒருநாள் அந்தச் சத்திரத்தைப் பார்த்துவரப்

போனேன். இரண்டு சிறு பையன்களும் ஒரு கிழவியும் பக்கத்திலுள்ள ஒரு மலைமேலேறிக் கொண்டிருந்தனர். நானும் அவர்களைப் பின்பற்றிச் சென்றேன். கிழவியின் கன்னம் ஒட்டிப்போய்த் தொங்கிக் கொண்டிருந்தது. அவளுடைய உடை கந்தை. சிறுவர்கள் மாஸ்கோ வாசிகளாதலால் தைரியமாகவும் பரபரப்புடனு மிருந்தனர். கிழவி அவர்களை நோக்கி "சுத்தப்போக்கிரிகள். இவர்களெல்லாமா உருப்படப் போகிறார்கள்!" என்றாள். உடனே சிறுவர்கள், "சீ! வாயை மூடு. உன் யோக்கியதை தெரியாதோ? செருப்புத் திருடி!" என்றனர். கிழவி அவர்களைத் தாறுமாறாகத் திட்டத் தொடங்கினாள்.

இந் நேரத்தில் பலவீனனாய் எலும்பெடுத்திருந்த தொழிலாளி யொருவன் நன்றாய்க் குடித்துத் தள்ளாடி வந்தான். அவனைத் தொடர்ந்து நான் போக வேண்டிய சத்திரம் போய்ச் சேர்ந்தேன். எங்கு நோக்கினும் துர்நாற்றமும் அழுக்குமே. அங்கிருந்தவர்கள் கந்தையணிந்து ஏறக்குறைய அம்மணமாகவே யிருந்தனர். உள்ளே நுழைந்ததும் பொறுக்க முடியாத நாற்றமெழுந்தது. முற்றத்தின் அழுக்கைச் சொல்லி முடியாது.

திடீரென்று திடசரீரமுள்ள ஒரு பெண் ஓடுவதைக் கண்டேன். அவளைத் தொடர்ந்து முரடன் ஒருவன் ஓடினான். இவன் அவளைப் பிடித்துக் கொண்டு, "எங்கே தப்புவது?" என்று கூச்சலிட்டான். அவளும் பேசாதிருந்தாள். ஆனால் என்னைப் பார்த்ததும் அவள், "யாரைத் தேடுகிறாய்?" என்று

சினந்து கேட்டாள். விடையளிக்காமல் நான் அவ்விடம் விட்டகன்று விட்டேன்.

இவ்வளவையும் பார்த்த பின்னர் இவர்களும் நம்மைப்போல் கோபதாபங்களும், கெட்ட ஆசைகளும் உள்ளவர்கள்தானே. எத்தனையோ பாவங்களையுங் குற்றங்களையுஞ் செய்யக் கூடியவர்கள்தானே. உண்பது முறங்குவதும் போக மிகுந்த நேரத்தை இவர்கள் எப்படிப் போக்குகின்றனர்? என்று யோசிக்க வாரம்பித்தேன். ஆயிரம் ஆடுகளுக்குத் தீனி போட்டுப் பட்டியில் அடைப்பதுபோல ஆயிரம் மனிதருக்குச் சோறுமாத்திரம் அளிப்பதுடன் பெரிய உபகாரஞ் செய்து விட்டதாகக் கருதுவது எவ்வளவு மதியீன மென்றுணர்ந்தேன். ஆயினும் ஆரம்பித்த காரியத்தை முடித்துத் தீரவேண்டும்.

---

## அத்தியாயம் 5

ஜனத்தொகைக் கணக்கெடுக்குந் தினத்தன்று எனக்கு உதவி செய்ய வந்திருந்த மாணவர்கள் அதிகாலையிலேயே சத்திரத்திற்குப் போய்விட்டனர். நானோ காலை பத்துமணிக் கெழுந்து காபி முதலியன அருந்திச் சுருட்டுப்பிடித்து விட்டுப் புறப்படப் பன்னிரண்டு மணியாகிவிட்டது. சத்திரவாயிலில் சிற்றுண்டிக் கடை யொன்றிருந்தது. அங்கே போய் ஜனத்தொகைக் கணக்கெடுக்க வந்தவர்கள் எங்கே யிருக்கின்றன ரென்று விசாரித்துக்கொண்டு போனேன். அந்தச் சத்திரத்தை மேற்பார்த்து வந்தவர் களுக்கா

என்னுமிடத்திலிருந்து வந்தவர். அவர் பெயர் ஐவன். அவர் வன்யா என்னும் பதினெட்டுவயதுப் பையனை என்னுடன் அனுப்பினார்.

சமையலறை வழியாகப் போனேன். சமையலறையிற் கூட நாற்றம் அதிகமாகவே யிருந்தது. அடுத்தாற்போற் கொல்லையுமிருந்தது. கூட்டங்கூட்டமாக ஆட்கள் அங்கே போய்வந்து கொண்டிருந்ததால் பொறுக்கமுடியாத நாற்றம் கிளம்பியது. எங்கு பார்த்தாலும் எச்சிலும் அசுத்தமுமா யிருந்தது.

தூயவுடையோ டிருப்பவரை அங்கே காண்பது அரிதாகையால் எல்லோரும் என்னை உற்று நோக்கினர். நான் பலவிதமான ஆட்களைப் பார்த்துக் கொண்டே முடிவில் ஓரறைக்கு வந்தேன். அங்கே ஒரு மாணவன் உட்கார்ந்து கொண்டு குறித்துக்கொள்வதற்காகப் பல விவரங்களைக் கேட்டுக் கொண்டிருந்தான். அவனுடன் கை குலுக்கிய பின் நானும் அவனைப்போலவே விசாரிக்கத் தொடங்கினேன். யாருக்கு உதவி செய்யலாம் என்று பார்த்ததில் மூவர் அகப்பட்டனர். வண்ணாத்தி யொருவள் தன் புருஷன் தன்னைக் கைவிட்டு விட்டதாகச் சொன்னாள். சாப்பாட்டுக் கில்லாதிருந்த ஒரு கிழவியும், அன்று முழுவதும் உணவின்றியிருந்த ஒரு கிழவனும் ஆக மூவரிருந்தனர். வண்ணாத்தியின் குழந்தையைப் படிக்கவைப்பதாகக் கூறினேன். அவளுக்கது சம்மதமில்லை; பணம் வேண்டுமென்று கேட்டாள்.

கிழவி முற்றிலும் ஏழை யல்லவென்றும், கொஞ்சம் சொத்து வைத்திருந்தாளென்றுந் தெரிந்து கொண்

டேன். அதைத் தவிர யாரோ ஒரு ஸ்த்ரீயும் அவளுக்குப் பணவுதவி செய்து வந்தாள். கிழவனே குடிகாரன். ஆதலின் பணவுதவி பெறுதற்குத் தக்கவர் யாருமில்லை.

மிகவுங் கஷ்டப்படுபவர்களைக் காணவேண்டுமென்று போனேன். பணவுதவி யாருக்காவது செய்ய வேண்டுமென்றும் எண்ணியிருந்தேன். ஆனால் பணமில்லாததால் அதிகக் கஷ்டப்படுபவர்களை நான் காணவில்லை. அவர்களுக்கு வேண்டுவது வேறுவிதமான உதவி. பணவுதவியால் அவர்களுடைய கஷ்டத்தைப் போக்க முடியாதென்ற முடிவுக்கு வந்தேன்.

---

## அத்தியாயம் 6

இந்தச் சத்திர விடுதிகளிற் றங்கியிருப்பவர்கள் மாஸ்கோ நகரத்துத் தாழ்ந்த வகுப்பினர்; அவர்கள் மொத்தம் லக்ஷம் பேர்கள் இருப்பார்கள். தொழிலாளிகளும் பிச்சைக்காரர்களும் பலவிதமான ஆண்களும் பெண்களும் இங்கே யிருந்தனர். திடகாத்திரர்களான பல தொழிலாளிகள் தங்கள் தங்கள் வேலைகளைச் சுறுசுறுப்பாகவும் ஊக்கத்துடனுஞ் செய்து கொண்டிருந்தனர். அவர்கள் யாவரும் சந்தோஷமாகவு மிருந்தனர். எங்களிடம் மரியாதையுடனும் அன்புடனும் நடந்து கொண்டனர். அவ்விடுதிகளை மேற்பார்த்துவந்த ஐவன் அவர்களைப் பற்றி என்னிடம் பேசிக்கொண்டு வந்தார். நான் கஷ்டப்படுபவர்கள் அங்கே யிருப்பார்களென்று எண்ணி வந்ததற்குமாறாகத் திருப்தியுடன் வாழ்ந்துவந்த உழைப்

பாளிகளைக் கண்டேன். சிற்சிலர் மாத்திரமே சோம்பேறிகளாகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தனர்.

நோயினாலோ அல்லது வேறு விதமாகவோ துன்பப்படுபவர்களை அங்கிருந்தவர்களே கவனித்துக் கொண்டனர். ஒரு அறையில் நோய்வாய்ப்பட்ட அநாதைக் கிழவனொருவ னிருந்தான். அவனை முன் பின்னறியாத கைம்பெண் ஒருவள் மருந்து முதலியன அவனுக்கு வாங்கிக்கொடுத்துப் பணிவிடை செய்து வந்தாள்.

மற்றோரறையில் பெண்பாலொருவள் சுரமாயிருந்தாள். மற்றொரு பெண் எங்கிருந்தோ வந்து தன் வேலையை விட்டுவிட்டு அவளுடைய குழந்தைக்குப் பாலூட்டி அவளையுங் கவனித்து வந்தாள்.

தையற்கார னொருவன் ஒரு அநாதைப் பெண்ணைத் தன் வீட்டிற்குக் கொண்டுபோய் அதைத் தன் குழந்தைபோல் வளர்த்து வந்தான். ஆகவே அங்கே குடியர்களும், வேசைகளும், சோம்பேறிகளுமான சிலரே கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தனர். பெரும்பான்மையரான மற்றவர்கள் நற்குணம் வாய்ந்த உழைப்பாளிகள். ஆதலின் பணவுதவி வேண்டியவர்கள் அங்கே அதிகமாக யாருமில்லை.

---

## அத்தியாயம் 7

உண்மையாகவே கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தவர்களை மூன்று வகுப்பாகப் பிரிக்கலாம். சொந்தத்

தொழிலை யிழந்து மீண்டும் அதை மேற்கொள்ள முடியாத நிலைமையி லிருந்தவர்களும், நகரத்துப் பெண்டிரும் அநாதைக் குழந்தைகளுமே மேற்கூறிய மூன்று வகுப்பாம்.

முதல் வகுப்பிற் சேர்ந்தவர்களிற் பெரும்பாலர் அரசாங்க உத்தியோகங்களிலிருந்து நீக்கப்பட்டவர்கள். அவர்களிற் பெரும்பான்மையோர் இப்போது குடியர்களானார்கள். இருந்தாலும் சுற்றிலுமுள்ள சாதாரண ஜனங்களைவிடத் தாங்கள் மேலானவர்களென்ற அகம்பாவம் இன்னும் இவர்களை விட்டபாடில்லை. அகத்தினழகு முகத்தில் என்றவாறு இவ்வகம்பாவம் இவர்களுடைய நடையுடை பாவனைகளில் தெளிவாய்த் தெரிந்தது. தங்களுடைய பூர்வ சரித்திரத்தையும், துரதிர்ஷ்டத்தால் தற்போதைய நிலையுற்ற விவரத்தையும், இவர்கள் பாடம் பண்ணி ஒப்புவிப்பது போற் கூறுவார்கள். இத்தகையோரின் முகங்களில் அருள் என்பதே இல்லை. கிழவர்களின் முகங்கள் ஊதிப்போயும் வாலிபர்களின் முகங்கள் வெளுத்துங் கரடுமுரடாகவு மிருந்தன. அவர்கள் பலவீனர்கள், காமுகர்கள். ஒருவன் தன் கடனை அடைக்க வேண்டுமென்றும் இன்னுமொருவன் ஓர் வழக்கு தனக்கு ஜயமானால் பழைய நிலையை யடைந்துவிடலாமென்றும், பலர் பலவிதமாகச் சொல்லிக்கொண்டனர்.

இவர்களுக்கும் எனக்கும் என்னைச் சேர்ந்தவர்களுக்கும் அதிக வித்தியாசமில்லை. எங்கள் கைப்பணம் ஏதோ ஒரு காரணத்தால் அழிந்து விட்டால் நாங்கள் இவர்களது நிலையிற்றான் நிற்போம்.

இவர்களைப் போன்றே நாங்களும் சோம்பேறிகள். இவர்களைப் போலவே நாங்களும் பிறரை வேலை ஏவிச் சுயமா யொன்றுஞ் செய்யாது சுகவாழ்வை விரும்பி யிருப்பவர்கள். இரு சாராரும் தற்போதைய நிலைமை யில் அதிருப்தி யுற்றவர்கள்; மேன்மேலும் சுகத்தை நாடுபவர்கள்.

நானே என் வாழ்க்கையைத் திருத்திக்கொள் ளாமல், இவர்களுடைய வாழ்க்கையைச் சீர்திருத்த முயல்வது எவ்வளவு மடமை யென்று புலப்பட்டது.

இவர்கள் உணவின்மையால் வருந்துபவரலர்; மீதூணுற் கெட்டவர்கள். இவர்களுக்கு வேண்டுவது மருந்தே யன்றி உணவல்ல. அது போலவே தர்மத்தை அடிப்படையாகக் கொண்டு வாழாது கெட் டுப்போன இவர்களுக்கு வாழும் முறையை கற்பிப்ப தாற் பயனுண்டே யொழிய அச்சமயத்தில் அவர்கள் கோரும் அற்ப வுதவிகளைச் செய்வதாற் பயனொன்று மில்லையென்று முணர்ந்தேன்.

---

## அத்தியாயம் 8

இரண்டாவதாக, சத்திரத்திலிருந்த நகரப் பெண் டிரைப் பற்றிக் கூறுகிறேன். எல்லா வயதுப் பெண் களும் அங்கிருந்தனர். ஒரு அறையில் மிராசுதார் ஒருவர் உட்கார்ந்திருந்தார். சத்திரத்தின் ஒரு பாகம் அவருக்குச் சொந்தம். அதற்கடுத்த அறையில் ஒரு வன் தூங்கிக் கொண்டிருந்தான். அவன் பக்கத்தில் ரோஜா நிறவுடை தரித்த பெண்ணொருத்தி உட்கார்ந்

திருந்தாள். "தூங்குவது யார்? நீ யார்?" என்று அவளைக் கேட்டேன். தூங்குகிறவன், சத்திரத்தில் அன்று தங்கவந்த ஒரு கனவானென்றும், தான் மாஸ் கோவிற்குச் சமீபத்திலுள்ள ஒரு கிராமத்துப் பெண்ணென்றும் சொன்னாள். "உனக்கு இங்கே என்ன வேலை?" என்று கேட்டதற்குச் "சும்மா உட்கார்ந்திருக்கிறேன்" என்று தலைகுனிந்து சிரித்தாள். அடுத்த அறையிலும் சில பெண்கள் சிரித்ததைக் கேட்டேன். உடனே முன் சொன்ன மிராசுதார் அங்கே வந்தார். அவர் நாங்கள் பேசியதை வெளியேயிருந்து கவனித்ததால் என்னைப் பார்த்து, "அவளொரு வேசை" என்று கூறி, அவளைப் பார்த்து, "உன் தொழிலைச் சொல்ல வெட்கமென்ன? நன்றாக நானொரு வேசை யென்று சொல்வதுதானே," என்றார்.

இவ்வளவு கொடுமையான வார்த்தைகளைக் கேட்டு நான் வெறுப்புற்றேன். அவரை நோக்கி, "நாமெல்லோரும் ஆண்டவனாணைப்படி நடந்தால் இத்தகையோர் உலகில் இருக்கவே மாட்டார்களே! அவர்களுடைய கெட்ட வாழ்க்கைக்கு நாமும் காரணமானவர்களாதலால் அவர்களுக்கு நாம் இரங்கவேண்டும்" என்று ஆத்திரத்துடன் சொன்னேன். இவ்வார்த்தைகளைக் கேட்டதும், நான் எதிர்பாராத வண்ணம், பலரும் என்னை ஆச்சரியத்துடன் பேசாது நோக்கினர். அப்பொழுது எனக்கு வருத்தமும் வெட்கமும் உண்டாயின. நான் அவர்களைவிட ஒழுக்கத்தில் மேலானவனல்லன். அவர்களை நானெப்படிச் சீர்திருத்துவது? உயர்ந்த வகுப்பினரும் பணக்காரர்களுமாகிய நாங்கள் பல தலைமுறைகளாக ஏழை மாதரின் கற்பைக் குலைத்து வருகிறோம்.

வேருெரு மாது ஒரு குழந்தையுடன் உட்கார்ந் திருந்தாள். அவளைப்பற்றி விசாரித்ததில் அவள் மாஸ்கோ வாசிதானென்றும் சிறு வயதிலேயே பெற்ருேர்கள் இறந்து விட்டதால் தனது அத்தையுட னிருந்ததாகவும் அவளும் மரித்துவிடவே, பிழைக்க வழியின்றி வேசைத் தொழிலை மேற்கொண்டதாகவுங் கூறிஞள். இத் தொழிலைவிட்டுச் சமையல் வேலைக்கு வருவாளா என்று வினவ அவள் சம்மதிக்கவில்லை. உழைக்காமல், பாடுபடாமல் சுகமாய்க் காலம் தள் ளும் வழக்கமே அவளுக்குப் பிடிபட்டுவிட்டது. இருந் தாலும் நாங்கள் அவளுக்கு நல்லுபதேசம் செய்வது மதியீனம். சோம்பரைக் காட்டிலும் உழைப்பு மேலென்றறிந்து அதன்படி நாங்களே நடக்கவில்லை.

இத்தகைய மாதரும் சமூகத்திற்கு அவசியமான வர்களென்று பலர் நம்புகிருர்கள். அரசாங்கத்தார் கூட வேசைகள் கீழ்ப்படிய வேண்டிய விதிகளை விதித்து அதை வற்புறுத்தி வருகிருர்கள். ஆடவரை வசப்படுத்தி ஆட்டிவைக்கும் திறமை தங்களுக் கிருப் பதாக வேசையர் பெருமை பாராட்டிக் கொள்கின் றனர். தங்கள் வாழ்க்கை இழிவான தெனினும், அரசாங்கத்தாலும் பல மனிதராலும் ஆதரிக்கப்பட்டு வருவதால், அதைத் திருத்திக்கொள்ள வேண்டியதின் அவசியத்தையும் வகையையும் இவர்கள் தெரிந்து கொள்ளவில்லை.

என்னுடன் வந்த மாணவர், "ஐயா! இங்கே ஒரு மாது தன் பதின்மூன்று வயதுப் பெண்ணை விலைக்கு விற்கப்போகிருள்" என்று கூறவே, அப் பெண்ணைக் காப்பதற்காகப் புறப்பட்டேன். தாயார்

நாற்பது வயதுள்ள அவலக்ஷணமான ஸ்த்ரீ. நான் ஏதோ அவளுடைய பிழைப்பைக் கெடுக்க வந்ததாகக் கருதிச் சந்தேகத்துடன் அவள் பேசியதால் அவளிடம் இரக்கத்திற்குப் பதிலாக வெறுப்புண்டானது. சிறுமியைக் காக்க வேண்டுமாயின் தாயை நல்வழிப் படுத்த வேண்டும். அல்லது பலாத்காரமாய் அப் பெண்ணை வேறிடங் கொண்டுபோக வேண்டும். தாய் மகளுக்கு நன்மை செய்வதாகவே எண்ணியிருந்தாள். இத்தகைய வாழ்வைப் பலர் ஆதரித்தும் வருகிறார் கள்.

விவாகமும் செய்துகொள்ளாமல் பாடுபட்டும் உழைக்காமல் புருஷர்களின் காமத்திற் கிரையாகிப் பிழைக்கும் இவர்கள்தான் இப்படி யிருக்கிறார்களோ வெனின் நாகரிகமான குடும்பப் பெண்டிராகக் கருதப்படுவோரும் இவ்வாறுதான் வாழ்ந்து வருகிறார் கள். வீட்டு வேலைகளைச் செய்யாமலும் தங்கள் கடமைகளை யுணராமலும் இவர்கள் சோம்பேறிகளாய்க் காமுகிகளாய் வாழ்கின்றனர். தங்கள் புத்திரிகளையும் மனமார நாடகச் சாலைகளுக்கும் நர்த்தன மண்டபங்களுக்கும் கூட்டிக் கொண்டுபோய்த் தங் கள் தீய பழக்கங்கள் அவர்களுக்கும் பிடிபடச் செய் கின்றனர். புருஷர்கள் ஸ்த்ரீகளுக்குச் சோறிட்டுத் துணிமணி கொடுத்துக் காக்கவேண்டு மென்றும் அதற்குப் பிரதியாக ஸ்த்ரீகள் புருஷர்களின் காமத் தைத் திருப்தி செய்ய வேண்டுமென்று முள்ள ஒரே அபிப்பிராயமே வேசைகளுக்கும் இவர்களுக்கு மிருக் கிறபடியால் இவ்விரு சாராரும் சமானமானவர்களே.

---

# அத்தியாயம் 9

ஆதரவற்ற அநாதைக் குழந்தைகளையும் சிறுவர்களையும் பாழாகாது காக்க விரும்பி அவர்களிற் பலரைப் பார்த்தேன். பன்னிரண்டு வயதுப் பையனொருவனை, அவன் புத்திக் கூர்மைக்காகப் பிரியப்பட்டு வீட்டிற்குக் கொண்டுபோய் ஒரு வாரம் என் சமையற்காரனுக்கு உதவியா யிருக்கச் சொன்னேன். பின்னொரு நாள் ஒரு குடியானவன் அப்பையனைத் தன்னுடன் தோட்ட வேலைக்கு அனுப்பும்படி கேட்டான். நானும் அவனை அவ்வாறே அனுப்புவதா யிருந்தேன். ஆனால் அவன் இந்த சமாசாரந் தெரிந்ததும் ஓடிவிட்டான்; சத்திரத்தில் தேடியும் அவன் அகப்படவில்லை. மிருகக் காக்ஷிசாலையில் யானையை நடத்திக்கொண்டு போகும் வேலையில் அவன் அமர்ந்து கொண்டான்.

நான் அவனைப் பார்க்கச் சென்றபோது என் கண்ணிற் படாமல் விலகிக்கொண்டான். சோம்பேறியாய் வாழ்வது சுகம் என்றெண்ணி இவன் கெட்டுப் போனான். பணக்காரனை நானும் அவனைப் போன்றவனே. அவனைத் திருத்தும் எண்ணத்துடன் அவனை வீட்டிற்குக் கூட்டி வந்தேன். என் வீட்டில் அவன் பார்த்தது என்ன? என் மக்கள் யாவரும் தாங்கள் வேலை செய்யாது பிறருக்கு ஓயாது வேலை கொடுத்த வண்ணமிருந்தனர். ஆகவே பாடுபடாது பிறரை வேலை வாங்கிக்கொண்டு நன்றாகச் சாப்பிட்டுச் சுலபமாய்க் காலந் தள்ளுவதே சுகமென அவன் கற்றுக் கொண்டான்.

என் மக்கள் லத்தீன் கிரேக்க பாஷைகளைக் கற்று வந்தது ஒருவேளை அவனுக்குத் தெரிந்திருக்காது; தெரிந்திருந்தால் இன்னுங் கெட்டுப்போயிருப்பான். ஏன்? லத்தீன் கிரேக்க பாஷைகள் படிப்பது வருங் காலத்திலும் உழைக்காது சுகமாய்க் காலந் தள்ளுவதின் பொருட்டன்றோ? இதையும் அவன் தெரிந்து கொண்டிருந்தால் அவனது அபிப்பிராயம் திடப்பட்டிருக்கும்.

ஆகவே குடியானவனுடன் சென்று பாடு பட்டுழைத்து எளிய உணவுண்டு வாழ்வதைவிட வேலை செய்யாமல் சுகமாய் அதிகம் சம்பாதித்தலே மேல் என்று அவன் எண்ணிக்கொண்டான். எனது சொந்த மக்களைச் சோம்பேறிகளாகவும் சுகப் பிரியர்களாக வும் வளர்த்து வரும்போது பிறர் மக்களைச் சீர்திருத்த உத்தேசித்தது என்ன மதியீனம்! சத்திரத்தி லிருந்தோரிற் பெரும்பாலர் தங்களுக்கும் பிறர்க்கும் உபயோகமான காரியங்களைச் செய்து வந்தமை யால், அவர்கள் என்னைவிட மேலானவர்களே.

எத்தனையோ அநாதைக் குழந்தைகளும், வேசை களின் ஆதரவற்ற மக்களும் அங்கே யிருந்தனர். ஆனால் என் வாழ்க்கையை நான் சீர்திருத்திக் கொள் ளாதமட்டும் பிறரைத் திருத்துவதோ பரோபகாரஞ் செய்வதோ முடியாதென்று தெரிந்து கொண்டேன். இக் குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் சோறுந் துணியுமளித்துப் பல விஷயங்களைக் கற்றுக்கொடுக்க லாம். ஆனால் நான் பாடுபட்டுச் சம்பாதிக்காமல் சுகமாய்க் காலந்தள்ளும் வரை இவர்களுக்கு உழைப் பைப்பற்றி உபதேசிப்பது பயனற்றதேயாகும்.

ஒரு நாய்க் குட்டியைக் கொஞ்சிச் சோறு போட்டு வளர்த்து அதைப் பார்த்து சந்தோஷிப்பது சாத்தியமான காரியம். ஆனால் ஒரு மனிதனுக்கு உணவும் உடையும் அளித்து எழுத்தறிவிப்பதோடு நின்றுவிடுவது சரியல்ல. வாழும் முறையைக் கற்பிப்பதே யாவற்றினும் அவசியம். உலகத்தாரிடமிருந்து தான் பெற்றுக்கொள்வது சொற்பமாயும், பிறருக்குத் தான் உதவுவது பன்மடங்கு அதிகமாகவும் இருக்க வேண்டும்.

---

## அத்தியாயம் 10

ஒரு நாள் சத்திரத்திற்குப் போய்ப் பணவுதவி வேண்டியவர் யாரென்று பார்த்ததில், இருவர் அகப்பட்டனர். ஒரு கிழவி உணவுக்கு வழியின்றி, வேலை செய்யவும் முடியாமல் எலும்புந் தோலுமாயிருந்தாள். இரண்டு நாட்களாய் ஒன்றும் சாப்பிடவில்லையென்று அவள் சொன்னதைக் கேட்டு, ஒரு ரூபிள் அவளுக்குக் கொடுத்து வெளியேறினேன். பிறர் நான் கொடுத்ததைக் கவனித்தது பற்றி அகமகிழ்ந்தேன்.

இன்னுமொரு கிழவிக்கும் திரவிய சகாயஞ் செய்தேன். இதைக் கண்டதும் என்னைச் சுற்றிப் பெரிய கூட்டங் கூடிவிட்டது; அதிற் குடிகாரர் பலரிருந்தனர். எல்லோரும் என்னை நெருக்கவே கையிலுள்ள பணத்தை யெல்லாம் தராதரம் பாராது தாறுமாறாகக் கொடுத்துவிட்டேன். பத்து ரூபிளுக்குச் சில்லரை மாற்றி மறுபடியும் வேறு பலருக்குக் கொடுத்தேன். இதுவெல்லாம் மடமை யென்று

பார்த்தவர் பலருங் கருதினர். நான் சத்திரத்திற்குப் போகும் போதெல்லாம் இவ்வாறு பெரிய கூட்டம் என்னைச் சூழ்ந்துகொள்ளும். பழகப் பழக இவ்வாறு உதவி செய்வதெல்லாம் நிலைத்த பயனொன்றுந் தராதென்று தெரிந்துகொண்டேன்.

ஜனத்தொகைக் கணக்கெடுக்குந் தினத்தன்று நாங்கள் சுமார் இருபது பேர்கள் அந்தச் சத்திரத்திற்குப் போனோம். நகரத்துக் கனவான்களும், போலீஸ்காரர்களும், நியாயாதிபதிகளும் ஓயாமல் இவ் வேலைகளைப் பிடிப்பதுந் தண்டிப்பதும் வழக்கமாதலால், எங்களைப் பார்த்ததும் ஏதோ அபாயம் வந்துவிட்டதென்று பயந்தனர். கணக்கெடுப்பதற்காகக் கதவுகளைத் தாளிட்டதும் இன்னும் அதிகமாய்ப் பயந்தனர். நாய்கள் தங்களுக்கு நன்மை செய்ய வருமென்று முயல்கள் என்றும் நம்ப மாட்டா. அவ்வாறே இவர்கள் எங்களைப் போன்றவர்களைக் கண்டு சந்தேகப்படாமலிரார்.

ஒரு விளக்கை யெடுத்துக்கொண்டு, அறையறையாகப் பார்த்துச் சென்றோம். குடிவெறியோடு ஆண்களும் பெண்களும் விவஸ்தையின்றிப் படுத்திருப்பது கண்டோம். எல்லோருடைய உடையும் கந்தைத் துணிகளே; எங்கு பார்த்தாலும் அழுக்கும் குப்பையுந் துர்நாற்றமுந்தான்.

இதற்கு முன் நான் சத்திரத்திலுள்ளவர்களைப் பார்த்தபோது எனது நிலைமை பயங்கரமான புண்ணுள்ள ஒருவனைப் பார்த்து, இவ்வளவு காலம் இதை சுகப்படுத்தாதிருந்து விட்டோமே என்று விச

ணித்து, ஆனால் இனி சௌக்கியப்படுத்தி விடலாம் என்னும் நம்பிக்கையுடனிருக்கும் ஒருவனது நிலைமையை நிகர்த்திருந்தது. ஆனால் இப்போதோ மூடத்தனமாய்ச் சித்திரவதை செய்துவிட்டு, ஐயோ! இனிமேல் இதைக் குணமாக்க முயற்சிப்பது வீணே யென்று நம்பிக்கை யிழப்பவன் போலானேன்.

---

## அத்தியாயம் 11

ஏழைகளுக்கு உபசாரஞ் செய்யும் வழி இது வரை நான் கடைப்பிடித்த தன்றென்று மேற்கூறிய வாறு அடிபட்டுத் தெரிந்துகொண்டேன். நான் பற்றிய வழியால் நன்மை விளையாது என்பதன்றித் தீமை விளையுமென்றும் உணர்ந்தேன். ஆயினும் இதன்பின்னரும் சிலகாலம் குருட்டுத்தனமாய்ப் பழைய வழியே சென்றேன்.

பணக்காரராயிருந்து யாதோவொரு காரணத் தால் சொத்தையிழந்து இச்சத்திரத்தில் தங்கிய பலர் எனக்குக் கடிதங்கள் எழுதி யிருந்தனர். இவர்கள் யாவரும் திருப்தி யற்றவர்கள் ; கிடைத்ததைத் தாறு மாறுகச் செலவிடுபவர்கள். இவர்களுக்கு உதவி செய்வது அசாத்தியம்.

பணவுதவி செய்வதாக வாக்களித் திருந்தவர் யாவரும் தங்கள் வாக்குறுதியை அறவே மறந்து விட்டனர். அவர்கள் ஒன்றுமே கொடுக்கவில்லை. மாணவர்கள் மாத்திரம் பன்னிரண்டு ரூபிள் கொடுத் தனர். சத்திரத்திற்கு மறுபடியுஞ் சென்றபோது

எழுபது வயதுக் கிழவனொருவனைக் கண்டேன். அவன் சுறுசுறுப்பாகத் தன் வேலைகளைக் கவனித்துக்கொண்டிருந்தான். பழைய துணிகள் இரும்பு முதலியவற்றை விற்றுப்பிழைத்து வந்தான். பணவுதவி விரும்பும் ஏழைகள் யாராவது உளரா என்று கேட்டதற்கு அவன், சோம்பேறிகளும் குடிகாரருமே பிறர் கையை எதிர்பார்ப்பார்கள் என்றான். என்னிடமிருந்த பணத்தை ஐவானிடங்கொடுத்து ஏழைகளுக்குப் பகிர்ந்து கொடுக்கச் சொன்னேன். பணமில்லாது தவிப்பவர்கள் பலர் இல்லாவிடினும் ஒருவாறு பகிர்ந்து கொடுத்தோம். அவர்கள் அப்பணத்தைக் கள்ளுக்கடையில் கொண்டுபோய்ச் சேர்த்தனர்.

எனது பரோபகார வேலையெல்லாம் இவ்வாறு முடிந்தது. அவிவேகத்தாற் கெடுதலான காரியத்தைச் செய்ததால் வெறுப்படைந்தேன். இவ்வேலையினால் என் மனம் மிகக் குழம்பிப்போய் வருத்தமடைந்தேன்.

---

## அத்தியாயம் 12

மாஸ்கோவிற்கு வருமுன் நான் கிராமங்களிற்றான் வசித்து வந்தேன். அங்கிருந்தபோது கிராமவாசிகளோடு நெருங்கிப் பழகி வந்ததுடன் அவர்களுக்கு ஏதோ சிறிது உதவியுஞ் செய்து வந்ததால் அவர்கள் என்னிடம் அன்பு பாராட்டினர். அக்காலத்தில் எனது ஆடம்பரவாழ்க்கை என் மனத்தைத் துன்புறுத்தவில்லை.

மாஸ்கோவின் கொடிய வறுமையையும் சோம்பலால் விளையுந் துன்பத்தையுங் கண்ட பின்னரே என் சுகபோக வாழ்க்கை அசுரத்தனமானது என்றறிந்து கொண்டேன். இதனாற் பெரிய வியாகூல முண்டான போதிலும் என் வாழ்க்கை முழுவதையும் முற்றிலுஞ் சீர்திருத்திக் கொள்வதற்குத் திடசித்தமில்லை. பணத்தில் ஒரு தோஷமுமில்லை யென்றும், அது இறைவன் அருளியதென்றும், ஆதலால் அதைத் தானும் அனுபவித்துப் பிறர்க்குங் கொடுத்துதவ வேண்டுமென்றும் பலர் என்னிடங் கூறினர். உலக முதித்தது முதலாகவே பலர் இவ்வாறு சொல்லி வருகிறார்கள். அச்சமயம் அது உண்மைதானென்று நம்பிப் பல தனவான்களை ஏழைகளின் கஷ்ட நிவாரணத்திற்கு உதவுமாறு கேட்டுக்கொண்டேன்; அவர்கள் மனத்தில் விருப்பமில்லாவிடினும் வெளியே சொன்னால் வெட்கக் கேடென்று எண்ணி சரியெனச் சம்மதித்தனர்.

பிறகு சத்திரம் போய்ப் பார்த்ததில், பெரும்பாலர் நல்லுழைப்பாளிகளாகவும் ஒழுங்கான வழியில் வேண்டிய பொருளைச் சம்பாதிப்பவர்களாகவும் இருந்தனர். இவர்களுக்கு எனது உதவி தேவையில்லை. இவர்களைத் தவிர சோம்பேறிகள் சிலரிருந்தனர். அவர்களுக்கும் நான் உதவி செய்யும் நிலைமையிலில்லை. ஏனெனில் நானும் அவர்களைப் போலவே பாடுபடாது சோம்பேறியாகக் காலந்தள்ளி வந்தவன். என்னைப் போலவே அவர்களும் சீவனத்திற்கு வேண்டியதை உழைப்பாற் பெறும் விருப்பமோ வழக்கமோ இல்லாதவர்கள். ஏழை மக்களுள், ஒருவர் நோய் முதலியவற்றால் வருந்தினால் மற்றவர் கவனித்து வந்தனர்.

ஆகவே என்னுதவி எவருக்குந் தேவையில்லை. பணம் கொடுத்துதவுவதால் பயனில்லையெனத் தேர்ந்து, மனம் நொந்து, மாஸ்கோவைவிட்டுக் கிராமத்திற்குத் திரும்பினேன்.

நீதிநெறி பற்றிய விஷயங்களை எவ்வளவு அருமையாகவும் இனிமையாகவும் எடுத்து விளக்கியபோதிலும், சாதாரண மனிதன் கூட, "நீ சொல்லுவது புதிதொன்றுமில்லையே; எல்லாம் பழங் கதைதானே. இதுவெனக்குத் தெரியாதா?" என்று சொல்லிவிடுகிறான். பின்பற்றி யொழுகாதவர்களும் அதிற் பற்றில்லாதவர்களும் நீதிநெறி பற்றி யாராவது பேசினால் பழங் கதைதானே என்று கவனியாது போய்விடுவர். அதை அனுஷ்டிப்பவர்களே எத்தனை முறை எடுத்துக் கூறினும் அலுக்காது கேட்பர்.

பெரும்பாலார், நீதிநெறி யென்றால் உலகானுபவமற்ற மந்தபுத்திகளின் பேச்சென்றும், மனத்தைக் கவரக்கூடிய தொன்றும் அதில் இல்லை யென்றுஞ் சொல்லுகின்றனர். ஆனால் உண்மையை ஆய்ந்தால், ராஜீயவாழ்க்கை, வியாபாரம், கலைகள், மற்றும் உலகத்திலுள்ள எல்லாக் காரியங்களின் நோக்கமும் தர்மத்தை ஆதாரமாகக் கொண்டிருத்தல் அவசியமாகும். தர்மத்தை கடைப் பிடித்தே எவ்வேலையையும் புரிதல் நமது முக்கியமான கடமை மாத்திரமன்றி நமது முழுக்கடமையும் அதுவே.

கத்தியை அடிக்கடி உபயோகிப்பவனே அது கூராயிருக்க வேண்டுமென விரும்புவான்; அதைத் தீட்டுவான். உபயோகியாதவனோ கத்தி எப்படியிருந்தால் நமக்கென்ன வென்று போய்விடுவான்.

அவ்வாறே பல விஷயங்கள் எனக்குத் தெரிந்தும் அறநெறியை யான் கடைப் பிடிக்காததால் அது பற்றிய விஷயங்களை ஆய்ந்துணருந் திறன் எனக்கில்லை. மூன்று வருடங்களுக்குப் பின் இப்பொழுதுதான் விஷயங்கள் உள்ளதுள்ளபடி தெளிவாய்த் தெரிகின்றன. அப்போது தெரிந்திருந்ததினும் இப்போது அதிகமாயொன்றும் எனக்குத் தெரியாவிடினும், அறநெறியைச் சிறிது பற்றியொழுகிய அநுபவத்தால் விஷயங்கள் சற்றுத் தெளிவாய்ப் புலப்படுகின்றன.

---

## அத்தியாயம் 13

மாஸ்கோவில் நான் பரோபகாரஞ் செய்ய முயன்றது சேற்றில் அழுந்தி யிருப்பவன், தன்னை போல் சேற்றில் சிக்கிய வேறு சிலரைக் கரையேற்ற முயல்வது போலிருந்தது. உறுதியான தரையில் நான் நின்று கொண்டிருந்தா லன்றோ பிறரைத் தூக்கி விடலாம்!

எனது வாழ்க்கை பாபமயம் என்றும், அது சரியன்றென்றுந் தெரிந்ததும் உடனே அதைச் சீர்திருத்திக் கொள்வது என் கடமையென நான் தீர்மானிக்கவில்லை. ஆதலால் என் வேலை யொன்றும் பலிக்கவில்லை. நகரங்களில் இருப்பவர்க்கு உதவிசெய்ய முடியாது போனதன் காரணம் ஏழைகள் திரளாக அங்கு ஒன்று சேர்ந்திருப்பதேயாகும். இரண்டாவதாக, நகரப் பிச்சைக்காரர் கிராமப் பிச்சைக்காரர் போன்றவரல்லர். கிராமங்களில் பிழைக்க வழியற்றவர்கள் நகரத்துப் பணக்காரருக்கு ஊழியஞ் செய்து

பிழைக்க நகரங்களுக்கு வருவதால் அங்கு அதிகப் பிச்சைக்காரர்கள் சேர்ந்து விடுகின்றனர். நகரங் களுக்குச் சென்று பிழைப்பைத் தேடுவதென்பது விந்தையாயிருக்கிறது. காடுகளும், வயல்களும், தானி யங்களும், ஆடுமாடுகளும் நிலவளமுஞ் செறிந்த நாட் டுப்புறத்தை விட்டுக் கல்லும் மண்ணும் தெருப்புழு தியுமுள்ள நகரங்களில் வந்து பிழைப்பதென்றால் அது ஆச்சரியமாகவே யிருக்கிறது. நகரங்களில் சாதாரண வருவாயுள்ளவர்களையும் ஏழைகளையும் விசாரித்ததில் அவர்கள் யாவரும் பிழைப்பிற்காகவே நகருக்கு வந்த தாகக் கூறினர். மாஸ்கோவிற்கு வந்தால் பணம் மீட்ட லாம்; பணத்தைக் கொண்டு தானியங்கள் ஆடு மாடுகள், குதிரைகள் இன்னும் எதுவேண்டுமாயினும் வாங்கிக் கொள்ளலாம். "விதைப்பும் அறுப்பு மின்றியே மாஸ்கோ செல்வத்திற் புரளுகிறது" என் னும் பழமொழி உண்மைதான்.

மாஸ்கோவில் எல்லாப் பொருள்களும் இருந்த போதிலும் அவையாவும் உற்பத்தியாவது கிராமங் களிற்றான். நாட்டுப்புறத்தில் விளையும் பண்டங்களை நகரங்களிற் போய் ஏன் தேடுவது? நாட்டுப்புறத் தாருக்கு அத்தியாவசியமான தானியங்கள், ஆடுமாடு கள், குதிரைகள் முதலியவற்றை கிராமங்களினின்று நகரங்களுக்குக் கொண்டு போவதேன்?

நகரங்களில் வசித்துவரும் விவசாயிகளுடன் நூற்றுக்கணக்கான சந்தர்ப்பங்களிற் பேசி யிருக்கி றேன். கிராமங்களிற் பிழைக்க வழியின்றிப் பலர் பட்டணங்களுக்கு வந்து சேர்கின்றனர். சிலர் பட்ட ணங்களிற் சுகமாய்க் காலந் தள்ளலாமென்று வரு

கின்றனர். தானியங்களும் ஆடுமாடுகளும், தங்களுக்கு அவசியமானவையென்று அறிந்திருந்தாலும் கிராமவாசிகள் தங்கள் குடும்பச் செலவிற்காகவும், வரிப்பணத்திற்காகவும் அவற்றை விற்க நேரிடுகிறது. இவ்வாறு கிடைத்த பணமும் விரைவிற் செலவாய் விடுகிறது; பிழைக்க வழியின்றிச் சம்பாதிப்பதற்காக நகரங்களை நோக்கிச் செல்கின்றனர். நகரங்களில் அதிகக் கஷ்டமின்றிச் சம்பாதித்துப் பல சௌகரியங்களையும் சுகங்களையும் அனுபவிக்கலாம். சிற்சில சமயம் இத்தகையோர் குடிகாரராகவும் நடத்தைகெட்டவராகவும் ஆகிவிடுகின்றனர்.

இதன் காரணம் யாவரும் எளிதில் உணரக் கூடியதே. உழைப்பாளிகளான விவசாயிகளிடமுள்ள தானியம் முதலான பொருள்கள் விவசாயஞ் செய்யாது நகரங்களிற் சும்மா உட்கார்ந்திருக்கும் பணக்காரரிடம் போய்ச் சேருகிறது. அறுவடைக் காலங்களில் கிராமங்களில் எவ்வளவு தானியங்களும் இதர செல்வங்களும் இருக்கின்றன! ஆடுமாடுகள், கன்றுகள், குதிரைகள், கோழி, வாத்து, வெண்ணெய், பல வகைத் தானியங்கள் முதலாம். இவையாவும் பற்பல நகரவாசிகள் கையிற்போய்ச் சேர்கின்றன. அங்கிருந்து முக்கியமான பட்டணங்களுக்கும், தலைநகருக்குங் கொண்டுபோகப் படுகின்றன. சொந்தச் செலவிற்காகவும், இதர ஆசைகளால் தூண்டப் பெற்றும் கிராமவாசி இவற்றை விற்றுவிடுகிறான். கையிலிருந்ததெல்லாம் நகரம்போய்ச் சேரவே, உணவிற்கு வழியின்றிக் கிராமச் செல்வமெல்லாம் எங்கே கொண்டுபோகப் பட்டதோ அவ்விடத்தை நோக்கிச் செல்ல நேரிடுகிறது.

ருஷ்யாவில் மாத்திரமன்றி உலகெங்கும் இவ்வாறு தானிருக்கிறது. கிராமத்தின் செல்வமெல்லாம் வியாபாரிகள், மிராசுதார்கள், அரசாங்க உத்தியோகஸ்தர்கள், முதலாளிகள் முதலியோரிடம் போய்ச் சேருகிறது. இச் செல்வத்தை நன்கு அனுபவிப்பதற்காக அவர்கள் நகரங்களில் வசிக்கின்றனர். ஏன்? முதலாவது, கிராமங்களில் எல்லாவிதமான கடைகள், பாங்கு, சிற்றுண்டிச்சாலை, நாடகக்கொட்டகை முதலியவை இல்லை. இரண்டாவது, கிராமங்களில் மக்கள் பணக்காரரைப் பார்த்துப் பிரமிக்கமாட்டார்கள். அவரவர்கள் வேலையைக் கவனித்துக் கொண்டிருப்பரே யன்றிப் பணக்காரரது நடையுடை பாவனைகளைப் பார்த்து வியக்க அவர்களுக்கு நேரமில்லை. வியக்கும் சுபாவமுமில்லை. இவர்களுடைய விசித்திரமான கட்டடங்களையும் பலவிதப் பொருள்களையும் பார்த்தால் அவர்களுக்கு அவை யாவை யென்று கூடத் தெரியாது. மூன்ருவது, இரக்கம், மனச்சாக்ஷி என்பவை சற்றேனுமுள்ள எவனும் கிராமங்களிற் சுகபோகங்களை அனுபவித்துக்கொண்டு வாழ முடியாது. பக்கத்து வீட்டுக் குழந்தைகளுக்குப் பாலில்லாதபோது பாலிற் குளிக்கவோ, நாய்க்குட்டிகளுக்குப் பால் வார்க்கவோ யாருக்காவது தோன்றுமா?

இடிந்த சின்னஞ் சிறு குடிசைகளில் மக்கள் அடுத்தாற்போல் வசிக்கும்போது அவர்களுக்கிடையே தான் பெரிய மாளிகையில் வாழ்வதுஎப்படி? இக்காரணங்களை முன்னிட்டு பணக்காரரெல்லாரும் ஒன்று சேர்ந்து பட்டணங்களிற் சேர்ந்தாற்போல் மாளிகைகளைக் கட்டிக்கொண்டு சுகபோக வாழ்வு வாழ்கின்றனர். அவர்களுடைய சௌகரியங்களுக்கு

ஒரு குறைவும் வராது போலீஸார் காத்துவருகின்றனர். நகரங்களில் விசேஷமாகப் பெரிய அரசாங்க உத்தியோகஸ்தரும், சுற்றிலும் பணக்காரர்களும், பற்பல சிற்பிகளும், தொழிலாளிகளும் வசிக்கின்றனர். நினைத்த மாத்திரம் செல்வவானுக்கு எப்பொருளுங் கிடைக்கும். நகரத்தில் பிறர் தங்களைப் பார்த்து அதிசயிக்கும்படி சுகத்தில் வாழலாம். தங்களைப் போன்ற பணக்கார்ரரைப் பார்த்து, இவர்களுக்குக் குறையாத உயர் நிலையில் நாமும் வாழ்கிறோமென்று உள்ளம் பூரிக்கலாம்.

பாடுபடுவது நாட்டுப்புறத்தினர்; அதன் பயனாகிய சுகத்தைப் பெறுவது நகரத்துத் தனிகர்கள். நகரங்களிலுள்ளவர்களைப் பார்த்துப் பார்த்துக் கிராமவாசிகளும், நாமும் இவர்களைப் போல் பாடுபடாது சுலபமாய்ச் சம்பாதித்துச் சுகமாய் வாழலாமே என்று நினைக்கிறார்கள்; ஆகவே பணக்காரரிடம் வேலைக் கமர்ந்து அவர்கள் நிபந்தனைகளுக்கு உட்பட்டு நடக்கின்றனர். வேலைக்காரர்களாகவும், சமையற்காரராகவும் வண்டி யோட்டுபவராகவும், பல பெண்கள் வேசைகளாகவும் அமர்கின்றனர். பலர் வண்டி, விளையாட்டுப் பொருள் முதலியவற்றைச் செய்கின்றனர். இவ்வாறு கிராமவாசிகள் பணக்காரரது சேர்க்கையால் பாடுபட்டு நன்குழைப்பதை விட்டுத் தந்திரமாகவும், சுலபமாகவும் பொருளீட்டிக் காலந்தள்ளும் வழிகளைக் கடைப்பிடித்து நடத்தை கெட்டுப்போகிறார்கள். இத்தகையோர்தான் காலப்போக்கில் வறிஞராகி, நான் பார்த்தது போன்ற சத்திரங்களுக்கு வந்து சேர்கிறார்கள். நகரத்தின் பஞ்சமும் துன்பங்களும்

இவ்வாறுதான் உற்பத்தியாகின்றன. இதைத்தான் நான் தீர்க்க முயன்றும் முடியாது போயிற்று.

ஆயிரக்கணக்கான பணத்தைப் பலர் அவிவேகமாகவும் அலக்ஷியமாகவும் செலவிடுவதையும், பலர் மிக எளிதாக நூற்றுக்கணக்கிற் சேகரித்து விடுவதையும், தாங்கள் பாடுபட்டுஞ் சொற்ப வூதியமே கிடைக்கிறதென்பதையும் கவனித்துப் பணம் சம்பாதிப்பதற்காகக் கிராமவாசிகள் நகரங்களுக்கு வருகிறார்கள். பற்பலர் வியாபாரஞ் செய்தும், பிச்சை யெடுத்தும், மோசஞ் செய்தும், கொள்ளையிட்டும், நடத்தை கெட்டும் பொருள்தேடி வருகிறார்கள். உலகநிலை இப்படியிருக்க இன்னும் எத்தனையோ மக்கள் நெற்றி வியர்வை நிலத்தில்விழப் பாடுபட்டுழைத்து வருவதுதான் ஆச்சரியமான விஷயம்.

இருபது ஏழைக் குடும்பங்களுக்குப் போதிய விறகை நமது வீட்டைக் கணகணப் பாக்குவதற்காக எரித்து விடுவதும், சொற்பதூரம் போவதற்குக்கூட உயர்ந்த இரட்டைக் குதிரை சாரட்டில் இரண்டு வேலைக்காரர்களுடன் செல்வதும், வீட்டுத்தரையில் ரத்தினக் கம்பளங்களை விரிப்பதும், கூத்திற்கும் விருந்திற்கும் ஐயாயிரம், பதினாயிரமென்று செலவிடுவதும் நமக்குச் சாதாரண காரியங்களாகவே தோன்றுகின்றன; வேறு விதமாய்ப் புலப்படவில்லை. ஒரு குடியானவனுடைய குடும்பத்திற்குப் பத்து ரூபாய் வேண்டியிருக்கிறது; எவ்வளவோ பாடுபட்டும் அவன் அதைச் சேகரிக்க முடிவதில்லை. ஏழு ரூபாய் பெறுமான அவனுடைய ஆட்டை வரிப்பணத்திற்கீடாக எடுத்துச் செல்கின்றனர். ஏழைகள் வாழ்க்கை

இப்படித்தான் என்று இதை ஒரு சாதாரண சம்பவமாகவே நினைக்கிறோம். 'நமது ஆடம்பர வாழ்க்கையால் எத்தனை ஏழைகள் பிழைக்கிறார்கள்' என்று கூறும் அறிவினர்களும் இருக்கின்றனர்.

ஏழைகளும் காரண காரியங்களை நம்மைப் போலவே நன்கு அறிகிறார்கள். யாராவது ஒருவன் சூதிலும், வாதிலும் ஆயிரக்கணக்காகச் செலவிடில் நாம் அவனைப் பார்த்து, இப்பணம் நமது கையிலிருந்தால் அழகான கட்டிடமொன்று கட்டி யிருப்போமே; நிலம் புலங்களை எவ்வளவோ சீராக்கி யிருப்போமே என்கிறோம். அதுபோலவே, நாம் வீணாகவும் காரியமின்றியும் பணத்தைச் செலவிடுவதைப் பார்க்கும் ஏழைகளும், ஆகா! இப்பணத்திற் சொற்பமாவது நம்மிடமிருந்தால் வயிறார உண்டு சில வசதிகளையுஞ் செய்து கொள்ளலாமே. பணமெல்லாம் இப்படியா வீணாகவேண்டும் என்று நினைக்கின்றனர்.

சிலர் ஓய்வின்றி யுழைத்து வருந்துவதும், வேறு சிலர் உண்டுகளித்துச் சோம்பேறிகளா யுட்கார்ந்திருப்பதும் நியாயம் என்று ஏழை மக்கள் ஒருநாளும் ஒப்பியதில்லை; ஒப்பப் போவதுமில்லை. அவர்கள் இந்நிலையைக் கண்டு வியப்பதும் வெறுப்பதுமா யிருக்கின்றனர். சிலர் பணக்காரரைப் பார்த்து அவர்களைப் பின்பற்றித் தாங்களும் சோம்பேறிகளாகின்றனர். இவ்வாறு பலர் கெட்டுப்போய்த் தரும சத்திரங்களிலுஞ் சோம்பேறி மடங்களிலுங் கூடுகின்றனர்.

ஒரு வருஷத்திற்கு முன் என் சமையற்காரனுக்கு உதவியாக ஒருவனை யமர்த்தினேன். அவன்

திடீரென வேலையைவிட்டுப் போனவன், ஒரு வியாபாரியிடம் அமர்ந்து இப்பொழுது கடியாரமும் சங்கிலியும் நல்ல உடையுந் தரித்துக்கொண் டிருக்கிறான். இவனுக்குப் பதிலாக வேறொருவனை யமர்த்தினேன். அவன் குடிகாரனாகிக் கையிலுள்ள பணத்தை யெல்லாம் அழித்து விட்டான்.

மற்றொரு பையன் என் சகோதரரிடம் வேலைக் கிருந்தான். அவனுடைய பாட்டன் ஒருநாள் அங்கு சென்று, "வரி செலுத்தப் பத்து ரூபாய் எனக்கு அனுப்பும்படி என் பேரனிடஞ் சொல்லுங்கள். பணம் வராவிடில் மாட்டை விற்க நேரிடும். பையன் தனக்கு வேண்டிய துணிமணிகளை வாங்கியாயிற்று. இன்னும் கடிகாரம் வேறு வாங்கப்போகிறானும்" என்று கூறினார். கடிகாரம் வாங்குவது டாம்பீகச் செலவென்று அவன் எண்ணியது முற்றிலும் உண்மையே. கிழவனுக்குச் சரியான சாப்பாடில்லை; வீட்டிலுள்ள மரத்தை வெட்டி விறகாக்கப் பணமில்லை. இங்கிலையில் கடிகாரம் வாங்குவது அதிகச் செலவென்பது மெய்யே. இவ்வாறு நகரத்திற்கு வந்தபின் சிக்கனமாய் வாழும் வழக்கத்தைப் பெரும்பாலர் விட்டு விடுகின்றார்கள். வீட்டில் வேலைக்காரிகளாயமர்ந்த இருவர் தங்கள் மானத்தை விற்றுக் கெட்ட நடத்தை பிடிபட்டுப் பாழாயினர்.

எந்த ஏழைகளுக்கு நாம் உதவ விரும்புகிறோமோ, அவர்களைக் கெடுப்பது சுகபோக விருப்பும், உண்மையான உழைப்பில் வெறுப்புங்கொண்ட நகரவாசிகளாகிய நாமே என்பதைச் சற்று ஆலோசித்தால் நன்கறியலாகும். ஆகவே நகரங்களின்

வறுமைக்கும் துன்பத்திற்கும் முதற்காரணம் விவசாயிகளான கிராமவாசிகளிடமுள்ள பொருள்களை நகரங்களுக்குக் கொண்டு வருவதுதான். இரண்டாவது காரணம் தங்களிடமிருந்து நகரங்களுக்குக் கொண்டுவரப்பட்ட செல்வத்தை மறுபடியுந் தேடியடைதற்காக நகரங்களுக்கே வரும் நாட்டுப்புறத்தினரும் நமது டாம்பீகச் சோம்பேறி வாழ்க்கையைப் பார்த்துக் கெட்டுப்போவதற்கு வழிகாட்டிகளாயிருந்து அவர்களைக் கெடுக்கிறோம்.

---

## அத்தியாயம் 14

ஏழை மக்களுக்கு உதவி செய்ய முடியாமற் போனதற்கு ஒரு காரணம் அவர்கள் உள்ளதை யுள்ளவாறு சொல்லாது விஷயங்களை மறைத்துப் பொய் சொன்னதுமாகும். ஒரு மனிதனது நிலைமையை நன்கறிந்து கொள்ளாமல் அவனுக்கு உதவுதல் எவ்வாறு முடியும்? அவர்களனைவரும் என்னை ஒரு மனிதனாக நினையாமல் பணங்கொடுக்கும் ஒரு யந்திரமாகக் கருதினர். ஏழைமக்களின் இந்நடத்தையைக்கண்டு அவர்கள்மீது பெருங்குற்ற மிருக்கிறதென்று முடிவு செய்தேன். ஆனால் தர்மிஷ்டராகிய சூதேப் என்பவருடன் பேசியதினின்று ஏழைகளைக் குறை கூறுவதிற் பயனில்லை யென்றும், என் காரியம் நிறைவேறாததற்குக் காரணம் வேறென்றும் உணர்ந்தேன். அவர் கூறிய விஷயம் என் மனத்தில் நன்கு பதிந்ததெனினும் அவருடைய வார்த்தையின் முழுக் கருத்தையும் உணரச் சிறிது காலஞ் சென்றது.

ஒரு நாள் என் சகோதரியின் வீட்டில் ஞூதேபுடன் இருந்தேன். நான் செய்துவந்த வேலைகளைப் பற்றியும், மாஸ்கோவில் கிழவர்களும், திக்கற்ற குழந்தைகளும் இன்னும் பல ஏழைகளும் கஷ்டப்படுவதை நாம் கவனியாதிருத்தல் பெருந்தவறென்றும், நம்மாலாகும் உதவியெல்லாம் செய்யவேண்டியது முக்கியமான கடமை யென்றுஞ் சொல்லிவந்தேன். என் சகோதரி எல்லாவற்றையும் அநுதாபத்துடன் கேட்டுவந்தாள். ஞூதேபின் முகக்குறியைக் கவனித்தவாறே பேசிய நான் அவரை நோக்கி, "இவ்விஷயத்தில் தங்கள் அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டேன். அதற்கவர், "இதெல்லாம் மேற்போக்கான வேலை; இவ்வழியே நீடித்த பலனொன்றும் உண்டாகாது" என்று உறுதியுடன் கூறினார். உடனே நான், "என்ன! நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கு உதவி செய்வது உபயோகமற்ற காரியமா? உண்ண உணவும் உடுத்த உடையுமில்லாதவர்க்கு அவைகளைக் கொடுப்பது தவறென்று வேதங்களிற் சொல்லி யிருக்கிறது?" என்று கேட்டேன். அவர் அதற்கு, "தெருவில் எத்தனையோ பேர்வழிகள் போகின்றனர். அவர்களுக்கு இரண்டு துட்டை விட்டெறிந்து விட்டாற் போதுமா? இது, அவனைப் பார்த்து, 'அப்பா, இந்தா பிச்சைக்காசு, என்னைத் தொந்தரவு செய்யாதே', என்பது போலன்றோ இருக்கிறது? சரி, இத்தகைய ஏழைகள் எத்தனைபேர் மாஸ்கோவில் இருக்கின்றனர்?" என்று வினவினார். அவருக்கு இவ்விஷயந் தெரியாதென்றும் என் மறுமொழியைக் கேட்டு அதிசயிப்பாரென்றும் எண்ணிக் கொண்டு, "மாஸ்கோவில் இருபதினாயிரம் பேர்களும், மற்றும்

இதர நகரங்களிற் கணக்கற்றவர்களும் இருக்கின்றனர்" என்றேன். அவர் சிரித்துக்கொண்டே, "சரி, ருஷ்யாவில் குறைந்தது பத்து லக்ஷம் குடும்பங்களாவது இருக்கக்கூடும். ஒவ்வொரு குடும்பத்தாரும் இரண்டொருவரைத் தங்களுடன் சேர்த்துக் கொள்ளவேண்டும். எல்லோரும் சேர்ந்து வேலைசெய்வதும், தெரியாதவேலைகளை நாமே அவர்களுக்குக் கற்பிப்பதும், எல்லோரும் ஒன்ருகச் சாப்பிடுவதும், நல்லுபதேசங்களைச் செய்வதும், இவ்வாறு ஏகோபித்து வாழ்வதுந் தான் தர்மமாகும். தாங்கள் கூறியவாறு இரண்டு காசு கொடுத்து விடுவதாற் பயனென்றுமில்லை" என்ருர்.

ஆரம்பத்தில் அவருடைய வார்த்தையில் இருந்த சிறிது அவநம்பிக்கை நாட்கள் செல்லச் செல்ல, ஏழைகளோடு மேன்மேலும் பழகப்பழக மறைந்ததோடு அவர் சொன்னதெல்லாம் முற்றிலும் சரியென்றுந் தெரிந்துகொண்டேன். பெரிய மாளிகையில் வசித்துக்கொண்டு, ஆடம்பர உடையுடன் சாரட்டு வண்டியிற் செல்லும் நான் ஒரு ஏழைக்குச் சிறிது பணவுதவி செய்யுங்கால் அவன் எண்ணுவதென்ன? 'என்னே! தேனீக்கள் சேர்க்குந் தேனை மனிதன் அபகரிப்பதுபோல இவர் ஏழைகளிடமிருப்பதைப் பிழிந்தெடுத்து ஏராளமான செல்வத்தைச் சேகரித்து வைத்துக்கொண்டு தானங்கொடுக்கிருர்! இவரிடமிருந்து முடிந்தமட்டும் கிரகித்துக் கொள்ளலாம்' என்றெண்ணுகிருன். அவனுடன் நெருங்கிப் பழக நான் சங்கோசப்படுகிறேன். என் வீட்டிற்கு வந்தால் வெளித்திண்ணையிற்ருன் அவன் காத்திருக்க வேண்

டும். இவ்வாறெல்லாமிருக்க அவன் என்னுடன் நெருங்கிப் பழகி உள்ளதைச் சொல்லவில்லையென்று அவன்மீது குறைகூறுதல் சரியன்று.

உணவின்றி வெறும் வாயை மென்று கொண்டிருப்பவர்க் கருகில் உட்கார்ந்து அறுசுவையுண்டியை யுண்ண எத்தகைய கல் நெஞ்சனுக்கும் மனம் வராது. சுற்றிலுமிருப்பவர்கள் அரைச் சாப்பாட்டுக் காரர்கள்; நாமும் நன்றாய்ச் சாப்பிடவேண்டும். இதற்காக அவர்கள் காணாது மறைவா யுண்ணும் வழக்கத்தைக் கொண்டோம். ஏழைகளுக்கும் பணக் காரருக்கும் இயற்கையாகவே நெருங்கிய சம்பந்தம் இல்லாமற் போகவில்லை. பணக்காரர்களே தங்கள் பழக்க வழக்கங்களால் இவ்வேற்றுமையை மனதார ஏற்படுத்திக் கொண்டனர். சுருங்கச் சொல்லின், பணக்காரனாக வாழ்வதென்பது ஏழைகளை விட்டு விலகி அவர்களுடைய பழக்க வழக்கங்களுக்கு மாறான பழக்க வழக்கங்களுடன் வாழ்வதேயாகும். உணவு, உடை, வீடு, படிப்புமுதலாம் ஒவ்வொன்றிலும் வித்தியாசம். பணக்காரர்கள் இவ்வாறு ஏழைகளுக்குந் தங்களுக்கு மிடையே பெரிய மதில் (சுவர்) கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

ஒருவன் சற்றே பணக்காரனாகி விட்டால் முதலாவது ஏழைகளுடன் சேர்ந்து சாப்பிடுவதை விட்டு விடுகிறான். இவனும் இவன் குடும்பத்தினரும் தனியாக நல்லுண வருந்தவேண்டும். தன்னைப் போன்ற தனிகர்களுடனேதான் இவன் சாப்பிடுவான். ஒரு மாதை எப்படி யுபசரிப்பதென்று இவன் தெரிந்து

கொள்ளவேண்டும். வணங்குவது, உட்காருவது, சாப்பிடுவது முதலாம் ஒவ்வொன்றையும் ஒரு விதமாகத்தான் செய்யவேண்டும். இவ்வாறு ஏழைகளிடமிருந்து தன்னைப் பிரித்துக்கொள்கிறான். உடையிலும் இவ்வாறே; இவர்களுடைய உடை ஏழைகளுக்கு உதவாது. வீடு வாசல் விஷயமும் இப்படியே; பணக்காரன் ஒருவனுக்குப் பத்து அறைகளும், ஏழைகள் பதின்மருக்கு ஓரறையுமா யிருக்கிறது. ஒருவன் எவ்வளவுக் கெவ்வளவு பணக்காரனோ அதேயளவில் அவனை நெருங்குவது கடினம். வெறும் வண்டியை ஓட்டிப் போகும் ஏழைக் குடியானவன் வழிப்போக்கனுக்குத் தன் வண்டியில் இடமளிப்பான். ஆனால் பணக்காரன் வண்டியில் ஏழை ஒருபோதும் ஏறமுடியாது. நாகரிகமான சிற்சில வண்டிகளில் ஒரு ஆள் மாத்திரம் இருக்கும்படி நெருக்கமாயிருப்பது பற்றியே அவைகளுக்கு ஓராள்வண்டி (Egotist) என்று பெயர். சுத்தம் சுத்தமென்று சொல்லிக்கொண்டு தாங்கள் சுத்தமாயிருப்பதற்காகப் பிறருக்கு அளவற்ற வேலை கொடுக்கிறார்கள். வேலை செய்தால் கை அழுக்காகி விடுமென்று சும்மா உட்கார்ந்திருக்கின்றனர். தினமும் ஒருமுறை அல்லது இருமுறை உடைமாற்றி வண்ணான் முதுகு விட்டுப்போகும்படி செய்ய வேண்டுமாம். ஏழைகளிடமிருந்து விலகியிருப்பதற்கே இப்போலிச் சுத்தமும் ஏற்பட்டுளது.

படிப்பும் இப்படித் தானென்று தீரவிசாரித்துத் தெளிந்தேன். நாகரிக உடையணிவதும், சுறுசுறுப்பாகச் சம்பாஷிப்பதும், நகத்தில் அழுக்கேறாது சும்மாவிருப்பதும் படித்தவனுக் கடையாளமென்று

கருதுகிறார்கள். இத்துடன் வாத்தியப் பயிற்சியும் பிரெஞ்சு, ருஷ்யன் பாஷைப் பயிற்சியும் வேண்டும். சொந்தச் சகோதரர்களை விட்டுப் பிரிந்து நாம் மாத்திரம் சுகபோகங்களை நன்கனுபவிக்க வேண்டும் என்னும் எண்ணந்தான் இதற்கெல்லாம் அடிப்படை. இதை எவ்வளவு மறைக்க முயன்றாலும் பலரும் இதை ஆய்ந்து உண்மையைத் தெரிந்து கொண்டுதா னிருக்கிறார்கள். ஆகவே பணக்காரர் ஏழைகளுக்கு உதவமுடியா திருப்பதற்குக் காரணம் இவ் வேற்றுமையும் பணத்தைத் தாறுமாறாய்ச் செலவு செய்வதுமேயாகும். இவ்வாறு பல பேதங்களாகிற பெரிய மதில் (சுவர்) ஏழைகளையும் பணக்காரரையும் பிரித்து வைக்கிறது. இதைத் தகர்த்தெறிந்து முன் செல்பவனே ஏழைகளுக்கு உண்மை யுதவி செய்ய முடியும். சூதேப் கூறியவாறு ஏழைகளை நம்முடன் குடும்பத்திற் சேர்த்துக்கொண்டு வாழவேண்டும். ஆகவே நாங்கள் குவித்துவைத்திருந்த பணமே இவ்வளவு துன்பத்திற்குங் காரணமென்ற முடிவுக்கு வந்தேன்.

---

## அத்தியாயம் 15

என் வீட்டிலோ அல்லது தெருவிலோ பிச்சைக்காரனொருவனைப் பார்த்து அவனுடன் அதிகமாயொன்றும் பேசாமல் சொற்பத் தொகையை அவனுக்குக் கொடுத்துவிட்டால் அவன் முகத்தில் சந்தோஷமும் நன்றி யறிதலுள்ள தோற்றமும், மனதில் திருப்தியும் உண்டாவது வழக்கம். ஆனால் அவனுடன் பேசி

அவனது நிலைமையை அறிந்து பார்த்தால் அவனுக்குக் கொடுத்தது தப்பிதமென்று சில சந்தர்ப்பங்களில் தெரியவரும். இருந்தாலும் இதைப்பற்றியெல்லாம் யோசிக்காமல் அவனுக்கு எவ்வளவு தேவையோ அதற்குச் சற்று அதிகமாகவே கொடுத்துவந்தேன். அவனுடன் பேசிப்பழகியபின் அவனுக்கு எவ்வளவு உதவி செய்தாலும் அவன் திருப்தியில்லாமலே போவதையும் பார்த்திருக்கிறேன். சிற்சில சமயங்களில் என்னுடன் மனக்கசப்புற்றவன் போல் நன்றிபாராட்டாது கடுகடுப்புடன் போவதும் உண்டு. 3468.

பிச்சைக்காரர்களுடன் நெருங்கிப் பழகப்பழக அவர்களுடைய சகவாசம் பெருந்துன்பத்தை விளைவித்தது. சில நாட்களில் அவர்கள் மரியாதைக் குறைவாகவும் நடந்து கொள்வர். தெருவிற் போகும் பிச்சைக்காரனுடன் பேசாமல் இரண்டு காசை மாத்திரம் கொடுத்தால் அவன் பல துளி பெருவெள்ளமென்று மனப்பூர்த்தியுடன் வணங்கிச் செல்கிறான். ஆனால் சற்று நின்று அவனது யோகக்ஷேமங்களை விசாரிக்கத் தொடங்கினால், உடனே அவன் நம்மைப் பார்த்து, ஓகோ! இவர் நம்மிடம் அதிக தயையுடன் இருக்கிறார் என்று தெரிந்துக்கொண்டு கண்ணீர்ப் பெருக்குடன் தனது துர்த்தசையை எடுத்துக் கூறுகிறான். முதன் முறை அவனுக்கு வேண்டியதை எல்லாம் கொடுத்துப் பிழைக்க வழியையும் காட்டி விடுகிறேன். ஆனால் சின்னாட்களில் தற்செயலாகவோ, அல்லது கெட்ட நடைத்தயாலோ கையிலிருந்ததை யிழந்துவிட்டு மறுபடியும் பிச்சைக்கு வருகிறான். இவ்வளவு தான் கொடுப்பதென்னும் தீர்மானம் எனக்

கிருந்தால் மீண்டும் கொடாதிருக்கலாம். ஏழைகளிடம் தயை யுள்ளவன் எப்படிக் கொடாது மறுப்பது?

இருபது முறை கொடுத்து இருபது முறையுங் குடித்துக் கெட்டுப்போய் மீண்டும் உதவி வேண்டினுலும், தயையுள்ள மனிதன் மீண்டும் உதவத்தான் வேண்டும். அவனிடமுள்ளதைக் காட்டிலும் அதிகம் நம்மிடம் இருக்கும்வரை அவன் கஷ்டப்படுவதைப் பார்த்துக் கொண்டிருந்தால் நமது பரோபகாரம் பிறர் மெச்சச் செய்வதாகுமே யன்றித் தயையினுற் செய்ததாகாது. ஆகவே இவர்களுக்கு மீண்டும் உதவி செய்ய விருப்பமில்லாவிடினும், செய்யாதிருப்பது பற்றி வெட்கமுண்டானது.

எனது சொத்தின் மதிப்பை நினைக்கும்போது என் தியாகம் எவ்வளவு சொற்பமென்று விளங்குகிறது. என்னிடமிருப்பதில் லக்ஷத்தில் ஒரு பாகத்தைக் கொடுத்துவிட்டுப் பெரிய தானதருமங்கள் செய்வதாக எண்ணிக்கொள்கிறேன். இது ஒருபோதும் தியாகமே ஆகாது. என் மனத்தின் இன்பத்தையும் உற்சாகத்தையுங் கருதிக் கூட்டத்தில் அவல், பொரிகடலை வாரியிறைப்பதுபோல் சில்லரைப் பணத்தை ஏழைகளுக்கு வழங்குகிறேன். எல்லோரும் என்னைப் பார்த்து, இவன் பாடுபட்டுத் தேடிய பணத்தைத் தானஞ்செய்கிறுனு என்ன! 'குருட்டதிருஷ்டமாய்க் கைவச மிருக்கும் செல்வத்தைச் சில்லரை மாற்றி வாரியிறைக்கிருன்' என்றெண்ணுவதே நான் பற்பல சமயங்களிலும் அவமானப்பட்டதற்குக் காரணம்.

என்னிடம் இவ்வளவு பணம் எப்படிச் சேர்ந்தது? என் தகப்பனுரின் நிலச்சொத்து அவருக்குப்

பின் என்னைச் சார்ந்தது. அங்நிலத்தின் வாடகை, குத்தகை முதலியவற்றின் மூலம் சொத்து பெருகுகிறது. எனக்குக் குத்தகை செலுத்தும்பொருட்டு பல குடியானவர்கள் தங்கள் ஆடுமாடுகளை விற்க நேரிடுகிறது. நான் எழுதி வந்த புத்தகங்கள் மூலமாகவுஞ் சிறிது வருமானமுண்டு. அவைகள் ஜனங்களின் மனத்தைக் கவரக்கூடியனவாகவும், ஆனால் கெட்ட பயனை விளைவிப்பனவாகவு மிருந்தமையால் அவற்றின் மூலம் எனக்குக் கிடைத்தது அதர்ம வழியிற் சம்பாதித்ததாகும். என் புத்தகங்கள் நற்பயனை விளைவிப்பனவாயிருந்தால் இன்னுங் கேவலம். ஜனங்களின் நன்மைக்காக வன்றி பணத்திற்காக எழுதியதாகும். விவசாயிகள் தங்கள் ஆடுமாடுகளை விற்று எனக்குப் பணஞ்செலுத்துவதுபோல் ஏழை உபாத்தியாயர்களும் மாணவர்களும் கஷ்டத்துடன் என் புத்தகத்தை வாங்குகின்றனர். இவ்வாறு சம்பாதித்த பணத்தைக்கொண்டு, பிறரிடம் கூடியமட்டும் அதிகமான வேலை வாங்கிக்கொண்டு கூடியமட்டுஞ் சொற்பமான கூலியை அவர்களுக்குக் கொடுக்கிறேன். சிற்சில சமயம் எனது சந்தோஷங்கருதிச் சொற்பப் பணத்தைத் தானதருமமுஞ் செய்கிறேன்.

ஆகவே ஒரு கையால் ஆயிரக்கணக்காகப் பற்றிக்கொண்டு மற்றொரு கையால் அரைவீசம் கால்வீசமென்று பிறர்க்கு என் பிரியம்போல் வழங்குகிறேன். இதுதான் தானதருமம் என்னும் முற்றிலுந்தவறான எண்ணத்தோடிருந்ததே என்னை வெட்கித் தலை குனியச்செய்தது. பிறருக்கு உதவி செய்வதற்கு முன்பு பிறர் கழுத்தை யறுப்பதை நிறுத்தவேண்டும். இப்படிச்

செய்யாதவரை என் வாழ்க்கை அதர்ம மயம் என்றே சொல்ல வேண்டும்.

சொத்தென்பதே இல்லாமற் போன பிறகே பிறர்க்கு நான் உதவிசெய்வது சாத்தியம். அப்பொழுதுதான் ஏழைகள் நோயாலும் பிறவற்றாலும் வருந்தும்போது அனுதாபத்துடன் உதவிசெய்ய முடியும். என்னைப் போன்ற பணக்காரர்கள் இவ்வுலகில் இருப்பதனாலேயே பலர் குளிரில் விறைத்துப் பசியால் மெலிய நேரிடுகிறது. இத்தகைய வாழ்க்கை முற்றிலும் அதர்மமானது என்று முழு உறுதியுடன் கூறுகிறேன். இதுவே சத்தியம். அப்படியானால், நாமினிச் செய்யவேண்டிய கடமை யாது? ஆண்டவனருளை முன்னிட்டு இவ்விஷயத்திற் கவனஞ் செலுத்துவோர்க்கு முழு விவரங்களுடன் பின்வரும் அத்தியாயங்களில் நன்கு இதை விளக்குகிறேன்.

---

## அத்தியாயம் 16

எனது பிசகுகளை நான் அறிந்து ஒப்புக்கொள்ள இத்தனை நாட்களாயின. இத்தனை நாட்களும் இவ்வளவு பேரிருளில் இருந்ததுபற்றி நடுங்கினேன். சேற்றில் தலை கால் எல்லாம் ஆழப்பதிந்திருந்தும் பிறரை அதனின்றும் மீட்க விரும்பினவன் போலானேன்.

நான் விரும்பியதெல்லாம், ஒரு மனிதன்கூட உண்ணவும் உடுக்கவுமின்றி வருந்தக்கூடாது; எல்லோரும் இன்புற்று வாழவேண்டுமென்பதே. ஆனால் பலவித தந்திரங்களாலும், வரிகளாலும் ஏழைகளை

அடிமைப்படுத்தி எங்களுக்குக் குற்றேவல் செய்யச் செய்யும் பணக்காரர்களில் நானும் ஒருவனுயிருந் தேன். ஒருவன் எவ்வளவு தந்திரசாலியோ அவ் வளவு தான் சோம்பேறியா யிருந்துகொண்டு பிறரை வேலை வாங்குகிருன்.

கோடீசுவரர்களும், பெரிய பாங்கர்களும், வியா பாரிகளும், ஜமீன்தார்களும், பெரிய அரசாங்க உத்தி யோகஸ்தர்களும் ஓர் வகுப்பினர். சிறிய பாங்கர்கள், வியாபாரிகள், சாதாரண அரசாங்க உத்தியோகஸ்தர் கள், சாதாரண மிராஸ்தார்கள், இவர்கள் இரண்டாம் வகுப்பினர். நான் இவ் வகுப்பைச் சேர்ந்தவன். கடைக்காரர்கள், போலீஸ் சார்ஜண்டுகள், இன்ஸ் பெக்டர்கள், உபாத்தியாயர்கள், குமாஸ்தாக்கள் இவர்கள் மூன்ரும் வகுப்பினர். அடுத்தாற்போல வீட்டு வேலைக்காரர்கள், வண்டியோட்டுபவர்கள், தெருத்தெருவாய் வியாபாரஞ் செய்பவர்கள். அதற் கடுத்தாற்போல் உழுதுண்டு வாழும் விவசாயிகள். பத்தில் ஒன்பதுபேர்கள் இவர்களே ; மிகுந்தவர்கள் முன்கூறிய வகுப்பினர்களாவர்.

பத்தில் ஒன்பதுபேர்கள் இயற்கையாகவே நன்கு உழைப்பவராயினும், அவர்களுடைய உழைப் பின் பயனைப் பலவித தந்திரங்களாற் பிறர் அனுபவிக் கின்றனர். இக் காரணத்தால் ஆண்டுதோறும் விவ சாயிகள் வறுமையில் ஆழ்ந்துகொண்டே வருகின்ற னர். பாடுபடாத மற்றவர்களது நிலைமையோ மேன் மேலும் சுகங்கள் நிறைந்தும் நிலைத்தும் வருகிறது.

என்ன கொடுமை! மனிதனுக்கு இன்றியமையா தவையான சிறிதுணவும், மானத்தைக் காப்பாற்றுந்

துணியுங்கூட இல்லாமற்போவர் இவ் வுழைப்பாளிகளே. அவர்களுக்குள்ளும் விசேஷமாக வயதானவர்களும், பெண்டிரும், சிறுவர்களும் அளவுக்கு மிஞ்சி யுழைத்துப் போதிய உணவுமின்றி இளைத்து அலுத்துப் போகிறார்கள். தேக உழைப்பேயின்றி வாழும் எங்களுக்கோ பற்பல சுகங்களும் பணப் பெருக்கும் வருடந்தோறும் வளர்கின்றன. முன் காலத்துக் கட்டுக்கதைகளிற் காணும் வர்ணனைகளெல்லாம் உண்மையாகி வருகின்றன. கனவிலும் உழைப்பைக் கருதாது வாழ்நாள் முழுதும் தாங்கள் சுகங்களை யனுபவிக்கவும் பல தலைமுறை வரை தங்கள் சந்ததிகளும் அவ்வாறே யிருக்கவும் போதிய செல்வப் பெருக்குடையவர்கள் எத்தனையோ பேர்கள் இருக்கின்றனர். கதைகளிற் கூறிய அக்ஷய நிதி இவர்களிடமிருக்கிற தென்பது மிகப் பொருத்தமாகும்.

நன்றாயுழைத்து வாழும் நோக்கத்தைக் கைவிட்டுச் செல்வத்தைப் பல தந்திரங்களாற் பெருக்கிக் கொண்டு நகரங்களிற் பல மனிதர்கள் வாழ்ந்து வருகின்றனர். கிராம விளைபொருள்களை யெல்லாம் நகரத்தார் விழுங்கி விடுகின்றனரே யன்றி உபயோகமான எதையும் அவர்கள் உண்டாக்குவதில்லை. கிராமத்தார் பிழைக்க வழியின்றி நகரங்களுக்கு வந்து நகரவாசிகளின் தீய பழக்கங்களைக் கற்றுக் கொள்கிறார்கள். அதனால் உழுதுண்டு வாழ்பவர்களின் கதி இன்னும் கடினமாகிறது. எங்கள் செல்வத்தையும் சோம்பலையும் சுகவாழ்வையும் பார்த்து உழைப்பாளிகள் பலர் கெட்டுப்போகிறார்கள்.

பிறருக்கு உபகாரம் செய்யும் விருப்பம் அனுவளவேனும் உண்மையாயிருந்தால் பலவகைத் தந்திரங்களாலும் கொடிய வழக்கங்களாலும் பல நூற்றூண்டுகளாக ஏழைகளை வருத்தி அவர்களிடமுள்ளதைக் கொள்ளையிடும் எங்கள் நடத்தையைச் சீர்திருத்திக்கொள்வது மிகவும் அவசியம். நான் ஒரு வேலையும் செய்யாது சுகமாய் வாழ்வதற்காக ஆயிரக்கணக்கான மனிதர்களை வேலைவாங்கி வரும்போது அவர்களுக்கு நான் உதவிசெய்தலோ, அவர்களைக் குறித்து இரங்குவதோ முடியாத காரியம். ஒருவனது தோளின் மீது ஏறி உட்கார்ந்து அவனை அமுக்கிக்கொண்டு என்னைத் தூக்கிச் செல்லுமாறு நிர்ப்பந்தப் படுத்திக் கொண்டே அவனுக்கு உபகாரஞ் செய்வது போலன்றோ எனது நிலைமை இருக்கிறது!

ஏழைகளின் நன்மையைக் கருதும் நான் எத்தகையவன்? விசாலமான அழகிய மண்டபத்தில் கண்ணைப்பறிக்கும் விளக்கொளியில் இரவெல்லாம் சீட்டாடிப் பகல் பத்துப் பன்னிரண்டு மணிக்குப் படுக்கையைவிட் டெழுபவன்; ஆண்மையும் உடல் வன்மையுமற்ற இவ் ஒரு உயிரின் பொருட்டுப் பல உயிர்களை ஓயாது வருத்திக் கொண்டிருப்பவன். நான் யாருக்கு உதவி செய்யச் செல்கிறேனே அவர்கள் காலை ஐந்துமணிக்கே எழுந்து உழுவது, அறுப்பது, வெட்டுவது, கொத்துவது, தைப்பதுபோன்ற பற்பல வேலைகளைப் பாடுபட்டுச் செய்பவர்கள்; ரொட்டியுங் கீரையுமே உண்பவர்கள்; தரையிற் படுத்துறங்குபவர்கள். தன்னடக்கம், விடாமுயற்சி முதலாம் பல நற்குணங்களுள்ள பலசாலிகளும் பல வகைகளில்

என்னினும் நூறுபங்கு மேம்பட்டவர்களுமாகிய இவர்களுக்கோ நான் உதவிசெய்யச் செல்வது!

இவர்களுடன் பழகப்பழக எனது நிலைமையைக் குறித்து நான் வெட்கித் தலை குனியாதிருத்தல் எவ்வாறு? நான் அடிக்கடி சென்றுகொண்டிருந்த சத்திரத்தில் 'முழுச் சோம்பேறி' என்னும் பெயருள்ள பலமற்ற குடிகாரனொருவன் இருந்தான். அவன்கூட என்னைவிட நூறுபங்கு அதிக வேலை செய்வான். இத்தகைய நானோ பிறர்க்குதவி செய்யப்போவது!

ஏழைகளுக்கு உதவிசெய்யும் எண்ணத்தோடன்றோ நான் போகிறேன்? உண்மையில் யார் என்னினும் முழு ஏழை? ஆயிரக்கணக்கானவர் இவ்வொரு உயிருக்காக வேலை செய்கின்றனர். நானோ எவர்க்கும் அணுவளவும் உபயோகமற்ற பலவீனன். கரையானைப்போல் ஒரு மரத்தை யரித்துக்கொண்டே அதை வளர்க்க விரும்புகிறேன்.

என் வாழ்நாளெல்லாம் இவ்வாறு வீணாகப் போகிறது. சாப்பிடுவதும், பேசுவதும், பிறர் பேசக் கேட்பதும், மீண்டும் சாப்பிடுவதும், எழுதுவதும், படிப்பதும் (எழுதுவது பிறரை நோக்கிப் பேசுவதற்கும், படிப்பது பிறர் பேசக் கேட்பதற்கும் சமானமெனலாம்), மறுபடியும் சாப்பிட்டு விளையாடுவதும், பிறகு சாப்பிட்டுத் தூங்குவதுமாக இவ்வாறு காலஞ் செல்கிறது. வேறொன்றும் செய்வதுமில்லை; செய்யவுந் தெரியாது. இத்தகைய வாழ்க்கையை நான் நடத்தும் பொருட்டு அதிகாலை முதல் வேலைக்காரர்களும் சமையற்காரர்களும், வண்டியோட்டிகளும், வண்

ஞுத்திகளும் இன்னும் பலரும் சுறுசுறுப்பாய் வேலே செய்யவேண்டும். மேலும் மேற்கூறியவர்களுக்கு வேண்டிய கருவிகளேச் செய்கிறவர்கள் பலர். பிறகு, உணவுப்பொருள்கள், பீங்கான், கண்ணுடிப் பாத்திரங்கள் முதலாம் எத்தனேயோ சாமான்களேத் தயாரிக்கப் பலர் பாடுபடுகின்றனர். இத்தனே பேர்களும் நாள் முழுதும் தினந்தோறும் அரும்பாடுபடுவ தெல்லாம் நான் பேசிக்கொண்டும் சாப்பிட்டுக் கொண்டும் விளே யாடித் தூங்கிக் கொண்டிருக்கும் பொருட்டுமே யாகும்.

எனக்கு வேண்டிய சகல வேலேகளேயுஞ் செய்து வரும் இவர்களுக்கு உபயோகமற்ற வீணனை நானே உதவிசெய்யச் செல்வது? இவர்களுக்கு உதவி செய்வதற்காக நான் செய்த முயற்சிகளெல்லாம் வீணுய்ப் போன வெட்கமும், இவர்களுக்கு என்னுல் உதவி செய்ய முடியுமென்று எண்ணிய அறியாமைபற்றி இரட்டிப்பு வெட்கமும் எனக்குண்டானது.

ஏழைகள் ஒருவருக்கொருவர் உதவிக்கொள்வது பற்றிச் சில உதாரணங்களேக் கூறியிருக்கிறேன். அவர்கள் ஒருவருக்குப் பணவுதவி செய்தால் அதுவே உண்மையான உதவியாகும். அவர்களிடமுள்ள ஒவ்வொரு காசும் அரும்பாடுபட்டுச் சம்பாதித்ததாகும். என் பணம் எனது உழைப்பின் விளேவன்று. ஆகவே நான் ஒருவருக்கும் உண்மையில் உதவிசெய்தவனுகேன். பணத்திலோ, பணத்திற்கு நாம் வைக்கும் மதிப்பிலோ அல்லது பணத்தைச் சேகரித்து வைத்துக் கொள்வதிலோ ஏதோ பெரிய தவறுதலும் கொடுமை

யும் இருக்கின்றன. பணத்தை நான் சேகரித்து வைத்துக்கொள்வதே என் கண்முன் நிகழும் பல கொடுமைகளுக்கும் அடிப்படையான காரணமா யிருத்தலின், பணம் என்பது என்ன என்பதுபற்றி ஆலோசித்தேன்.

---

## அத்தியாயம் 17

பணம் என்பது என்ன? பணம் உழைப்பின் பலன் என்பர் சிலர். பணம் அதையுடையவர்களின் சொந்த உழைப்பைக் குறிப்பதென்று சொல்லும் படிப்பாளிகளைப் பார்த்துள்ளேன். எனக்கு இவ்விஷயம் தெளிவாய்ப் புலப்படாமல் மேற்கூறிய அபிப்பிராயத்தையே நானும் கொண்டிருந்தேன். ஆயினும் இப்போது இவ்விஷயத்தைத் தீரவிசாரிக்கும் அவசியம் ஏற்பட்டுவிட்டது.

தற்கால நூல்களை ஆய்ந்து பார்த்ததில் அவைகளில் "பணம் இயற்கையாகவே கெட்டதல்ல, பாவமானதுமல்ல. சமூக வாழ்க்கையில் நேர்ந்த சில சந்தர்ப்பங்களால் பணத்தை உபயோகிக்கத் தொடங்கினோம். பணம் பண்டமாற்றுதலுக்குரிய சாதனமாகவும் பொருள்களின் மதிப்பைக் குறிக்கவும், சேர்த்து வைக்கவும், கூலி சம்பளம் முதலியவற்றைக் கொடுக்கவும் ஏற்றதாகவும் இருக்கிறது" என்று கூறியிருக்கிறது.

என் பையில் மூன்று ரூபாய் இருப்பின் எந்த நகரத்திலும் எனக்காக மிகத் தாழ்ந்த, கேவலமான

எவ்வேலையையும் நிறைவேற்றித்தர நூற்றுக்கணக்கானவர் காத்துகிடக்கின்றனர். இது பணத்தால் நேரே ஏற்பட்டதன்றெனினும் நமது தேசங்களின் பொருளாதார நிலைபற்றிய பல சிக்கலான விஷயங்களாற்றான் ஏற்பட்டிருக்கிறது.

ஒருவன் மற்றொருவனை அடக்கியாளுவது நேராகப் பணத்தாலல்ல வெனினும், தொழிலாளிக்கு அவனது வேலைக்கேற்பப் போதிய கூலி கிடைப்பதில்லை. முதல், வாடகை, கூலி, வரவுக்கும் செலவுக்குமுள்ள சில சம்பந்தங்கள் முதலான பற்பல சிக்கல்கள் இடையிலிருப்பதே இதற்குக் காரணமாகும். பச்சையாக உள்ளதையுள்ளபடி கூறுங்கால், பணமுள்ளவர் பணமில்லாதவரை ஆட்டிவைக்கலாம். ஆனால் தற்கால சாஸ்திரம் இதைப் பொய்யென்கிறது. எதை உற்பத்தி செய்வதாயினும் இடம் பொருள் ஏவல் என்னும் மூன்றும் வேண்டும். சிலர் பலரைத் தங்களுக்குக் குற்றேவல்செய்யச் செய்வதன் காரணம் உழைப்பாளிகளிடம் இடமும் பொருளும் இல்லாமையேயாகும்.

பணத்தால் உலகத்தில் எத்தனையோ கொடுமைகளும் அதர்மமும் நிலவுதைப் பார்க்கிறோம். இவற்றையுண்டாக்கும் திறமை பணத்திற்கு எப்படி வந்தது? ஒரு மனிதன் தன்னிடமுள்ள பணத்தால் எப்படிப் பலரைத் தன் ஏவலாட்களாக்குகிறான்? இடம் பொருள் ஏவல்களுக்கிடையேயுள்ள பல சிக்கலான தொடர்புகளால் ஏழைத் தொழிலாளி பல கஷ்டங்களுக்கு ஆளாகிறான் என்று பொருளாதார நூல் கூறும். இவ்விடை என் புத்திக்கு விபரீதமாகத்

தோன்றினது. இது பணத்தாலுண்டாகும் கெடுதல்களைக் கருதாது கூறிய விடையாகும். மேலும், சுற்றிலும் நேருக்கு நேர் நடக்கும் உண்மையான நிகழ்ச்சிகளை மறந்து இடம் பொருளேவல்களைப் பற்றித் தனிப்பட ஏதோ பேசுவது இயற்கைக்கு விரோதமும் தப்பிதமுமாகும். நிலத்தின் வாடகை நிலத்தின் சொந்தக்காரனுக்கும், முதலின் வட்டி முதலாளிக்கும் உழைப்பின் கூலி உழைப்பாளிக்கும், உரியனவென்று சொல்வது உண்மைதானா என்று பார்ப்போம்.

நான் இதை எழுதிக்கொண்டிருக்கும் இச்சமயம் சுற்றிலுமுள்ள நிலங்களில் வைக்கோல் சேகரிக்கிறார்கள். புல் விளையும் நிலமும், அரிவாள், மண்வெட்டி, வண்டி முதலியவுட்பட முதலும், வேலைக்காரரின் உழைப்புஞ் சேர்ந்து இவ்வேலை நடக்கிறதென்று பொருளாதார விற்பன்னர் கூறுவர். ஆனால் இது உண்மையல்லவென்று எனக்குத் தோன்றுகிறது. அவர்கள் கூறும் மூன்று விஷயங்கள் மாத்திரமன்றி வேறுபல விஷயங்களும் உள. வெய்யிலும் மழையும் இதற்கு அவசியம். ஆடுமாடுகள் அதை மேய்ந்து விடாமற் பார்த்துக்கொள்ளும் சமூகநிலை, வேலையாட்களின் சமயோசித புத்தி, மொழியறிவு இவையாவும் இதற்கு அவசியமாயிருக்குங்கால், இடம் பொருளேவல் என்னும் மூன்றை மாத்திரம் எடுத்துக் கொள்வது எதற்காக?

விளைவுக்கு நிலத்தைப் போலவே வெய்யிலும் மழையும் காற்றும் வேலையாட்களின் உணவுடைகளும் அவசியமானவையே. இவ்வாறிருக்க மூன்றை

மாத்திரங் கொள்வதின் காரணமென்ன? வெய்யில், மழை, காற்று முதலியவற்றைத் தடுப்போர் எவரு மில்லை. நிலத்தையும் முதலையும் பற்றியே அடிக்கடி சச்சரவுண்டாகிறது. இம் மூன்று தான் எங்கும் தெளிவாகக் காணப்படுகின்றன வென்று சொல்லு கிறார்கள். இது உண்மைதானா என்று பார்ப்போம். என்னைச் சுற்றியுள்ளவர்கள் ருஷ்யாவில் குடியேறி ஒவ்வொருவரும் சிறிது நிலத்தைப் பண்படுத்தி உழுதுண்டு வாழ்ந்து வந்தனர். நிலம் இன்னவருக் குத்தான் சொந்தமென்று கட்டுப்பாடொன்று மில்லை. தான் உழுது பயிரிடாத நிலத்தைத் தனதென்று எவனும் சொல்லிக்கொள்ள முடியாது. ஒவ்வொரு வனும் தனக்கிஷ்டமான ஓரிடத்தில் உழுது பயிரி டலாம்.

இவர்கள் பல பொருள்களையுங் கருவிகளையுங் கொண்டு உழுது பயிரிடுதல், தோட்டம் போடுதல், வீடு கட்டுதல் முதலாம் வேலைகளைச் செய்கிறார்கள்; சில சமயம் தங்களிடமுள்ள கருவிகளைக்கொண்டும் பிறசமயங்களில் மற்றவர்களிடம் வாங்கிவந்தவற்றைக் கொண்டும் வேலை செய்கிறார்கள். அவற்றை உபயோகிப்பதற்கு வாடகைப் பணம் கொடுக்கும் வழக்கமே அவர்களுக்குத் தெரியாது. முதலுக்கு வட்டி வாங்கும் வழக்கமும் அவர்களிடை யில்லை.

எனது கற்பனா சக்தியால் இவ்வாறிருக்க வேண்டு மென்று நான் சொல்லிவருவதாக யாரும் எண்ண வேண்டாம். ருஷ்யாவில் மாத்திரமன்றி உலகெங்கும் ஆதிகாலத்தில் இவ்வாறுதா னிருந்தது. மத சுதந்தரத் திற்காக தங்கள் நாடு நீங்கி ருஷ்யாவிலும் அமெரி

காவிலும் குடியேறிய அறிவாளிகளும் மேலே கூறிய வாறே வாழ்ந்து வந்தனர். யுக்திக்குப் பொருந்தும் இயற்கையான விஷயங்களையே நான் கூறுகிறேன்.

தனித்தனியே வேலைசெய்வது கடினமாதலால் இவர்கள் உழைப்பாளிகள் சங்கமொன்று ஏற்படுத்திக்கொண்டு பொதுவாக எல்லோருக்கும் உபயோகமான கருவிகளை வைத்துக்கொண்டு சேர்ந்துழைப்பார்கள். எல்லோரும் உயிர் வாழ்ந்து வேலை செய்வதற்கு அவசியமாகிய வெய்யில் காய்கிறது; மழை பெய்கிறது. எல்லோருக்கும் உண்ண உணவும் உடுக்க உடையுமிருக்கின்றன. வேலை செய்வதற்கு வேண்டிய கருவிகளும் உள. வெய்யிலையும் மழையையுங் காற்றையும் என்னுடையதென்று சொல்லிக்கொள்வதெப்படியோ, அப்படியே நிலத்தையும் கருவிகளையும் உபயோகியாது விட்டுவிட்டு உரிமை பாராட்டுவதும் தவறு. நிலமோ கருவியோ ஒருவன் உபயோகித்து வருமட்டுமே அவனுடையதென்பதே யுக்திக்குப் பொருத்தமும் நியாயமுமாகும்.

ஆனால் ஐரோப்பாவிலோ தற்காலத்தில் நிலம் ஒருவனுடையதாகவும், கருவிகள் முதலானவை மற்றொருவனுடையனவாகவு மிருக்க, வேறு சிலரிடம் நிலமுமில்லை, கருவிகளுமில்லை; உழைப்பதற்குக் கைகால்கள் மாத்திரம் இருக்கின்றன. இந்நிலை நீதிக்கும் யுக்திக்கும் பொருந்தவில்லை. வேலை செய்ய நிலமும் கருவிகளுமில்லாத ஒருவனை உழைப்பாளி எனலாகாது. வலையுந் தூண்டிலு மில்லாதவனைச் செம்படவனென்று கூறுவது பொருந்துமா? உழைப்

பாளியின் நிலத்தையுங் கருவிகளேயும் பிறர் கைப்பற்றிக் கொண்டதால் தான் அவன் வெறும ஆளானுன்.

இவ்வாறு பிறருக்கு வேலைக்காரர்களாகித் தங்களுக்கு விருப்பமில்லாததும் தங்கள் எஜமானனுக்கே உபயோகமான வேலையைச் செய்கிறவர்கள் நாளடைவில் பெருகிவிட்டனர். ஆதலால் நிலம் ஒருவனுக்கு எப்பொழுதும் சொந்தமென்றும், கருவிகள் மற்றொருவனுடையனவென்றும், இவைகளில் யாதொரு சம்பந்தமுமற்ற மூன்றும் மனிதனொருவன் வேலை மாத்திரஞ் செய்து சொற்பக்கூலி மாத்திரம் பெறுவதென்றும் பிரிப்பது சரியாகாது.

தன்னுடையதென்று நிலத்தையுங் கருவியையும் பற்றிச் சொந்தம் பாராட்டுவதாலேயே அவை ஒருவனுடையவை எனின், இவ்வேலைக்காரன் எனதடிமை, என் சொத்து என்பதையும் சரியென்று கொள்ள வேண்டி வரும். வெயில் என்னுடையதென்று பெரிய சுவரொன்றைக் கட்டிப் பக்கத்து நிலங்களில் வெய்யிலடிப்பதைத் தடுப்பதும், ஓடை என்னுடையதென்று அதைத் திருப்பி என் குளத்தில் தேக்கிக் கொள்வதும் எப்படி நியாயமாகாதோ அவ்வாறே ஒரு மனிதன் ஒரு நிலத்தை வளைத்துக்கொண்டு அதில் தான் வேலை செய்தாலும், செய்யாவிடினும் அது எப்பொழுதும் தன்னுடையதே என்பதும் நியாயமாகாது.

நிலமுங் கருவிகளும் என்னைச் சேர்ந்தனவென்று சொல்லிக்கொண்டு நானும் அந்நிலத்தில் வேலை செய்

யாது, உழைப்பாளியொருவன் அதிற் பயிர்செய்து பலனடைவதையுந் தடுப்பது சரியன்று. ஒரு பறவையின் சிறகுகளைக் கத்தரித்து அதை ஒரு கூண்டில் அடைத்து சிறு விளையாட்டு வண்டிகளை இழுக்கும்படி செய்வதைப் பார்த்துவிட்டுப் பறவையின் இயற்கை வாழ்க்கை இதுதானென்று எண்ணுவது எவ்வளவு மதியீனம்? அதுபோலவே, தற்காலக் குற்றேவல் உழைப்பு முறையை மனிதரின் இயற்கை வாழ்க்கை முறையாக எண்ணுவதுந் தவறு. இவ்வேற்பாட்டை நியாயமென்பதற்காகவே, நிலம் ஒருவனுடையது, கருவி மற்றொருவனுடையது, உழைப்பு இன்னுமொருவனுடையதென்று, பொருளாதார நூல் மிக்கத் தெளிவான நேர்மைக் கேள்விகளுக்கு விடையளிக்காது என்னவெல்லாமோ பிதற்றுகிறது.

பணமுள்ளவர்கள் அதனுதவியால் நிலத்தையுங் கருவிகளையுந் தங்களுடைய தாக்கிக்கொண்டு பணமில்லாதவர்களை வேலைக்காரர்களாகவும் அடிமைகளாகவும் ஆக்கிக்கொள்வது மனிதர்களை அடிமைப் படுத்தும் இயல்புடைய பணத்தால் விளைந்த தீங்கேயாகும். பொருளாதார நூல் இதை மறுக்கிறது. இதுவெல்லாம் பணத்தின் இயல்பினுல் உண்டானதல்ல. ஆனுல், சிலரிடம் நிலமும் முதலுமிருக்க மற்றவர்களிடம் அவை இல்லாமையே இந்நிலைமைக்குக் காரணம் என்று அது கூறும். நிலமும், முதலும் உள்ளவர்கள் அவை யிரண்டு மில்லாதவர்களை ஏன் வருத்துகின்றுர்கள்? என்று நாம் கேட்டால் அதற்கு அவர்களிடம் நிலமும், முதலும் இருப்பதாற்றுன் என்று விடையளிக்கிறது.

நிலத்தையுங் கருவிகளையும் உழைப்பாளிகளிடமிருந்து அபகரிப்பது அவர்களை அடிமைப் படுத்துவதற்கேயாகும். மனிதரை மனிதர் வருத்தி வேலை வாங்குவது பணத்தாலேயே என்று மூளை கலங்காத எவனும் ஒப்புக்கொள்வான். ஆனால் பொருளாதார நூலோ, பணம் பண்டமாற்றுக்குரிய சாதனமேயன்றி வேறன்று; அது, பிறரை வருத்துவதற்குக் காரணமாகாது என்று சொல்லுகிறது. இதன் உண்மையை ஆராய்வோம்.

---

## அத்தியாயம் 18

பணம் எங்கிருந்து உற்பத்தியாகிறது? ஒரு தேசத்தில் எப்பொழுதும் பணம் உபயோகத்திலிருப்பதன் காரணமென்ன? எவ்வாறு வாழ்க்கையை நடத்தினால் பணத்தை உபயோகியாமலே இருக்கலாம்? ஆஃபிரிக்காவில் ஒரு சாதியாரும் ஆஸ்திரேலியாவிலுள்ள ஒரு சாதியினரும் பணமென்பது என்னவென்று கூட அறியாது வாழ்ந்து வருகின்றனர். மிகப் பழைய காலங்களில் இத்தகைய கூட்டத்தார் உழுது பயிரிட்டும், தோட்டம் போட்டும் ஆடுமாடுகளை மேய்த்தும் வாழ்ந்து வந்தனர். இத்தகைய கூட்டத்தினரை வேறொரு கூட்டத்தார் படையெடுத்து அவர்களிடமுள்ள ஆடுமாடுகள் தானியங்கள் எல்லாவற்றையும் அபகரித்து, அவர்களிற் பலரை அடிமைகளாகவுங் கொண்டுபோகின்றனர். சில வருஷங்களில் மீண்டும் படையெடுக்கின்றனர். கைப்பற்றக்கூடிய பொருள்

கள் இல்லாததால் ஜனங்களைத் தங்களுடைய அடிமைகளுக்கு உணவளிக்கும் சிரமத்தை யுத்தேசித்து இரண்டாம் வழியொன்றை அனுசரிக்கின்றனர். ஜனங்களுடைய நிலங்களெல்லாம் தங்களுடையதெனக் கொண்டு, தங்களிடையே சில வீரர்களுக்கு அவற்றைப் பங்கிட்டுக்கொடுத்து அம்மக்களை வேலை வாங்குகின்றனர்.

இவ்வீரர்கள் மக்களின் உழைப்பின் பயனுய் விளையும் விளைவின் அளவைத் தெரிந்துகொள்ளுவதிலுள்ள சிரமத்தை முன்னிட்டு மூன்ருவது வழியொன்றை மேற்கொள்ளுகின்றனர். அதாவது, நிலத்திற்குத் தக்கவாறு குறித்த காலங்களில் வரிசெலுத்த வேண்டுமென்பதேயாம்.

படையெடுப்பதன் நோக்கம் கூடியமட்டும் கொள்ளையிடுவதே யாதலால், வெல்லப்பட்டவர்களிடமிருந்து விலையுயர்ந்தனவும் எளிதிற் கொண்டுபோகக் கூடியனவுமாகிய மிருகங்களின் தோல்கள், தங்கம் முதலியவற்றை வரியாக வாங்கிக்கொள்கிருர்கள். நாட்கள் செல்லச் செல்ல நாட்டுமக்கள் கையிலிருந்த தோல், தங்கம் முதலியவை தீர்ந்துபோகவே வரிக்காக நிலத்தை விற்கிருர்கள்; கூலிவேலையும் செய்கின்றனர். வெகுகாலமாக இவ்வாறுதான் நடந்து வருகிறது. தங்கச் சுரங்கங்கள் அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டபின், பணமாகக் கப்பங்கட்ட வேண்டுமென்று விதிக்கப்பட்டது. இது பிறரை அடிமைப்படுத்துவதற்கு மிகவெளிதான சாதனமாகி விட்டது.

லிடரெரி மிஸலெனி (The Literary Miscellany) என்னும் பத்திரிகையில் அறிவாளியொருவர்

ஃபீஜிதீவுகளின் சரித்திரத்தை எழுதியுள்ளார். அக்கட்டுரை சமீபத்தில் நடைபெற்ற பல முக்கியமான விஷயங்களையும் ஆதாரங்களையுங்கொண்டு எழுதப்பெற்றது. கட்டாயமாய்ப் பணத்தை வசூலிப்பதால் ஒருவன் மற்றொருவனை எப்படி அடிமைப்படுத்துகிறான் என்பதற்கு இவ்வரலாறு சிறந்ததோர் அத்தாட்சியாகும்.

## ஃபீஜி தீவுகளின் சரித்திரம்

தென் சமுத்திரத் தீவுகளில் பாலினேஷ்யா என்னும் பிரதேசத்தில் ஃபீஜி வகுப்பினர் வசிக்கின்றனர். அவர்கள் மொத்தம் நாற்பதாயிரம் சதுரமைலுள்ள பற்பல தீவுகளில் வசிப்பவர்கள். இத்தீவுகளில் நூற்றைம்பதாயிரம் ஃபீஜி வகுப்பினர் ஆயிரத்தைந்நூறு வெள்ளைக்காரர்களுமே வசிக்கின்றனர். நாகரிகமற்ற நிலையிலிருந்த இவர்கள் புத்தி கூர்மையுடையவர்களா யிருந்ததால் மிக விரைவில் நல்ல தொழிலாளிகளாய் விட்டனர்.

வெகு காலமாக ஃபீஜித் தீவினர் சுகமாய் வாழ்ந்து வந்தனர். ஆனால் திடீரென 1859-ஆம்வருஷம் அவர்கள் நிலைமை பரிதபிக்கத்தக்கதாய் விட்டது. ஃபீஜித் தீவினர் சிலர் அமெரிக்கப் பிரஜைகள் சிலரை முரட்டுத்தனமாய் அடித்து அவமரியாதை செய்துவிட்டன ரென்றும், அதற்குப் பரிகாரமாக ஃபீஜித் தீவினரும் அவர்கள் தலைவரான கோகாப் என்பவருமாக நாற்பத்தையாயிரம் டாலர் கொடுக்கவேண்டு மென்றும் இவ்வபராதப் பணத்தை அமெரிக்க தேசப் பிரதிநிதிகளிடம் ஒரு குறித்த தேதிக்குள் செலுத்தாவிடில் அவர்கள் மீது படையெடுத்து ஊர்களை முற்றுகையிட்டு நாசஞ்

செய்வதாகவும் அமெரிக்க அரசாங்கத்தார் ஃபீஜிக்கு எச்சரிக்கை கொடுத்தார்கள். அவ்வாறே ஒரு படையுடன் சென்று வளமை மிக்க சில தீவுகளைக் கைப்பற்றிப் ஃபீஜித் தீவினரைப் பயமுறுத்தினர்.

அமெரிக்க தேசத்தினர்தான் முதன் முதலில் பல கிறிஸ்தவமத போதகர்களுடன் ஃபீஜியில் குடியேறி மிகச் செழித்த பிரதேசங்களைக் கைப்பற்றிப் பருத்தியும் காப்பியும் அதிகமாய்ப் பயிர்செய்தனர்; நாகரிக உலகத்தின் சூட்சிகளை அறியாப் ஃபீஜிவாசிகளிற் பலரை வெகு சுலபமாகச் செலவில்லாமல் வேலைவாங்கி வந்தனர். தோட்ட முதலாளிகளாகிய அமெரிக்கருக்கும் கூலிவேலை செய்துவந்த ஃபீஜிவாசிகள் சிலருக்கும் ஏதோ மனஸ்தாபமும் சண்டையு முண்டானது. 'நொண்டிக் கழுதைக்குச் சறுக்கினது சாக்கு' என்று இதையொரு பெரிய காரணமாகக் கொண்டு நாற்பத்தையாயிரம் டாலர் கொடுக்க வேண்டுமென்று அமெரிக்க அரசாங்கம் கேட்டது. அக்காலத்தில் ஃபீஜியில் பணப்பழக்கம் அதிகமில்லை. பண்டமாற்று வழக்கமே எங்கும் நிலவிவந்தது. வரியெல்லாம் விளைபொருளாகவே செலுத்தப்பட்டு வந்தது. நாற்பத்தையாயிரம் டாலர் அபராதம் என்றதைக் கேட்டதும் பிரமித்துப்போன அவர்கள் ஃபீஜித்தீவுகளை ஆங்கிலப் பாதுகாப்பின்கீழ் வைத்துக்கொள்ளவும், பின்னர் அரசாட்சியில் சேர்த்துக்கொள்ளவும் வேண்டுமென்று விக்டோரியா மகாராணியாருக்கு விண்ணப்பித்துக் கொண்டனர்.

ஆங்கிலேயர், மிகத் தந்திரத்துடன் இத்தீவுகளைத் தங்கள் சாம்ராஜ்யத்தோடு சேர்த்துக்கொள்வதால்

நல்ல லாபங்கிடைக்குமா என்று தீர்மானிக்கச் சிலரை அனுப்பினார்கள். இதற்குள் அமெரிக்க அரசாங்கத்தார் அபராதத்தை தொண்ணூறாயிரம் டாலராக உயர்த்தியதன்றிக் காலதாமத மேற்பட்டால் மேலும் உயர்த்திவிடுவதாகவும் பயமுறுத்தினர். இவ்வாறு பலவிதமாய் நெருக்கப்பட்ட கோகாப் மெல்போர்ன் (ஆஸ்திரேலியா) நகரத்து பிரபல வெள்ளை வியாபாரிகளிடம் கடன் வாங்கி அபராதத்தைச் செலுத்த ஏற்பாடு செய்தார். ஆகவே பாலினேஷ்யன் கம்பெனி என்ற பெயருடன் ஒரு வியாபாரக் கூட்டத்தார் தொண்ணூறாயிரம் டாலர் கடனை அமெரிக்க அரசாங்கத்திற்குச் சிறிது சிறிதாகச் செலுத்திவிடும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு அதற்கீடாகப் பதின் மடங்கு லாபகரமான ஒப்பந்தங்களை கோகாபுடன் முடித்துக்கொண்டனர். மூன்று லக்ஷம் ஏக்கர் விஸ்தீரணமுள்ள செழிப்புமிக்க பூமியையும், ஃபீஜித் தீவில் பாங்குகள் வைத்து வரம்பின்றி பாங்கி நோட்டுகள் அச்சிட்டுக்கொள்ளும் சுதந்தரத்தையும் பெற்றுக் கொண்டனர். மேலும் அவர்களுடைய தொழிற்சாலைகளுக்கும் நிலங்களுக்கும் வரிவிதிக்கவே கூடாதென்றும் ஏற்பாடு செய்துகொண்டனர்.

கோகாப் செழிப்பான நிலங்களை யெல்லாம் வெள்ளையர்க்கு அளித்துவிட்டார். அளவற்ற சம்பாத்தியமுடைய வெள்ளை வியாபாரிகளுக்கு அடியோடு வரியில்லை. தனது ஏழைக்குடிகள் செலுத்தும் வரியோ மிகச் சொற்பம். கோகாப் செய்வது யாதெனத் தெரியாது திகைத்துப்போய் வெள்ளையர்களுடன் கலந்து ஆலோசித்து ஒவ்வொரு ஆணும் ஒரு பவுனும்,

ஒவ்வொரு பெண்ணும் நாலு ஷில்லிங்கும் தலைவரி செலுத்த வேண்டுமென்று விதித்தார்.

ஃபீஜியில் பணப் பழக்கம் பெரும்பாலுமில்லை என்று முன்பே கூறியுள்ளோம். ஆகவே ஃபீஜிமக்கள் வரிப் பணத்திற்காகத் தங்களிடமுள்ள விளைபொருள்களை வெள்ளை வியாபாரி கேட்ட விலைக்குக் கொடுக்க வேண்டியிருந்தது; அல்லது அவனிடம் கூலிவேலை செய்ய நேர்ந்தது. கூலிக்கு வேலை செய்பவர்கள் எண்ணிறந்தவர்கள் ஆனதால் வெள்ளையர்கள் அவர்களுக்குச் சொற்பகூலியே கொடுத்துவந்தனர்.

இவ்வரிப்பணத்தைச் சம்பாதித்துக் கொடுப்பதற்காக ஃபீஜிவாசிகளிற் பலர் வருடத்தில் ஆறு மாதங்களுக்குக் குறைவின்றி வெள்ளைக்கார முதலாளிகளிடம் அடிமைகளாய்க் குற்றேவல் செய்ய நேர்ந்தது. குடிகளிடமிருந்து கோகாப் ஆறுயிரம் பவுன் வரி வசூலித்தார். வரி செலுத்தாதவர்கள் மிகக் கடுமையாய்த் தண்டிக்கப்பட்டனர். இதுகாறும் ஜனங்களுக்கு நன்மையைப் பயந்த அரசாங்கத்தார் இவ்வெள்ளைக் கொள்ளைக்காரருடன் உறவுகொண்டு வரி செலுத்தாதவர்க்கு ஆறு மாதக் கடுங்காவல் விதித்தனர். வெள்ளையரின் தோட்டங்களே இவர்களுடைய சிறைச்சாலையாயிற்று. வெள்ளை முதலாளிகள் இவர்களுக்காக வரிசெலுத்தி இவர்களை ஆறு மாதம் வேலைவாங்கி வந்தனர். இம்முதலாளிகள் நியாயாதிபதிகளை நயந்துகொண்டு வரிசெலுத்தாக் குற்றத்திற்காகப் பதினெட்டு மாதக் கடுங்காவலும் விதிக்கச் செய்து ஃபீஜி தீவினரை செலவில்லாமல் நன்கு வேலைவாங்கி வந்தனர்.

ஐயோ! ஃபீஜித்தீவே! சில வருஷங்களுக்கு முன்னிருந்த நின்செழுமை யென்ன? இப்பொழுதுள்ள நின் பஞ்சத்திலடிபட்ட கோலமென்ன!

கிழவர்களும் நோயாளிகளும் சிறு குழந்தைகளும் பெண்டிருமே வீடுகளிலிருந்தனர். வயதுவந்த பலசாலிகளான ஆண்மக்களனைவரும் வெள்ளையரின் தோட்டங்களில் அடிமைகளாய் வாழ்ந்துவந்தனர். ஃபீஜி மாதர்கள் வயல்களில் வேலை செய்யும் பழக்கமற்றவர்கள். ஆகவே, இதற்குமுன் செழுமையான பயிர் பச்சைகளிருந்த விடங்களெல்லாம் இப்பொழுது பாழாயின. எங்கும் பஞ்சமும் வறுமையுமே குடிகொண்டது. ஃபீஜித்தீவினர் வெள்ளைத்தோட்டக்காரர்களின் அடிமைகளாக்கப் பட்டனர்.

இத்தகைய நிலைமையைக் கண்டு மனமுடைந்த ஃபீஜித்தீவினர் மீண்டும் இங்கிலாந்துக்குவிண்ணப்பஞ் செய்துகொண்டனர். இதற்குள் ஆங்கிலேயர் ஃபீஜித்தீவுகள் முழுவதும் சுற்றிப்பார்த்து அவை உலகத்தின் செழுமைமிக்க பிரதேசங்களிற் சிலவென்று கண்டு, அவற்றை 1874-ஆம் வருஷம் தங்கள் சாம்ராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டனர். குடியேறியிருந்த அமெரிக்கத் தோட்டக்காரர்களுக்கு ஆங்கிலேயர் வந்து சேர்ந்தது மிகவும் அதிருப்தியாகவும் வெறுப்பாகவு மிருந்தது. கோகாப் சிறிதுகாலத்தில் இறந்தார். அவருடைய பட்டத்துரிமை உடையவர்க்கு உபகாரச் சம்பளங் கொடுத்துவிட்டு **நியூ சௌத் வேல்ஸ்** என்னும் (ஆஸ்திரேலிய) மாகாண கவர்னராயிருந்த **ஹெர்குலிஸ் ராபின்ஸன்** என்பவரை ஃபீஜித்தீவுக்குத் தலைமையதிகாரியாக்கினர். ஃபீஜித்தீவினர் எதிர்பார்த்த

படி ஆள்வரி நீக்கப்பட்டது. ஃபீஜித்தீவின் அரசாங்கத்தை நடத்த எழுபதாயிரம் பவுன் வேண்டியிருக்க வரிகள் மூலமாய் ஆறுயிரம் பவுனே கிடைத்தது. பணப் பழக்கமும் அங்கே அதிகமின்மையால் விளைபொருள்களாகவே வரிவாங்கி அவற்றை அரசாங்கத்தாரே விற்றுக் கொள்வதெனத் தீர்மானித்தனர்.

பணத்தால் விளையுந் தீங்குகளை ஃபீஜித்தீவுகளின் பயங்கரமான இச்சரித்திரம் தெளிவா யுணர்த்துகிறது.

பொய்க்காரணம் ஒன்றுபற்றி அமெரிக்க அரசாங்கத்தார் பீரங்கிக் கப்பல்களுடன் வந்து "தொண்ணூறுயிரம் டாலர்களா அல்லது உங்கள் உயிர்களா?" என்று ஏழைப் ஃபீஜித்தீவினரை மிரட்டியது முதலாவது அத்தியாயம்.

ஃபீஜித்தீவினர் இரத்தப் பெருக்குக்கு அஞ்சி வெள்ளை வியாபாரிகளிடம் கடன் வாங்கியதன் விளைவாக நேர்ந்த கொடுமை இரண்டாம் அத்தியாயம்.

ஃபீஜித்தீவை ஆங்கிலேயர் அரசாளத் தொடங்கி உழைத்துப் பிழையாச் சோம்பேறி உத்தியோகஸ்தர்களுக்குக் கொழுத்த சம்பளங்கள் கொடுப்பதின் நிமித்தம் ஃபீஜிவாசிகளிடமிருந்து எழுபதாயிரம் பவுன் வரிவசூல் செய்து தங்கள் நன்மையையே பெருக்கிக் கொண்டது மூன்றும் அத்தியாயம்.

ஆங்கிலேயரது வரிச்சுமையைத் தாங்கமுடியாமல் ஃபீஜிவாசிகள் அடிமைகளாக வாழவேண்டியதாயிற்று.

பலாத்காரமாய் வசூலிக்காத மட்டுமே பணம் பண்டமாற்று சாதனமாகும். ஆயுதபலத்தாலும்

குண்டுப் பிரயோகத்தாலும் வசூல்செய்யத் தொடங்கினல் மக்கள் எத்தகைய துன்பத்திற்காளாகின்றனரென்று மேற்கூறிய வரலாற்றினின்று இனிது விளங்கும்.

உழைப்பாளிகளிடம் பணம் அதிகஞ் சேர்ந்து விடாமல் அப்போதைக்கப்போது வரிவசூல் மூலமாக அவர்களை அடிமைகளாய் வைத்திருப்பதே பொதுவாக வரிகளின் நோக்கமாகும். அரசாங்கங்களுக்கு தர்ம அதர்ம வியவஸ்தை பெரும்பாலும் இல்லாததாலும், அவை எப்பொழுதும் கடனில் மூழ்கியிருப்பதாலும் அதிக வரிவசூலிப்பதிலேயே அவை கண்ணுங் கருத்துமா யிருக்கின்றன.

அடிமை வாழ்வு நிலவியிருந்த காலத்தில் எனது அடிமை வேலை செய்யாவிடில் அரசாங்கவுதவி கொண்டு அவனை வேலை செய்யும்படி வற்புறுத்தலாம்; ஆனால் அவனுக்கு உணவளிக்கா விட்டாலும் மிதமிஞ்சிய வேலை கொடுத்தாலும் அதிகாரிகள் என்னைத் தண்டிப்பர். இப்பொழுதோ எல்லோரும் சுதந்திர புருஷர்களாம்! என் வேலைக்காரன் வேலை செய்யாவிடிற் கூலிபெருன். கூலிப்பணமின்றி சாப்பிடவோ வரிசெலுத்தவோ முடியாது. வரிசெலுத்தாவிட்டால் தண்டனை கிடைக்கும். ஆதலின் இக்காலத்து உழைப்பாளிகளுக்கும் முற்காலத்து அடிமைகளுக்கும் பேதமதிகமில்லை.

எவ்வளவு அளவுமீறி வேலை வாங்கினலும் இக்காலத்திற் கேள்விமுறையில்லை. தடியால் (முதுகில்) அடிபடுவதினும், பணத்தால் (வயிற்றில்) அடிபடுங்

துன்பம் பெரிதென்பது உழைப்பாளிக்குத் தெரியும். பொருளாதார நிபுணர்கள் மட்டும் உள்ளங்கை நெல்லிக்கனிபோன்ற இவ்விஷயத்தை ஒப்புக்கொள்வதில்லை.

சிலர் உடலுழைப்பினுற் சமூகத்திற்கு உதவுகின்றனரென்றும், பிறர் அவர்களை மேல் நோக்கிக்கொண்டு மூளையால் வேலை செய்து உதவுகின்றனரென்றும், இவ்வேற்பாட்டிற் பிழையொன்றுமில்லையென்றும் ஒரு அபிப்பிராயம் நிலவி வருகிறதல்லவா? அதனுண்மையை இப்பொழுது ஆராய்வோம்.

---

## அத்தியாயம் 19

பணக்காரனொருவன் சுற்றுப்புறங்களிலுள்ள தானியங்களையெல்லாம் வாங்கித் தன் களஞ்சியங்களை நிரப்பிக்கொண்டு சுற்றிலுமுள்ள ஏழை மக்களைச் சாக அடிக்க முடியும். இத்தகைய சம்பவங்கள் பலவற்றைக் கேட்டிருக்கிறோம்; நேருக்கு நேரே பார்த்துமிருக்கிறோம். ஆயினும் பொருளாதார நூல் விற்பன்னர் பணம் பண்டமாற்று சாதனமேயன்றித் தீமையிழைப்பதன்றெனச் சாதிப்பர். இது அவர்களுடைய கற்பனையே யன்றி, உலகத்திலுள்ள உண்மை நிலைமை யன்று.

மனித சமூகத்தில் எங்கு நோக்கினும் பணமுள்ளவர்கள் பலவீனர்களாகிய ஏழைகளை நசுக்குவது வழக்கமாயிருக்கிறது. ஏழைகள் பலசாலிகளுடைய கொடுமையிலிருந்து விடுபடும் பொருட்டு அவர்

களுக்குப் பணத்தைக் கொடுத்து வருவதால் பணத்தின் உண்மையான தாத்பரியம் இருந்தவிடந் தெரியாது போகிறது. பலாத்காரமில்லாத சமூகங்களிற்றான் சாஸ்திரக்காரர் கூறும் நற்குணங்கள் பணத்திற்குள்ளன.

ஒருவன் பாடுபட்டுண்டாக்கும் விளைபொருள்களை மற்றொருவன் பலாத்காரமாய்த் தன்னுடையதென்றுகூறி அவற்றைக் கைப்பற்றிக்கொள்ளும் வரையிலும் பணம் நன்மை பயப்பது அசாத்தியம். பாடுபட்டு உற்பத்தி செய்பவர்களுக்கே விளைபொருள்களின் உண்மை மதிப்புத் தெரியும். விளைபொருள்களைக் கைப்பற்றுபவர்கள் அவைகளுக்குக் குறைந்த விலை மதிப்புத்தான் தருவார்கள். பணத்தை பலாத்காரமாக அபகரிக்கும் வழக்கத்தாலும், அவ்வாறு சேர்ந்த பணத்தினால் பல பொருள்களை வாங்கிவருவதாலும் பணம் தகுந்த பண்டமாற்று சாதனமாகாது.

பணக்காரரும் அதிகாரமுள்ளவர்களும் விரும்புமாறுதான் எல்லாப் பொருள்களுக்கும் விலை ஏற்படுகிறது. தங்களுக்குப் பிரியமான சாமான்களுக்கு அதிக விலை கொடுப்பதால் அவற்றின் விலை உயர்கிறது.

நிலத்தில் வேலை செய்பவர்கள் தங்கள் எஜமானருக்கு ஆடு, கோழி, பருத்தி முதலியவற்றைக் கொடுப்பதுடன் அவர்களுக்காக உடலாலும் உழைக்கின்றனர். எஜமான் அவர்கள் கொண்டுவரும் பொருள்களுக்கு விலைவிகித மேற்படுத்தி விளைபொருளாகச் செலுத்த முடியாதவர்கள் விலைப்பணத்தைச் செலுத்தவேண்டு

மென்று விதிக்கிறான். ஆகவே எஜமானன் விரும்பிய வாறு விலை விதிக்கலாம்.

விளைபொருள்களின் விலை எஜமானர் குடியான வர்களிடம் வாங்கும் வரிப்பணத் தொகையையும் பொறுத்துள்ளது. எஜமானர் அதிகப்பணம் வாங்கினால் குடியானவர்கள் அதற்கேற்ப விளைபொருள் களின் விலையை உயர்த்துகின்றனர். இதனின்றும் பலாத்கார வசூலினால் பொருள்களின் விலைமதிப்பு எவ்வாறு மாறுகிறதென்பது விளங்கும்.

ஒருவன் மற்றொருவனை அடக்கியாளும் வழக்க முள்ள வரையிலும் பண்ட விலைமதிப்பு அடக்கியாளு பவன் சித்தம் போலவே ஏற்படுகிறது. ஆகவே பணமென்பது உழைப்பின் பயனாகிய விளைபொருள் களுக்கு ஈடாகக் கொடுக்க ஏற்பட்டதாகவில்லை. பிறரை வருத்தி வேலை வாங்குவதற்கே பணம் பயன் படுகிறது. மனித சமூகத்திற் பெரும்பான்மையரை அடிமைகளாக்கச் சிறந்த கருவியாய் விளங்குவது பணமே.

குடியானவர்களிடமிருந்து ஆடுமாடுகளைக் கைப் பற்றிக்கொண்டால் அவைகளுக்குத் தீனி யளித்துப் பாதுகாக்கவேண்டும். தானியங்கள் ஒரு சமயம் கெட்டுப்போகக் கூடும். இக்காரணங்களினால் எவ்வித அசௌகரியமில்லாததும் பிறரை வேலைவாங்க உதவு வதுமாகிய பணத்தையே எஜமானர்கள் சேகரிக் கின்றனர்.

உழைப்பாளியிடம் பணமில்லை; எஜமானனோ வரி விதிக்கிறான். வரிப்பணம் சம்பாதிக்கும் பொருட்டு

உழைப்பாளி அவனிடமே குற்றேவல் புரிகிறான். இவ்வாறு பணத்தைக்கொண்டு பிறரை அடிமைப்படுத்தி வேலைவாங்குவது தெளிவாம்.

குடியானவர்களுக்குப் பணத்தால் எவ்வித சௌகரியமும் உபயோகமும் இல்லை. பணம் தோன்று முன்னரே பண்டமாற்று சௌகரியமாய் நிலவி வந்திருப்பதால் அதையோர் பண்டமாற்று சாதனமாகக் கூறவும் முடியாது. உழைத்துப் பாடுபடுபவன் சம்மதியின்றி பண்டவிலை விகிதம் ஏற்படுவதால் பணம் ஒரு பண்டங்களின் விலைமதிப்பைக் குறிப்பதுமாகாது. குடியானவனிட மிருக்கும் அனைத்தையும் அவன் உழைப்பையும் பணக்காரன் கிரகித்துக்கொள்வதால் பணம் குடியானவனுக்குச் சேகரித்து வைப்பதற்கும் உதவுவதில்லை. குடியானவன் பெறும் கூலிக்குப் பதின்மடங்கு அவனிடமிருந்து உறிஞ்சப்படுவதால் பணம் கூலிகொடுக்கும் சாதனமு மாகவில்லை.

இத்தனை காரணங்களைக் கொண்டும் பணம் பண்டமாற்று சாதனமென்றோ, விலைமதிப்பைக் குறிப்பதன்றோ சொல்வது முற்றிலும் விபரீதமென்பது தெளிவாயுணரலாம்.

---

## அத்தியாயம் 20

ஒரு மனிதன் மற்றொருவனுக்குப் பிராண அபாயத்தை விளைவிக்கக்கூடிய நிலைமையால்தான் உலகில் அடிமைவாழ்வு நிலவிவருகிறது. ஒருவன் மற்றொருவனால் அடிமைப்படுத்தப்பட்டுத் தனக்குப் பிரியமற்ற

தும் தனது எஜமானனுக்கே உகந்ததுமான வேலையைக் கட்டாயத்தின்பேரில் செய்வதன் காரணத்தை ஆய்ந்தால் அது உயிருக்கு அபாயம் வருமோ என்னும் பயமொன்று ஏற்படும். நமது நாகரிகவுலகில் பெரும்பாலோர் தங்களுக்கு விருப்பமில்லாததும் வெறுப்பானதுமான காரியங்களில் ஈடுபடுவதன் காரணம், அதைச் செய்யாவிடில் உயிர்வாழ முடியாதென்னும் பயத்தை அடிப்படையாகக் கொண்ட அடிமை வாழ்வேயாகும். இவ்வடிமை வாழ்வென்பது என்ன? பயமுறுத்தி வேலைவாங்குவ தெப்படி?

முன் காலத்தில் அடிமைப்படுத்தும் வழிகளும், கொன்றுவிடுவே னென்று பயமுறுத்துவதும் ஒளிவு மறைவில்லாமல் வெளிப்படையா யிருந்தன. அக்காலத்தில், "எனது அடிமையாகச் சம்மதிக்கிறாயா, அல்லது உன்னைக் குத்திக் கொன்றுவிடட்டுமா?" என்று கேட்பார்கள். ஆயுதபாணி நிராயுதபாணியை நோக்கி, "பலரை இங்கு வதைத்ததுபோல் உன்னையுங் கொன்றுவிடுவேன். இருந்தாலும் பிழைத்துப் போ. உன்னை மன்னித்தேன். நீ நமது அடிமையாயிரு," என்று சொல்வது பண்டைக்காலத்து அநாகரிக வழக்கம்.

பைபிளில் ஐயாயிரம் வருடங்களுக்கு முன்பு நடந்ததோர் நிகழ்ச்சி விவரிக்கப்பட் டிருக்கிறது. எகிப்து தேசத்தில் ஜோசஃப் என்பவன் ஜனங்களைக் கஷ்டப்படுத்தி வற்புறுத்தி ஏழு வருஷங்களாக தானியங்களைச் சேகரித்து வந்தான். ஒரு சமயம் கொடிய பஞ்ச முண்டாகவே, உண்ண உணவற்ற ஜனங்கள், தான் சொன்னபடியெல்லாம் ஆடவேண்டி வந்ததால்

அவர்க ளனைவரையும் அவன் அடிமைப் படுத்திக் கொண்டான்.

பணக்காரன் ஏழையைப் பார்த்து, "உன்னை நான் என் விருப்பப்படி ஆட்டுவிக்கலாம். உன் பிழைப்பிற்குரிய நிலத்தை அபகரித்து உன்னை நாசஞ் செய்யலாம். உன்னிடமுள்ள தானியங்களைச் சற்றே அதிகவிலைக்கு வாங்கி வெளிநாடுகளுக்கு அனுப்பி உன்னைப் பட்டினிபோட்டுக் கொல்லவும் முடியும். உன்னிட மிருப்பதை யெல்லாம் அபகரித்து விடவும் முடியும். ஆயினும், பிழைத்துப்போ. உன்னிஷ்டம் போல் வாழ உனக்குச் சுதந்தர மளிக்கிறேன். நான் குறிக்கும் பண விகிதத்தை மாத்திரம் செலுத்திவா" என்கிறான்.

முதலாவது உபாயம், கொன்றுவிடுவே னென்று பயமுறுத்தி ஒருவன் மற்றொருவனை அடிமையாக்குதல். இரண்டாம் உபாயம் நிலத்தையும் தானிய முதலியவற்றையும் பயமுறுத்திப் பிடுங்கி அடிமையாக்குதல். மூன்றாம் உபாயம் குறித்த பணவிகிதத்தைச் செலுத்துமாறு வற்புறுத்தி அடிமையாக்குதல். இவை மூன்று பலமான முடுக்காணிகளென்றே சொல்லவேண்டும்.

மனிதனை மனிதன் அடிமைப் படுத்தும் வழக்கம் நாகரிக உலகத்தினின்று நீங்கிவிட்டதாக நாம் எண்ணும்போது ஒவ்வொரு தேசத்திலுமுள்ள ராணுவத்தை மறந்து விடுகிறோம். ராணுவமில்லாத தேசமில்லை. ராணுவமின்றேல் தற்காலத்துள்ள பொருளாதார நிலைமை முற்றிலும் மாறிவிடும். ராணுவத்திலுள்ள போர்வீரர்களனைவரும் ராணுவ அதிகாரியின் அடிமைகளே யாவர். சேனைத்தலைவர்களின் உத்தரவு

நீதமோ அநீதமோ அவற்றைக் கீழ்ப்படியுமாறு வற்புறுத்தலும், மீறினுற் சித்திரவதையும், சாவுதண்டனையும் விதிப்பதும் வழக்கம். போர்வீரர்கள் தங்கள் தலைவன் கூறியதையெல்லாம் குருட்டுத்தனமாய்ச் செய்துவிடுவதை அடிமைத்தனமென்று சொல்லாமல் சேனைக் கட்டுப்பாடு, ஒழுங்கு என்று சொல்வது தான் விசேஷம். அடிமைகளுக்கும் போர்வீரர்களுக்குமுள்ள பேதம் ஒன்றே. அடிமை பிறந்தது முதல் அடிமையாயிருக்கிருன்; போர்வீரன் சேனையில் வேலை பார்த்து வருமட்டுமே அடிமையா யிருக்கிருன். ஆகவே நாகரிக உலகில் அடிமை வாழ்வு இருந்துதான் வருகிறதென்பது தெளிவு.

சேனை தேசத்தைப் பாதுகாப்பதற்காகவும், தேசத்தின் பெருமையை நிலைநாட்டுவதற்காகவும் இருந்தே தீரவேண்டுமென்கிருர்கள். ஆனுல் பற்பல சமயங்களில் சேனை தோற்றுப்போய் தேசமும் கைப்பற்றப்பட்டுப் பெருமையுங் குலைந்து போகிறது. விவசாயிகளைப் பணக்காரரின் அடிமைகளாய் வைத்திருக்க சேனை சிறந்த கருவியாகும் என்பதிற் சந்தேகம் சிறிதுமில்லை.

முற்காலப் பெரியோர்கள்கூட இவ்விஷயத்தைப் பெரியதோர் குற்றமாகக் கருதவில்லை. **பிளாடோ, அரிஸ்டாடில், செனபன்** முதலானவர்கள், "மனித சமூகம் சண்டையேயின்றி வாழமுடியாது. சண்டையினுலுண்டாகும் அருவருக்கத்தக்க நிலைமையைப் பரிகரிப்பதற்குச் சேனை அவசியம். அதற்குப்போர் வீரர்களை அடிமைகளாய் வைத்திருப்பது அவசியம்" என்று சாதிக்கிருர்கள்.

சேனைகளின் உதவியால் அரசாங்கத்தார் ஏழைகளிடமிருந்து வற்புறுத்தி வரிவசூல் செய்வது பெரும்பான்மையரான விவசாயிகளை அடிமைப்படுத்துவதேயாகும்.

---

## அத்தியாயம் 21

வெகுகாலமாக அடிமைகளாய் வாழ்ந்துவருபவர்கள் அதன் பயனாகத் தங்கள் அடிமைத்தனத்தை உணருவதில்லை; சுதந்தரத்தை நினைப்பதுமில்லை. அடிமை வாழ்வின் இரண்டொரு இன்னல்கள் நீங்குவதையே பெரிய பாக்கியமாகக் கருதுகிறார்கள். அவர்தம் எஜமானரும் அவர்களுக்கு மேற்கூறியவாறு ஏதாவது சொற்பவுதவி புரிந்துவிட்டுப் பேருபகாரம் செய்துவிட்டதாக எண்ணிக் கொள்கிறார்கள். பொருளாதார சாஸ்திரம் வாழ்க்கைப் பிரச்னைகளின் அடிப்படையான காரணகாரியங்களை ஆய்வதுமில்லை; மிக எளிதான கேள்விகளுக்கு நேர்விடையளிப்பதுமில்லை. ஆதலின் அதன் பற்பல வாதங்களும் பயனற்றவையாகின்றன.

பிறர் உத்தரவிடும் வண்ணமே சிலர் வேலை செய்யவும் சாப்பிடவும் வேண்டுமென்றுள்ள இயற்கைக்கு மாறான, பயங்கரமான, அநீதியான வழக்கம் ஒழுங்கானதா? அப்படியிருப்பதன் காரணமென்னவென்று கேட்டால், சிலர் சாப்பிட்டுக்கொண்டிருக்க வேண்டுமெனில், வேறு சிலர் வேலை செய்துதானே தீரவேண்டும் என்று பொருளாதார சாஸ்திரம் கூறும். பணத்தைப் பற்றியோ வரிவிஷயத்தைப் பற்றியோ

அது ஒழுங்கான விடை யளிக்கவில்லை யென்று முன்னரே விளக்கியுளோம்.

மதவிஷயமாகத் தப்பெண்ணங்களும் குருட்டு நம்பிக்கைகளுமுள்ள சிலர் தாங்கள் கடவுளென்று கருதுமொன்றுக்குப் பல மனிதர்களின் உயிரைப் பலியிடவேண்டுமெனக் கருதுவதுபோல் தற்கால நாகரிக சாஸ்திர ஆராய்ச்சியாளரும் தாங்கள் அரசாங்க முறையெனக் கூறுமோர் பூதத்திற்குப் பலி கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். எல்லா உபாயங்களைக்கொண்டும் இதற்காக முயல வேண்டும்; பலாத்காரத்தையும் கையாளவேண்டு மென்கிறார்கள். கொடிய அடிமைத்தனத்தை இவ்வாராய்ச்சிக்காரர் தவிர்க்கொணாத அவசியமான நிலைமை என்கிறார்கள். அரசாங்கம் ஜனங்களை எதிரிகளிடமிருந்து காக்கவும் பரிபாலிக்கவுமே ஏற்பட்டிருப்பதால் அதற்குப் பணமும் சேனையும் அவசியம் வேண்டுமென்றும் சொல்லுகிறார்கள்.

படிக்காத சாதாரண மனிதன், " நான் உழைத்துச் சம்பாதித்து என் பெற்றோர்களுக்கு உதவியாயிருக்கவேண்டும். விவாகம் செய்துகொள்ள வேண்டும். இந்நிலையில் என் விருப்பத்திற்கு மாறாக என்னைச் சிப்பாயாக எங்கேயோ அனுப்புகின்றனர். அங்கே ஆறு வருடங்களிருந்த பின் ஊருக்குத் திரும்பிவந்து பயிர் செய்யத் தொடங்கினால் மட்டுமிகுந்த வரி கேட்கிறார்கள். உழுது பயிர் செய்யத் தெரியாத சிலர் குத்தகைப் பணமும் கேட்கிறார்கள். வேலை செய்து அதைச் செலுத்திய பின் மிகுந்ததைக் குடும்பத்திற்குப் பயன்படுத்தலா மென்றிருக்குந் தறு

வாயில், 'வரி வரி' யென்று ஒரு உத்தியோகஸ்தன் அதையும் பிடுங்கிக்கொள்கிறான். இவ்வரசாங்கக் கொடுமை ஒழியும் அன்றே க்ஷேமமுண்டாகும்" என்று சொல்லுகிறான்.

இதைக் கேட்கும் படிப்பாளிகள், "சீச்சீ! இதெல்லாம் படிப்பில்லா முட்டாள்களின் பேச்சு. இவையெல்லாம் உன் சுதந்தரத்தை நசுக்குவதற்காக வல்ல. உன்னுடையதும் பிறருடையதுமான க்ஷேமத் திற்காக நீயும் பிறரும் செய்யவேண்டிய தியா கங்களே இவை" என்கிறார்கள்.

மற்றொரு சாதாரண மனிதன், "என்னிடமிருந்து என் மகனை இழுத்துக்கொண்டு போய்விட்டார்கள். மற்ற மக்களையும் வயது வந்ததும் இவ்வாறே கொண்டு போய்விடுவார்கள் போலிருக்கிறது. நாங்கள் முன் பின் அறியாததோர் தேசத்திற்கு அவனைக்கொண்டு போய் பீரங்கியின் முன் நிறுத்துவது எதற்காக வென்று எங்களுக்குச் சற்றும் விளங்கவில்லை" என்கிறான்.

"நான் உழக்கூடாதென்று அவர்கள் கூறும் நிலம் அதை என்றுமே பார்த்திராத ஒருவனுக்குச் சொந்தமாம். வரி வசூலென்று போலீஸ்காரன் மாட்டைக் கொண்டுபோய் விடுகிறான். இவ்வரிப் பணத்தால் உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பளம் கொடுக்கிறார்களாம். இவர்களால் எனக்கு நன்மை யென அணுவளவும் நான் நம்பவில்லை. இத்தகைய பலவந்தச் செயல்களால் எனக்குச் சுதந்தரம் கிடைக் கப் போகிறதாம். இத்தனை அக்கிரமங்களைச் செய்வ வதற்குமேல் இதுவெல்லாம் எனது நன்மையின்

பொருட்டுத்தானென்றும் சொல்லிக்கொள்கிறார்கள்" என்று குடியானவன் கூறுகிறான்.

ஆயுதபலங்கொண்ட கொள்ளைக்காரர்களாகிய இவ்வரசாங்கத்தார் குடிகளிடமிருந்து வசூலிக்க வேண்டியது என்ன, எவ்வளவு என்பதையும் அதை வசூலிக்க எத்தனை உத்தியோகஸ்தர்கள், சிப்பாய்கள் வேண்டுமென்றும் முடிவு செய்து கொள்ளுகிறார்கள்.

அடிமைகளாயிருக்கும் குடிகள் அரசாங்கத்தார் கோரும் காரியங்களைச் செய்துவிட்டு, அவற்றால் தங்களுக்கு நன்மையென்று தவறாக எண்ணிக் கொள்கிறார்கள். அரசாங்க பூதத்திற்குக் கொடுக்கும் இரத்தபலியும் வேறு சில கஷ்டங்களும் நீங்க, மற்றப் படி தாங்கள் சுதந்தர புருஷர்களென்றும் அவர்கள் நினைக்கிறார்கள். இதுவெல்லாம் படித்த மேதாவிகளின் போதனையின் பயனாகும். தற்கால அரசியல் நிபுணர்களின் யோசனையற்றதும், சிரிப்புக்கிடமானதுமாகிய இவ்வேற்பாட்டின் மதியீனத்தைத் தெளிவாக்க வேண்டுமாயின் அவர்கள் சொல்வதை யெல்லாம் அப்படியே நம்பும் வழக்கத்தை விட்டுவிட வேண்டும்.

மக்களைக் கஷ்டப்படுத்தும் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் மக்களின் நன்மைக்காகவே தாங்கள் பாடுபடுவதாக கூறுகின்றனர். மக்களுடைய நன்மையை யுத்தேசித்துத் தீமையையும் விடுதலையையும் உத்தேசித்துக் கொடுமையையும் இழைக்கிறார்கள் போலும்! தங்களுடைய நன்மை இன்னதென்று இவ்வளவு கூடவா மக்களுக்குத் தெரியாமற் போய் விடும்.

ஒரு காரியம் பொது மக்களுக்கு நன்மை பயப்ப தென்பதற்கு, எல்லோரும் அதை மனமார அங்கீகரிப் பதே தகுந்த அத்தாட்சியாகும். சந்தேகமின்றி நன்மை யையே நேருக்கு நேர் கொடுக்கும் விஷயங்களிலேயே கட்டாயப்படுத்துவது துன்பத்தையே உண்டாக்கு கிற தெனின், அநியாயமானதும் அயுக்தமானதும் கேடு மிக விளைப்பதுமான காரியத்தின் பொருட்டு ராணுவத்திற் சேருமாறும், வரி செலுத்துமாறும் வற் புறுத்தல் எவ்வளவு கொடுமை?

அரசாங்க வற்புறுத்தலைப் பெரும்பான்மையோர் தீமையாகவே கருதுகின்றனர். ஆனால் அவ்வரசாங்க உத்தியோகங்களி லிருக்கும் சிறுபான்மையர் பிற ருக்கு எது நலமென்பது தங்களுக்குத்தான் தெரியு மென்று பாவனை செய்கிறார்கள். மக்கள் தங்களுக்குத் தான் தெரியுமென்று பாவனை செய்கிறார்கள். மக்கள் தங்களுக்குத் தீமை யென்றெண்ணும் விஷயத்தை மக்களுடைய நன்மையென்று அரசாங்கத்தார் சொல்லுகிறார்கள். ஆகவே மாந்தர் சத்தியம், தருமம் என்பவற்றை நோக்கிச் செல்வதை அரசாங்கத்தார் தடை செய்கிறார்கள்.

பலாத்காரமும் சமூகத்திலுள்ள அடிமை வாழ் வும் இயற்கையாகவே யுண்டானவை யென்றும், அவை தவிர்க்கொணாதவை யென்றும் அரசாங்கத்தார் சொல்வதை மக்கள் நம்பி தங்கள் இன்னல்களின் காரணம் வேறெங்கேயோ இருப்பதாகக் கருதுகின் றனர். ஒருவரை யொருவர் அடிமைப்படுத்தக்கூடா தென்பது ரோமாபுரியிலும், அமெரிக்காவிலும், நமது நாட்டிலும் சட்டமாயினும், உண்மையில் 'அடிமை'

என்னும் பெயர் மாத்திரம் மறைந்ததேயன்றி அடிமை வாழ்வு ஒழிந்தபாடில்லை.

தங்கள் வேலைகளைத் தாங்களே செய்துகொள்ளாமற் பிறரை வேலைவாங்கும் வழக்கமும் தங்கள் வேலைச் சுமையை ஓர் உழைப்பாளியின் தலையிற் சுமத்தும் வழக்கமும் உள்ளமட்டும் அடிமை வாழ்வும் இருந்துகொண்டே யிருக்கும். இவ்வாறு தங்கள் வேலைச்சுமையைப் பிறரின்மீது சுமத்துவது தங்களுரிமையென்று சிலரும், வேலைசெய்பவர்கள் அதைத் தாங்குவது தங்கள்கடமை யென்றுங் கருதுமிடத்திற் கொடிய அடிமை வாழ்வு நிலவுகிற தென்பதில் ஐயமில்லை. ஐரோப்பா இந்நிலைமையில்தான் இருக்கிறது.

ஆயுதபல முள்ளவன் அஃதில்லாதவனை வற்புறுத்துவதே அடிமை வாழ்வின் சுருக்கம். தனி மனிதரிடம் மிருகபலத்தை யுபயோகித்தல், ராணுவம், நிலவரி யென்னும் இம்மூன்று முறைகளாலுமே விசேஷமாக அடிமைவாழ்வு நிலவுகிறது. பலாத்காரச் செயல்களைச் சட்ட சம்மதமென்று எங்கெங்கே ஏற்படுத்தியிருக்கிறார்களோ அங்கெல்லாம் அடிமை வாழ்விருப்பது நிச்சயம்.

அரசர்கள் தங்கள் உத்தியோகஸ்தர்களுடன் வந்து பலரைக்கொன்று கிராமங்களைக் கொளுத்துவதற்கும், நிலச்சுவான்தார்கள் தங்கள் வேலைக்காரரை வற்புறுத்தி வேலையோ பணமோ வாங்குவதற்கும், உத்தியோகஸ்தர்களும், போலீஸ் சார்ஜண்டுகளும், கிராமங்களில் இங்குமங்குமாகக் குதிரை சவாரி செய்துகொண்டு வரி வசூலிப்பதற்கும் ஆயுதபல

முள்ள பலாத்காரமே அடிப்படை. இந்த நிலைமையில் பணம் சமமாகப் பரவாது; பலாத்காரஞ் செய்பவர்களிடமே அது ஒருங்குசேரும்.

ஜியார்ஜ் என்பவர், நிலமெல்லாம் அரசாங்கத்துக் குரியதா யிருக்கவேண்டு மென்றும், அதில் வேலை செய்பவர்கள் நிலவாடகை செலுத்த வேண்டு மென்றும் ஒரு யோசனை கூறினர். இதுவும் அவ்வளவு சரியன்று. இம்முறைப்படி தப்பித் தவறி விளைவில்லாது போகும் சமயங்களில் இவ்வாடகை யின் பொருட்டுப் பணமில்லாதவர்கள் பணக்காரருக்கு அடிமைப்பட நேரிடும்.

ஒரு பாத்திரத்தில் ஓட்டையிருந்து அதன் வழியாய்த் தண்ணீர் ஒழுகினல், அதை வெளியேயிருந்து எவ்வளவு தான் அடைத்தாலும் பயனில்லை. உட்பக்கத்தில் அடைத்தாற்றான் தண்ணீர் ஒழுகுவது நிற்கும். உழைப்பாளிகளின் செல்வம் உழைக்காதவர்க்குப் போய்ச் சேருவதைத் தடுக்க வேண்டுமாயின், ஆயுதபல முள்ளவர்கள் அஃதற்றவரை வற்புறுத்திக் கஷ்டப்படுத்துவது ஒழிய வேண்டும். ஆயுதபல முள்ளவன் பலவீனனை ஹிம்சித்து வற்புறுத்துவதுள்ளமட்டும் பணம் ஒருவனிடம் அநீதமாய்க் குவியும்; அடிமை வாழ்வும் கூடவே நிலவி வரும்.

# இரண்டாம் பாகம்

## அத்தியாயம் 22

"உயர்ந்த கொள்கைகளைப்பற்றி நினைப்பதும் பேசுவதும் சரியே; ஆனால் அவைகளை வாழ்க்கையில் கொண்டு செலுத்துவதெப்படி?" என்று பலர் கேட்கிறார்கள். கொள்கையென்பது அழகாய்ப் பேசுவதற்கான விஷயமென்று இவர்கள் எண்ணுகின்றனர் போலும்! நாம் செய்யும் ஒவ்வொரு காரியமும் எப்போதும் நமது கொள்கையினின்றே நிகழ்தலையறிந்தால், நாம் இவ்வாறு பிதற்றமாட்டோம்.

கொள்கைகள் மனத்திற்கு உற்சாகமளிக்கும் வெறும் எண்ணங்களென்று கொள்வோமாயின், இவ்வுலகில் எத்தனையோ வேடிக்கைக் கொள்கைகளும் மூடக்கொள்கைகளும் இருக்கலாம். கொள்கை என்பது என்ன? ஒரு விஷயத்தைப்பற்றிய நமது ஆழ்ந்த அபிப்பிராயம் அல்லது முடிவே கொள்கை எனப்படும். அதை வாழ்க்கையிற் கொண்டு செலுத்துதலே நடத்தையாகும். இவ்விதம் நடக்க வேண்டுமென்று மனத்தி லெண்ணிக்கொண்டு அதற்கு நேர்மாறாக நடக்க முடியுமா?

என் வாழ்வில் முதலில் கொள்கை உற்பத்தியாவதையும் பின்னர் தவறாமல் செய்கை அதன்படி தொடர்வதையும் பார்த்துள்ளேன். என் கொள்கையை நிலை நிறுத்துவதற்காக அக்காரியங்களை நான்

செய்யவில்லை. ஆனால் என் கொள்கைக்கு மாறாக நடக்க முடியாததாலேயே என் நடத்தையை மாற்றிக் கொண்டேன். ஒரு விஷயத்தைப் பற்றி ஆலோசித்து ஓர் முடிவுக்கு வந்துவிட்டால் அம்முடிவின்படி ஒழுகாதிருத்தல் முடியாத காரியம்.

"பணத்தைப்பற்றி இவ்வளவு தர்க்கங்கள் செய்வதன் பயனென்ன?" என்று சிலர் கேட்கலாம். நான் செய்ய வேண்டியது எதுவென்று தெரிந்து கொள்வதற்காகவே பாடு மிகப் பட்டு இவ்வாராய்ச்சியிற் புகுந்தேன். பணத்தின் ரகசியத்தை நான் கண்டு கொண்டதும் என் கடமையையுந் தெரிந்து கொண்டேன். புத்த தேவர், ஈசய்யா, லோட்ஸ், ஜான், ஸாக்ரடிஸ், ஏசுகிறிஸ்து முதலாம் பெரியோர்கள் உபதேசித்த தத்துவங்கள் எக்காலும் உண்மையானவை என்ற முடிவுக்கு வந்தேன்.

இரண்டு துணிகளுடையவன் ஒன்றுமில்லா ஏழைக்கு அவற்றிலொன்றைக் கொடுத்துதவ வேண்டுமென்றும், பட்டினி கிடப்பவனுக்கு நமதுணவின் ஓர் பகுதியைக் கொடுக்கவேண்டுமென்றும் ஜான் உபதேசித்தார். ஏசுநாதர் ஏழைகளை வாழ்த்திப் பணக்காரரை மிகவும் அழுத்தமாகக் கண்டித்து ஜான் கூறிய விஷயத்தையே பன்மடங்கு தெளிவாக, "கடவுளுக்கும், பேய்க்கும் ஒரே மனிதன் தொண்டு செய்ய முடியாது" என்று உபதேசித்தார். யாரிடமும் பணம் பெறக்கூடாதென்று தடுத்ததோடு நில்லாது, இரண்டு துணிகள்கூட வைத்துக்கொள்ளக் கூடாதென்று தம் சீடர்களுக்கு உபதேசித்தார்." பணக்கார வாலிபனொருவனை நோக்கி, "அப்பா! நீ

பணக்காரனுயிருக்கும் வரையிலும் பேரின்பவீடு பெறமாட்டாய். ஊசிக் காது வழியாக ஒட்டகை புகுந்தாலும், பணக்காரன் பேரின்பம் பெறுதலரிது'' என்றார். தாம் கூறியதைப் பின்பற்றுவதற்காக "வீடு வாசல் பெண்டு பிள்ளைகள் யாவற்றையுந் துறக்காத எவனும் தம் சீடனாகான்'' என்றும் உபதேசித்தார். பணக்காரனொருவன் விசேடமாக யாதொரு குற்றமும் செய்யாவிடினுங்கூட, உண்டு உடுத்தி சுகபோகங்களில் மூழ்கி யிருந்ததனாலேயே தன் ஆத்மாவை நாசமாக்கிக் கொண்டானென்றும், லாஜரஸ் என்னும் ஏழை போற்றுதற்குரிய நற்கருமங்கள் ஏதும் இயற்றாதபோதிலும் ஏழைப் பிச்சைக்காரனாக வாழ்ந்து வந்ததனாலேயே வீடுபேற்றை யடைந்தானென்றும் இரண்டு உபதேசக் கதைகள் சொல்லி யிருக்கிறார்.

இக்கதைகளின் விஷயம் உண்மையானதென்று நான் அறிந்தவனே யாயினும் உலகாயதரின் பொய் யுபதேசங்களால் மதிமயங்கி யிருந்தேன். தனது நன்மையைத் தேடுவதோடு நில்லாது பிறர் நலத்திற்காகவும் ஒவ்வொரு மனிதனும் பாடுபடவேண்டும். உலகில் வாழவேண்டுமெனின், போட்டியும் சண்டையும் அவசியமென்று மிருக வாழ்க்கையிலிருந்து தெரிகிறதென்று சொல்பவர்களைத் தேனீயிடமிருந்து படிப்பினை பெறக் கோருகிறேன். பிறர்நல விழைவே மனித வியற்கையாம்.

இயற்கையில் மனிதனது கடமை இதுதானென்றும், இதை நிறைவேற்றுவதிலேயே உண்மையான திருப்தியும் மகிழ்வும் அவனுக்குண்டாகின்றன வென்றுந் தெரிந்துகொண்டேன். தேனீ வர்க்கத்தி

லேயே திருடிப் பிழைக்குந் தேனீக்கள் இருப்பது போல மனித சமூகத்திலும் சிலர் தங்கள் சுகத்தை யுத்தேசித்துப் பிறரை வருத்தி வருகின்றனர். சேனை யும், நிலவுரிமையும், நிலவரியும் தற்கால நாகரிகத் தின் மூன்று வலைகளென்று நான் தெரிந்துகொண்ட தும், அவற்றினின்று விடுபடப் பெரிதும் முயன் றேன்.

நான் ஒரு மிராசுதார். எனக்குப் பல வேலை யாட்களிருந்தனர். மேற்கூறிய உண்மையை நான் உணர்ந்ததும், அதுவரை என்னுடையவென்று உரிமை கொண்டாடிய நிலங்களை, அவற்றில் உழுது பயிர் செய்து வந்தவர்களுக்கே விட்டுவிட்டேன். வேலை யாட்களையும் நிறுத்தி விட்டேன். என்னைப் பின் பற்றுமாறு பிறர்க்கும் எடுத்துரைத்தேன்.

பிறரை அடிமைப் படுத்துதல் பிசகென்று உணர்ந் தோர் யாவரும் அரசாங்க உத்தியோகங்களிற் புகுந்து பிறரை வேலை வாங்குவதையும், நிலம் தம்முடைய தென்று பாராட்டுவதையும், பணம் சேகரிப்பதையும், விட்டுவிட வேண்டும். பிறரை வேலை வாங்கும் முறைகளைக் கைவிட நினைத்தால் நமது தேவைகளைச் சுருக்கிக் கொள்ளவேண்டும். தேவையை சுருக்கி நம் வேலையை நாமே செய்யத் தொடங்கினாற்றான் உண்மையிற் பிறருக்கு உதவமுடியும்.

பிறர்க்குதவி செய்யத் தடையாய் நிற்கும் முதற் காரணம்:-நகரங்களில் மனிதர் நெருக்கமாகக் குடி யேறி நாட்டுப்புற விளைபொருள்களை உண்டு களித்த லாகும்.

இரண்டாவது:-பணக்காரருக்கும் ஏழைகளுக்கு மிடையே நிற்கும் பிரிவுச் சுவராகும். அரசாங்க உத்தியோகங்களேயும் நிலங்களேயும் பணத்தையும் விட்டுவிட்டால் இப்பிரிவுச் சுவர் இடிந்து விழுந்து, சகோதரப்பான்மை நிலவும்.

மூன்ருவது:-அதர்ம வழியிற் சம்பாதித்த என் பணத்தைக் கொண்டு பிறருக்குதவ முற்பட்டது மதியீனம். அரசாங்க உத்தியோகங்களேயும், நிலங் களேயும், பணத்தையும் நீக்கிவிடின் அக்கிரம சம்பாத் தியம் நின்றுவிடும். ஆகவே பிறரை அடிமைப் படுத்துவது பிசகென்றுணர்ந்தோர் யாவரும் இம் மூன்றையும் விட்டுவிட வேண்டும்.

---

## அத்தியாயம் 23

பிறரை வருத்தாது வாழ விரும்புவோர் பிறரிட மிருந்து கூடியமட்டும் மிகவும் சொற்ப உதவியையும் வேலேயையும் பெற்றுக்கொண்டு, தாங்கள் முடிந்த மட்டும் பிறர் நலனுக்குப் பாடுபட வேண்டும். சீனத்தார் ஆயிரமாண்டுகளுக்கு முன்னரே, "உலகி லுள்ள ஒவ்வொரு சோம்பேறிக்கும் விரதியாகப் பட்டினி கிடப்பவன் ஒருவன் நிச்சயம் இருப்பான்" என்று கூறியுள்ளதன் உண்மையை யுணர்ந்தேன். குதிரை அலுத்துப்போனுல் சவாரி செய்பவன் உடனே கீழே இறங்குவதுபோல், பிறர் துன்பத்தில் எனக்கு அனுதாப மிருப்பது உண்மையாயின், முதன் முதலில் நான் அவர்களுக்குப் பாரமாயிருக்கக்

கூடாது. இவ்வுண்மை மிகத் தெளிவேயாயினும் பலர் இதைப் பாராது கண்ணை மூடிக்கொள்ளு கின்றனர். நமது வீட்டுக் கொல்லைப்புறங்களையும் வாய்க்கால்களையும் அசுத்தப் படுத்திவிட்டு அதை அகற்றுவதற்காக ஒருவனை நியமிக்கிறோம். அவனைக் கண்டு நாம் பரிதாபப்படுவது உண்மையானால், ஊருக்கு வெளியே சென்று மலஜலங்களைக் கழிக்க வேண்டும். அல்லது நமது வீட்டை நாமே சுத்தப் படுத்திக்கொள்ள வேண்டும்.

பணத்தை ஒருபோதும் சேர்த்து வைத்துக் கொள்ளக் கூடாது. பணமில்லா விட்டால் பிறரை நாம் வற்புறுத்தி வேலை வாங்குவது நின்றுவிடும். இயற்கைக்கு மாறாக மிக விந்தையான ஆசைகளும் தேவைகளும் பணக்காரரிடங் காணலாம். சோம்பேறி களும், சுகப் பிரியர்களும், ஆண்மை யற்றவர்களும் நாளுக்குநாள் பெருகிவருகின்றனர். தாங்கள் புரியும் பெரும் பாவத்தை இவர்கள் உணர்வதில்லை. சமூக ஏணியின் உச்சியிலிருப்பதால் இவர்கள் தலை கிறுகிறுக்கின்றது. தர்ம வாழ்க்கையைக் கைக்கொள் ளாவிடினும் மிருக வாழ்க்கையை யாவது விட்டுவிட வேண்டாமா? அப்படியானால் அவர்கள் கீழே இறங்கவேண்டும்.

தனது உணவைத்தானே பக்குவப்படுத்திக் கொள்ளவேண்டும். வேண்டிய தண்ணீர் முதலிய வற்றைத் தானே கொணர வேண்டும். தனது துணி களைத் தானே துவைத்துக் கொள்ளவேண்டும். வீட் டுக்கு வேண்டிய விறகைத் தானே வெட்டவேண்டும். இஃதெல்லாம் சாதாரணமாக ஒவ்வொருவனும் செய்து

கொள்ள வேண்டிய காரியம். தர்மவானுயிருப்பதற்கு இன்னும் எத்தனையோ பெரிய கடமைகளை மேற் கொள்ள வேண்டும்.

வேலைக்காரர்கள் வேலை செய்வது சம்பளத் திற்கே யெனினும், அவர்கள் உழைப்பாளிகள், நாம் சோம்பேறிகள் என்பது வெளிப்படை. பணப் பெருக்கு அதிக முள்ளவர்கள் பிறரை அதிகமாய் வேலை வாங்குகின்றனர். பணம் சுருங்கினல் பிறரை வேலை வாங்குவதும் குறைகிறது. ஆயினும், பலர் பணக்காரரால் ஏழைகளுக்குப் பிழைப்பு ஏற்படுகிற தென்றும், தங்கள் காரியங்களைத் தாங்களே செய்து கொண்டு வேலையாட்களை நிறுத்திவிட்டால் அவர்கள் பிழைப்பு கஷ்டமாகி விடுமென்றும் நினைக்கிருர்கள். "என்னே! ஒவ்வொருவனும் தனக்கு வேண்டியதை யெல்லாம் தானே செய்துகொள்ள முடியுமா? வேலைப் பிரிவின்றிக் காரியங்கள் எவ்வாறு நடைபெறும்? தொழிலபிவிருத்தி, கலைஞானம், நாகரிகம், சிற்பம் முதலியவை வேலைப்பிரிவின்றி எவ்வாறு முன்னேற முடியும்?" என்று கேட்கிருர்கள்.

---

## அத்தியாயம் 24

மாஸ்கோவில் ஒரு பெரிய விருந்து நடைபெறு வதா யிருந்தது. இரவு எட்டுமணிக்கு வீட்டை விட்டுப் புறப்பட்டேன். என் வீட்டைச் சுற்றிப் பல தொழிற்சாலைகளுண்டு. தொழிலாளிகளுக்கு அன்று விடுமுறையானதால், அளவுமீறிக் குடித்து ஆடவரும்

பெண்டிரும் கூட்டங் கூட்டமாகச் சத்திரங்களை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர்.

தினந்தோறும் காலை ஐந்துமணிக்கு முதற் சங்கு ஊதும். உடனே ஆண், பெண், சிறுவர் யாவரும் வேலை தொடங்குவர். எட்டுமணிக்கு இரண்டாஞ் சங்கு ஊதியதும் அரைமணி நேரம் இளைப்பாறுதல். பன்னிரண்டு மணிக்கு மூன்றுஞ்சங்கு ஊதியதும் சாப்பாட்டிற்கு ஒருமணி நேரமுண்டு. இரவு எட்டுமணிச் சங்கூதியதும் வேலை முடிவுறும். என் வீட்டைச் சுற்றியுள்ள மூன்று தொழிற்சாலைகளிலும் கூத்தாட்டத்திற்கு வேண்டிய பொருள்களையே செய்கின்றனர்.

முதற் சங்கு ஊதியதும், "ஐந்து மணியாயிற்று, உலாவப் போக வேண்டும்" என்று நாங்கள் எண்ணுகிறோம். தொழிலாளிகளோ, தாங்கள் படுத்திருந்த ஈரத்தரையிலிருந்து விழித்தெழுந்து உடனே வேலையிற் புகவேண்டும். நாற்றத்திற்கும் புகைக்கு மிடையில் தங்களுக்குப் பயனற்ற, பொருளுமற்ற வேலைகளில் வயிற்றுக்கொடுமையால் ஈடுபட்டு இரவு எட்டுமணி வரை உழைக்கவேண்டும். வருடம் முழுவதும் இதே வேலைதான்!

இவ்வாறு அவர்கள் அலைந்து திரிந்து இரவு பதினொரு மணிக்குள் தெருக்களை விட்டகன்று பல் வேறிடங்களிற் படுத்துறங்கினர். பலரைப் போலீசார் பிடித்துக் கொண்டேகினர். இப்பொழுது பல திசைகளி லிருந்தும் சாரட்டுகள் ஒரே இடத்தை நோக்கி, மணிக்குப் பதினைந்து மைல் வேகத்தில் ஓடுகின்றன. வண்டிகளில் செல்வச் சீமாட்டிகளும்

சீமான்களும் பெரிய சால்வைகளைப் போர்த்துக் கொண்டு அமர்ந்திருக்கின்றனர். குதிரைக்குப் போடும் சேணம் முதல் வண்டிக்காரன் மீதும், இவர்கள்மீதுமுள்ள உடுப்புகளைச் செய்தவர்கள் சத்திரங்களிற் போய்க் கேவலப்படும் தொழிலாளிகளே. இவ் வேலைகளை நோக்கியே வண்டிக்காரன் வசைமொழியடுக்குகிறான்.

உண்ண உணவின்றி உழைப்பாளிகள் பலர் செத்துக் கொண்டிருக்க, இவர்கள் சுகங்களை அனுபவிக்கிறார்களாம்! இரவு பதினொரு மணிமுதல் காலை ஆறு மணிவரை நள்ளிரவிற் சுகானுபவங்களாம்! எல்லா வயதுப் பெண்டிரும் தங்கள் மார்புகளைத் திறந்து, தோள்வரை கைகளையுந் திறந்து விகாரமாக அலங்கரித்துக் கொண்டு, பாதி நிர்வாணக் கோலத்துடன், முன்பின்னறியா ஆடவருடன் காதற் பாட்டுப் பாடிக் கொண்டும், ஒருவரையொருவர் கட்டியணைத்துக் கொண்டும், குதித்துக் குதித்துக் கூத்தாடிக் கொண்டும், இரவைப் போக்குகின்றனர். கற்பும், நாணமுமே அணிகலமெனக் கொள்ளவேண்டிய மாதர் இவ்வாறே கூத்தாடுவது! கற்பு நிலையை முற்றிலும் மறந்தவர்களே இத்தகைய காரியங்களிற் பிரவேசிப்பர் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

இதில் ஒளிக்கக்கூடிய தொன்றுமில்லை. இதுவெல்லாம் மிகவும் நேர்த்தியும் நாகரிகமும் பொருந்தியதாம். இவர்கள் இப்படிக் கூத்தாடுவதால் அதற்கு வேண்டிய பல பொருள்களைச் செய்து பலர் பிழைக்கின்றனராம். நாயின் வாலை நசுக்கிவிட்டு, அது கோரமாய்க் கத்திக்கொண்டு ஓடுவதைப் பார்த்துக்

களிக்கும் சிறுவரை நாம் வெறுக்கிறோம். ஆனால் பலரை வருத்தி வேலை வாங்குவதன் பயனாய் விளையும் சுகானுபவங்களை நாம் க்கைவிடுவதில்லை. கூத்தாட்டத்திலுள்ள வெறியால், மேற்கூறிய தீங்குகளை, இவர்கள் உணராவிடின் இவர்களைக்கண்டு நாம் இரங்குகிறோம். தொன்றுதொட்டு வரும் பழக்கம் இதுவென்றும், தாங்கள் எவரையும் வற்புறுத்துவதில்லை யென்றும், விலைகொடுத்தே பண்டங்களை வாங்குவதாகவும், கூலிக்கே வேலை வாங்குவதாகவும், இவர்கள், தாங்கள் செய்வது பிசகல்ல வென்று சாதிக்கின்றனர்.

"நான் வாங்கினாலும் வாங்காவிடினும் எல்லோரும் பல பண்டங்களையும் விலைக்கு வாங்கித்தான் வருவார்கள். அவைகளைச் செய்பவரும் செய்து கொண்டு தானிருப்பர். நான் வேலையாட்களை அமர்த்தாவிடினும் பிறர் அமர்த்திக் கொண்டுதானிருப்பர். ஆதலின், நான் எனது சௌகரியங்களைக் குறைத்துக் கொள்வதால் யாது பயன்?" என்று பலர் வினவுகின்றனர். இதற்கு விடையளிக்கிறேன்.

நாகரிகமற்ற காட்டு மனிதரிடை நான் போய்ச் சேருவதாக வைத்துக் கொள்வோம். அவர்கள் எனக்குச் சுவையுள்ள சில உணவுகள் தருகின்றனர். சிறிது நேரத்தில் அவ்வுணவு மனித மாமிசத்தாலானதென்று எனக்குத் தெரியவருகிறது. உடனே நான் என்ன செய்வேன்? அவ்வுண்டி எத்துணை சுவையுள்ளதாயினும், சுற்றியுள்ளவர்க்கு அது இயற்கையாயிருந்தபோதிலும், மறுபடியும் அதைக் கண்ணெடுத்துப் பாரேன். நரமாமிசத்தை நான் அகற்றுவதால் மற்றவர்கள் அதை விடாவிடினும், அதையும் நான்

பொருட்படுத்த மாட்டேன். தப்பித் தவறி அறியாமையால் உட்கொண்டதை, அறிந்தபின் அறவே அகற்றுமை பெரும் பாவ மன்றோ!

---

## அத்தியாயம் 25

ஆகவே, நாம் செய்யவேண்டியது யாது? இத்துன்பங்களுக் கெல்லாங் காரணம் நாமா? நாமல்லாவிடின் வேறு யார் இதற்குக் காரணமாவர்?

இதையெல்லாம் செய்தது நாமல்லோம்; இயற்கையாகவே உலகத்தியல்பு இவ்வாறமைந்து விட்டதென்று சொல்லலாம். குழந்தைகள் எதையாவது உடைத்துவிட்டால், "அதுதானுகவே உடைந்து விட்டது; நான் உடைக்கவில்லை" என்று அழுது கொண்டு சொல்வதைப் போலவே நாமும் விடையளிக்கிறோம். இயற்கையாகவே நகரங்கள் அமைந்திருக்கின்றன வென்றும், அவற்றிலுள்ள ஏழைகளை வேலை வாங்கிக் கூலிகொடுக்க வேண்டுமென்றும் சொல்லுகிறோம்.

நகரங்களில் தோட்டங்களிலும் நாடகசாலைகளிலும் பற்பல சுகங்களுடன் காலத்தைப் போக்கிய பின்னர், கிராம வாசத்திற்குச் சிறிது காலஞ் செல்கிறோம். நாட்டுப்புறங்களின் காற்று பரிசுத்தமாயிருக்கிறது. மரஞ்செடி, கொடிகளும் பச்சென்றிருக்கின்றன. பிறருழைக்கத் தாமுண்ணும் பணக்காரர் பலர் உடல் நலத்திற்காகக் கிராமங்களிற் சிறிது காலந் தங்குகின்றனர். கிராமவாசிகள் மிக எளிய

உணவருந்திப் பகலெல்லாம் உழைக்கின்றனர். இவர்களுக்குப் போதிய உணவும் உடையுங் கிடைப்பதில்லை. கிராமங்களில் தொழிற்சாலைகளு மில்லை, சோம்பேறிகளு மில்லை. அவர்கள் தத்தம் வேலைக்கே போதிய நேரமின்றி வருந்துகின்றனர். வேலை செய்யப் போதிய ஆட்களின்மையால் எத்தனையோ வயல்கள் தரிசாய்க் கிடக்கின்றன. குழந்தைகளும், கிழவர்களும், கர்ப்பிணிகளுங் கூட மிதமிஞ்சி வேலை செய்து அலுத்துப் போகின்றனர்.

3468

இப்பொழுது, பணக்காரர் காலந் தள்ளுவதைப் பார்ப்போம். பழுதான வீடொன்றைப் புதுப்பித்து, அல்லது புதியதோர் வீடு, மாடிகளுடன் அலங்காரமாகக் கட்டி, அதில் வசிக்கின்றனர். வீட்டில் பத்திருபது அறைகளிருக்கின்றன; தரையில் விலையுயர்ந்த சமக்காளங்கள் அல்லது ரத்தினக் கம்பளங்கள்; வீட்டைச் சுற்றிலுந் தோட்டம்; எங்கு நோக்கினும் விதவித வர்ணப் பூச்சு. உண்டிக்கு ஒரு சொட்டு எண்ணெயின்றி ஏழைகள் வாட்ட முற்றிருக்க, வர்ணம் பூசுவதற்கு எண்ணெயைக் கொட்டி வீணாக்குகின்றனர். இவர்களுக்காக வீடுகள் கட்டவும், கட்டிய வீடுகளைப் பழுது பார்க்கவும் எத்தனையோ ஆட்கள் வேண்டும்; அத்தனை பேர்களும் வயல்களில் தங்கள் வேலைகளை விட்டுவிட்டு இவ்வேலைகளைக் கவனிக்க வேண்டி வருகிறது.

தொழிற்சாலைகளை நமது சுகத்திற்காகவே நிறுவுகிறோம். எல்லோருக்கும் இன்றியமையாப் பயிர் வேலையினின்றும் பலரை இழுத்து நமது வீண் சுகங்களின் பொருட்டுத் தொழிற்சாலைக்கு அனுப்புகிறோம்.

இதனால் பலருடைய வாழ்வாறு சீர்கெடுவதுடன், உடல் வன்மையுங் குன்றிவிடுகிறது.

உயர்குலத்தைச் சேர்ந்த, படித்த, அரசாங்க உத்தியோகஸ்தர் ஒருவரது குடும்பம் ஜூன் மாதத்தில் கிராமத்திற்கு வந்து சேர்ந்து செப்டம்பர் முடிய அங்கு தாமதிக்கிறது. குடியானவர்க்குக் கடுமையான வேலை இம்மாதங்களிற்றான். அவர்கள் படும் துயர்களை நாமே அனுபவித்தாலன்றி நன்கு உணர முடியாது.

விவசாயிகள் பழங்களையும் ரொட்டியையும் உண்டு வருந்தியுழைக்கின்றனர். நமது கனவான்கள் நகரத்தில் மிகப் பாடுபட்டதன் பின் இப்பொழுது இளைப்பாறுகிறார்களாம். இவர்கள் குடியானவர்களை வேலை வாங்கிக்கொண்டும் வேடிக்கை பார்த்துக் கொண்டு மிருக்கின்றனர். சிறிது தூரம் செல்ல வேண்டியிருந்தாலும் இவர்கள் குதிரைவண்டியிற்றான் செல்வார்கள்.

நிலங்களில் வேலை செய்யுங் குடியானவர்களுக்கு அவர்களின் குழந்தைகள் உணவு கொண்டுபோகிறார்கள். சில சமயங்களில் அக் குழந்தைகள் சோற்று மூட்டையுடன் வெயிலில் ஒரு மைலுக்கு மேல் விரைந்தோடுவதுமுண்டு. குடியானவப் பெண்டிருக்கு, துணி நெய்வது, ரொட்டி சுடுவது, துணிகளைத் துவைப்பது முதலிய பல வேலைகளுண்டு. குடியானவர்கள் சந்தைக்குப் போகவேண்டும்; நமது கனவான்களுக்கு வேண்டிய வேலைகளையுங் கவனிக்க வேண்டும். இன்னும் எண்ணிறந்த வேலைகளுமுண்டு.

இவர்கள் பாதி வேலையில் களைப்பு மேலிட்டுப் பெருமூச் செறிகின்றனர்; சில கணங்கள் உட்காருகின்றனர். ஆயினுமென் செய்வது! வேலை முடியாததனால், களைப்பைப் பாராட்டாது மீண்டும் வேலையில் முனைகின்றனர். கர்ப்பிணிகளும் இவ்வாறு மிக வருந்துகின்றனர்.

இவர்களுடைய வேலை ஓயாதது, அலுப்பு மிக்கது. இத்தகைய உழைப்பாளிகள் போதிய உணவின்றி இளைத்துப் போகின்றனர். குளிர் காலத்தில் இவர்கள் படும்பாடு சொல்லி முடியாது. ஜூன் மாதத்தில் பொசுக்கும் வெயிலில் அதிகாலை முதல் இருட்டும் வரை இவர்கள் வேலை செய்கின்றனர். மழை எங்கே வந்து விடுமோவென்று இளைப்பாறுதலின்றி உழைக்கின்றனர். பொழுதுபோய் வெகுநேர மட்டும் வேலையிருக்கிறது. சிறுவர்கள் ஆடுமாடுகளை யோட்டிக் கொண்டு வீடு செல்கின்றனர்.

இஃதிவ்வாறிருக்க, நமது கனவான்கள் என்ன செய்கிறார்களென்று பார்ப்போம். வீட்டினுள் வாத்தியங்கள் முழங்குகின்றன; வாயிலில் நாலு குதிரை சாரட்டு வண்டி நிற்கிறது. பாட்டுக் கற்பிக்க ஓர் மாது; ஆங்கிலங் கற்பிக்க மற்றொருத்தி; பிரெஞ்சு போதிக்க மற்றுமொருவள். தோட்டத்திலுள்ள செடிகளுக்கு இரண்டு பெண்கள் தண்ணீர் விட்டுக் கொண்டிருக்கின்றனர். வேலையாளொருவன் துப்பாக்கியை சுத்தஞ் செய்கிறான். இவர்கள் சாப்பிடும் தட்டுக்களைத் தேய்த்துக் கழுவி வைப்பதே ஒரு பெரிய வேலையா யிருக்கிறது. சிலர் காபி, டீ, சாராயம் சிற்றுண்டிகளை எடுத்துப் போவதும் பரிமாறுவதுமா யிருக்கின்றனர். சிலர் மாலையுடைகளை மாடியிலிருந்து

எடுத்துக்கொண்டு வேகமாயிறங்கி வருகின்றனர். மாலை யுண்டியின் பின் அலைந்து திரிந்துவிட்டு மீண்டும் இராச்சாப்பாட்டிற்கு உட்காருகின்றனர். இது முடிய நள்ளிரவாகி விடும். இக் கனவான்கள் சுருட்டுப் பிடித்துக்கொண்டு இடையிடையே சீர்திருத்தத்தைப் பற்றிப் பேசிக்கொண் டிருக்கின்றனர்.

இக்குடும்பத்தைச் சேர்ந்த திடகாத்திரர்களாகிய பதினைந்து ஆண், பெண்களை யுத்தேசித்து முப்பது ஆட்கள் ஓயாது பாடுபடுகின்றனர். நிலங்களிற் செய்ய வேண்டிய வேலைகளுக்கே போதிய ஆட்களின்றி, உழைப்பாளிகள் தூக்கமும் இளைப்பாறலுமின்றி அல்லும் பகலும் உழைக்கும்போது நமது கனவான்களும் அவர்கள் பெண்டிரும் இவ்வாறே காலத்தை கழிப்பது! நாட்டில் யாவர்க்கும் பிராணாதாரமாகிய விளைபொருளைக் குடியானவர் உற்பத்தி செய்து கொண்டிருக்க, நமது கனவான்களும் சீமாட்டிகளும் தங்கள் காலத்தை நாடகத்திலும், கூத்திலும், விருந்திலும், பாட்டிலும், வேட்டையிலுமோ போக்கிக் கொண்டிருப்பது!

பணக்காரர் உழைப்பை வெறுத்து சுகப்பிரியர்களா யிருப்பதால், அவர்கள் செய்ய வேண்டிய வேலையின் பாரமும் ஏழைகளின் தலைமீது விழுகிறது. பணக்காரர் சோம்பலை யொழித்து உழைப்பார்களாயின் ஏழைகள் இவ்வாறு வருந்துவதற்குத் தாங்களே காரணர்களாயிருந்த போதிலும், பணக்காரர்கள், தங்களுக்கும் இதற்கும் யாதொரு சம்பந்தமுமில்லையென்றும் தாங்கள் அன்னபக்ஷியைப் போற் பரிசுத்தர்களென்றும் எண்ணிக் கொள்கின்றனர்.

நமது நிலைமை ஈசய்யா வர்ணித்தது போலவே யிருக்கிறது (ஈசய்யா V. 8.):—

"வீட்டோடு வீடு, வயலோடு வயலென்று தங்கள் சொத்தை வளர்த்துக் கொண்டே போகிறவர்கள் அவற்றின் நடுவே தனிமையாய் வாழ நேரிடும்.

விருந்திலும் பாட்டிலும் கூத்திலுங் குடியிலும் காலத்தைப் போக்குமிவர்கள் கடவுளின் பெருமையையும், படைப்பின் பல்வேறு ரகசியங்களையும் உணருவதில்லை. அநீதியிலும், தற்பெருமையிலும், பாபத்திலும் மூழ்கிச் செவிடர்களாய்க் குருடர்களாய் வாழ்பவர்கள் நாசமுறுவது திண்ணம்."

'மேற்கூறியதற்கும் நமக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை; நாம் மிகவும் தர்மிஷ்டர்கள். இது கொடிய மனிதர்களைப் பற்றிய வர்ணனையன்றோ!' என்று நாம் எண்ணுகிறோம். ஆனால் உண்மையில் நாம் இத்தகைய நிலைமையிற்றா னிருக்கிறோம். இதன் காரணம் என்ன?

---

## அத்தியாயம் 26

புத்தி சுவாதீனத்தையும் மனச்சாக்ஷியையும் முற்றிலும் இழந்துவிடாத எம்மனிதனும், உயிர் வாழ்வதற்கு அவசியமாகிய விளைபொருள்களை உற்பத்தி செய்ய வேண்டுமென்றும், பிறரையே வேலை வாங்கித் தான் சோம்பிக்கிடத்தல் தவறென்றும், பாடு படுபவன் ஒருவன், அதன் பயனை உண்டுகளிப்பவன் மற்றொருவன் என்றிருப்பது பிசகான முறையென்றும் தெரிந்துகொள்ளலாம். ஆயினும் நாகரிக

மிக்கவை யென்று கூறப்படும் கிறிஸ்தவ தேசங்களில் பிறரை வருத்தி வேலைவாங்கித் தாங்கள் சோம்பிக் கிடப்பவர் எண்ணிலர். இவர்கள் பணத்தைச் சேகரித்து வைத்துக்கொண்டு பிறரை வேலைவாங்கி வருவதால், ஏழைகள் மிதமிஞ்சிய உழைப்பினுல் அகால மரணமடைகின்றனர்.

இத்தகைய பெரும் பிழையை மனிதர்கள் எவ்வாறிழைக்கிருர்கள்? நேருக்குநேரே, மிகத் தெளிவாய் உறுதியாய்த் தெரிபவைகளை உணராது செவிடர்களாய்க் குருடர்களாய் எங்ஙனம் வாழ்ந்து வருகின்றனர்?

ஒரு கணம் நமது வாழ்க்கையைப் பற்றி நாம் ஆழ்ந்து சிந்தித்தால், நமது கொள்கையும் நடத்தையும் எவ்வளவு முரண்படுகிற தென்பதை நன்குணரலாம். இவ்வுலகில் உண்ண உணவும் போதிய துணியுமின்றி, ஒதுங்கவோர் விடுதியுமின்றி வருந்து மாந்தர் எப்போது மிருந்து வருகின்றனர். நம்மைச் சுற்றிப் பதினுயிரம், ஆயிரம், பத்து, அல்லது ஒருமைல் சுற் றளவுக்குள் ளிருக்கும் மனிதர் நிலைமையை ஆராயின், அரைவயிற்றுக் கஞ்சிக்கும் வகையின்றி வருந்தும் குழந்தைகளையுங் கிழவர்களையும், கர்ப்பிணிகளையும் நோயாளிகளையுங் காணலாம். இவர்களனைவரும் அளவுக்குமீறி உழைத்துப் போதியவுணவும் இளைப் பாறுதலுமின்றி துன்பத்தில் மடிந்து போகின்றனர். இவர்கள் உலகமுதித்த நாள்முதல் எவ்வளவோ முயன்றும், பாடுபட்டும், தங்கள் இன்றியமையாத் தேவைகளைக் கூடப் பெறமுடியாது வருந்துகின் றனர்.

பிறர் வேலைசெய்ய நாம் சுகவாழ்வு வாழ்கிறோம். நமது வீட்டின்மீது வேய்ந்திருக்கும் கூரை அல்லது ஓடு தானாகவே யுண்டாவதில்லை. நமது அடுப்புகளுக்கு வேண்டிய விறகும் தானாகவே வந்து சேருவதில்லை. சுட்டரொட்டி வானத்திலிருந்து கீழே விழுவதுமில்லை. நாம் உடுக்கும் துணி மரங்களில் தான்தானாகத் தொங்குவதுமில்லை. இவற்றை யனைத்தையும் நாம் அடையும்பொருட்டு ஆயிரக் கணக்கானவர் ஓயாதுழைத்து வருகின்றனர். இவ்வுழைப்பாளிகளின் வாழ்வு முழுமையும் சோறு துணி முதலிய தேவைகளைக் குறித்ததோர் பெரும் போராட்டமா யிருந்தது. இப் போராட்டத்தில் பலர் மடிகின்றனர். உழைப்பினால் நமக்கு வேண்டியவற்றை யடையும் நிலைமையில் கடவுள் நம்மை வைத்திருக்கிறார். ஆகவே நாம் ஒவ்வொருவரும் நன்குழைக்க வேண்டும். சிலர் உழைப்பைக் கைவிடுவதால், ஏனையவர் மிகவுங் கஷ்டப்படும்படி நேருகிறது. இவ்வாறிருக்கப் படித்த முதல்வரெல்லாம் தங்கள் வேலைகளையுஞ் சேர்த்துப் பிறர் தலையிற் சுமத்துவது எவ்வாறு நீதமாகும்? இவ்வநீத முறையை இயற்கை நிலைமை யென்றும் பலர் எண்ணுகின்றனரே!

உழைப்பை விட்டு விலகல் இரண்டு சந்தர்ப்பங்களிற்றான் நியாயமாகும். ஒன்று—நாம் மனிதப் பிறவியல்ல, மேலான தெய்வப் பிறவி, நமது கடமை வேறு, சாதாரண மனிதர் கடமை வேறென்றுணர்திருத்தல் வேண்டும். இன்றேல் நாம் உழைக்காதிருப்பதால் மனித சமூகத்திற்கு வேறுவிதத்தில் பன்மடங்கு அதிக நன்மையாவது பெருகவேண்டும்.

சிலர் பாடுபட்டுழைப்பதும், மற்றவர் அவ் வுழைப்பின் பயனை உட்கார்ந்து கொண்டே அனுப விப்பதுமாகிய முறையை ஆதரித்தே மதகிரந்த வியாக் கியானங்களும், வேறுபல தத்துவ நூல்களும் எழுதப் பட்டுள. ஹேஜல், டார்வின் முதலியவர்கள் போக்கு இம்முறையை ஆதரிக்கிறது. படித்தோரெனப் படுவோர் தாங்கள் உலக முற்போக்கிற்காகவும், நாகரிக முன்னேற்றத்திற்காகவும் பாடுபடுவதாகவும் அதனால் பொது மக்களுக்கு அதிக நன்மை யுண்டாகிறதென்றும், படிக்காதவர்களுக்குத் தங் களால் உண்டாகும் நலனையறியுந் திறனில்லை யென் றும் கூறுகின்றனர்.

முற்காலத்தவர், "நாங்கள் பிரபுக்கள், அரசாளு கிறவர்கள், மதபோதகர்கள்: ஆதலின் சாதாரண மனிதர் எங்களுக்காக வேலை செய்ய வேண்டும்" என்று சொல்லிவந்தனர். இக்காலத்தவர் அதற்குப் பிரதியாக, "நாங்கள் படித்தவர்கள்; எங்கள் வேலை யைச் சாதாரண மனிதர் செய்து கொடுக்கவேண்டும்" என்கிறார்கள். படித்தவர்களென்று சொல்லிக் கொள்ளும் சிலரும் அவர்தம் சந்ததியாரும் மாத்திரம் ஏன் என்றென்றும் உழைப்பின்றி வாழ்வதென்றும், மற்ற லட்சக்கணக்கான மனிதர்கள் ஏன் மிகப் பாடு பட்டுழைக்க வேண்டுமென்றும் இவர்கள் சொல்வ தில்லை.

---

## அத்தியாயம் 27

நாம் உழைப்பைக் கைவிடுவதாலுண்டாகும் இன்னல்கள் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளி

வாய்த் தெரிகிறது. இதற்குப் பரிகாரமாக நாம் செய்வதாய்ச் சொல்லிக் கொள்ளும் பரோபகார வேலையோ யாருக்கும் புலப்படுவதில்லை. ஒருவன் பிறர்க்கு நன்மைசெய்வது உண்மைதானு வென்பதை நிச்சயிக்க இரண்டு விஷயங்களை நாம் கவனிக்க வேண்டும். முதலாவது—யாருக்கு நன்மை செய்வதாகச் சொல்லப்படுகிறதோ, அவர்கள் அது தங்களுக்கு நன்மையென ஒப்புக் கொள்கின்றார்களா—என்றும், இரண்டாவது—பிறர்க்கு நன்மை செய்யத் தொடங்குவோர் மனமார உண்மையாக அதே நோக்கத்துடன் பிரவிருத்திக்கிறார்களா—என்றும் கவனித்தல் வேண்டும்.

இவ்விரு நிதரிசனங்களையும் மனத்திலிருத்திச் சற்று சிந்திப்போம். பிரான்சு, அமெரிக்கா, அல்லது வேறு எத்தேசத்தைப் பார்த்தாலும் சரியே—சாதாரணக் குடிகள் அரசாங்க உத்தியோகஸ்தராலாவது, கோர்ட்டாராலாவது, பாங்கு, போலீஸ் முதலியவற்றாலாவது தங்களுக்கு நன்மை யாதுமில்லையென்றே கூறுவர். இத்தகைய உபகாரத்தைச் செய்வதற்காக அரசாங்கத்தார் பலரைக் கொலை செய்வதும், தூக்கிலிடுவதும், சிறைக்கனுப்புவதும், வரிகளைப் பலவந்தமாய் வசூலிப்பதுமா யிருக்கின்றனர். ஆகவே, அரசாங்கத்தின் உபயோகத்தைக் குடிகளிற் பெரும்பாலர் ஒப்புக்கொள்வதில்லை. இரண்டாவதாக, ஜார் முதல் போலீஸ்காரன் வரையிலுள்ள உத்தியோகஸ்தர்களை நோக்கி, "ஐயா, தாங்கள் இவ்வுத்தியோகத்தை வகிப்பது பிறர் நலத்திற்கா, அல்லது சுய நலத்திற்கா?" என்று ரகசிய

மாய்க் கேட்டால் அவர்களுள் உண்மையுரைப்போர், "சுயநலத்திற்காகத்தான்" என்று விடையளிப்பார்கள். இவ்விரண்டு நிதரிசனங்களாலும் நாம் உழைப்பைக் கைவிடுவதால் தீங்கு விளைகிறதேயன்றி, அணுவளவும் நன்மையில்லை என்பது தெளிவாய் விளங்குகிறது.

உழைப்பை விட்டிருக்கும் வியாபாரிகளாலும் பொதுமக்களுக்கு யாதொரு நன்மையுமில்லை. இவர்கள் பண்டங்களின் விலையை அநியாயமாக உயர்த்தி லாபம் சம்பாதிக்கின்றனர். பிறர்நல விழைவினால் வியாபாரம் செய்வதாக யாராவது கூறினால் அனைவரும் கைகொட்டி நகைப்பர். பற்பல கலைஞர்கள், ஆராய்ச்சியாளருடைய கதையும் இது போன்றதே. இவர்களால் பொது ஜனங்களுக்கு அணுவளவும் நன்மை யின்றெனினும், இவர்கள் தங்கள் வேலைதான் மிகவும் முக்கியமானதென்றும், தங்களாராய்ச்சி நின்ற அன்றே உலகமும் நடைபெறாது நின்று விடுமென்றும் சொல்லிக் கொள்கிறார்கள்.

இவர்கள் யாவரும் சீவாதாரமான உழைப்பைக் கைவிட்டுச் சோம்பலினால் சுலபமான, உபயோகமற்ற வேலைகளை மேற்கொண்டு, பிறருக்கு நன்மை செய்வதாகவும் சொல்லிக்கொண்டு, சாதாரண மனிதர்களை வேலை வாங்கி வருகிறார்கள். இவர்கள் தங்களுக்கு வேண்டிய உணவையும் உடையையும் சொந்த உழைப்பினால் உற்பத்தி செய்து கொள்ளாதிருப்பதற்கு உண்மையான சாமாதானம் ஒன்றுமேயில்லை. இவர்கள் தாங்கள் தர்மிஷ்டர்களென்றும் எண்ணிக் கொண்டு மனவமைதியுடன் எவ்வாறுதான் வாழ்

கிருர்களோ! இத்தகைய தவறுதலான எண்ணங்களுக்கும் வாழ்க்கைக்கும் மூலகாரணமாகிய ஓர் தப்பெண்ணம் இருக்கவேண்டும்.

---

## அத்தியாயம் 28

பிறர் வேலைசெய்யத் தாம் சும்மாயிருப்பது சரியென்று நினைத்தற்கு ஆதாரமாகும் மூன்று தப்புக் கொள்கைகள் இருக்கின்றன. மத தத்துவங்களைப் போதிப்பவர்கள் அரிய பரோபகாரிகளென்றும், அதனுல் அவர்கள் உடல் வருந்தி யுழைக்க வேண்டுவதில்லை யென்பது முதலாவது. தேச நலத்திற்கு அடிப்படையாகிய அரசாங்கத்தில் உத்தியோகம் வகிப்பதால் உழைப்பது அனுவசியமென்பது இரண்டாவது. தப்புக்கொள்கை உலக முற்போக்கிற்காகவும் நாகரிக வளர்ச்சிக்காகவும் தாங்கள் ஆராய்ச்சி செய்துவருவதால், சரீரவுழைப்பு தங்களுக்கு வேண்டியதில்லை யென்று கலைஞர்கள் கூறுகின்றனர். இம்மூன்று தவருன கொள்கைகளும் மனிதர் தங்கள் குற்றங்களை யுணராது மறைக்கும் திரைகளாகின்றன. இப்பெரும் மோசடியை ஆங்கிலேயர் "ஹம்பக்" என்னுஞ் சொல்லால் விவகரிப்பர்.

தற்காலத்தில் எதையும் கலைகளை யொட்டியே பேசவேண்டும். எக்காரணமும் கலைஞானத்தை ஒட்டியே யிருத்தல் வேண்டுமாம். உலக முன்னேற்றம் நாகரிகவளர்ச்சி என்னும் வார்த்தைகளுக்கே வணக்கஞ் செலுத்துங் காலமாயிருக்கிறது. "தேகத்திலுள்ள அவயவங்கள் தத்தம் வேலைகளைச் செய்வது

போல் மனித சமூகத்திலும் வேலைப் பாகுபாடு வேண்டும். சிலர் உடலினாலும், வேறு சிலர் மூளையினாலும் வேலை செய்யவேண்டும்" என்று தற்காலத்தவர் சொல்லுகிறார்கள்.

---

## அத்தியாயம் 29

ஏசு கிறிஸ்து இவ்வுலகில் ஓர் புதிய முறையை உபதேசித்தார். உலகத்தோர் முதலில் அதை வெறுத்த போதிலும் பின்னர் ஒப்புக்கொண்டனர். ஆனால் காலப்போக்கில் சிலர் இவ்வுபதேசங்களுக்கும் பலவித விபரீத வியாக்கியானங்கள் செய்தனர். அதன் பயனாகப் பலர் தாங்கள் துன்மார்க்கர்களா யிருந்த போதிலும் கிறிஸ்தவர்களாக இருக்க முடியுமென்று எண்ணுகிறார்கள். தங்களைச் சீர்திருத்திக் கொள்வதில் சோம்பலுள்ள பெரும்பான்மையோருக்கு இக்கொள்கையில் அளவற்ற அபிமானம் ஏற்பட்டுவிட்டது. இம்மட்டும் நில்லாமல், கடவுளே இக்கொள்கையை அருளினாரென்றுகூட எண்ணத் தொடங்கிவிட்டனர்.

இவ்வாறு பல தப்பெண்ணங்கள் தலையெடுத்து விட்டன. இப்பொழுது தாம் **கன்ப்ஃயூஷியஸ், ஈபிக்டடஸ்** முதலாம் பெரியோரது கொள்கைகளைப்பற்றிப் பேசவில்லை; ரூஸோ, பாஸ்கல், ஹேஜல் முதலியோரைப்பற்றியே பேசுகிறோம். மனிதவர்க்கம் தனது குறையை உணராது, எல்லாம் சரிதானென்று எண்ணுவதற்கு ஹெஜலின் கொள்கை சாதகமாய் நின்றது. எனது இளம்பிராயத்தில் ஹெஜலின் கொள்கையே எங்கும் பரவியிருந்தது. நாற்பது வருஷங்களுக்குப்

பின்னர், அக்கொள்கை, தன்னுள் உண்மையில்லாததால், எதிர்ப்பின்றித் தானே விழுந்துவிட்டது. ஹெஜல் என்று ஒருவர் இருந்தாராவென்று கேட்கும்படி யாகிவிட்டது.

இக்காலத்தில் படித்தவர் யாராவது ஒருவரை அவரது மதக் கொள்கைகளைப் பற்றி வினவினால், "அதைப்பற்றிப் பேசுவதனால் என்ன லாபம்? ஒரு கொள்கையை எதற்காகக் கடைபிடிப்பது? ஆத்மா என்று ஒன்றுண்டா? அது எங்கிருந்து வந்தது? எதற்காக? அது எனக்கு என்ன நன்மை செய்யும்?" என்ற விடை கிடைப்பது நிச்சயம்.

மிகவும் சாதாரணமான ஆங்கிலேயர் ஒருவர் 'சனத்தொகை'யைப் பற்றி எழுதியிருக்கிறார். சாரமின்மையால் அவருடைய நூல்கள் பெரும்பாலும் மறைந்துவிட்டன வென்று சொல்லலாம். இவ்வுலகில் சனத்தொகை மிக விரைவாய்ப் பெருகிவருவதால் மனிதர் பிழைப்பின்றித் திண்டாட நேரிடுமென்றும் அதைத் தவிர்ப்பதற்காக சனத்தொகையைக் குறைக்கும் வழியைத் தேடவேண்டு மென்றும் அவர் சொல்லுகிறார். இக் கொள்கையைக் கண்டுபிடித்தவர் பெயர் 'மால்தஸ்'.

தப்பிதம் அடிக்கடி இயற்றுவதே இயல்பாகக் கொண்ட மாந்தர் தங்களுக்குத் தோன்றுவதையெல்லாம் எழுதிவைத்து அதற்குக் கலைஞானம் என்ற பெரிய பெயரைக் கொடுத்துவிடுகின்றனர். தற்கால அறிவாளிகளின் ஆராய்ச்சி முடிவெல்லாம் தவறிப் போவதை நாடோறும் நாம் பார்க்கிறோம். மால்தஸின் கொள்கைப்படி, ஏழைகளின் கஷ்டத்திற்குப் பணக்

காரர் காரணர்களாகார். பணக்காரரின் சுகவாழ்விற் பிசகொன்றுமில்லை. உண்பதற்குப் போதிய உண வில்லா திருக்கும்போது ஏழை மக்கள் ஏன் விருத்தி யடைகின்றனர்? பணக்காரரும் படித்தவரும் இக் கொள்கை தாங்கள் வாழ்க்கையை ஆமோதிப்பதுண்டு, 'இது சத்தியக் கொள்கை' என்று அதன்மேல் முத்திரைவிட்டு அரை நூற்றாண்டாக அதை ஆதரித்து வந்தனர். யுக்திக்கு ஒத்துவராத இக்கொள்கை நிலைபெறவில்லை. மனித சமூகத்தின் பாப வாழ்க்கையை ஆமோதித்ததால் ஹெஜலின் கொள்கை ஒழிந்தது. மால்தஸின் கொள்கையும் மடிந்தது.

மனித சமூகம் ஓர் சரீரம் போன்றதென்றும் ஒவ்வொரு மனிதனும் அதிலுள்ள ஓர் அணுவென்றும் சரீரத்தின் பொதுநன்மையைக் கருதி ஒவ்வொரு அணுவும் தனக்குற்ற வேலையைச் செய்ய வேண்டு மென்றும், இவர்கள் சொல்லுகிறார்கள். நாம் உழைப்பி லிருந்து விடுபட்டுச் சோம்பேறிகளா யிருப்பது தர்மமா? நியாயமா? யுக்திக்குப் பொருந்துமா? என்று நினையாமல் தற்கால நிலைமை இயற்கையை யொட்டியே இருக்கிறதென்று சொன்னால், இக் கொள்கை பலருக்கு சௌகரியமா யிருக்கிறது. வக்கீ லாகவோ, வைத்தியராகவோ, தத்துவ சாஸ்திரி யாகவோ, ஆராய்ச்சியாள ரென்றோ காலந் தள்ளிக் கொண்டு, நமது தேவைகளை உற்பத்தி செய்யும்படி ஏழை மக்களைத் துன்புறுத்துகிறோம். நமக்குத் தோன்றியதோர் வேலையைச் செய்துகொண்டு, அது நியாயமானதா வென்று நினையாமல், மனச்சாக்ஷியை புறக்கணித்து, இது சாஸ்திர சம்மதமென்று சொல்லிக் கொள்கிறோம்.

---

## அத்தியாயம் 30

வேலைகளைத் தங்களுக்குள் பிரித்துக்கொள்வது ஜீவராசிகளின் இயல்பாதலின் மனித சமூகத்திலும் இக்கட்டுப்பா டிருக்க வேண்டியது அவசியமென் பதை நாம் ஒப்புக்கொள்கிறோம். ஆனால் தற்காலம் நம் முள் நிலவிவரும் வேலைப்பிரிவு ஒழுங்கானதா என் பதே நமது கேள்வி. நியாயமென்று நமது மனச் சாக்ஷி கூறுவதைக் கெடுதலென்று எந்நாளும் நிரூபிக்க முடியாது; அவ்வாறே தவறென்று மனச்சாக்ஷி கூறுமொன்றை நியாயமென்று எந்நாளும் நிரூபிக்க முடியாது.

ஒரு பூச்சியின் உடலிலுள்ள அணுப்பிரிவுகள் வேலையைப் பகிர்ந்து கொள்ளும் முறையையே நாமும் பின்பற்ற வேண்டுமென்று நூலிற் கூறியிருப்பது தவ றென்று மனச்சாக்ஷி கூறினால், அம்முடிவே நமக்கு முக்கியமாகும். தற்கால நூல்களின்படி ஒரு மனிதன் தனதாயுள் முழுதும் துணிநெய்து கொண்டேயிருந்து வேறொன்றையுங் கவனிக்கமுடியாமற் போவதும் ஓர் வேலைப் பிரிவாம். விவேகமுள்ள எம்மனிதனும் இது தவறுதலான முறையென்று கூறுவான்.

இப்பொழுது, வேலைப்பிரிவு எப்படி ஏற்படுகிற தென்று பார்ப்போம். குடியானவர்களிடையே ஒரு வன் தனது ஏரைச் செம்மைபடுத்த உலைக்களம் போடுகிறான்; பக்கத்திலுள்ளவர்களும் தங்கள் ஏர்களை அவனிடங் கொண்டுபோய்ச் சரிப்படுத்திக் கொள்கிறார்கள். அதற்குப் பிரதியாக அவனுக்கு ஏதாவது ஒரு வேலையைச் செய்து கொடுப்பது அல் லது பணங்கொடுப்பது வழக்கமாகிறது. இவ்வாறு

ஒரு கொல்லன் ஏற்படுகிறான். வேறொருவன் தன் குழந்தைகளுக்குக் கல்வி புகட்டுகிறான். அருகிலுள்ளவர்களும் தங்கள் குழந்தைகளை அவனிடம் அனுப்புகின்றனர். இவ்வாறு ஒரு உபாத்தியாயர் ஏற்படுகிறார். தங்கள் வேலையைப் பிறர் கோருவதால் இவர்கள் பயிர் வேலையைக் கைவிட நேருகிறது. இவ்வூழியம் பிறருக்கு அவசியமில்லாதபோது இவர்கள் மீண்டும் விவசாயத்தை மேற்கொள்வதே முறை.

அறிவாளிகள் அனைவரும் இத்தகைய வேலைப் பிரிவை ஒப்புக்கொள்வர். ஒருவன் இயற்கை வேலைப் பிரிவின்படி வேலை செய்கிறானென்பதை நிச்சயிக்க, பிறருக்கு அது உபயோகமாகவும், பிறர் விரும்புவதாகவும் இருக்கிறதா? பிறர் அவ்வேலைக்கு மனமாரப் பிரதிப் பிரயோசனம் செய்கிறார்களா? என்னும் இவ்விரு விஷயங்களையுங் கவனிக்கவேண்டும்.

பிறர்க்கொரு பயனுமில்லா வேலைகளைச் செய்துகொண்டு பிழைப்பை நடத்துவது ஒழுங்கீனம். இது வேலைப் பிரிவுமாகாது. உலகெங்கும் உள்ளதோர் பெருங்குறை, அரசாங்கஉத்தியோகஸ்தர் எண்ணிறந்த தொகையினரா யிருப்பதாகும். பிறர் விரும்பாப் பொருள்களைக் கணக்கின்றி உற்பத்தி செய்துவருவதால் இங்கிலாந்தின் பொருளாதார நிலை சீர்கெட்டு இருக்கிறது. இவ்வாறு உற்பத்தி செய்தவைகளை எவ்வாறு விற்பதென்று தெரியாமல் விழிக்கின்றனர். இஃதெல்லாம் வேலைப்பிரிவின் மர்மத்தை அறியாததால் விளையுந் தீமைகளாம்.

நமது படிப்பாளிகள் என்ன செய்கிறார்களென்று பார்ப்போம். பிறர் உழைப்பினூற் பிழைத்துக்

கொண்டு முப்பது வயதுவரை படிக்கிறார்கள். அதன் பிறகும் பயனற்ற வழியில் காலத்தைக் கடத்திவிடுகின்றனர். இதுதானே வேலைப்பிரிவு! மதபோதகர்கள் இது கடவுளின் நியதியென்றும், தத்துவ சாஸ்திரிகள் இது தவிர்க்க முடியாத நிலைமை யென்றுங் கூறுகின்றார்கள்.

மனிதன் ஆறறிவு படைத்தவன்; நன்மை தீமைகளைப் பகுத்தறியு மாற்றலுடையவன். தன் முன்னோர் தீமையுடன் போராடி அறநெறியைக் கைப்பற்றியொழுகி, அதை யறிந்து, மேன்மேலும் தானும் அந்நெறியைப்பற்றிச் செல்லவேண்டும். ஏமாற்றுந் தோற்றங்களைக்கண்டு மதிமயங்கக்கூடாது. இக்காலத்து மனிதர் பலர் விஞ்ஞான சாஸ்திரம் (Science) என்னும் அஞ்ஞானத்தில் அழுந்தி யிருக்கின்றனர். இவர்கள் சுயபுத்தியையும் மனச்சாக்ஷியையும் புறக்கணித்து, வெளியே நடத்தப்படும் சில ஆராய்ச்சிகளைக் கொண்டே திருப்தியடைந்து விடுகின்றனர்.

உலகந்தோன்றிய நாள் முதல் இதுவரை உத்தம விவேகிகள் தங்கள் மதிநுட்பத்தாலும், தூயமனச்சாக்ஷியாலும் செய்த முடிவுகளை இவர்கள் பொருட்படுத்துவதில்லை. விவேகத்தால் உண்மையை அறிய முடியாதென்றும், விவேகம் தவறான முடிவுக்குக் கொண்டுபோய் விடுகிறதென்றும், நேரிற் காண்பதே (பிரத்தியக்ஷப் பிரமாணமே) நிலையானதென்றும் இவர்கள் வாதிக்கின்றனர்.

வாலிபரும், மாணவரும் இந்நூல்களைப் படித்து மதிமயங்குகின்றனர். இந்நூல்களின் மூலமாகத்தான் எவ்விஷயத்தையும் முடிவு செய்ய முடியுமென்றும்

எண்ணுகின்றனர். அதனால் வாழ்வின் பல பிரச்சினைகளைத் தீர்க்க முடியாமல், நாளுக்கு நாள் பிரத்தியக்ஷப் பிரமாணமென்னும் இருளடர்ந்த காட்டிற்குள் சென்றுகொண்டே யிருக்கிறார்கள். சுயபுத்தியை இவர்கள் உபயோகிப்பதில்லை. தர்மம், அதர்மங்களைப் பற்றிய ஞானம் இவர்களிடை நாள்தோறும் குன்றி வருகிறது. மனச்சாக்ஷி அனுபவங்களைக் கொண்டு முன்னோர் செய்த முடிவுகளையும் இவர்கள் கவனிப்பதில்லை. தங்கள் வாழ்க்கையில் மிகவுஞ் சிறந்த இளமையையும், வாலிபத்தையும் இவ்வாலிபர்கள் வீணாக்குகின்றனர்; உடல் வருந்தியுழைக்கும் அரிய வழக்கத்தையுங் கைவிடுகின்றனர். இவர்கள் தேகம் பலமற்றிருப்பதுடன், புத்தியும் மேற்கூறிய நூல்களால் செல்லரித்துப் போகிறது. ஆடம்பரமற்ற எளிய வாழ்வும் உழைப்பும் விவேகமும் குன்றி வருகின்றன.

---

## அத்தியாயம் 31

மனித சமூகத்தில் வேலைப்பிரிவு எப்போதும் இருந்து வந்திருக்கிறது; இனி எப்போதும் இருந்தும் வரும். ஆனால் இவ்வேலைப் பிரிவு தர்ம நியாயமான பிரிவா யிருப்பதற்கு நாம் எந்நெறி பற்றியொழுக வேண்டுமென்பதே நமது கேள்வியாகும். நேருக்கு நேர் பார்ப்பதையே நம்புவதெனில், அதனினும் ஒன்றையும் நம்பாதிருத்தலே மேலெனப் பகர்வேன். சாஸ்திரக்காரர்களின் சித்தாந்தப்படி தற்காலமிருந்து வரும் வேலைப் பிரிவெல்லாம் ஒழுங்கானதுதானும்.

சிலர் மூளையினாலும், மற்றவர் உடலினாலும் உழைத்துவருவது ஒழுங்கான வேலைப்பிரிவு தானென்று, இவர்கள் எவ்வளவு துணிவுடன் சொல்கின்றனர். இது பலாத்காரமே யன்றி உண்மையான நியாயமான வேலைப் பிரிவன்று. இவ்வேலைப் பிரிவு பரஸ்பர சம்மதத்தின்பேரில் நிற்பதாயின் இதை ஒப்புக்கொள்ளலாம். தன் புத்தியையும், ஆத்மாவையும் விகசிக்கச்செய்யும் உணவைப் பெற்றுக்கொண்டாலும், கொள்ளாவிடினும், படித்தவனுக்குப் படிக்காதவன் ஊழியஞ் செய்ய வேண்டுமென்பது சரியன்று.

விவசாயி, கருமான், தச்சன் முதலாம் பலரும், தனக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தால்தான், அவர்கள் மனத்திற்கு வேண்டிய உணவைத்தான் அளிக்க முடியுமென்று படிப்பாளி சொல்லுகிறான். அதற்கு உழைப்பாளி, "நான் உழைக்கப் போகுமுன் என்னறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும்; உற்சாகங் குன்றாதிருக்க மதபோதனை வேண்டும்; கலைஞானங்களின் சுகத்தையும் அறிய விரும்புகிறேன்; வாழ்க்கையின் அர்த்தமும் உத்தேசமும் என்னவென்றுந் தெரிந்துக்கொள்ளவேண்டும்" என்கிறான். இதில் நியாயமில்லையா? படித்தவன் உழைப்பாளிகள் தனது சௌகரியத்திற்காகப் பாடுபடாவிடில், தனது மேன்மை பொருந்திய ஆராய்ச்சி வேலை தடைப்பட்டு விடுமென்றால், அதற்கு உழைப்பாளி, "என்ன! என் வேலை உன் வேலையைக் காட்டிலுங் குறைவானதா? தாழ்வானதா? என் மனத்திற்கு உற்சாகமளிக்க மதபோதனை யில்லாதபோது, இன்பத்தை யூட்டக் கலைஞான மில்லாதபோது, எனது

முக்கியமான வேலையை எவ்வாறு செய்ய முடியும்?" என்று கேட்கிறான்.

இக்கேள்வி, உழைப்பாளிகள் பரிகாசமாய்க் கேட்பதல்ல. மிகத் தெளிவாய் விளங்கும் நியாயத்தையே அவன் கோருகிறான். மூளை வேலை செய்பவனது கேள்வியி லிருப்பதினும் பதின் மடங்கு நியாயம் உழைப்பாளியின் கேள்வியிலிருக்கிறது. உழைப்பாளியின் வேலை இன்றியமையாதது, மிக்க அவசரமானது. உழைப்பாளி விரும்பும் விஷயங்களை அவனுக்குப் போதிப்பதால் படித்தவனுக்கு ஒன்றுங் குறைந்து போவதில்லை. ஆனால் உழைப்பாளி, தனக்கே சாப்பிட போதியதில்லாதபோது படித்தவர்களுக்கும் உணவளித்தல் கடினம். ஆதலின் உழைப்பாளியின் கட்சியில் அதிக நியாயமிருக்கிறது.

மூளை வேலை செய்து வருவதாகச் சொல்லும் நாம் இத்தகைய சாதாரணக் கேள்விகளுக்கு என்ன விடையளிப்பது. உழைப்பாளிகளை எவ்வாறு திருப்தி செய்வது? பற்பல சரித்திரங்களையும், சட்டதிட்டங்களையும், வியாக்கியானங்களையும் அவர்களுக்குப் புகட்டுவதா? அல்லது பூகோளம், ககோளம், பூதக் கண்ணாடிப் பரீட்சை முதலியவற்றால் அவர்களைத் திருப்தி செய்விப்பதா? அல்லது நமது சித்திரக்காரர் வரையும் நிர்வாண மாதர் படங்களை அவர்களுக்குக் காண்பிப்பதா? பாட்டுக் கற்றுக்கொடுப்பதா?

மேற்கூறியவற்றை உழைப்பாளிகளுக்குப் போதிப்பதால் அளவற்ற தீங்கேயன்றி நன்மை சிறிதும் விளையாது. பிறரை வேலை வாங்கிக்கொண்டு மூளை வேலை செய்வதாய்க் கூறிவரும் நாம் எந்நோக்

கத்தை முற்கொண்டு வேலைசெய்ய வேண்டுமோ அதையே மறந்து விட்டோம். உழைப்பாளிக்கு வேண்டியது எதுவென்று கூட நமக்குத் தெரியாது. அவனுடன் நாம் நெருங்கிப் பழகுவதில்லை. நமக்காக உழைப்பாளி பாடுபட வேண்டுமென்றபோதே அவனுடைய அறிவை வளர்க்கும் பொறுப்பை நாம் ஏற்றுக்கொண்டவர்கள் ஆனோம். இவ்வாறு நாம் செய்ய வேண்டிய பிரதியுபகாரத்தைக்கூட மறந்து, பல நூற்றுண்டுகளாக வெறும் வீணராய் உண்டு களித்து வந்திருக்கிறோம். யார் உற்பத்தி செய்யும் விளைபொருள்களை யுண்டு வருகிறோமோ, அவர்களுக்கு நமது சாத்திரங்களாலும் கலைகளாலும் யாதொரு பயனுமில்லை.

நமது முழுக் குருட்டுத்தனத்தால், எந்த ஒப்பந்தத்தின் பேரில் உழைப்பாளிகள் நம் பொருட்டுப் பாடுபடுகின்றனர் என்பதையே மறந்து விட்டோம். நமது கடமையை மறந்தோம். எவர்களுக்கு நாம் நமது புத்தியைக் கொண்டு தொண்டுபுரிய வேண்டுமோ, அவர்களுடைய நடவடிக்கைகளையும் வாழ்க்கையையும் வேடிக்கை பார்ப்பதும், அவற்றைப் பற்றிக் கதைகளும் வியாசங்களும் எழுதுவதுமாயிருக்கிறோம்.

நாம் அணுக்களையும் பரமாணுக்களையும் பற்றி வாதித்துக் கொண்டிருக்க, உழைப்பாளிகளுக்கு அறிவூட்டும் வேலையைச் சுயநலத்திலும், லாபத்திலுமே கண்ணுள்ள சிலர் எடுத்துக் கொண்டனர். சென்ற நாற்பது வருடங்களாக ஐரோப்பாவிலும், பத்து வருடங்களாக ருஷ்யாவிலும், புத்தகங்களும் படங்

களும், பாடல்களும் லக்ஷக்கணக்காக வாயுவேகம் மனோவேகமாய்ப் பரவி வருகின்றன. பல நாடகங் களும், சினிமாக்களும் ஆரம்பிக்கப்பட்டுள. நமது உழைப்பாளிகள் பெறும் கல்வி இதுதான். அவர்களுக் குக் கல்வி புகட்டும் பொறுப்பை உணராது நாம் முழுச் சோம்பேறிகளாய் வாழ்ந்து வருகிறோம். நாம் அறிவூட்டுவோ மென்று எதிர்பார்த்தே ஏழைகள் நம் பொருட்டு உழைத்து வந்திருக்கின்றனர். நாமோ அவ்வேலையைச் செய்யவில்லை. உழைப்பாளிகளும், ஒரு வருடமல்ல, பத்து வருடமல்ல, நூற்றுக்கணக் கான வருடங்கள் காத்துப் பார்த்தும் பயனொன்று மில்லை. அவர்களை நாம் அறவே மறந்தோம். இது தானோ வேலைப்பிரிவு ?

---

## அத்தியாயம் 32

மதபோதகர்கள் கற்றோர்க்குந் தலைமையா யிருந் தனர். ஏனையோர் அறிவைத் தாங்கள் வளர்ப்பதாக வும், வீடுபேறடைய உதவி புரிவதாகவும் அதன் பொருட்டுப் பாமரர்கள் தங்களுக்கு ஊழியஞ் செய்ய வேண்டுமென்றும், தாங்கள் மற்றவர்களைப்போல் உழைக்க வேண்டுவதில்லை யென்றும் அவர்கள் சொல்லுகிறார்கள். மதபோதகர் கூட்டம் சின்னஞ் சிறு தவறுதல்களால் அழிந்துவிடவில்லை. அது அழிந்த தன் காரணம் அதைச் சேர்ந்தோர் உழைப்பைக் கை விட்டதுதான் ஆகும். கான்ஸ்டாண்டின் காலத்தில் அரசாங்க பல உதவியால் இயற்கை நியமமாகிய உழைப்பினின்று மதபோதகர்கள் தங்களை விடுவித்துக்

கொண்டு சோம்பேறிகளாய்ச் சுகவாழ்வு வாழத் தொடங்கி, அதனுல் பல தப்பிதங்களேயுந் தீங்குகளேயும் புரிதலாயினர். உழைப்பை மறந்த நாள்முதல் மத போதகர்கள் சுயநலத்தை நாடினர்; பிறர் நலத்தை மறந்தனர்; சோம்பலிலும் பாப வாழ்க்கையிலும் ஆழ்ந்தனர்.

அரசாங்கம் மக்களின் வாழ்க்கையை மேல் நோக்கி, அவர்களுக்கு நீதி, அமைதி, ஒழுங்கு முதலிய வற்றை நல்கி, திருடர் பயம் முதலியவற்றை நீக்கிக் கல்வியும் புகட்டுவதாகக் கூறி, அதன் பொருட்டு அரசாங்க உத்தியோகஸ்தர்கள் உழைப்பினின்றும் தங்களே விடுவித்துக் கொண்டனர். ஆனுல், பிறர் தங்களுக்கு ஊழியஞ் செய்வது வழக்கமானவுடன், இவர்களும் மதபோதகர்கள் போலாயினர். இவர் களுக்கு மேல் உத்தியோகஸ்தர்களின் ஞாபகமே தவிர சனங்களின் ஞாபகமேயில்லே. இத்தாலி, பிரான்சு, இங்கிலாந்து, ருஷ்யா, அமெரிக்கா முதலான எத் தேசத்தை நோக்கினும் சரியே—அரசாங்க உத்தியோ கஸ்தர் சோம்பலில் ஆழ்ந்து சீர்கெட்டிருக்கின்றனர். ஆதலின், சனங்களுக்கு அரசாங்கங்களின் மீது நம்பிக்கை நீங்கி, அராசகக் கொள்கை தீவிரமாகப் பிரசாரமாகிறது. அரசாங்க உத்தியோகஸ்தர்கள் உழைப்பைக் கைவிட்டுச் சோம்பேறிகளானதால் அரசாங்கத்தின் செல்வாக்கு பாழடைந்தது.

படித்தவர்களும் அரசாங்கத்தின் உதவியால் பிறரைத் தங்களுக்கு வேலேசெய்யச் செய்து தாங்கள் சோம்பிக் கிடக்கின்றனர். அவர்களால் எவருக்கும் பயனில்லே. இவர்கள் வேலேப் பிரிவைப்பற்றி முற்றிலுங்

தவருனதோர் கொள்கை கொண்டு, பிறருக்கு உபயோகமாக வாழ்வதே வாழ்வின் முக்கிய நோக்க மென்பதை மறந்து, விசித்திரமான சயன்ஸ், கலைகள் என்பவற்றைப் பின்பற்றி நிற்கின்றனர். ஆகவே, இவர்களும், மதபோதகர்கள், ராசதந்திரிகள் போலவே, உழைக்காமற் கெட்டுவிட்டனர்.

சயன்ஸும், கலைகளும் மாந்தருக்குப் பயந்த நலன்களைச் சொல்லி முடியாதெனப் படுகிறது. உண்மைதான் சயன்ஸினுல் விளைந்த நன்மை, அதன் ஆராய்ச்சியாளர் பிறரை வருந்தித் தங்கள் வேலையையும் செய்யும்படி விட்டதனுலல்ல; ஆனுல் அவர்கள் இவ்வாறு வாழ்ந்துங்கூட சயன்ஸினுல் நன்மை யுண்டாயிருக்கிற தென்று கூறவேண்டும். ரோம் ராச்சியம் பலமாயிருந்ததன் காரணம் அதன் குடிசனங்கள் உழைக்காது சோம்பேறிகளா யிருந்ததல்ல; ஆனுல் அக்குடிகளிடையே தர்மிஷ்டர்கள் சிலரும் வாழ்ந்து வந்ததேயாகும். அவ்வாறே சயன்ஸினுல் மாந்தர்க்கு நன்மை விளைந்திருக்கிறதே யன்றி, ஆராய்ச்சியாளர் உழைப்பைக் கைவிட்டதனுல் அல்ல. ஆராய்ச்சியாளரில் உழைப்பாளிகளும் மேதாவிகளுமான சிலராலேயே மாந்தர்க்கு நன்மை விளைந்திருக்கிறது.

பொய்யிலிருந்து உண்மை பிறக்காது. பிறரை நமது வேலையையுஞ் சேர்த்துச் செய்யச் சொல்லும் ஒரு வேலைப் பிரிவால் உண்மையான கலை வளர முடியாது.

பருத்துப் பலவீனரா யிருக்கும் படிப்பாளிகளையே நாம் எப்போதும் பார்த்து வருவதால் அவர்

களில் யாராவது உழுவதையோ, எருவைக்கொண்டு போவதையோ பார்த்தால் ஆச்சரியப்படுவோம். படித்தவர்கள் உழுதுவிட்டால், எல்லாந் தலைகீழாய்ப் போய்விட்டதென்று எண்ணுகிறோம். ஓடியாடி வேலை செய்தால் அறிவெல்லாம் குலுங்கிக் கீழே விழுந்து விடுமா? அல்லது எருக்களால் அது மலினமாய் விடுமா? பாதிநேரத்தை உண்பதிலும், சுருட்டுப் பிடிப்பதிலும், வீண்வம்பு பேசுவதிலும், பத்திரிகை, நாவல் படிப்பதிலும், நாடகக் கொட்டகைகளிலும் கடத்திவிடலாம்; ஆனால் உழைப்பு மாத்திரங் கூடாதாம். படித்தவர்களையும், தத்துவ சாஸ்திரிகளையும் தின்பண்ட சாலைகளிலும், நாடகங்களிலும், கூத்துக் களிலுங் கண்டால் யாரும் ஆச்சரியப்படுவதில்லை. நம்மை முன்னுக்குக் கொண்டுவருவதாகச் சொல்லிக் கொள்ளும் இவர்கள், குடித்துச் சீட்டு விளையாடிக் கொண்டு, விபசாரஞ் செய்து திரிவதையும் எவரும் பொருட் படுத்துவதில்லை.

சயன்ஸும் கலைகளும் எல்லோரும் விரும்பத் தக்கவையே. அவை மேன்மையானவை என்பத னாலேயே பாப வாழ்க்கையோடு அவற்றைச் சம்பந்தப் படுத்தக்கூடாது. சயன்ஸின் பொருட்டு எவரும், தாமும் பிறரும் உயிர்வாழ்தற்கு ஆதாரமான உழைப் பைக் கைவிடக்கூடாது. ஸயன்ஸும், கலைகளும் மாந்தரின் நிலைமையை உயர்த்தி யிருப்பது சரியே. ஆனால், உடல்வருந்தி யுழைத்து இயற்கையுடன் போராடி சீவாதாரமான விளைபொருள்களை யுண்டாக் குதலே, எவரும் மறுக்கொணாத மனிதனது முதற் கடமையாகும் என்றே யாம் கூறுகிறோம். ஆராய்ச்சி யாளர், பாமரரைப் பல இன்னல்களுக்கு ஆளாக்கி,

வேலைப்பிரிவைப் பற்றித் தவறான கொள்கையை தங்கள் மொழியாலும், இன்னும் விசேடமாய்த் தங்கள் நடத்தையாலும் பரவச் செய்கின்றனர்.

---

## அத்தியாயம் 33

"ஆராய்ச்சியாளரும், படித்தவரும் பயிர்வேலை முதலிய கடின உழைப்பினின்று விடுபட்ட காரணத்தாலேயே சயன்ஸூம் நாகரிகமும் இவ்வளவு அதிசயிக்கத்தக்க முற்போக்கடைந் திருக்கிறது. ஒவ்வொருவரும் ஏரைப்பிடித்துக் கொண்டிருந்தால் இவ்வளவு அருமையான காரியங்கள் நடைபெற்றிரா; பஞ்ச பூதங்களையும் பலவிதங்களில் தனக்கு ஆதீனமாக்கி உபயோகித்திருக்க முடியாது; கப்பல்களும், நீராவிக் கப்பல்களும், தந்தி, ரயில், அற்புதப் பாலங்கள், போடாகிராப், டெலிபோன், கிராமபோன், மின்சாரம், தூரதிருஷ்டிக் கண்ணாடி, ரச்மிக் கண்ணாடி, பூதக்கண்ணாடி, குளோரபாம், நீராவியந்திரங்கள் முதலியவற்றை எங்கே பார்க்க முடியும்?" என்று பலர் வினவுகின்றனர்.

மேலே கூறிய அரும்பெருங் காரியங்களையெல்லாம் சாதித்து விட்டோமென்று தாங்கா மகிழ்ச்சியுடன் பலர் எழுதுவதைப் பத்திரிகைகளிலும் பல புத்தகங்களிலும் நாம் காணலாம். நமது நூற்றாண்டு இதுபற்றி யெய்தும் களிப்பிற்கோர் அளவேயில்லை. நாம் செய்துள்ள காரியங்களை எவ்வளவு புகழ்ந்தும் நாம் அலுக்கவில்லை. தற்காலத்தில் சயன்ஸூம் கலைகளும் மிகவும் அபிவிருத்தியடைந்து விட்டதுபற்றி ஜூல்ஸ் வேர்ன் என்பவர்கூடப்

பெருமையுடன் பலநூல்கள் எழுதியுள்ளார். இவ்வளவு காரியங்களும் வேலைப்பிரிவாலேயே நிறைவேறியிருக்க, நாம் அதைக் கைவிடுவதெப்படி?

முற்கூறியவாறே நமது நூற்றாண்டில் சயன்ஸும் நாகரிகமும் அதிசயிக்கத்தக்க அபார வளர்ச்சியடைந்திருப்பதாகவே கொள்வோம். இத்தகைய முக்கியமான தருணத்தில் வாழ்வது நமது பாக்கியமென்றுகூட வைத்துக்கொள்வோம். ஆனால், மேற்கூறிய பெரிய காரியங்களின் மதிப்பை, நாமாகவன்றி, வேலைப்பிரிவின் ஒழுங்கின் பிரகாரம் ஆராய்வோம். அதாவது, பாமரர் நமக்காக உழைக்கவேண்டுமென்றுமுள்ள ஒப்பந்தத்தின்படி இவ்வபிவிருத்தி எவ்வளவு தூரம் உபயோகமானதென்று பார்ப்போம்.

எவ்வளவோ அற்புதமான காரியங்களையெல்லாம் சாதித்துவிட்டோம் என்றாலும், இதனால் ஏழை உழைப்பாளிகளும், பாமரரும் நாளுக்குநாள் தாழ்ந்த நிலையுற்றனரே யன்றிச் சிறிதும் முன்னுக்கு வரவில்லை. இவ்விஷயத்தை ஆராய்ச்சியாளரே ஒப்புக்கொள்கின்றனர்.

உழைப்பாளி, நடந்து போகாமல் ரயிலேறிச் செல்லலாமென்பது உண்மையே யாயினும், அதே ரயில் உழைப்பாளிக்கு இன்றியமையாக் காடுகளை அழித்துவிட்டது. உழைப்பாளிக்குத் தேவையான உணவுப் பொருள்களை ரயில் தூர தேசங்களுக்குக் கொண்டுபோய் விடுகிறது. உழைப்பாளி ரயிலுக்கு அடிமையாகி விட்டானென்றே சொல்லவேண்டும். தந்தியை உழைப்பாளி உபயோகிக்க யாதொரு தடையு

மில்லாவிடினும், அதற்கு வேண்டிய பணம் அவனிட மில்லை. தந்தியின் உதவியால் பண்டங்களின் தேவை நெருக்கடியை முதலாளிகள் முன்னதாகத் தெரிந்து கொண்டு, அவற்றைக் குடியானவனிட மிருந்து சாதாரண விலைக்குவாங்கி விடுவதால் குடியான வனுக்கு நஷ்ட முண்டாகிறது.

பேசுந்தந்தி, தூரதிருஷ்டிக் கண்ணுடி, நாவல், நாடகம், சித்திரசாலைகள் முதலியவற்ருல் தொழிலாளி களுக்குப் பயன் யாதுமில்லை. அவற்றை யனுபவிப் பதற்கு வேண்டிய பணமும் தொழிலாளிகளிட மில்லை. ஆராய்ச்சியாளர் இதை மறுக்கமுடியாது. சயன்ஸ் வெற்றியடைந்ததா என்பதை, அது தொழிலாளிகளுக்குப் பயன்பட்டதா என்பதைக் கொண்டே தீர்மானிக்க வேண்டும்.

குடியானவன் ரயிலை உபயோகிக்கிருன்; வீட்டில் நல்ல விளக்கொன்று வைத்திருக்கிருன்; நெருப்புப் பெட்டியும் அவனுக்கு உபயோகப்படுகிறது. இவையெல்லாம் செளகரியந்தான். ஆனல் இதைக் கொண்டு சயன்ஸ் மக்களுக்கு நன்மை செய்துவிட்ட தென்று எப்படிக் கூறமுடியும்; மேற்கூறியவற்றைக் குடியானவன் உபயோகிக்கக் கூடாதென்று தடை யில்லாததால் அவனும் அவற்றை யுபயோகித்துக் கொள்ளுகிருன். ரயிலும் தொழிற்சாலையும் மக்களின் நன்மைக்காக ஏற்படவில்லை. எப்போதாவது உழைப் பாளியும் இவற்றை உபயோகித்துக் கொள்கிருனென் பது பற்றி, இவை அவனுக்கு உபயோகமானவை அல்லது நன்மையானவை யென்று எவ்வாறு கூறுவது?

இன்ஜினியர்களும் முதலாளிகளும், ரயில் போகும் போதாவது, தொழிற்சாலை கட்டும்போதாவது, உழைப்பாளிகளைப் பற்றி எப்பொழுதாவது நினைத்திருப்பார்களாயின், அவர்களிடம் கூடியமட்டும் அதிக வேலை எவ்வாறு வாங்கிக்கொள்ளலாம் என்பது பற்றியே நினைத்திருப்பார்கள். ருஷ்யா, ஐரோப்பா, அமெரிக்கா முதலிய தேசங்களிலெல்லாம் உழைப்பாளிகளிடம் கூடியமட்டும் வேலை வாங்கிக்கொள்வதிலேயே முதலாளிகள் கண்ணுங் கருத்துமா யிருக்கின்றனர்.

தீங்கானதொரு காரியத்திற்கூட ஏதேனுமோர் நன்மையிருக்கும். ஒரு வீடு பற்றிக்கொண்டு எரிந்தால் பலர் அதைச்சுற்றி அமர்ந்து குளிர் காயலாம்; சுருட்டுப் பற்ற வைக்கலாம். இக்காரணங்கள் கொண்டு வீடு எரிந்துபோனது நன்மை அல்லது உபயோகமானதென்று எவனாவது சொல்லத் துணிவானா?

நம்மை நாமே ஏமாற்றிக்கொள்ள வேண்டாம். ரயில் வண்டி கட்டுவதும், மண்ணெண்ணெய் சேகரிப்பதும், நெருப்புப் பெட்டிகள் செய்வதும் எதற்காகவென்று தெற்றென நமக்குத் தெரியும். யுத்த சௌகரியங்களுக்காகவும், முதலாளிகளின் லாபத்தை உத்தேசித்தும் இன்ஜினியர்கள் அரசாங்கத்தாருக்குப் பாலங்கள் கட்டிக்கொடுக்கின்றனர். ஆகவே இன்ஜினியர்களின் வேலை அரசாங்கம், முதலாளிகள், அல்லது பணக்காரர்களின் பொருட்டேயன்றி உழைப்பாளிகளின் பொருட்டன்று. நுட்பமான பல ஆராய்ச்சிகள் சாதாரண சனங்களுக்குத்

தீங்காகவோ, பயனற்றதாகவோ முடிகின்றன. துப்பாக்கி, டார்பிடோ, தனிக்காவல் ஜெயில் முதலானவைகளே உதாரணமாகக் கூறலாம். மின்சார விளக்கு, டெலிபோன் முதலான சௌகரியங்கள் உழைப்பாளிகளுக் கெட்டாதவை யாதலின் பயனற்றவையே. ஸ்பிரிட், சாராயம், பீர், அபின், புகையிலை முதலியவை ஏழைகள் கையிலிருக்கும் கடைசிப் பைசாவையும் நாசமாக்கி விடுகின்றன.

இன்ஜினியர்களின் ஆராய்ச்சியின் பயனுன ரயில், வேலைப்பாடான மண்வெட்டி முதலியவை உழைப்பாளிகளுக்குப் பயன்படுகின்றனவே யெனில், தீங்கான காரியத்திலும் அற்ப நன்மை ஏதாவதிருக்குமென்று முன்னமே சொன்னேம். இவர்கள் கண்டுபிடித்தவைகளால் சனங்களுக்கு மிகப் பெரும்பான்மை தீங்கும், பொருட்படுத்த முடியாத ஏதோ சொற்ப நன்மையும் உள. "அரசாங்க நன்மைக்கென்று செய்பவை அவர்களுக்குப் பயன்படுவது போல், சனங்களின் நன்மைக்கென்று நாங்கள் செய்பவை சனங்களுக்கு உபயோகமாகும்" என்று இவர்கள் சொல்லலாம். ஆனல் சனங்களின் தேவை என்னவென்பதுகூட இவர்களுக்குத் தெரியாது; தெரிந்துகொள்ள விருப்பமுமில்லை.

படித்த மேதாவிகள் யாவரும் பெரிய பெரிய வேலைகளேயும் ஆராய்ச்சிகளேயும் செய்கிறார்களாம். இவர்கள் பயனற்றவைகளைப்பற்றி ஆராய்ச்சி புரிகின்றனரேயன்றிக் கோடரியை எப்படி உபயோகிக்க வேண்டும், அதை எப்படி யமைத்தால் வேலை எளிதில் முடியுமென்றுவது, நல்ல மலிவான ரொட்டி செய்யும்

வகையையாவது, எந்தக் கீரை காய்கறிகளைப் பயிர் செய்வது சுலபம், சனங்களுக்குப் பயனதிகம் என்றுவது அணுவளவும் ஆராய்வதில்லை. இவர்கள் தான் ஏழைகளுக்கு நன்மை செய்பவர்களாம்! ஆராய்ச்சியாளரின் சொந்த விவரத்தின்படி நோக்கி னும் அவர்களது ஆராய்ச்சி பயனற்றதென்பது விளங் கும். ஆராய்ச்சி பயனற்றதாய்த்தா னிருக்கவேண்டும். "ஆராய்ச்சிக்காக ஆராய்ச்சி" என்று கூசாது துணிவாய்ச் சாக்குப்போக்கு சொல்லிவிடுகிறார்கள்.

சனங்களுக்குப் பயன்படுவதே ஆராய்ச்சியின் நோக்கமா யிருக்கவேண்டும். தந்தி, டெலிபோன், கிராமபோன் முதலியவற்றைக் கண்டு பிடித்ததால் மக்கள் வாழ்வு மேன்மையுற்றதா? ஸயன்ஸ் இரண்டு லக்ஷம் பூச்சிகளின் விவரங்களை ஆராய்ச்சி செய்திருக்கிறது. ஆனால் நமது முன்னோர் பழக்கி வைத்த மிருகங்களைத் தவிர, வேலைக்குப் பயன் படுமாறு, புதிய காட்டுமிருக மொன்றையும் இவர்கள் பழக்கவில்லை.

தாவர ஆராய்ச்சியாளர் அணுக்களையும் (cells) அவற்றினுள் இன்னும் நுட்ப அணுக்களையும் (Protoplasm), அவற்றினுள் இன்னுமொன்றையும் அதனுள் மற்றுமொன்றையுங் கண்டுபிடித் திருக் கிறார்களாம். படித்தவர்கள் இதுபோல் ஏதாவது வீண்வேலை செய்துகொண் டிருக்கின்றனரே யன்றி உபயோகமான வேலையொன்றையும் செய்வதைக் காணோம். **எகிப்திய** நாகரிகத்தின் காலத்திலிருந்த உணவுக்கு உதவுஞ் செடிகொடிகளையுந் தானிய வகை களையுந் தவிர மேற்கொண்டு புதிதாக ஆராய்ச்சியாளர்

எவற்றையுங் கண்டுபிடிக்க வில்லை. உருளைக்கிழங்கு கூட நமது ஆராய்ச்சியாளர் கண்டுபிடித்த தன்று; அவர்கள் கண்டுபிடித்தவை டார்பிடோ, மூடு சாக்கடை போன்றவையே. நூல்ராட்டினம், நெசவுதறி, ஏர், கோடரி முதலிய உபயோகமான கருவிகள் யாவும் நமது முன்னோர் கண்டுபிடித்த வையே யன்றி ஆராய்ச்சியாளர் கண்டு பிடித்தவை யல்ல. இவைகளில் ஏற்பட்டுள்ள அபிவிருத்திகளும் படிக்காதவர் கண்டு பிடித்தவையே யன்றிப் படித்த வர் கண்டுபிடித்தவை யல்ல.

நாம் எத்தனையோ நூலாசிரியர்களைப்பற்றியும், அவர்தம் நூல்களைப் பற்றியும் புகழ்ந்து மதிப்புரை எழுதியிருக்கிறோம். அம்மதிப்புரைகளைப் பற்றி மீண்டும் நமது அபிப்பிராயங்களை எழுதியுள்ளோம். நாடகத்தையும், சித்திரக் கலையையும் வளர்த்திருக்கி றோம். ஆனால் மக்களுக்குப் பயனாகும் கதை, பாடல், சித்திரம், சங்கீதம்போன்ற ஒன்றும் நாமியற்ற வில்லை. இப்போது சுயநலக்காரர் சிலர் மக்களுக் காகப் புத்தகங்களும் சித்திரங்களும் பிரசுரித்து வரு கிறார்கள்; ஹார்மோனியங்களும் செய்கின்றனர். ஆனால் அவற்றை நாம் கவனிக்க வேண்டுவதில்லை.

சிற்சில விஷயங்களில், ஸயன்ஸ், வெளித் தோற் றத்தில், மக்களுக்கு நன்மை செய்வதுபோற் காணினும் அது உண்மையில் நன்மை பயப்பது அன்று. வைத்தியர், உபாத்தியாயர், கலைஞானி, நூலாசிரியர் முதலானவர் பிறர்க்குதவுவதுபோற் காண்பதன் உண்மையை ஆராய்வோம்,

தற்கால முறையில், இவர்கள் மக்களுக்குத் தீமையே யன்றி நன்மை புரிய, இயலாது. இஞ்ஜினியரும், இயந்திர நிபுணரும் முதலின்றி ஒரு வேலையும் செய்ய முடியாது. அவர்களது கல்வி நலத்தைப் பயன்படுத்தப் பெரிய முதலும், உழைப்பாளிகளும் அவசியம். அவர்கள் சொந்தச் செலவே மாதம் 1,500 முதல் 2,000 ரூபிள் வரையாகு மாதலின், அவர்களுக்குக் கிராமவாழ்க்கை சரிப்படாது. கிராமத்தில் இவ்வளவு பணத்திற்கு எங்கே போவது? தங்கள் தொழிலின் இயல்பினாலேயே இவர்கள் மக்களுக்குப் பயனற்றவராகின்றனர். இவர்கள் ஒரு பாலத்தின் வளைவின் கணக்கை உயர்ந்த கணித சாஸ்திரத்தால் நிர்ணயிப்பர்; எத்தனைக் குதிரைபலம் வேண்டுமென்றுங் கணக்கிடுவர்; ஆனால் சாதாரண மக்களின் தேவை என்னவென்று அறியார். வண்டியையும் ஏரையும் சீர்படுத்தவோ, உழைப்பாளியொருவன் ஆழமானதோர் ஓடையைச் சுலபமாய்க் கடக்க உபாயங்கூறவோ இவர்களால் முடியாது. இவ்விஷயங்களில் சாதாரணக் குடியானவனுக்குள்ள அறிவுகூட இவர்களுக்கில்லை. ஆனால் இவர்களுக்குத் தெரிந்தது தான் என்ன? பெரிய தொழிற்சாலையும், பல கூலியாட்களும், வெளிநாட்டிலிருந்து வருவிக்கப்படும் இயந்திரங்களும், ஆக இவ்வளவு வசதிகளு மிருந்தாற்றான் இவர்களது வேலை நடக்கும். லக்ஷக்கணக்காகத் துன்புற்று மடிந்து கொண்டிருக்கும் ஏழை உழைப்பாளிகளின் வேலையையும் நிலைமையையும் சற்றுப் பொறுக்கக் கூடியதாகச் செய்யும் வழியை இவர்கள் அறியார். தங்கள் படிப்பு, பழக்கம், தேவை என்னும் இவை மூன்றாலும் இவர்கள் மக்களின் தொண்டுக்குத் தகுதியற்றவராவர்.

வைத்தியர்களின் நிலைமை இன்னும் சீர்கெட்டது. இவர்கள் கற்ற வித்தை மற்றவர்களை வேலைவாங்கிக் கொண்டு தாங்கள் சோம்பிக் கிடக்கும் பணக்காரர்களின் நோய்களைக் குணப்படுத்தவே பயன்படுகிறது. விலைமிக்க கருவிகளும், மருந்துகளும், சத்துணவுகளும், சுகாதார விடுதிகளும் இவர்கள் வைத்தியத்திற்கு மிக அவசியம். இவ்வளவு மட்டுமா? வைத்தியரின் செலவுகள், சம்பளம் முதலியனவும் சொற்பமல்ல. ஆகவே, இவர்கள் நோயாளிகளைச் சௌக்கியப்படுத்துவதற்குள் இவர்களது வைத்தியச் செலவுகளைத் தாங்க முடியாது பலர் மடிந்து போவர்.

இவர்கள் பெரிய நகரங்களிற் பிரபல வைத்தியர்களிடங் கற்றவர்கள். வைத்திய சாலையிலேயே இருக்கக் கூடியவர்களை அல்லது தாங்கள் விதிப்பவற்றை வாங்கக் கூடியவர்களைத்தான் இவர்கள் சௌக்கியமாக்க முடியும். சில சமயங்களில் பிணியாளர் உலோகச் சத்துத் தண்ணீரின் நிமித்தம் வடகோடியிலிருந்து தென்கோடிக்குக்கூடப் போகக்கூடியவர்களா யிருக்க வேண்டும்.

நாட்டுப் புறங்களிலுள்ள சிற்சில வைத்தியர்கள் "உதவி வைத்தியர்களும் வேலைக்காரரு மில்லாததால் இங்கே வைத்தியசாலை நடத்துவது முடியாத காரியம்; உழைப்பாளிகளுக்கு வைத்தியஞ் செய்வது அசாத்தியம்" என்று சொல்கிறார்கள். ஏனெனில், ஆரோக்கிய வாழ்க்கைக்கு அத்தியாவசியமானவை கூட ஏழைக் குடியானவர்களிட மில்லை; அவர்கள் வசிப்பதற்குச் சுகாதாரமான விடுதிகளில்லை. இன்னும் பல அசௌகரியங்களால் அவர்களிடையே நோய்

பரவிக் குணப்படுத்த முடியாதுபோகிறது. ஸயன்ஸ், பணக்காரர் சம்பந்தப்பட்டமட்டில், வாழ்க்கையைச் சௌகரியமாக்கி யிருக்கிறது. ஆனால் ஏழைகள் நிலைமைதான் நாளுக்குநாள் சீர்கெட்டு வருகிறது.

வைத்திய சாஸ்திரம் போதிய அளவு வளர்க்கப் படவில்லை என்று வைத்தியர்கள் கூறுகின்றனர். உண்மைதான். அது நன்மையுங்கூட. அவர்கள் கூறுமாறு வைத்ரியம் அபிவிருத்தி யுற்றால், ஒவ்வொரு ஜில்லாவிலும் இரண்டு வைத்தியர்கள் இருக்குமிடத்தில் இருபது பேர் கிளம்புவர். அத்தனை பேருக்கும் சம்பளமும் செலவும் யாரால் கொடுக்கமுடியும்? இப்போதுள்ள இவ்வைத்திய முறை வளர்வதால் ஏழைகளுக்குப் பயன் யாதுமில்லை.

இன்ஜினியர்களும், ஆராய்ச்சியாளரும், படித்தவரும், வைத்தியரும் தற்போதுள்ள வேலைப்பிரிவு மிகத் தப்பிதமானதென்பதை உணரவேண்டும். லக்ஷக் கணக்கிற் சம்பளம் பெறுவதுமட்டும் நின்றாற் போதாது; ஐந்நூறு அல்லது ஆயிரம் சம்பளம் வாங்குவதுகூட நிற்கவேண்டும். மக்களுடன் கலந்து அவர்கள் வேலையைச் சுலபமாக்கிச் சுகாதார விதிகளை அவர்கள் அனுசரிக்கச் செய்யவேண்டும்.

குடியானவர் வரிப்பணத்தினின்று கொழுத்த சம்பளங்கள் பெற்றுவரும் படித்தவர்கள் அக்குடியானவர்களின் நிலைமையை அறவே மறந்தனர்; ஏழைக் குடியானவர்களையும், கிராமவாசிகளையும் சீர்பெறச் செய்வது முடியாத வேலையென்று விட்டுவிட்டனர். ஏழைக் கிராமவாசிகளின் நிலைமையைக் கருத்திலிருத்தி, "எவ்வுணவு நோயற்ற வாழ்க்கைக் கேற்றது?

வீட்டின் ஈரத்தை எப்படிப் போக்குவது? துணிகளை அதிகச் சிரமமும் செலவுமின்றிச் சுத்தஞ் செய்வதெப்படி?" என்பவற்றைப்பற்றிப் படித்தவர்கள் அவர்களுக்குப் போதிப்பதில்லை.

இந்த ஸயன்ஸைக் கற்ற உபாத்தியாயர்களும் பணக்காரர்களுக்குப் பயன்படுகின்றனரே யன்றி ஏழைகளுக்கல்ல. இங்கேயும் பணந்தான் அடிப்படையாயிருக்கிறது. உபாத்தியாயர்களுக்குக் கொழுத்த சம்பளங்கள் வேண்டும்; பள்ளிக்கூடங்களுக்கு மடக்கு பெஞ்சிகள், பூகோளவுருண்டை, தேசப்படங்கள், புத்தகசாலை, போதனைமுறைப் புத்தகங்கள் முதலியவை வேண்டும். இவ்வளவும் உள்ளது தான் நாகரிகமான பள்ளிக்கூடமாம்! இந்தச் செலவுகளுக்காகக் குடிகளிடம் இரட்டிப்பு வரி வசூலிக்கப்படுகிறது. வீட்டிலுள்ள வேலைகளைக் கவனிக்க வேண்டியிருப்பதால் ஏழை உழைப்பாளிகளின் மக்கள் பள்ளிக்கூடஞ் செல்ல முடிவதில்லை. இருபது பள்ளிக்கூடங்கள் இருக்குமிடத்தில் நூறு பள்ளிக்கூடங்கள் உற்பத்தியாக வேண்டுமென்று படித்தவர்கள் சொல்கின்றனர். ஆனால் குடியானவர்களுக்கோ இது அதிக வரியென்றே பொருளாகும். அதிக வரியென்றால் இன்னும் அதிக உழைப்பு; மக்களைப் பள்ளிக்கு அனுப்புவது இன்னுங் கடினமாகிவிடும்.

இதர ஐரோப்பியநாடுகளில் இருப்பதுபோல் இங்கும் கட்டாயப் படிப்புமுறை ஏற்படவேண்டுமென்று படித்தோர் கூறுகின்றனர். ஆனால் கட்டாயப் படிப்புத் திட்டத்தால் குழந்தைகளைப் பள்ளிக்கூடங்கட்கு அழைத்துச் சென்றுவிட்டால் குடியான

வர்கள் சகாயமின்றிப் பாடுபடும் நிலையுற்று இன்னும் வருந்த நேரிடும். ஆகவே கட்டாயப் படிப்பு நடை பெறுவதும் அசாத்தியம்.

இதற்கு ஒரே ஒரு வழிதானுண்டு. உபாத்தியாயர் ஏழையோடு ஏழையாய்க் குடியானவனோடு குடியானவனாய் வாழ்பவனாகி, அவர்கள் மனதாரத் தரும் ஊதியத்தால் வாழ்ந்து கல்வி கற்பிக்கவேண்டும். ஸயன்ஸின் பொய்யான தன்மையினால் நாம் பிறர்க்குத் தொண்டியற்றும் ஆற்றல் அற்றவர்களாகிறோம். கல்வியைக் கூலிக்காகவன்றி உயர்நோக்கத்திற்காகக் கற்பித்தல் வேண்டும்.

"ஸயன்ஸை உத்தேசித்தே ஸயன்ஸ், கலை ஞானத்திற்காகவே கலை ஞானம்" என்று பலர் கூறுகின்றனர். ஒரு சித்திரக்காரனுக்கு நாற்பது சனங்கள் இருந்து உழைக்கக்கூடிய பெரிய அறையொன்று வேண்டும்; பற்பல சாதனங்கள் வேண்டும். அதிகச் செலவுடன் பல இடங்களுக்கு அவன் செல்லவேண்டும். மக்களின் வரிப்பணம் சித்திரசாலைகள் விஷயமாய் லக்ஷக்கணக்காகச் செலவழிந்திருக்கிறது. இச் சித்திரங்கள் பெரிய அரண்மனைகளை அலங்கரிக்கின்றன. மக்கள் இவற்றை விரும்புவதுமில்லை; இவை இன்னவென்று அவர்களுக்கு விளங்குவதுமில்லை.

சங்கீத வித்துவான்கள் தங்கள் சீரிய கருத்துக்களை வெளியிடுவதற்காக, ஆடம்பரமான அலங்காரத்துடன் பல தேசங்களினின்றும் ஒருங்குகூடி, லக்ஷக்கணக்கான செலவுடன் கச்சேரிகள் நடத்துகின்றனர். இஃதெல்லாம் மக்களுக்குத் தெரியவுந் தெரியாது;

அவர்கள் இதை விரும்புவதுமில்லை. சங்கீதத்தின் செலவுகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. இவ்வாறு மக்களுக்குச் சற்றேனும் பயனற்ற துறைகளில் அவர்கள் வரிப்பணம் வீணாக்கப்படுகின்றது.

ஐயோ! இவர்கள் பெருகத் தொடங்கினால் மக்கள் அழியத் தொடங்குவர். ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு சங்கீதவித்துவானும், ஒரு சித்திரக்காரனுமாக விஜயம் செய்துவிட்டால் இவ் வீணர்களின் செலவைத் தாங்குவது யார்? கவிஞனையும், சித்திரக்காரனையும், சங்கீத வித்துவானையும், அவர்கள் திறனைச் சாதாரண மக்கள் விரும்பக்கூடிய, அவர்களுக்குப் பயன்படக்கூடிய, வழிகளில் உபயோகிக்கும்படி கேட்போமாயின் அவர்கள் நம்மைப் புத்திசுவாதீனம் அற்றவர்களென்றே கூறுவர்.

ஆனால், முதலில் மக்களுக்கு உபயோகமாக வாழ்வதாகவும், அவர்களுக்கு அறிவூட்டுவதாகவும் கூறிச் சரீர உழைப்பினின்று விலகிக்கொண்டு, பின்னர் அம் மக்களை அடியோடுமறந்த இவர்களே புத்திசுவாதீனம் அற்றவர்கள். இவர்கள் சாதாரண மக்களுக்குப் பயன்படாததும், எட்டாததுமான வேலைகளைச் செய்வதே பெருமை யென்றும் எண்ணுகின்றனர். மக்களுடன் கூடி வாழ்ந்து, அவர்களுடன் சேர்ந்துழைத்து, அவர்களுக்குக் கல்வியையும் கலையையும், பயனையெதிர் நோக்காது போதிக்கவேண்டும்.

## அத்தியாயம் 34

படித்தவர்களும் ஆராய்ச்சியாளரும் உடல் உழைப்பைத் தவிர்ப்பதென்றுள்ள வேலைப் பிரிவைப் பற்றிய பொய்யான தப்பெண்ணம் மனித வகுப்பின் மேன்மையையும் நாகரிகத்தையுங் குலைத்துவிட்டது.

உயர்தரக் கல்வியும், கலைஞானமும் ஏழைகளுக்குக் கிட்டமாட்டா. உயர்தரக் கல்வியும், கலையும் பெருகப்பெருக ஏழைகளின் நிலைமையும் நாள்தோறும் சீர்கெட்டு வருகிறது. இவ்வேலைப் பிரிவு சுயநலம் மிகுந்ததோர் ஏற்பாடு. வேலைப்பிரிவு என்றென்று முள்ளதோர் விதியென்றும், அதை மாற்றமுடியா தென்றும், ஸயன்ஸ் எல்லோருக்கும் சௌக்கியத்தையும் நன்மையையும் உண்டாக்குவ தென்றும் சொல்லப்படுகிறது. இதை நாம் சற்று விவரமாய்க் கூறுகிறோம்: "இப்பொழுது, பொய்யான இவ்வேலைப் பிரிவைச் சிலர் கைப்பிடித்ததனால் ஏழைகளின் கதி இவ்வளவு பரிதாபகரமாயிற்று; ஆகையால் இன்னும் பலர் இவ்வழியைக் கடைப்பிடித்தால், சோம்பேறிகளின் தொகை பெருகி உலகத்தின் இன்னல்கள் விரைவில் தீர்ந்துவிடும்."

உண்மை மதம் என்றுமுள்ளது; அதைப் பற்றி நிற்போரும் என்றுமுள்ளனர். ஆனால் நாங்களே மத குருக்கள் என்று பறைசாற்றிக் கொள்பவர் குரவராகார். அவ்வாறே உண்மைக் கல்வியுங் கலையும் உலகில் உள்ளனவாயினும் தற்காலம் அப்பெயர் கொண்டுலவுமவை உண்மைக் கல்வியும் கலையுமாகா.

ஸயன்ஸூம், கலையுங் கற்றோமென் றெண்ணியிருக்கும் தற்காலத்து ஆராய்ச்சியாளரும், கலைஞரும்

அவற்றை உண்மையில் அறிந்தவர்களல்லர். ஆயினும் அவர்கள், எத்தனையோ வீண்பெருமையினர் போன்று, தங்களைப் பற்றி மிக மேன்மையா யெண்ணிக் கொண்டுதானிருக்கிறார்கள்.

---

## அத்தியாயம் 35

"ஆகவே, தாங்கள் ஸயன்ஸையும் கலைஞானத்தையும் எதிர்க்கிறீர்கள். மனிதர் எதனால் வாழ்கின்றனரோ அதையே கண்டிக்கிறீர்கள்" என்று பலர் கூறுகிறார்கள். என் வார்த்தைகளை ஆராயாமலே சுலபமாய்த் தள்ளிவிடுவதற்கேற்ற உபாயம் இதுவே. "அவன், ஸயன்ஸ் கலைஞானம் எல்லாவற்றையும் கண்டிக்கிறான். மனிதர்களை அநாகரிக நிலைக்குக் கொண்டுபோகக் கருதுகிறான். அவன் வார்த்தையைக் கேட்டென்ன? அவனோடு பேசியென்ன?" என்றே பலரும் அலக்ஷியமாய்த் திரும்பிக் கொள்கின்றனர். மேற்கூறியவாறு என்னைப் பற்றிச் சொல்வது சரியல்ல. நியாயமான மனித முயற்சியாகும் ஸயன்ஸையோ, அதை விளக்கி வெளிப்படுத்திக் காண்பிக்கும் கலையையோ நான் கண்டிக்கவில்லை. ஆனால் தற்காலத்தில் நிலவி வரும் சில தப்புக் கொள்கைகளால் நாம் யாவரும் அநாகரிக நிலையை நோக்கி விரைந்து கொண்டிருப்பதைத் தடுத்து, உண்மையான ஸயன்ஸையும் கலையையும் கடைப்பிடிக்க வேண்டுமென்றே கோருகிறேன்.

ஸயன்ஸும், கலைஞானமும் மாந்தர்க்கு உணவு, தண்ணீர், துணிமணிகளைப் போன்றே, அல்லது அவற்

றினும் மிக, அவசியமானவையே. ஆனால், அவை ஏன் அவ்வளவு அவசியமெனில், சில ஆராய்ச்சியாளர் கூறுவதாலல்ல; இயற்கையாகவே அத்தியாவசியமாயிருப்பதனாற்றான். நான் வைக்கோல் காயவைத்து அது தான் மனிதருக்கேற்ற உணவு என்றெண்ணிக் கொள்வதால், அது மனிதர் உணவாகமாட்டாது. உணவு இன்றியமையாத தெனினும் நான் கொடுப்பது உணவேயாகாது. இக்காலத்தில் ஏதாவதொரு கிரேக்கச் சொல்லின் முடிவில் "லாஜி" என்பதைச் சேர்த்து விட்டால் அது ஒரு ஸயன்ஸாகி விடுகிறது. மாதர் ஆடையில்லாது கூத்தாடுவதற்கு, கோரியாகிரபி (Choreography) என்று பெயர் வைத்துவிடின் அதுவும் ஒரு கலையாக வழங்கும்போலிருக்கிறது.

ஸயன்ஸ் ஆராய்ச்சியாளர் வேலை யாதெனில், முதலாவது, உலகத்தில் எத்தனை விதப் பூச்சிகளிருக்கின்றன வென்று கணக்கிடல்; இரண்டாவது, ஆகாயத்திலுள்ள பால்வெளிப் பாதை (Milky Way) யில் இருப்பவற்றைப் பற்றி ரஸாயன சாஸ்திரப்படி ஆராய்தல்; மூன்றாவது நாவல் வரைதல்; நாலாவது மாதர் படங்களெழுதி நிறங்கள் தீட்டுதல்; ஐந்தாவது சங்கீதக்கச்சேரி நடத்துதல் முதலானவைகளும், இன்னும் இவை போன்றவைகளுமாம். யாருக்காக இவையெல்லாம் செய்யப்படுகின்றனவோ, அவர்கள் இவற்றின் உபயோகத்தை ஒப்புக் கொள்ளாமையால், இவையாவும் உண்மையான ஸயன்ஸ் அல்லது கலையாகா. இவற்றில் விஷம்போன்ற விஷயங்களும், மூளையைச் செல்லரித்துவிடக் கூடியவைகளும் மிகுந்திருப்பதால் இவை உழைப்பாளிகளுக்குப் பயனற்றவை யென்பதோடன்றிக் கேட்டை விளைப்பனவாம்.

ஆதிகாலம் முதல் ஸயன்ஸ் இருந்தே வருகிறது. ஸயன்ஸ் என்றால் அறிவு, ஞானம் என்னும் எளிய, பெரிய பொருளையே கொள்ளவேண்டும். இவ்வறிவு மாந்தர்க்கு இன்றியமையாதது; அஃதின்றி மனித வாழ்வு நடைபெறாது. அதை எதிர்ப்பதோ, கண்டிப்பதோ முற்றிலும் தவறேயாகும். ஆனால், உலகில் இரும்பு தோண்டுவதுமுதல் கடவுளறிவுவரை எண்ணிறந்த விஷயங்கள் இருப்பதால், முக்கியாமுக்கிய விவேகத்துடன் அறிவைத் தேடவேண்டும்.

ஆகவே, அறிவாளிகள் எந்த அறிவு அவசியமானதென்பதை நிர்ணயித்துக் கொள்வதற்குத் தக்க குறியொன்று வைத்துக்கொள்ள வேண்டும். அதைக் கொண்டு எது முக்கியமானது, எது முக்கியக் குறைவானதென்பதைத் தீர்மானித்துக் கொள்ளலாம். இவ்வாறு நிர்ணயிப்பதற்கு அடிப்படையா யிருக்கும் மெய்ஞ் ஞானமே மெய்ச் சாத்திரமாகும். நாகரிக மக்களிடையே உத்தம புருஷர் பலர் பிறந்து இச் சாத்திரத்தை இயற்றியுள்ளனர். இது, "மனிதன் அடைய வேண்டியதெது? மனிதனது உண்மை நலன் எதன்கண்ணுள்ளது? அதை உறுதற்குற்ற உபாயமெது?" என்பவற்றை ஆய்ந்து முடிவு செய்திருக்கிறது. எவ்வெக்கலையும், ஸயன்ஸும் மேற்கூறியதற்கு அனுகூலமோ அவை அவசியமும் முக்கியமுமானவை; மற்றவை மாறானவை.

கன்ப்யூஷியஸ், புத்தர், மோஸஸ், சாக்ரடீஸ், கிறிஸ்து, முகம்மது முதலாயினோர் இயற்றியுள்ள சாஸ்திரங்கள் மேற்கூறிய பிரச்னைகளைப் பற்றியவை. படித்தவர்களென்று தற்காலம் சொல்லப்படும் சிலர்

நீங்க லனையோர் இவற்றை ஒப்புக்கொள்வர். இந்த ஸயன்ஸ்தான் எக்காலத்தும் முதன்மையாக நிற்கிறது; இதர ஸயன்ஸுகளின் முக்கியாமுக்கியத்தை நிர்ண யிப்பதும் இதுவே. இந்த ஸயன்ஸின் பெருமை மத போதகரால் கற்பிக்கப்பட்ட தன்று. ஒவ்வொருவர் உள்ளமும் மனிதனது வாழ்வு, சாவு, விடுதலைகளைப்பற் றிக் கூறும் ஸயன்ஸே மிகப் பெருமை வாய்ந்ததெனத் தெரிவிக்கும். உலகில் எண்ணிமுடியாத ஸயன்ஸுகள் இருப்பதால் அவற்றின் முக்கியாமுக்கியத்தை இந்த ஸயன்ஸைக் கொண்டே நிர்ணயிக்கவேண்டும். இந் நிர்ணயமின்றிக் கற்பதெனின், எதை யென்று படிப்பது?

மனிதனது கடமை எதுவென்றும், அவனுக்கு நிலைத்த நன்மை பயப்பது எதுவென்றும் உணராது எத்தனை ஸயன்ஸுகள் படித்தாலும் அஃதெல்லாம் அபாயமான வேடிக்கை விநோதமேயன்றி வேறல்ல. தீரவிசாரியாது மேற்போக்காகப் பார்ப்பவர்கள் ஆத்ம சுகத்தைக் கூறும் நூல்களுக்குள்ளேயே கருத்து வேற்றுமையுள்ளதென்று எண்ணுவர். ஆனால் ஆழ்ந்து விசாரிக்குங்கால், புத்த மதத்தினர், பிராமணர்கள், கிறிஸ்தவர், யூதர், சீனர், லோட்ஸ் மதத்தினர் அனைவ ரது கொள்கைகளும் அடிப்படையில் ஒன்றாகவே யிருப்பது நனிவிளங்கும்.

வீடுகட்டுவதில் பல்வேறு சிற்பிகளின் மதிப்பு கள் வெவ்வேறா யிருப்பினும், அவ்வம் மதிப்பின்படி கட்டினால் எல்லாம் வீடுகளேயாம். கன்ப்யூஷியஸ், புத்தர், மோஸஸ், கிறிஸ்து முதலானவர் இத்தகைய சிற்பிகளாவர். நமது ஆராய்ச்சியாளர்களோ, மதிப்

பில்லாமல், எப்படியாவது, தோன்றியவாறெல்லாங் கட்டவேண்டு மென்கிறார்கள். இவர்கள் உண்மையான ஸயன்ஸை மறுத்துவிட்டுத் தாங்கள் ஏதோ புதிதாக ஸயன்ஸைக் கண்டுள்ளதாகக் கூறுகின்றனர்.

உலகம் உதித்தது முதல் ஆழ்ந்த கருத்துள்ள உத்தமர்கள் தோன்றி மனிதனது சாசுவத க்ஷேமத்தைப் பற்றித் தீரயோசித்து முடிவு செய்திருக்கின்றனர். "என்னைப் படைத்த பரம்பொருள் நான் என்ன செய்ய வேண்டுமென்று உத்தேசித்தார்? எனது நலனையும் பிறர் நலனையுங் கோரி யான் செய்ய வேண்டியதெது?" என்னுங் கேள்விகளுக்கு அவர்கள் விடை யளித்துள்ளனர்.

"நான் எல்லையில்லா ஒரு பொருளின் அம்சம். என்னைப்போன்ற அம்சங்களான பிறமனிதருக்கு நான் செய்ய வேண்டியது யாது? முழுமுதலாம் ஆதிபரம்பொருளைக் கருதி யான் செய்யவேண்டியதென்ன?" என்பனபோன்ற விஷயங்களைப்பற்றித் தமது முன்னோருரையைக் கொண்டு தாமுந் தீரவிசாரித்து, எல்லோரும் அறிந்து பின்பற்றக்கூடிய தெள்ளிய உபதேசங்களை, இவர்கள் அருளியிருக்கின்றனர். மாந்தர் யாவரும் இத்தகைய கேள்விகளுக்குத் தக்க விடைகளை யறிந்து பின்பற்றியொழுக வேண்டும். நீதிக்கும் மனச்சாக்ஷிக்கும் பொருத்தமானவற்றை அனுஷ்டிக்க வேண்டும்.

இஃதிவ்வாறிருக்க இப்பொழுது ஒரு கூட்டத்தினர், "மேற்கூறிய யாவும் முழு அறியாமை. அரிய பெரிய மேதாவிகளும் மஹான்களும், அனுபவ பூர்வ

மாக, வாழும் முறைமையைப் பற்றி உபதேசித்துள்ள தெல்லாம் ஒன்றுக்கும் உதவாதது. ஆதலின் அதை யெல்லாம் ஒழித்துவிட வேண்டும்" என்று கூறு கிருர்கள்.

ஸயன்ஸின் பிரகாரம், நமது நலனையும் பிறர் நலனையும் நாடுவதாயின், முதன் முதலாக, யுக்தியும் மனச்சாக்ஷியுங் கூறுவதை மறந்துவிட வேண்டும்; இரண்டாவது, அரிய மேதாவிகளும் தீர்க்கதரிசிகளு மாகிய நமது முன்னோர் உபதேசங்கள் அனைத்தையும் துரும்பெனக் கருதி ஊதிவிடவேண்டும். பெரியார் உபதேசங்களை இவ்வாறு அறியாமை யென்று அகற்றிப் புதிதாக ஆராய்ச்சி செய்ய வேண்டுமாம். பூதக்கண்ணுடி கொண்டு புழுபூச்சிகளைக் கவனிக்க வேண்டும். ஸயன்ஸ் பட்டம் பெற்றவர் கூறுவதெல் லாம் தவறுகள் அணுகொணுப் பரம தத்துவங்க ளென்று கொள்ளவேண்டும்.

இவ்வாராய்ச்சியாளர் தங்களைப் போன்ற பிறர் எழுதியவற்றைப் படித்து, அணுக்களை யாராய்ந்து தமது போக்கின் பிரகாரம், மனச் சாய்தலின்படி, அவற்றின் குணங்கள், பழக்க வழக்கங்கள் முதலிய வற்றைக் குறித்துக்கொண்டு, முடிவில் இவ் அரை குறை ஆராய்ச்சியினின்றும், மனிதர் கடமை, வேலைப் பிரிவு முதலாம் விஷயங்களைப்பற்றி முடிவு செய்கின்ற னர். தான் யாரென்று தெரிந்துகொள்வதற்குப் புழு, பூச்சிகளையும் கண்ணுக்குப் புலப்படாப் பரமாணுக் களையும் கவனிக்க வேண்டுமாம்!

முடிவில் எய்தற்பாலதாகிய பேரின்ப விஷயத்தில், மாந்தர் என்றும் விசேஷ சிரத்தை காண்பித்து

வந்திருக்கின்றனர். தாங்கள் தீமையுடனும் பொய் யுடனும் போராடியது பற்றியும், மனிதர்கள் எவ்வா றெல்லாம் ஏமாந்து போகின்றனரென்பது பற்றியும், சத்தியமும், தர்மமும் எப்போதும் முடிவில் வெற்றி யடைவது பற்றியும் பெரியோர்கள் கூறியிருக்கிறார் கள்.

மனிதனது கதிமோக்ஷத்தைப் பற்றிய அறிவே ஸயன்ஸ் எனத் தகும்; அதைத் தெளிவாய் விளக்கிக் காட்டுவதே கலையெனத் தகும். வாழ்வின் ரகசியத் தையும், வாழும் முறையையும் விளக்கிக் காட்டும் ஸயன்ஸையும், கலையையுமே நாம் போற்றவேண்டும். தற்காலத்திலோ புருஷார்த்தத்தைப் பற்றிய ஸயன்ஸ் பரிகாசத்துடன் 'ரிலிஜன்' (மதம்) என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. உண்மைக் கலையும் மறைந்து விட்டது. இவற்றினிடத்தில் பொதுவாக எல்லா விஷயங்களையும், பொருள்களையும் பற்றிய ஸயன்ஸ் தலையெடுத்திருக்கிறது.

மதத்திற்கும், மத போதகர்களுக்கும் மதிப்பும் ஆதரவும் இருந்த வரையிலும் மதத்திற்கு ஊழியம் புரியும் உண்மைக் கலை நிலவிவந்தது. ஆனால் போலி ஸயன்ஸுக்கு ஊழியஞ் செய்யத் தொடங்கிய அன்றே உண்மைக் கலை பாழாகிவிட்டது. 'கலையின் பொருட்டே கலை' எனப்படும் இக்காலத்தில் அது பெருத்த ஒரு வியாபாரமாகி விட்டது. கலைப் பொரு ளில் வியாபாரிகளுக்கு அளவற்ற லாபம் கிடைக் கிறது. நிர்வாண சித்திரம், பாகசாஸ்திரம், தலைமயிர் சீவும்முறை முதலியவை யெல்லாம் கலைகளாம்! இவை களில் வல்லவர்கள் கலைஞர்களாம்!!

நமக்குத் தெரிகின்ற சென்ற பல்லாயிரம் வருஷங்களில், கோடி கோடி மாந்தரிடையே கன்ப்யூஷியஸ், புத்தர், ஸோலன், சாக்ரடீஸ், சாலமன், ஹோமர், ஈசையா, டேவிட்போன்ற சில ரத்தினங்களே தோன்றியுள. ஒரு சாதி, ஓரினம் என்பதின்றி உலகெங்கும் இத்தகைய பெரியார் உதித்தபோதிலும், இவர்கள் மிகச் சிலரே. மாந்தரனைவரும் இவர்களைப் போற்றுவதும் அகாரணமாகவல்ல. இவர்கள்தான் உத்தமவித்தையை (ஸயன்ஸை)யும், கலைகளையும் வகுத்திருக்கின்றனர்.

இயந்திரங்களால் பலவேறு பொருள்களைச் செய்வதுபோல் அறிஞர்களையும், கலைஞர்களையுங்கூட உற்பத்தி செய்யலாமென்று தற்காலத்தவர் எண்ணுகின்றனர். உண்மை யறிவும் ஆராய்ச்சியும் ஐம்பது வருஷங்களுக்கு முன்னர்தான் தொடங்கிய என்று இவர்கள் கூறுகின்றனர். அதற்கு முன்னிருந்த மிகச்சிறந்த அறிவாளிகளையும், தீர்க்கதரிசிகளையும் இவர்கள் அறவே மறந்துவிடுகின்றனர்.

சென்ற ஐம்பது வருடங்களுக்குள் ஸயன்ஸில் தலைசிறந்த பெரியார்கள் உலக முழுதும் எத்தனைபேர்கள் இருக்கிறார்களோ, அத்தனை பேர்களை ஜெர்மன் சர்வ கலாசாலை ஒன்றிலேயே காணலாம். ஸயன்ஸுகளும் நாளுக்குநாள் பெருகிவருகின்றன. முன்னமே கூறியதுபோல் ஒரு கிரேக்க வார்த்தையுடன் 'லாஜி' என்னும் விகுதியைச் சேர்த்துவிட்டால் அது ஒரு ஸயன்ஸ் ஆகிவிடும். இத்தகைய ஸயன்ஸுகளின் பெயர்களை வரிசையா யெழுதினால் அதுவே ஒரு அகராதியாகிவிடும். புற்றிலிருந்து ஈசல்போலத்

தினந்தோறும் புதிது புதிதாக ஸயன்ஸுகள் கிளம்பிக் கொண்டேயிருக்கின்றன.

அனைவரும் பண்டைக்கால மனப்பான்மையை ஒழிக்காததாற்றான் ஸயன்ஸின் அருமையை உணர்ந்து பயனை நுகரவில்லை என்று சொல்லப்படுகிறது. தீர்க்க தரிசிகளாகிய பெரியாரின் வார்த்தைகளை நம்புவதையே இவர்கள் குருட்டு நம்பிக்கை, பழங்கால மனப்பான்மை என்கின்றனர்.

உண்மையான ஸயன்ஸும், கலையும் எல்லோருக்கும் விளங்கும். தற்காலத்தவர்களோ ஒருவருக்கும் விளங்காததும், பயனற்றதுமாகிய ஏதோவொன்றைப் பின்பற்றிச் செல்கின்றனர். அது எவ்வளவு மேன்மை வாய்ந்ததென்று அவர்கள் கூறினும், ஒருபோதும் அது உண்மை ஸயன்ஸோ, கலையோ ஆகமாட்டாது.

---

## அத்தியாயம் 36

நாம் மேலே கூறியதற்கு ஸயன்ஸ் நிபுணர்கள் "ஸயன்ஸையும், கலையையும் பற்றி நீங்களாகவே கூறியுள்ள விவரணத்தின்படி கூட எங்கள் ஸயன்ஸும், கலையும் உண்மையானவையே. வாழ்நாள் முழுவதையும் ஸயன்ஸுக்கும் கலைக்குமே அர்ப்பணஞ் செய்த கலீலியோ, ப்ரூனோ, ஹோமர், மைகேல் ஆஞ்ஜலோ, வாக்னர் முதலானவர்கள் உழைத்ததெல்லாம் வீணுக்காகவா?" என்று கேட்கின்றனர்.

இவர்கள் இவ்வாறு கூறும்போது 'வேலைப் பிரிவைப்பற்றிய தப்பெண்ணத்தையே முக்கியமாய்

நான் தாக்குகிறேன்' என்பதை மறந்து விடுவதோடு முற்கால அறிஞருக்கும் தற்காலத்து ஸயன்ஸ் அறிஞர் களுக்கும் ஒரு சம்பந்தத்தைக் காண்பிக்கவும் முயல் கின்றனர். ஆதி கிறிஸ்தவர்களுக்கும் போப்புக்கும் போலவே, முற்காலப் பெரியாருக்கும் தற்கால ஸயன்ஸ் அறிஞருக்கும் நெருங்கிய உடன்பா டொன்றையுங் காணமுடியாது. கலீலியோ, ஷேக்ஸ் பியர், பீதோவன் முதலானவர்களுக்கும் பிற்காலத் தவராம் டிண்டல், ஹ்யூகோ, வாக்னர் முதலியவர் களுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை.

ஸயன்ஸ் அறிஞர்களே ஸயன்ஸையும் கலையையும் பற்றிக் கொடுத்துள்ள, மனத்தின் சக்தியை மாந்தர் நலனுக்குப் பயன்படுத்துவ தென்னும் விவரணத்தின் படி ஆராய்ந்து பார்க்கினும், தண்டனைச் சட்டங்கள், தேசங்களின் அன்யோன்ய சம்பந்தச் சட்டங்கள், புதுமாதிரித் துப்பாக்கி, பீரங்கி, அருவருப்பளிக்கும் நாடகம், நாவல் முதலியவை மனித வர்க்கத்திற்குத் தீமையே புரிவதால் ஸயன்ஸ் அல்லது கலையாகா. இவற்றை இயற்றுவோர் அறிஞராகார் — கலைஞரு மாகார்.

அவ்வாறே, ஆயுள்முழுதும் பூதக்கண்ணாடி, தூரதிருஷ்டிக் கண்ணாடி முதலியவை கொண்டு வஸ்துக்களை ஆராய்கிறவர்களும், பழைய சரித்திர சம் பந்தமான நாவல்களையும், படங்களையும் சாதாரணப் பாடல்களையும் எழுதுபவர்களும் அறிஞராகார், கலை ஞருமாகார். முதலாவது, இவர்களது ஸயன்ஸும் கலையும் மக்களின் நலனை நோக்கமாய்க் கொள்ள வில்லை. இரண்டாவது, இவர்கள் செய்ததும், செய்

வதுமான வேலை மக்களுக்குப் பயனென்றையும் நல்கவில்லை. எவ்வேலையிலும் ஏதோ ஒன்றிரண்டு நன்மைகள் இல்லாது போகாவாதலின் அத்தகைய அற்ப நலன் ஏதாவது இவர்கள் முயற்சியினுல் விளைந்தாலும் அதையொரு பொருட்டாக வெண்ணுவதற்கில்லை.

மின்சார சக்தியால் விளக்கேற்றல், உஷ்ணப் படுத்துதல், வண்டியோட்டுதல் முதலிய தொழில்களைச் செய்பவர்களும், மனதைக் கவரும் நாவல்கள் எழுதுபவரும், நடிகர்களும், ஓவியக்காரரும், வெடிகுண்டு செய்பவர்களும் புரிபவற்றை ஸயன்ஸாகவோ, கலையாகவோ கருதொணுது. இவை யாவும் தனிகர்களின் செளகரியத்திற்கும், கண்டுபிடித்தவர்களின் லாபத்திற்குமே யன்றி மக்கள் நலனுக்காக அல்ல. சாப்பாட்டுக் கடை நடத்துவோரும், வேசிகளும் பரோபகாரிகளெனக் கொள்வதாயின் மேற்கூறியவர்களையும் அவ்வாறு கொள்ளலாம். சாப்பாட்டுக் கடை நடத்துவதையும், வேசித் தொழில் புரிவதையும் ஸயன்ஸ் அல்லது கலையென்று யாராவது சொல்லத் துணிவார்களா?

ஸயன்ஸைப் பற்றிக் கூறப்படும் விவரணம் மிகவும் உண்மையானதே யாயினும் அதைப் பின்பற்றுவதாகக் கூறுமவர் செய்பவை மக்களுக்குக் கண்கூடாகத் தீங்கு புரிவனவாகவும், பயனற்றனவாகவும் இருக்கின்றன; அல்லது, பணக்காரருக்கு மாத்திரம் பயன்படும் அற்ப சகாயங்களா யிருக்கின்றன. இவர்களிற் பலர் நல்லவர்களா யிருந்தபோதிலும் மக்களுக்கு இவர்களால் நன்மை விளைவதில்லை.

தங்கள் கடமைகளைச் சரிவர நிறைவேற்றாத தற்கால மதபோதகர்கள் எவ்வாறு உண்மைத் தேசிகர்களாகாரோ, அவ்வாறே தாங்கள் வரையறுத்த கொள்கைப்படி நடவாதவர்களை அறிஞரென்றோ, கலைஞரென்றோ கூறொணாது. ஸயன்ஸ் அறிஞர், தங்கள் கடமையை அறவே மறந்து பிறர் தங்களுக்குச் செய்யவேண்டியதைப் பற்றிக் கண்டிப்பா யிருக்கின்றனர். தங்களுக்குப் பிறர் செய்யவேண்டியவற்றை மறந்து தங்கள் கடமையிலேயே கருத்தூன்றினாற்றான் ஸயன்ஸும், கலையும் பயனளித்தல் கூடும். ஸயன்ஸுக்கும் கலைக்குமுள்ள மதிப்பு அவற்றின் தன்னல மறுப்பாலேதான்.

3468

தன் மனோவன்மையாலும், புத்திசாதுரியத்தாலும் பிறருக்கு உபகாரம் புரிவதெனில் கஷ்டங்களையும், சிரமங்களையும் பொறுத்துக் கொண்டுதான் செய்யவேண்டும். கஷ்டங்களைச் சகிப்பதனாற்றான் ஆன்ம லாபம் கைகூடும். தன்னலமறுப்பும், கஷ்டங்களும் புத்தியால் உழைப்பவர்க்கு இயல்பாயிருத்தல் வேண்டும். பிறர் நலனுக்காகத் தாங்கள் பாடுபடுவதே அவர்களது நோக்கமாயிருத்தல் வேண்டும்.

புத்தியால் உழைப்பவன் மலையுச்சி மீது உட்கார்ந்து கொள்ளமாட்டான். மக்களுடன் இயல்பாகப் பழகி அனைவரது கதிமோக்ஷத்திற்கும் உரிய வழி எதுவென்று ஆய்வதும் அதற்காகப் பாடுபடுவதுமே அவனுடைய வேலை. நாளை உயிரோடிருப்பது நிச்சயமன்று என்றுணர்ந்து அவன் காலத்தை வீணாக்கமாட்டான். தன்னல மறுப்பும், இன்னல்

பொறுத்தலும் மூளை வேலைசெய்வோருக்கு ஏற்பட்டவை.

சர்வகலாசாலைகளி லிருந்து கூட்டங் கூட்டமாய் வெளிக் கிளம்புபவர்களும், பட்டம் பெற்றவர்களும் உண்மைப் படிப்பாளிக ளாகமாட்டார். மனச்சாக்ஷியின் தூண்டுதலாற் பொதுநலங் கருதித் தன் மனோவன்மையாலாகும் வினைகளைத் தொடங்குபவனே உண்மைப் படிப்பாளி. உடலைப் பேணிக் கொழுக்க வைத்து, இன்பம் நுகர்ந்து இறுமாந்து திரிபவன் படிப்பாளி யாகான். ஆன்மாவையும் புத்தியையும் பற்றிய பணி இன்றியமையாதது, சிரம சாத்தியமானது. தன்னையே வாட்டிக்கொள்ளும் இப்பணியையே சிலுவை (†) யென்று மதநூல்கள் இயம்பும்.

பிறர்நலங்கருதித் தன்னலத்தை அறவேயகற்றி, உடல் பொருள் ஆவிகளை ஒப்படைத்து முடிக்கக் கூடியது இப்பணி. உலகத்தில் எத்தனைப் பூச்சிகளிருக்கின்றன வென்றும், சூரியன்மீது எத்தனைப் புள்ளிகள் தெரிகின்றன வென்றும் எண்ணுவதும், நாவல்கள் எழுதுவதும் சுகமாகச் செய்யக்கூடிய வேலைகள். மாந்தரின் கதிமோக்ஷத்தைப் பற்றிய விஷயமோ தன்னல மறுப்பினாலும் பிறர் நலம் பற்றிய போவாவினாலுமே சாதிக்கக் கூடியதாம்.

மத போதகர்களின் நற்பெயருந் தூய்மையும், அவர்கள் பொறுமையுடன் கஷ்டங்களனைத்தையும் சகித்துவந்தவரையிலுமே நிலைத்தன. உடலைப் பேணி வளர்க்கத் தொடங்கியவன்றே அவர்தம் பெருமையும் குலைந்துவிட்டது. "முற்காலத்தில் மத போதகர்கள் தங்கமாகவும் அவர்தம் சிலுவை மரமாகவும் இருந்தி

ருக்க, தற்காலத்தில் அவர்களது சிலுவை தங்கமாகவும், அவர்கள் மரமாகவும் இருக்கின்றனர்" என்று பாமரர்கூடக் கூறுகின்றனர். கிறிஸ்து சிலுவையில் மரித்தது வீணுக்கன்று. தியாகமும், கஷ்டங்களைப் பொறுத்தலும் தமது பெருமையால் என்றும் வெல்வனவே யன்றி ஒருகாலும் வீணுகா.

உண்மையான ஸயன்ஸுக்கும், கலைக்கும் இரண்டு அடையாளங்களுள்ளன. முதலாவது, ஸயன்ஸும் கலையும் லாபத்திற்காக வன்றிச் சுயநலமறுப்புடன் போதிக்கப்படவேண்டும். இரண்டாவது, அவை யாருக்கு நன்மை பயப்பதென்கின்ருேமோ அவர்களுக்கு அவற்ருல் விளையும் நன்மை தெரிந்திருக்க வேண்டும்.

ஸோலன், கன்ப்யூஷியஸ், மோஸஸ், கிறிஸ்து முதலானவர்கள் போதித்தது உண்மையான ஸயன்ஸாகும். ஏதன்ஸ் நகரத்துக் கோயில்களும், டேவிடின் கவிகளும் கலையாகும். ஆனுல், வீண் ஆராய்ச்சிகள் எக்காலத்தும் ஸயன்ஸ் அல்லது கலையாகா; தற்காலம் இப்பெயர்களுடன் உலவுபவை சில சோம்பேறிகளின் திருப்தியின் பொருட்டு வேறு சில சோம்பேறிகள் இயற்றுமவையேயாம். இவை மக்களுக்குப் புரிவதுமில்லை, பயன்படுவதுமில்லை. இத்தகையதொரு தப்புக் கொள்கைக்கு ஸயன்ஸ் என்று பெயராம்! இது வாழ்க்கையின் உட்பொருளை விளக்குவதில்லை என்பதேயன்றி, மறைக்கவும் செய்கின்றது.

இந்த ஸயன்ஸ் ஓயாது தப்பிதங்கள் செய்து வந்தபோதிலும், இது தினந்தோறும் வளர்ந்து வருவ

தாய்க் கருதுகிறோம். தன்னைத் தவிர வேறெவர்க்கும் யதார்த்தவுண்மை தெரியாதென்னும் அகந்தையும், அறிவெல்லாம் தன்னிடமே குடிகொண்டுள்ள தென்னும் எண்ணமும் ஸயன்ஸுக்கு உண்டு. மக்களுக்கு இந்த ஸயன்ஸைப் பற்றித் தெரியாது; அவர்கள் இதை விரும்புவதுமில்லை.

இழந்துவிட்ட அறிவை மீண்டும் நாம் ஆய்ந்துணர வேண்டிய நிலையிலிருக்கிறோம். பேரின்ப வீட்டுத் திறவுகோல் தமது வசமிருப்பதாக எண்ணித் தாமும் உள்ளே நுழையாது, பிறரையும் நுழையவிடாது தடுத்துக் கொண்டிருந்த முற்காலத்துச் சிலரைப் போலவேதான், தற்கால ஸயன்ஸ் அறிஞர்களையும் கலைஞர்களையும் நாம் கருதவேண்டி யிருக்கிறது.

போலி மதபோதகர்களை விரட்டி அவர்களது மோசத்தை வெளிப்படுத்திய நாம் அவர்களைவிடத் தாழ்ந்திருக்கிறோம். மக்களுக்கு நாம் ஒன்றையுங் கற்பிப்பதில்லை; கற்பித்தல் அவசியமில்லை யென்று கூடக் கூறுகிறோம். மக்களின் இரத்தத்தை உறிஞ்சும் நாம் அவர்களுக்குப் படிப்பு வேண்டியதில்லை என்கிறோம். நமது குழந்தைகளுக்குக் கிரேக்க பாஷையும், லத்தீன் பாஷையுங் கற்றுக்கொடுத்து அவர்களையும் நம்போற் சோம்பேறிகளாக்கி வருவதே பொது மக்களுக்கு நாமியற்றும் பிரதியுபகாரம்

பண்டைக்காலத்துச் சாதிப் பிரிவுகளை அறவே யொழிப்பதாகச் சொல்லும் நாம், சில மனிதர்களும் அவர்களது சந்ததியாருமே உழைப்பதென்றும் மற்ற, வர்களும் அவர்கள் தலைமுறையும் சுகமாகவே வாழ்வ

தென்றுமுள்ள இப்பெரும் சாதிப் பிரிவுபற்றி என்ன சொல்வது?

நமது மொழியே தெரியாத இந்து ஒருவனைக் கொண்டுவந்து, இங்கிருக்கும் நிலைமையைக் காண்பித்தால், அவன், தனது நாட்டிற்போலவே ருஷ்யாவிலும் ஐரோப்பாவிலும் தெளிவாக இரண்டு சாதி மக்கள் உழைப்பாளிகளும், உழைக்காதவர்களும் என இருக்கின்றனர் என்று கருதுவான். கலையென்றும், ஸயன்ஸென்றும், பொதுவாகப் படிப்பென்றும் சொல்லப்படுவதே நாம் உழைக்காது சும்மா யிருத்தற்குக் காரணமாகக் கூறுகிறோம். இந்தப் படிப்பும் தெளிவாகிய பொதுவுண்மையை நாம் உணர முடியாதபடி ஆச்சரியகரமான தப்பிதத்திற்கு நம்மை ஆளாக்கியிருப்பதோடு, யுக்திக்குப் பொருந்தாத விபரீத பாவனைகளையும் நமக்குப் புகட்டியிருக்கிறது. நமது சொந்தச் சகோதரரின் உயிரையே உறிஞ்சிக்கொண்டிருந்த போதிலும், நாம் கிறிஸ்தவர்களென்றும், பரோபகாரிகளென்றும், படித்தவர்களென்றும், தார்மிஷ்டர்களென்றும் எண்ணிக் கொண்டிருக்கிறோம்.

---

## அத்தியாயம் 37

ஆகவே, நாம் செய்ய வேண்டுவது யாது? என்று பலர் வினவுகின்றனர். இக்கேள்வி இரண்டு விஷயங்களை ஒப்புக்கொள்கிறது: முதலாவது, நாம் தற்சமயம் அதர்ம வாழ்வு வாழ்கிறோமென்பதும், இரண்டாவது, அதை மாற்றிக்கொள்ளும் வகை நமக்குத் தெரியவில்லை

யென்பதுமாம். எங்கும் இக்கேள்வியையே பலரும் கேட்பதால், இந் நூலுக்குக்கூட இக்கேள்வியையே பெயராகச் சூட்டியுள்ளேன்.

இதன்கண் இவ்விஷயமாய் நான் பட்ட அவஸ்தைகளையுங் கஷ்டங்களையும், அவற்றினின்று விடுபட வழி தேடியதையும், முடிவிற் கண்டுபிடித்த வழியையும் விவரித்துள்ளேன். எல்லோரையும்போல நானும் ஒரு சாதாரண மனிதனே யாவேன். பிறரிடம் இல்லாதது என்னிடமேதாவது உண்டாவென்று கேட்டால், மற்றவர்களைக் காட்டிலும் நான் அதிகமாய்க் கெட்டுப் போனதையே சுட்டிக் காட்டலாம். இதுகாறும் இந்நூலில் கண்டித்துவந்த விஷயங்களிலெல்லாம், மற்றவரினும் நான் அதிகமாய் ஈடுபட்டிருந்தேன்.

ஆதலின் ஊக்கமிகுதியோடு உண்மையைத் தேடுவோர்க்கு எனது விடை மகிழ்ச்சியும் ஆறுதலும் அளிக்குமென்று நம்புகிறேன். முதன் முதலில், நாம் செய்ய வேண்டியதாவது, பிறரையோ நம்மையோ ஏமாற்றிக் கொள்ளக்கூடாது. எது வரினும் பயத்தினால் உண்மைநெறி பிறழக்கூடாது. உண்மையைத் தைரியத்துடன் பார்க்க அஞ்சிக் கண்ணை மூடிக் கொள்ளக்கூடாது.

பிறரை ஏமாற்றுவது என்னவென்று அறிந்திருந்தும், காலை விடிந்ததுமுதல் அஸ்தமன மட்டும் அதையே நாம் செய்கிறோம். கூசாமற் பொய் சொல்கிறோம். வீட்டிற்குள் இருந்துகொண்டே, "வீட்டிலில்லை" என்பதும், சற்றேனும் திருப்தி யில்லாதபோது "மிகவும் சந்தோஷம்" என்று கூறுவதும், நமக்குச் சிறிதேனும் மதிப்பில்லா ஒருவரைக் "கண்ணியமிக்க

வர்" என்று பகர்வதும், கையில் பணத்தை வைத்துக் கொண்டே, "காசுகூடக் கைவசமில்லையே" என்று சொல்வதும் சர்வசாதாரணப் பழக்கமாகி விட்டன. பிறரை ஏமாற்றுவது பாபமெனக் கருதும் நாம், தயங்காது நம்மையே ஏமாற்றிக் கொள்கிறோம். தன்னைத்தான் ஏமாற்றிக் கொள்வதும், தன் மனத்திற் குத் தானே பொய்புகட்டுவதும் போன்ற கொடிய செயல் வேறின்று. "நாம் செய்யவேண்டுவது யாது?" என்னும் கேள்விக்கு விடைவேண்டுமெனில், இவ்வழக்கத்தை முற்றிலும் ஒழிக்க வேண்டும்.

ஒரு பொய்யையோ, பொய்க் கொள்கையையோ அடிப்படையாகக் கொண்டு நாம் வாழ்ந்துவரும் போது, பிறர்க்கும் அதையே உபதேசித்து வரும்போது, "நாம் செய்ய வேண்டுவது யாது?" என்னுங் கேள்விக்குத் தக்க விடையை எங்ஙனங் காணமுடியும்? பொய் சொல்லக்கூடாதென்று இங்குக் கூறிய தன் பொருள் உண்மை யிதுவென்றறிந்தபின் மலைக்கக் கூடாதென்பதே யாகும். நமது புத்தியினாலும் மனச் சாக்ஷியினாலுந் தெரிந்துகொண்ட விஷயங்களைப் பிற ராலோ நம்மாலோ கற்பிக்கப்பட்ட சாக்குப் போக்கு களால் மறைத்துக்கொள்ளக் கூடாது. உலகனைத் தும் நம்மை எதிர்த்தாலும், புத்தியும் மனச் சாக்ஷியும் தெளிவாய் உபதேசிப்பவைகளை மீறக்கூடாது. உண்மை கடைப்பிடித் தொழுகுவதால் மலைபோன்ற இன்னல்களும் இடையூறுகளும் எதிர்ப்படினும் அஞ்சக்கூடாது.

பொய்ந் நெறியினின்று விலக விரும்பினால் மெய் யைக் கண்டு அஞ்சக் கூடாது. நாம் உண்மையினின்

றும் எவ்வளவுதான் விலகி யிருப்பினும்,விஷயந் தெரிந்த பின்னராவது, பொய்வழியிலே சுற்றிக்கொண்டிராது உறுதியுடன் திரும்பிவர வேண்டும்.

பிறரிடம் பொய் பேசுவதால் நமக்கு யாதொரு நன்மையும் விளைவதில்லை; தீமையே விளைகிறது. உண்மையையே பேசுவதெனக் கொண்டால் எக்காரியமும் இலகுவாய் முடிந்துவிடும். பொய் பேசுவதால் விஷயங்கள் சிக்கலாகிக் கஷ்டந்தான் பெருகும். தன்னையே மோசஞ் செய்துகொள்வதும், தன் மனத்திற்கே பொய்யூட்டுவதும் (ஒருவனது) வாழ்க்கை முழுமையையும் பாழாக்கிவிடும்.

வழிப்போக்கனொருவன் தப்பு வழியில் வெகு தூரஞ் சென்றுவிட்டதாகக் கொள்வோம். அவன் அப்பாதையில் மேலும் எடுத்துவைக்கும் ஒவ்வோரடியும் அவனை நேர்வழியினின்று அதிக தூரம் விலக்கிக்கொண்டு போகிறது. இந்நிலையில் அவன் தான் போகும் வழியே சரியென்று மனக்கோட்டையுங் கட்டிக்கொண்டு, பிறர் கூறினுங் கேளாது, மேன்மேலுஞ் சென்றுகொண்டே யிருந்தானானால், நேர்வழியை என்றும் அவன் காணான். அவ்வாறே தீநெறி புகுந்த ஒருவன் தனது நிலைமை சரியானதென்று மனத்தையுந் தேற்றிக் கொண்டுவிட்டானானால், மீண்டும் அவன் நன்னெறி காண்டல் அரிது.

பணக்காரரும் படித்தவருமாகிய நாம் உண்மை நெறியினின்று வெகுதூரம் விலகி வந்துவிட்டோம்; மீண்டும் அந்நெறிக்குத் திரும்புவது மலைப்பாக இருக்கிறது. அவ்வாறு திரும்ப, மிகவும் திடமான மனவுறுதியும் நிச்சயமும் இருக்கவேண்டும்; அல்லது

துன்மார்க்கத்தைக் கடைப்பிடிப்பதால் துக்கங்கள் மிக அதிகமாகி, அதனால் நமது மயக்கந் தெளியவேண்டும். எனது ஒழுக்கக் கேட்டினால் விளைந்த பொறுக்கொணாத் துயர்கள் என்னை விழிப்பூட்டி, உண்மையைக் கடைப்பிடிக்கச் செய்தன. முதலில் இதுகாறும் யான் சென்றது தப்புவழியென்று அறிந்தேன். உடனே, என் புத்தியும் மனச்சான்றும் காண்பித்த வழியை முதலில் எண்ணத்திலும், பின்பு செய்கையிலும் பின் பற்றிச் சென்றேன். அதற்கேற்ற வெகுமதி பெற்றேன்; பட்டபாடு பயனளித்தது. முன்னர்ச் சிக்கலாகவும் அறியொணாமலு மிருந்தவை யாவும் இப்பொழுது தெளிவாய் விளங்குகின்றன. இப்பொழுது என் வாழ்க்கை எனக்கு மனவமைதியையும் அன்பையும் மகிழ்ச்சியையுந் தருகின்றது. எதைக் கண்டு முன்பு அஞ்சினேனோ அதுவே இப்பொழுது அளவற்ற இன்பமளிக்கிறது.

ஆகவே, "நான் செய்ய வேண்டியது யாது?" என்று தன்னையே கேட்டுக்கொண்டு, அஞ்சா நெஞ்சத்துடன், தனது புத்தியும் மனச் சாக்ஷியும் கொண்டு போகு மிடத்திற்குப் போகத் துணிந்தவன்தான் செய்ய வேண்டுவது யாதென நிச்சயம் கண்டுகொள்வானென்று உறுதியாய்ச் சொல்வேன். தன்னைத் தானே ஏமாற்றிக்கொள்ளும் வழக்கத்தை யொழித்தவன் எப்போது எதை எவ்வாறு செய்ய வேண்டுமென்பதை அறிந்து கொள்வான். ஆனால், தன்னையும் தன் திறமையையும் நிலைமையையும்பற்றி மிக மேலாக எண்ணிக் கொள்வது இதற்கு இடையூறாகும். என் விஷயம் இத்தகையதே. ஆகவே, "நாம் செய்ய வேண்

டுவது யாது?" என்பதற்கு இரண்டாவது விடை, தன்னைப் பற்றி மிக மேலாக எண்ணிக் கொள்ளும் வழக்கத்தை அடியோடு மாற்றிக் கொள்ள வேண்டும் என்பதாகும். இப்பொய்ம் மதிப்பினால் நமக்கு அளவற்ற தீங்கு விளையுமென்பதை மனத்திலிருத்திக் கொள்ள வேண்டும். நாம் படித்தவர்களென்ற செருக்கை அறவே யொழித்து, நமது அறியாமையை நன்குணர வேண்டும். நாம் அன்புள்ளவர்கள், தர்மவான்கள் என்றெண்ணி மகிழாமல் நமது கொடுமையையும் அதர்மத்தையும் உணரவேண்டும். நாம் மிக முக்கியமானவர்கள் என்றெண்ணாமல் நமது சிறுமையை யுணர வேண்டும்.

என்னைப் பற்றி நான் மிகப் பெருமையா யெண்ணிக்கொள்ளும் சுபாவமிருந்தமட்டும் என் பிசகுகளைச் சரிவர உணர்தல் எனக்கு அசாத்தியமா யிருந்தது. மனம் வருந்திப் பச்சாத்தாபப் பட்டு, அவ்வெண்ணத்தைத் துறந்தபின்னரே என் பிசகுகள் எத்தகையவை யென்றுணர்ந்தேன். "நான் மிக முக்கியமானவன்; சாதாரண மனிதனல்லன்" என்னும் எண்ணத்தைத் துறந்த பின்னரே உண்மை வழியைக் காணமுடிந்தது. அவ்வீண் எண்ணத்தை யொழிக்கு முன்னர், "படிப்பும், புத்தி கூர்மையுமுள்ள நான் எனது கல்வியையும் திறமையையும் பொதுஜன நன்மைக்காக எவ்வாறு உபயோகப்படுத்த வேண்டும்? எவ்வேலை எனக்கேற்றது?" என்று என்னை நான் கேட்டுக் கொண்டேன். நான் ஒரு பெரிய மனிதனென்றும், நாற்பது வருஷங்களாய்க் கற்றவற்றைப் பிறர்க்கு உபயோகமாக்க முயல்பவ னென்றும் எண்ணிக்கொண்டதே பிசகு.

என்னை நான் கேட்டுக்கொண்ட கேள்வியைச் சற்று விவரித்தால், "பிறர் மனதைக் கவரும்வண்ணம் அருமையா யெழுதக்கூடியவனும், கல்வியுந் திறமையும் மிக்கவனுமாகிய யான் எவ்வாறு பிறர்க்குதவி புரியலாம்?" என்று விரியும். ஆனால் ஆலோசிக்குங்கால், "துரதிருஷ்ட வசத்தால் உபயோகமற்ற படிப்பிலும் பிரஞ்சு, சங்கீதம், இலக்கணம், பூகோளம், சட்டம் முதலியவற்றைக் கற்பதிலும், நாவல்கள் நாடகங்கள் வாசிப்பதிலும், ராணுவ தேகப்பயிற்சியிலும் இளம் பருவத்தை முழுதும் வீணாக்கிவிட்டவனும், உடலுழைப்பை மறந்துவிட்டவனும், வாழ்க்கையின் சிறந்த பருவத்தை ஆன்மாவை யழிக்கும் வினைகளிற் போக்கியவனுமாகிய யான் இப்போது செய்ய வேண்டுவதுயாது?" என்று கேட்டுக்கொண்டிருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது. "சென்றது இனி மீளாது. இதுவரை எனக்கு வேண்டிய உணவையும் உடையையும் உற்பத்திசெய்து கொடுத்துவந்தவர்களுக்கு இனி நான் செய்ய வேண்டுவது யாது?" என்று கேட்டுக் கொண்டிருக்க வேண்டும்.

இவ்வளவு கேடுகெட்ட நான் இனிப் பிறர்க்கு உபகாரமாய் வாழ்வதெப்படியெனின், முதன்முதலில் எனது உணவுடைகளை நானே ஒழுங்காய்த் தேடிக் கொள்ளவேண்டும்; பிறர் தோள்மீது சுமையாயுட்காராது கீழே இறங்கவேண்டும். எனது புத்தியினாலும் மனத்தினாலும் உதவுவதோடு நில்லாது சமயம் நேர்ந்தபொழு தெல்லாம் கைகால்களைக் கொண்டும் உழைத்து உதவவேண்டும்; எனது முழு ஆற்றலையும் பயன்படுத்திச் செல்லுமிட மெல்லாம் நல்வினையைச் செய்யவேண்டும்.

ஆகவே, நம்மையும் பிறரையும் வஞ்சிப்பதை நிறுத்துவதோடு கல்விச் செருக்கையும் செல்வச் செருக்கையும் ஒழிக்கவேண்டும். அதர்மத்தில் மூழ்கி, வாழ்க்கையைப் பிறர்க்குப் பயனறப் பாழாக்கிக் கொண்டவனும், சென்றதற்கு இரங்கி, இனி நல்வழி செல்ல விரும்பவனுமாகிய யான் என்ன செய்ய வேண்டுமென்று சிந்திக்கவேண்டும். பிறர்க்கு நன்மை செய்யுமுன், அவர்களுக்குத் தீங்கிழைப்பதை நிறுத்த வேண்டும்.

"சர்வகலாசாலையில் படித்திருக்கும் நாங்கள் என்ன செய்வது?" என்று வாலிபர்கள் கேட்கின்றனர். இவர்கள் இவ்வாறு கேட்குமுன்னரே இவர்கள் மனத்தில் ஒரு தீர்மானம் உண்டு. தாங்கள் படித்திருப்பதால் ஏதோ பெரிய உபகாரத்தைச் செய்யக்கூடியவர்களென்று இவர்கள் எண்ணுகின்றனர். தங்கள் படிப்பு நல்லதா கெட்டதா என்று இவர்கள் சிந்தித்தால், அதுபயனற்ற தென்றும், உண்மைப் படிப்பன்று என்றும் இனிப் புதிதாகத் தாங்கள் கற்கவேண்டுமென்றும் உணர்வர். அது தான் இவர்கள் செய்ய வேண்டுவது. இவர்கள், "அருமையான காலத்தை யெல்லாம் உடலையும் உள்ளத்தையுங் கெடுக்கும் வீண்படிப்பிற் போக்கிக் கையாலாகாது பிறர்க்குப் பயன்படா திருக்கும் நாம் சமூக ஊழியஞ் செய்வ தெப்படி?" என்று தங்களை வினவிக்கொள்ள வேண்டும். நமது கடமைகளுக்கு எல்லையும் முடிவுமில்லை யாயினும், முதற் கடமை உயிர்வாழ்வதற் கின்றியமையா விளைபொருள்களை உற்பத்தி செய்வதற்காக உழைப்பதேயாகும். மனிதரின் கடமையைப் பற்றிய இவ்விஷயந்தான்,

"நாம் செய்யவேண்டுவது யாது?" என்னும் கேள்விக்கு மூன்றாவது விடையாகும்.

உலகத்தில் நாம் செய்ய வேண்டிய காரியங்கள் எத்தனையோ இருப்பதால், நாம் விசேஷமாக முக்கியமாகச் செய்யவேண்டியது எது என்ற கேள்வி பிறக்கின்றது. எனது அதர்ம வாழ்க்கை யொழிந்ததும் இதற்கு விடை கிடைத்தது. நமக்கு வேண்டிய உணவையுந் துணிமணிகளையும் வேறு தேவைகளையும் நமது உழைப்பினாற் பெறுவதே நம்முடைய முதற்கடமை யென்பதிற் சிறிதும் ஐயமில்லை. இவ்வாறு உடலுழைப்பினால் நமக்கும் பிறர்க்கும் நாம் உபயோகமாயிருப்பதே முதற்கடமை என்பதிற் சற்றேனும் சந்தேகமே இல்லை.

இவ்வாறு உழைப்பதால் இயல்பாகத் தனது சரீரத்திற்கும் மனத்திற்கும் இன்றியமையாதவற்றை அடையலாம். தனக்கும் தன் குடும்பத்திற்கும் வேண்டிய உணவையும் உடையையும் இதர தேவைகளையும் சம்பாதித்துக் கொள்வதால், உடல் நலனெய்துகிறது. பிறர்க்கிவற்றைச் சம்பாதித்துக் கொடுப்பதால் ஆன்ம நலன் கிடைக்கிறது.

இன்றியமையாத இம்முதற் கடமையை நிறைவேற்றிய பின்னரே வேறெவ் வேலையைச் செய்வதும் சரியாகும். அரசாட்சி புரியினும், தேசத் தொண்டாற்றினும், வேறெவ் வேலையில் ஈடுபடினும், முதன் முதலில் மேற்கூறிய இன்றியமையாக் கடமையை நிறைவேற்றியே தீரவேண்டும். உயிரைக் காத்தலே எல்லாவற்றினும் இன்றியமையா தாதலின், எல்லாக் கடமைகளினும் முதன்மையும் முக்கியமும் பெற்றது

இதுவேயாம். மக்களைக் காத்தலும், அவர்களுக்கு உபதேசிப்பதும் அவர்கள் உயிரோடிருந்தாற்றான் சாத்தியமாகும். பிறரை நம் பொருட்டு உழைக்கவிட்டு நாம் சோம்பேறிகளா யிருத்தலால் எத்தனையோ பேர்கள் இறந்துபோகின்றனர். பிறர் உயிர் மாய, நாம் வாழ்ந்து கொண்டு உபகாரஞ் செய்யப்போவது சற்றேனும் பொருந்தாது.

இதுவே மனிதனது முதன்முதற்கடமை. வாழ்க்கையின் நியமமிது. இதை மீறுவதால் பலர் உண்ண உணவின்றியும் உடுக்க உடையின்றியும் வருந்த நேரிடுகிறது; பல ஏழைகள் இறக்க நேரிடுகிறது. தனிமையாய்த் தீவொன்றி லிருந்துகொண்டு இவ்வியற்கை நியமத்தை மீறினால், மீறுபவன் உடனே இறக்க நேரிடும். மனித சமூகத்திடையிருந்து, நமது வேலையையும் பிறர் செய்யும்படி வற்புறுத்துவதனால், பல ஏழைகள் அதிகமாய்ப் பாடுபட வேண்டி யிருக்கிறது; இதனால் நமது புத்தியும் மனச்சாக்ஷியும் மழுங்கிப் போகின்றன.

தற்காலத்தில் நம்மில் எத்தனையோ பேர்கள் இறைவனது இவ்வியற்கை நியமத்தைப் பாராது கண்ணை மூடிக்கொண்டுள்ளோம். இந்நியமத்தின்படி நடப்பது இழிவென்றும் இயற்கைக்கு மாறானதென்றும் எண்ணுகின்றோம். இதற்கு நேர்மாறாக வாழ்வதே நமக்கு இயற்கையாகி விட்டது. இந்நியமத்தின்படி வாழ வேண்டுமென்று தீர்மானித்தபின், என்னுடன் வேலை செய்ய ஏகோபித்த கருத்துடைய சிலரைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றும், என் குடும்பத்தின் சம்மதம் பெறவேண்டுமென்றும், நகர் நீங்கி நாட்டுப்

புறஞ் செல்லவேண்டுமென்றும் நினைத்தேன். நகரத்தில் என் வேலையைத் தொடங்கினால் நகைப்புக்கிடமாகுமென்றும், எனது நிலைமைக்குத் தகாத இழிவான காரியத்தைச் செய்யப் போவதுபோலும் வெட்கினேன். உடலுழைப்பை எவ்வாறு தொடங்குவதென்று தெரியாமல் விழித்தேன்.

நான் தொடங்கியது புதிதாகக் கண்டுபிடிக்கப் பட்ட காரியமல்லவென்றும், சில பொய்க் கொள்கைகளையும் அபிப்பிராயங்களையும் விட்டுத் திரும்புவதேயென்றும், இது என் வாழ்க்கையைச் சீர்திருத்திக் கொள்வதே யென்றும் உணர்ந்து சமாதானம் எய்தியதும் இத்தகைய எண்ணங்கள் மறைந்தன. இது சம்பந்தமாக எவ்வேற்பாடும் செய்ய வேண்டியதில்லை; எவருடைய சம்மதத்திற்காகக் காக்க வேண்டியதுமில்லை. எப்பக்கந் திரும்பினாலும் தங்களுக்கு வேண்டியவற்றைத் தேடிக்கொண்டு, பிறருக்கு உணவுடைகளையும் இதர சௌகரியங்களையும் சம்பாதித்துக் கொடுப்பவர்கள் இருக்கின்றனர். ஆதலின் எவ்விடத்திலும், எத்தகைய சந்தர்ப்பங்களுக் கிடையிலும் உடலுழைப்பாற் பிறர்க்குபகாரமா யிருக்கலாம். இதனால் யாதோர் இழிவுமில்லை. சோம்பிக் கிடத்தலே வெட்கித் தலைகுனியவேண்டிய விஷயம். இங்ஙனம் என் மனச் சான்றின்படி சென்று சிந்தித்ததன் இனிய பயனை முழுதுமடைந்தேன்.

முன்னர்ச் சிக்கலாகவுங் கஷ்டமாகவுந் தோன்றியவை இப்போது தெளிவாய் விளங்குகின்றன. நாம் செய்ய வேண்டுவது யாது? முதன்முதலில், நமக்குத் தேவையானவற்றை நமது சரீர உழைப்பினாலேயே

உற்பத்தி செய்து கொள்ளவேண்டும். எனக்கு வேண்டியவற்றைச் செய்து கொண்டிருந்தவர்களுக்கு இதுவெல்லாம் விபரீதமாய்த் தோன்றுமே யெனின், ஆம் முதல் ஒருவாரம் அப்படித்தானிருக்கும்; பின்னர் எல்லாம் சரியாகிவிடும்; அதன்பின் சோம்பிக் கிடத்தலே பெரும்பிழையென விளங்கும்.

இவ்வா றுழைப்பதற்கு என் கருத்தைத் தழுவுஞ் சிலரை ஒரு கூட்டமாகச் சேர்த்துக்கொள்ள வேண்டுமா? வேண்டியதே யில்லை. சோம்பலையும், என் பொருட்டுப் பிறரை வேலைவாங்குவதையும் விட்டு, தேவைகளை உடலுழைப்பினுற் பெற்றுற் போதும். காலக்கிரமத்தில் ஒவ்வொருவராக இவ்வழிச் சேர்வர்; உழைப்பாளி உழைப்பாளியுடன் இயல்பாகவே சேர்வான். இதன்பொருட்டுக் கூட்டமொன்றுஞ் சேர்க்க வேண்டுவதில்லை.

இவ்வேலையை நான் ஆரம்பித்தால் என் காலமெல்லாம் இதிலேயே சென்றுவிடுமே! பல காலமாய்ப் பழகியதும், எனக்குப் பிரியமானதும், தற்பெருமை பாராட்டிய காலத்திற் பிறர்க்கு உபயோகமென்று யான் எண்ணியதுமாகிய மூளைவேலைக்கும் படிப்பிற்கும் நேரமில்லாது போய்விடுமேயெனின் இதற்கும் எதிர்பாராத விடையொன்று தகக்கிடைத்தது. உடலுழைப்பினல் புத்திக்கூர்மை சிறந்தோங்கியது.

முன்னர்ச் சோம்பலில் வீணுகிய எட்டுமணி நேரமும், இப்போது உடல்வருந்தி யுழைக்கிறேன். இன்னும் எட்டுமணி இருக்கிறது; இதில் ஐந்துமணி நேரம்

படிக்கலாம், அல்லது எழுதலாம். மிகவிரிவா யெழுதும் சுபாவமுள்ள யான் சென்ற நாற்பது வருஷங்களாக எழுதுவதைத் தவிர வேறொன்றும் செய்ததில்லை. நான் எழுதியுள்ளது மொத்தம் முந்நூறு அச்சுப் பக்கங்களே. இந்நாற்பது வருஷங்களும் நான் உடலுழைப்பை மேற்கொண்டு, தினந்தோறும் மிகுந்து நிற்கும் ஐந்துமணி நேரமும் படிப்பதாகவும், வேலையில்லா நாட்களில் மாத்திரம் தினம் இரண்டு பக்கங்களாக எழுதுவதாகவும் வைத்துக்கொண்டாலும் பதினான்கு வருஷங்களில் அம்முந்நூறு பக்கங்களை எழுதி முடித்திருக்கலாம். சிற்சில நாட்களிற் பதினாறு பக்கங்கள்கூட எழுதியிருக்கிறேன் என்பதை இங்குக் குறிப்பிடுகிறேன். இது ஆச்சரியந்தரக் கூடியது. எனினும், இங்குக் கூறிய ஒழுங்கின்படி வேலை செய்வதாயின், ஏழு வயதுப் பையன்கூட இவ்வேலையை முடித்திருக்கலாம். ஆனால் நானோ சரீர உழைப்புடன் பதினான்கு வருஷங்களில்முடிக்கக் கூடியதை, உழைப்பின்றியும் நாற்பது வருஷங்களிற்றான் முடித்தேன். பகலும் இரவுஞ் சேர்ந்த இருபத்துநாலுமணி நேரத்தில் நாம் உறங்குவது எட்டுமணி நேரம் போக, மிகுந்துள்ள பதினாறுமணி நேரத்தில் ஐந்துமணி நேரம் மூளை வேலை செய்தால் எவ்வளவோ காரியங்களை முடித்து விடலாம். மிகுந்துள்ள பதினொருமணி நேரமும் என்ன செய்கிறோம்? உடலுழைப்பினால் மனத்தின் வேலை தடையாவதில்லை யென்பது மாத்திரமன்று; அதனால் புத்தி கூர்மைப்படுகிறது.

சரீரப் பிரயாசைப் படுவதால் மனிதர்க்குரிய இன்பங்களும், காவிய சாஸ்திர விநோதங்களும், ஒருவ

ரோடொருவர் கலந்து சம்பாஷித்தலும் தடைப்பட்டு விடுமோ எனின், ஒருகாலும் தடைப்படா தென்பேன். நான் உழவு முதலிய கடின வேலைகளில் எவ்வளவு ஈடுபட்டேனோ, அவ்வளவு எனதறிவு கூர்மைப்பட்டது; மனிதர்களுடன் நெருங்கிப் பழகவும் நேரிட்டது. இம்மகிழ்ச்சியை என் வாழ்க்கையில் இதற்குமுன் நான் அனுபவித்ததே யில்லை.

"கடலில் ஒரு சிறு துளிபோல யாரோ ஒருவன் உழைப்பை மேற்கொண்டு விடுவதால் என்ன மாறுதல் விளைந்துவிடப் போகிறது? என்னைச் சுற்றிலுமுள்ள சமுத்திரம்போன்ற உழைப்பில் நான் செய்யும் துளி போன்ற வேலை என்ன வித்தியாசத்தை உண்டுபண்ணி விடும்?" என்று உண்மையிற் பற்றில்லா மாந்தர் சிலர் என்னை வினவுகின்றனர். இதற்கும் எதிர்பாராத விடை யொன்று என் மனத்தில் தோன்றியதைக் கூறுகிறேன். உடலுழைப்பு வழக்கமாகிவிடின் சோம்பர் வாழ்க்கையின் செலவுமிக்க தேவைகள் பலவும் தேவையில்லாது போம். விசேஷ முயற்சி ஏதுமின்றியே கெட்ட பழக்கங்கள் தாமே விலகி விடும். இதற்குமுன் இரவைப் பகலாக்கி எரித்து வந்த விலையுயர்ந்த ஒளிவிளக்குகள் இப்பொழுது அனுவசியமும் அசாத்தியமுமாகி விட்டன. இப்போது படுக்க மெத்தை தேவையில்லை. எனதுணவின் தன்மையும் அளவும் முற்றிலும் மாறிவிட்டன. சுவையும் புஷ்டியும் மிகுந்த பலவுண்டிகளை அருந்திவந்த எனக்குக் கீரைக் குழம்பும் கறுப்பு ரொட்டியும் சிறிதளவு சர்க்கரையே சேர்ந்த தேநீரும் மனதிற்கு மிகவும் பிரியமானவை யாகிவிட்டன.

இவ்வுழைப்பிற் பழகப் பழகப் பிறர் கையை எதிர்பார்த் தடைந்துவந்த சுகங்களெல்லாம் வேண்டாதவை யாயின. நான் கனவிலுங் கருதமுடியாத அளவுக்கு என் வாழ்க்கை சிரமமின்றிச் சர்வ சாதாரணமாகவும் ஆடம்பரமற்றதாகவும் மாறிவிட்டது. இத்துணை நன்மைகளும் உழைப்பின் பயனாய் விளைந்தவை.

முன்னர்ப் பற்பல சுகபோகங்கள் வேண்டியிருந்ததன் காரணம் என் சோம்பர் வாழ்க்கையே. உழைக்கத் தொடங்கியதும் ஆடம்பரம் அகன்றது; சுகபோக விருப்பும் ஒழிந்தது. எனது காலம் முழுவதும் சுகமாக நல்வழியிற் செல்கிறது. வேலை செய்து களைத்துப்போனால் சற்றே இளைப்பாறுவேன்; அல்லது ஏதாவதொரு புத்தகத்தைப் படிப்பேன்; அல்லது யாருடனாவது பேசிக் கொண்டிருப்பேன். இவை யாவும் நாடகம் பார்ப்பது, சீட்டு விளையாடுவது அல்லது விருந்துண்பதினும் பன்மடங்கு இன்பகரமாயிருக்கின்றன.

ஆரோக்கியத்துடன் இருந்தாற்றானே பிறர்க்கு உதவ முடியும்? இவ்வளவு கடின வேலையைச் செய்வதால் ஆரோக்கியங் கெட்டுவிடுமோ எனினும் அப்படியுமில்லை. பிரபல வைத்தியர்கள் பலர் இவ்வயதில் நான் கடின வேலை செய்தால் ஆரோக்கியத்திற்குக் கேடுண்டாகுமென்றும், சவாரி செய்தல் முதலான இலேசான உழைப்புத்தான் நல்லதென்றும் சொல்லியிருந்தனர். ஆனால் என் அனுபவத்தில் கடின வேலைகளைச் செய்யச் செய்ய, பலமும், ஆரோக்கியமும், சந்தோஷமும், அன்பும் வளர்ந்தன.

சமாசாரப் பத்திரிகை, நாடகம், விருந்து, நாட்டியம், சீட்டாட்டம், நாவல் முதலியவை வேலையற்ற மனத்தின் பொழுதுபோக்கிற்கானவை. அறுசுவை யுண்டி, அழகிய கட்டிடங்கள், ஆடம்பரவுடை, மருந்து, மின்சார வைத்தியம் முதலியவை தேக போகத்திற்காக ஏற்பட்டவை. அளவுமீறிய உணவினு லுண்டாகும் மதத்தைச் செலவிட இத்தகைய பல வழிகளைத் தேடி அலைகிறோம். சுகாதார சாஸ்திரமும் வைத்தியமும் அளவுகடந்து விரிவதைப் பார்க்கும் போது, நீராவி யந்திரத்தின் வாய்களை யெல்லாம் அடைத்துவிட்டு அதை மேன்மேலும் உஷ்ணப் படுத்திக் கொண்டே வெடித்துப் போகாதிருக்க வேறு வழி தேடுவது போல் இருக்கிறது.

கடவுள் நமக்குக் கொடுத்திருக்கும் உறுப்புக் களைச் சரிவர உபயோகிக்க வேண்டும்; கண்ணுற் பார்க்கவேண்டும், மனத்தால் நினைக்க வேண்டும், கைகால்களைக் கொண்டு நன்குழைக்க வேண்டும் என்னும் இதுவே நான் மிகப் பாடுபட்டுச் சிந்தித்து ஆராய்ந்து அறிந்துகொண்ட உண்மை. இவ்வளவு சுலபமான விஷயத்தைத் தெரிந்து கொள்ளத்தானு இவ் வளவு பாடுபட்டேனென்று இப்பொழுது வியப் படைகிறேன். உபயோகிக்கப்படா அவயவங்கள் பாழாகிவிடும். ஈண்டு எனது நண்பரொருவருடைய குதிரைகளைப்பற்றிய செய்தியொன்று ஞாபகத்திற்கு வருகிறது. அந்நண்பர் குதிரையைப்பற்றி ஒன்றுந் தெரியாத ஒரு புது வேலையாளிடம் விற்பனையாக வேண்டிய குதிரைகளைச் சரிவரக் கவனித்துவரச் சொன்னுர். அவன் நல்ல சாதிக் குதிரைகள் சில

வற்றை லாயத்திற் கட்டிவைத்து அவைகளுக்குக் கொள்ளும் பசும் புல்லும் ஓயாது கொடுத்து வந்தான். எஜமானன் உத்தரவுப்படி நடக்கவேண்டு மென்று அவற்றை வேறெவர் வசமும் விடாது தானே கவனித்து வந்தான். தான்கூட அவற்றின்மீது ஏறிச் சவாரி செய்வதில்லை; எங்கும் நடத்திப் போவதுமில்லை. முடிவில் எல்லாக் குதிரைகளும் எதற்கும் பயன்படாதன வாயின.

நமது உடலுக்கும் உள்ளத்திற்கும் இயல்பில்லாத நிலைமையில் நாம் வாழ்ந்துகொண்டு அதுதான் சரியான தென்று நிரூபிப்பதன் பொருட்டு, நமது மன வல்ல மையை யெல்லாம் உபயோகிக்கிறோம். இதுதான் நாகரிகமாம்! ஸயன்ஸூம் கலையும் சுகத்தை விருத்தி செய்வதற்காக என்று சொல்லப்பட்ட போதிலும் உண்மையில் அவை மனிதனை அவனது சுபாவமான வேலையினின்றும் பிறழச் செய்கின்றன. சுகாதாரமும் வைத்திய சாஸ்திரமும் மனித தேகத்தின் இயற்கைத் தேவைகளையும் வேலைகளையும் மறக்கச் செய்கின்றன.

எது எப்படி யிருந்தாலும் இவ்வேமாற்றங்களுக் கும் ஓர் எல்லையுண்டு; அவ்வெல்லைக்கு நாம் வந்து விட்டோம். ஸோபஹர் முதலானவர்களுடைய நூல் கள், மனிதவாழ்க்கை உண்மையில் இத்தகையதாயின் வாழ்வதிற் சாதலே மேல் என்று சொல்கின்றன. தற்கால வைத்திய சாஸ்திரமும், வாழ்க்கை இவ்வளவு கஷ்டமுள்ள தெனில், இனிமேல் நமக்குச் சந்ததியே வேண்டா மென்று மாதர் கருத்தரிக்கா திருக்கும் உபாயங்களைத் தேடுகிறது.

"நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபட்டுப் பிழைக்கவேண்டும்; வருத்தத்துடன் குழந்தைகளைப் பெறவேண்டும்" என்று கிறிஸ்தவ வேதம் மனித வாழ்க்கையைப் பற்றிக் கூறுகிறது. பண்டாரப் என்னும் விவசாயி மேற்கூறிய உத்தம உபதேச மொழியைப் பற்றி எழுதியிருக்கிறார். அது மிகவும் பொருள் வளம் உள்ளது. எனது ஆயுட்காலத்திலேயே இரண்டு ருஷ்ய அறிவாளிகள் எனக்குச் சிறந்த வழிகாட்டிகளா யிருந்திருக்கின்றனர், இவ்விருவரும் கவிகள் அல்லர், வித்வான்களும் அல்லர், மதபோதகர்களும் அல்லர்; சூதேப், பண்டாரப் என்னும் இவ்விருவரும் உத்தம புருஷர்கள் எனலாம்.

மோலியர் என்பவர் எழுதியுள்ள நாடகமொன்றில், ஒருவன் "நாம் எல்லாவற்றையும் மாற்றிவிட்டோம். பித்தப்பை கூட நமது இடப் பக்கத்திற்கு வந்து விட்டது" என்று கூறுகிறான். மனிதன் உழைக்க வேண்டியதே யில்லை. வேலை யனைத்தையும் இயந்திரங்கள் செய்துவிடும். மாதர் கருவுறுதிருக்கும் வழிகளை வைத்திய சாஸ்திரம் கற்பிக்குமாதலின் அவர்களுக்குப் பிள்ளை பெறுந் தொல்லையில்லை. உலகத்தின் மக்கள் தொகை இப்பொழுதே மிகுந்துவிட்டது; இன்னுமா பெருகவேண்டும்?

கிராபிவென்ஸ்கி ஜில்லாவில்* ஒரு முரட்டுக் குடியானவன் இருந்தான். யுத்தகாலத்தில் அவன் ஓர் உணவுப் பொருட்சாலைக்காக மாமிசம் வாங்கிவந்தான்.

---

* டால்ஸ்டாயின் கிராமமாகிய யஸ்னயா பால்யானு (Yasnaya Polyana) இந்த ஜில்லாவிலேயே இருக்கிறது.

அக்காலத்தில் அவன் அப் பொருட்சாலையிலுள்ள சுகஜீவிகளான சிலரைப் பார்த்துப் புத்தி தடுமாறித் தானும் அவர்களைப்போலவே மகாராஜாவின் சம்பளம் பெற்றுச் சுகமே வாழ வேண்டுமென்று பேரவாக் கொண்டான். அவன் *"மாட்சிமை மிக்க போரிளவரசன் பிளாக்கின் - யுத்த சாமக்கிரி யாவும் சேகரித்து வைப்போன்" என்னும் நீளமான பெயரைத் தனக்குச் சூட்டிக்கொண்டான். யுத்தகாலத்தில் தான் செய்த பேருதவிக்கீடாக அரசர் பெருமான் தனக்குத் திரவியமும், உடைகளும், குதிரைகளும், வண்டிகளும், வேலையாட்களுந் தரவேண்டுமென்கிறான். யாராவது அவனைப் பார்த்து, "இந்த வேலையைச் சற்றுச் செய்வீர்களா?" என்று கேட்டால் அவன், "சரி சரி, இதையெல்லாம் சாதாரணக் குடியானவர்கள் செய்வார்கள்" என்கிறான். குடியானவர்களுக்குப் போதிய நேரமில்லையே யெனின், அதற்கவன், "சரி! இப்பொழுதுதான் இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அவர்களது வேலை யெல்லாம் சுலபமாகி விட்டதே! இன்னுமா அவர்களுக்கு வேலைக் கஷ்டம்?" என்று கேட்கிறான். "நீ தான் என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்று வினவினால் அவன், "சும்மா, காலத்தைச் சுகமாய்த் தள்ளிக் கொண்டிருக்கிறேன்" என்கிறான்.

இவனை நான் ஒரு நிலைக் கண்ணாடியாகக்கொண்டேன்; என்னையும் என் வகுப்பினரையும் இக் கண்ணாடியில் தெளிவாய் நான் காண்கிறேன். மேல் வகுப்

---

* (The most serene Marshal Prince Blokhin, Purveyor of War stores of all kinds.)

பினரென்று கூறிக் கொள்ளும் நாம் செல்வத்திற் புரண்டு, காலத்தை வீணே போக்கிக்கொண்டு, குடியானவர்கள் நமது வேலைகளைச் செய்வார்களென்று சும்மா இருக்கிறோம். இயந்திரங்கள் கண்டுபிடித்த பின் குடியானவர்களின் வேலை எவ்வளவோ எளிதாகி விட்டதென்றுங் கூறுகிறோம்.

என் வகுப்பினரின் மூடக் கொள்கை இதுவே :— "நாம் செய்ய வேண்டுவது யாது?" என்று ஆராயு முன்னரே, உள்ளத்தில், உடல் வருந்தியுழைப்பது முற்றிலும் அனாவசியம் என்று தீர்மானங் கொள்கிறோம். விவேகமுள்ள எம் மனிதனும் மேற்கூறிய நிலையில் இருத்தல் கூடாது. முதலாவது, நாம் உபயோகிக்கும் ஒவ்வொரு விளைபொருளும், செயற்பொருளும் உழைப்பாலாகியவை. இரண்டாவது, ஆரோக்கியமுள்ள எவனுக்கும் காலையில்எழுந்து உணவு உட்கொண்டதும் கைகால்களை உபயோகித்து நன்கு உழைக்கவேண்டுமென்று இயல்பாகவே தோன்றுகிறது. வேலை செய்யக் கூடாதென்னும் எண்ணம் ஒன்றே இதற்குத் தடையாகும். ஒரு சீமாட்டி தன் விருந்தாளியை நோக்கி, "அம்மா! சற்றே நில்லுங்கள்! தாங்களே மெய் வருந்தக் கதவைத் திறக்க வேண்டாம். வேலையாளைக் கூப்பிடுகிறேன்" என்று கூறினாள். இச் சீமாட்டியைப் போல், வேலை செய்வது இழிவெனக் கருதுவோரே என்ன வேலை செய்வதென்றறியாது தயங்குவர்.

தனக்கும் பிறர்க்கும் பயனாகும் பணிகள் கணக்கின்றியுள. வேலை தேடிப் பிடிப்பது கஷ்டமல்ல;

தப்புக் கொள்கையைக் கைவிடுவதே கஷ்டமாயிருக்கிறது. உண்டு உறங்கிச் சுகமே காலந்தள்ள வேண்டுமென்னும் எண்ணத்தை ஒழித்தல் வேண்டும்.

நமதுடல் சோறிட்டு வேலை வாங்குதற்குரிய இயந்திர மென்றும், வயிறாரவுண்டு உழைக்காமற் சோம்பியிருத்தல் மிகஇழிவென்றும், அதனாற் பெருங் கேடு விளையுமென்றும் ஒவ்வொருவரும் உணரவேண்டும். சாப்பிட்டுவிட்டு உழைக்காதிருத்தல் வீடுகளைத் தீயிட்டுக் கொளுத்துவது போன்ற பெரும் பாதகமாகும்.

இத்தகைய மனப்பான்மை யிருந்தால், சந்தோஷத்துடன் வேண்டிய வேலைகளைச் செய்து நமது தேவைகளை நாமே உற்பத்தி செய்துகொள்ளலாம். இவ்விஷயத்தை என் மனத்தில் இவ்வாறு பாகுபாடு செய்துகொண்டிருக்கிறேன் :—நமது சாப்பாட்டின் நேரங்களால், நாள் நான்கு பாகங்களாகப் பிரிபடுகின்றது. காலை யுணவுக்கு முந்திய பாகம், (காலை யுணவின் பின்) பகலுணவுக்கு முந்திய பாகம், (பகற் போஜனத்தின் பின்) பிற்பகல் சிற்றுண்டிக்கு முந்தியபாகம், (அதற்குப் பின்) இரவுமட்டு முள்ள பாகம் என்பவையே அந்நான்கு பிரிவுகள். மனிதன் செய்ய வேண்டிய வேலையும் நாலு வகை. முதலாவது வியர்வை யுண்டாகுங் கடினவுழைப்பு; இது நமது கைகால்களாலும் தோள்வலியாலும் செய்யக் கூடியது. இரண்டாவது, விரல்கள் கணுக்கை முதலியவற்றாற் செய்யக்கூடிய அருமையான சிற்பவேலை, நூல்நூற்றல், நெசவு முதலியவை. மூன்றாவது மூளை

யினாலும் புத்திக் கூர்மையினாலுஞ் செய்யக் கூடிய வேலைகள். நான்காவது அன்யோன்ய சம்பாஷணை.

மனிதர் உபயோகித்துவரும் பொருள்களையும் நான்கு விதங்களாய்ப் பிரிக்கலாம். கடின உழைப் பின் பயனாக, ரொட்டி (தானியங்கள்), கட்டிடங்கள், கிணறுகள், பாலங்கள் முதலிய உண்டாகின்றன. இரண்டாவது கைத்திறனால் துணிமணிகள், செருப்பு முதலியவை செய்யப்படுகின்றன. மூன்றாவது மனோ தர்மத்தின் விளைவான ஸயன்ஸும் கலையும். நான்கா வது, மனிதர்கள் ஒருவரோடொருவர் நெருங்கிப் பழகிச் சம்பாஷித்தலால் சமூக வாழ்வு ஏற்படுகிறது.

இவ்வாறு, ஒரு நாளை நான்கு பாகங்களாகப் பிரித்து, மனிதர்க்கு இன்றியமையா நான்கு வேலைகளை யுஞ் செய்ய வேண்டுமென்றும், இதுவே சிறந்த ஏற்பாடென்றும் முடிவுசெய்தேன். தினந்தோறும், முதலில் கடினமாகிய உடலுழைப்பையும், பின்னர் மனத்தைப் பயன்படுத்தி ஆலோசித்தல், படித்தல், எழுதுதல் முதலியவற்றையுஞ் செய்ய வேண்டும். பின்னர் கைத்தொழில் ஏதாவது செய்யவேண்டும். முடிவில் நம் சகோதரர்களுடன் சம்பாஷிக்க வேண்டும். இத்தகைய ஏற்பாட்டை அனுசரிக்க முடியுமாயின் உத்தமம். முடியாவிடில், ஒரு வேலையையாவது முக்கியமாய்க் கவனிக்க வேண்டும்; அதாவது உடலாற் பாடுபட்டுழைப்பதை மறக்கக் கூடாது. நாள் முழுவதையும் உபயோகமான வழியிற் செலுத்தவேண்டும்.

நாமிவ்வாறு வாழ்ந்து வருவதாலேயே வேலைப் பிரிவைப் பற்றிய ஒழுங்கற்ற பொய் யெண்ணங்கள்

ஒழிந்து, தற்சமயம் மனித சமூகத்திலுள்ள பல்வகை இன்னல்கள் தீரும். உதாரணமாக, எனதாயுளில் இதுவரை மூளைக்கே நான் வேலை கொடுத்துவந்திருக்கிறேன். வேலைப்பிரிவென்ற பெயர் சொல்லி, எழுத்து வேலையை மட்டுஞ் செய்துவந்தேன். எனக்கு வேண்டிய தேவைகளைச் சம்பாதிக்கும் வேலையைப் பிறர்பாற் சுமத்தியிருந்தேன். முடிவிலிது துன்பத்தில் முடிந்தது.

முதலாவது, நான் எழுத்துவேலை மாத்திரம் செய்துவந்ததனால் உலகத்தின் பல்வேறு விஷயங்களை அறியாத என் பார்வை குறுகிய ஓர் எல்லைக்கு மேலே போகவில்லை. சாதாரண மனிதனுக்குத் தெரியும் பல விஷயங்கள் எனக்குத் தெரியா திருந்தன. இரண்டாவது, எழுத உட்காரும்போது அதற்கு வேண்டிய தூண்டுதல் உள்ளே இல்லாதுபோயிற்று. நான் எழுதுவதையும் என் அபிப்பிராயங்களையும் விரும்பியவர் பலர் உண்மையி லிருந்திருக்க மாட்டார்கள் எனினும், மாதாந்தரப் பத்திரிகைகளில் என்பெயர் காணப்பட்டால், அவைகளுக்கு நல்ல லாபம் கிடைத்து வந்தது. என்னாலான மட்டும் நயமாய் எழுத முயன்றேன். சில சமயங்களில் நான் எழுதுவது எனக்குத் திருப்தியளிக்காததோடு நில்லாது, வெறுப்பையும் விளைவிக்கும்.

இப்பொழுதோ, உடலுழைப்பின் இன்றியமையாமையை உணர்ந்த பின்னர், என் காலம் நல்லபடி செல்கிறது. கர்வமில்லாமலும், உபயோகமாகவும் சந்தோஷமாகவும், ஆத்மார்த்தமாகவும் எனது காலம்

செல்லுகிறது. எனதுள்ளத்தில் பிறர்நல விழைவினல் ஏதாவது எழுதவேண்டுமென்று தோன்றினல் மட்டும் எழுதுகிறேன். இவ்வாறு செய்வதனுல் நான் எழுதுபவை என் மனத்திற்குப் பிரியமாகவும் உபயோகமாகவுமிருக்கின்றன. ஆகவே, நான் உடலால் உழைப்பது எனது படிப்பிற்கும் எழுத்துக்கும் இடையூருகவில்லை; பயனற்ற அனுவசிய நூல்களெழுதும் வழக்கந் தான் தொலைந்தது.

பறவையென்று ஒன்றிருந்தால் அது பறக்க வேண்டும், நடக்க வேண்டும், கொத்த வேண்டும். இவ்வளவையும் செய்தாற்முன் அது திருப்தியுடனும் சந்தோஷத்துடனும் இருக்க முடியும். அப்போது தான் அது பறவையுமாகும். அவ்வாறே, மனிதனென்றிருந்தால், அவன் நடக்கவேண்டும்; உழைக்க வேண்டும்; விரல்களைக் கொண்டு கைத்தொழில் செய்ய வேண்டும்; கண், காது, மூக்கு, நாக்கு, மூளை முதலியவற்றை உபயோகிக்க வேண்டும். இவ்வளவையுஞ் செய்பவனே மனிதனுவான்; இவ்வளவையுஞ் செய்தாற்முன் அவனுக்குப் பூரணதிருப்தி உண்டாகும்.

மனிதன் எப்பொழுதும் பாடுபட்டுழைக்க வேண்டும். தனதுள்ளத்தினின்று பிறர்க்கு உபயோகமான பணி வேறெதுவாயினும் செய்ய விரும்பிப் பிறரும் அதை விரும்பினல், அப்பணியிற் சிலகாலம் ஈடுபடவேண்டியதுதான். ஆனல், அது முடிந்ததும் மீண்டும் உழைப்பை மேற்கொள்ளல் வேண்டும்.

உழைப்பை ஒரு சாபமென்று கருதுபவரே தங்களை அதனின்றும் விடுவித்துக்கொண்டு, பிறரைத்

தங்கள் வேலையையுஞ் சேர்த்துச் செய்யும்படி வற்புறுத்துகின்றனர். இதுதான் வேலைப் பிரிவாம்! வேலைப் பிரிவைப் பற்றிய தப்பெண்ணம் நம்முள் வலுத்துவிட்டதால், செருப்புத் தைப்பவனும், இயந்திரம் ஓட்டுபவனும், சங்கீத வித்துவானும், எழுத்து வேலைக்காரனும் வயலிற் சென்றுழைப்பதைக் கைவிட்டிருப்பதே மேலென்றிருக்கின்றனர். பிறரை அதிக வேலை செய்யுமாறு வற்புறுத்தாமலும், சோம்பரைச் சுகமென்றெண்ணாதும் இருக்கும் யாரும் உடலுழைப்பை விலக்கி வேறு வேலைகளில் ஈடுபடார். மனிதர்க்கு இயல்பாகிய இவ்வுழைப்பு நீங்கி வேறு விசேஷ வேலைகளில் முனைவதாயின், அது பலர்நன்மையை உத்தேசித்ததொரு தியாகமாயிருக்க வேண்டும்.

வயல்களிலுள்ள மகிழ்ச்சிதரும் வேலையை விட்டுச் செருப்புத் தைக்குந் தொழிலை ஒருவன் மேற்கொண்டால் அதை ஒரு தியாகமாகக் கருதிச் செய்ய வேண்டும். பிறரினும் தனக்கு அத்தொழிலிலுள்ள தேர்ச்சியாலும், பிறருக்கு அது தேவையாகவும் சம்மதமாகவு மிருப்பதாலுமே வேறு வேலையில் ஒருவன் ஈடுபடலாம். ஆனால், அவன் அதை ஒரு வேலைப் பிரிவென்று கருதி ஆயுள் முழுதும் இன்பந்தரும் பயிர்த் தொழிலைவிட்டு நீங்கிவிடக்கூடாது. எத்தொழிலைச் செய்பவரும் மேற்கூறிய நியமத்தையே அனுசரிக்க வேண்டும்.

எஜமானன் தன் காரியஸ்தனுக்கு உடலுழைப் பாலாகும் வேலை யொன்றை யளித்தாலும், அரசாங்கம் ஒருமந்திரியைத் தீவாந்தரம் அனுப்பிவிட்டாலும்,

அவற்றை நாம் பெரிய துர்ப்பாக்கியமாகக் கருது கிறோம். உண்மையில் அதனால் அவர்களுக்கு நன்மையே விளைகிறது. சரீரவுழைப்பினால் மனத்திற்கு அமைதியும் மகிழ்ச்சியும் உண்டாகும்.

இயற்கை நியமத்தைப் பின்பற்றும் சமூகத்தின் நிலைமையே வேறு மாதிரியாயிருக்கும். தங்கள் தேவைகளைத் தாமே உற்பத்தி செய்துகொள்ளும் ஒரு சமூகத்தாரைப்பற்றி எனக்குத் தெரியும். அவர்களில் ஒருவர் மற்றவரினும் படிப்பாளியும் அறிவாளியுமாதலால், அவர் பகல்முழுதும் சிரமப்பட்டுப் படித்து அதன் விஷயங்களை மாலையில் மற்றவர்க்கு எடுத்துரைப்பார். ஆனால், இவ்வேலையையே செய்துவந்ததனால் அவரது ஆரோக்கியம் கெடவே, எல்லோருடைய வேண்டுகோளுக்கும் இணங்கி மீண்டும் அவர் நிலங்களில் வேலைசெய்யத் தொடங்கினர்.

எல்லாவற்றினும் முக்கியமானதும் முதன்மையானதும் உடல்வருந்தி யுழைப்பதேயாகும். உழைப்பென்றால் விவசாய வேலை மாத்திரமன்று; கடின வேலைகள் அனைத்துமாம். உழைப்பில் இன்பமுளது. சிலசமயங்களில் இவ்வின்பத்தைத் தியாகம் செய்து, நமக்கு விசேஷப் பயிற்சியுள்ளதும், பிறர்க்கு அவசியமும் பிறர் விரும்புவதுமான வேலைகளில் நாம் ஈடுபடலாம். இவ்வெண்ணம் பரவினாற்றான் உழைப்பைச் சாபமென்று கருதுவது ஒழியும். நேருக்குநேர் அவசியமாகவும் பயனுள்ளதாகவு மிருக்கிற உழவு முதலிய வேலைகளிலோ, அல்லது பிறர்நலன் கருதி, இவ்

வுழைப்பின் இன்பத்தை நீங்கி, விசேஷ நன்மை பயப் பதும் இதனினும் சிரமமானதுமாகிய வேறு வேலை களிலோ நாம் ஈடுபட்டுழைக்க வேண்டும்.

ஆனால், வேலைப் பிரிவினால் காரியங்கள் எளிதாக நிறைவேறுகின்றனவென்றும், ஒருவன் ஒரே வேலை யை, உதாரணமாகச் செருப்புத் தைப்பதையே, கவ னித்து வந்தால் விரைவில் அத்தொழிலில் தேர்ச்சி பெற்று அதிகவேலை செய்யக்கூடுமென்றும் சொல்லு கிறார்கள். சிலர் வாழ்நாள் முழுதும் குண்டூசியே செய்து கொண்டிருக்கிறார்கள். நமது நோக்கம் அள வற்ற செருப்புகளையும் குன்டூசிகளையுஞ் செய்வதாயி ருப்பின் இவ்வாதம் சரியே. மனித சமூகம் சுகமாக வும் சந்தோஷமாகவும் வாழவேண்டுமென்பதே நமது நோக்கமாதலின் இவ்வாதம் நிற்காது. உயிர் வாழ்வதி லேயே மனிதர்களின் சுகம் உளது. உயிருக்கா தாரம் உழைப்பு.

மிதமிஞ்சிய ஓயா வுழைப்பினால் வருந்தும் மாந்தர் சுகமுறல் எங்ஙனம்? பொது நன்மையைக் கருதாது சிலர் மட்டும் சுகமாய் வாழவேண்டுமெனில், அச் சிலர் மற்றவர்களைத் தின்றுவிடுவதே சிறந்த வழி.

எனது உடலுக்கு வேண்டிய உணவையுந் துணி யையும் வேறு தேவைகளையும், புத்தி மனச்சாக்ஷி களின் திருப்தியையும் நான் கோருகிறேன். ஆகவே பிறர்க்கும் இவை யாவும் வேண்டும்.

நானும், 'கிராபிவென்ஸ்கி' பைத்தியக்காரனும் ஒரே தப்பிதத்தைச் செய்தோம். சிலர் தாங்கள் விரும்பியவனைத்தையும் அனுபவித்துக்கொண்டு ஒன்

றையும் உற்பத்தி செய்யாது வாழ்வதென்றும், மற்றவர்கள் பாடுபட்டு உழைப்பதென்றும் நாங்களிருவரும் எண்ணினோம்.

முன்னே கூறியதுபோல் நாள் நான்கு பாகங்களாய்ப் பிரிவது போன்றே மாந்தர்க்கும் நால்வகை இன்றியமையாத வேலைகளுள ; அவற்றை ஒன்றன்பின் ஒன்றாய்ச் செய்வதால் அலுப்புண்டாகாமற் சந்தோஷமாகவும் உபயோகமாகவும் வாழலா மென்று உறுதி கொண்டேன்.

ஆகவே, "நாம் செய்யவேண்டுவது யாது?" என்ற கேள்விக்கு யான் ஆலோசித்துச் செய்த முடிவுகளாகிய விடைகளைச் சேர்ந்தாற் போல் சொல்லுகிறேன் :—

முதலாவது, நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வது கூடாது. நமது மனச்சான்று தருமமென்று காண்பிக்கும் மார்க்கத்தினின்று நாம் எவ்வளவு விலகியிருப்பினும், உண்மையைக் கண்டு பிரமித்துப் பயந்து விடாமல் சென்றவழி திரும்பவேண்டும்.

இரண்டாவது, நான் தருமவானென்னும் எண்ணத்தையும், மற்றவர்களினும் மேலானவன், சிறந்தவன் என்னும் எண்ணங்களையும் ஒழித்தல் வேண்டும். அத்தகைய செருக்கு உறின் அதைத் தாழ்மையுடன் ஒப்புக்கொள்ள வேண்டும்.

மூன்றாவது, எனதுயிரையும் பிறருயிரையுங் காப்பதற்கு இன்றியமையாததும், சாசுவதமுமாகிய உழைப்புநியமத்தைப் பின்பற்றி வாழவேண்டும்.

---

# அத்தியாயம் 38

எனது சொந்த விஷயத்தைப் பற்றிச் சொல்லி யாகி விட்டது. பொதுவாக அனைவரைப் பற்றியுங் கூறுது நிறுத்திக்கொள்ள முடியாது. எனது முடிவு சரியா வென்றும் பலவிதமாக ஆராய்வோம்.

என் வகுப்பினரிற் பலர் என்போல் ஆகவேண்டுவது ஏனென்றும், சிலராகிலும் அவ்வாறு மாறுவதால் என்ன விளையுமென்றும் சொல்ல விரும்புகிறேன். என் வகுப்பைச் சேர்ந்த பெரியவர்கள் இவ்விஷயத்தை நன்காராய்ந்து நடந்தால், சுகப் பிரியர்களாகிய வாலிபர்களும் தங்கள் வாழ்க்கையினால் நாளுக்கு நாள் துன்பமே வளர்கிறதென்பதை யுணர்ந்து திருந்துவர். சார்பின்றி நாடுந் தன்மையுள்ளவர்கள் தங்கள் வாழ்க்கையின் கொடுமையை யுணர்ந்து திடுக்கிடுவர். பயந்த சுபாவமுள்ளவர்கள் இதைக்கண்டு நடுக்கமுறுவர்.

நமது வாழ்க்கையின் கொடிய துன்பத்தை நினைமின்! நாம் எவ்வளவு பணக்காரர்களாயிருந்தாலும், ஸயன்ஸாலும் கலையாலும் வாழ்க்கையை இன்புறுத்திக்கொள்ள முயன்றாலும், நாடோறும் நாம் பலவீனர்களாகவும் ஆரோக்கியம் அற்றவர்களாகவும் குன்றிவருகிறோம். வாழ்க்கைத் துயர்கள் மலிகின்றன. ஒவ்வொரு நிமிஷமும் தற்கொலையும், பிறவாக் குழந்தைக்கு நாம் அழைக்கும் தீங்குகளும் அதிகமாகின்றன. ஆண்டுதோறும் புதிதாய்ப் பிறக்கும் குழந்தைகள் பலங்குன்றி வருகின்றன. நமது வாழ்க்கை ஆண்டிற்காண்டு பொறுக்கொணாததாகி

வருகிறது. பற்பல போகங்களாலும், வைத்திய முறைகளாலும், பொய்ப்பல், பொய்ம்மயிர் முதலிய வற்ருலும் நமக்கு எவ்வித நலனும் உண்டாகவில்லை யென்பது தெளிவு.

தினசரிப் பத்திரிகைகளில் பணக்காரர்களுக்கா கச் செய்யப்பட்ட ஜீரணகாரி சூரணங்களைப்பற்றி "ஏழைகளின் சுகம்" என்ற தலைப்புடன் விளம்பரங் கள் காணப்படுகின்றன. அதாவது, ஏழைகளுக்கே நல்ல ஜீரணசக்தி யிருக்கிறதென்றும், பணக்காரருக்கு இதுபோன்ற மருந்துகளின் உதவி வேண்டியிருக்கிற தென்றும் தெரிகிறது. இத்தகைய நமது நிலைமையை எந்தத் தூளினலும், வேறு சௌகரியத்தினலும் மாற் றிக்கொள்வது அசாத்தியம். நாம் புது வாழ்வு தொடங்க வேண்டும்.

நமது வாழ்க்கை மனச்சாக்ஷிக்கு நேர்விரோத மாயிருக்கிறது. ஏழைகளுக்கு நாம் இழைக்கும் தீங் கையும் அபகாரத்தையும் என்ன கூறி மறைக்க முயன் ருலும் அவ்வாதங்கள் யாவும் உண்மையின் முன்நிற்க மாட்டா. உயிர் வாழ்க்கைக்குரிய தேவைகளின்மை யாலும், அதிக வேலையினலும் நம்மைச் சுற்றியுள்ள பலர் மடிந்துவருகின்றனர். பிறருழைப்பாற் கிடைக் கும் உணவு துணி முதலியவற்றை உபயோகித்து நாம் இன்புறுகிருேம். நம் வகுப்பினரின் மனச்சான்று எத்துணை மந்தமாயிருப்பினும் அதை அறவே அமுக்கி விடுதல் அசாத்தியம். நம் சகோதரர்கள் உயிரைக் கொடுத்துப் பற்பல இன்னல்களுக்கு ஆளாகி உற்பத்தி செய்துதருபவைகளை அனுபவிப்பது நஞ்சுண்பதற்கு நிகராம். ஸயன்ஸினலும் கலையினலும் பிறர்க்கு

நலன் புரிவதாய்க் கூறிவரும் நாம் இவ்விஷயத்தை நன்குணர வேண்டும்.

இத்தகைய கொடுமைகளைச் சரியென்று சாதித்த பண்டைக்காரணங்கள் யாவும் விழுந்துபோயின. இனி, ஸயன்ஸுக்காகவே ஸயன்ஸ், கலைக்காகவே கலை என்னும் வார்த்தைகளைக் கொண்டு அவற்றை மறைக்க முடியாது.

ஸயன்ஸும் கலையும் நாகரிக வளர்ச்சிக்குக் காரணமா யிருக்கின்றன வென்னுங் காரணம் சாதாரணப் பகுத்தறிவுக்கு முன்புகூட நிற்கமுடியாது. நமது மனச்சாக்ஷியைப் புதுப்புதுக் காரணங்களைக் காட்டி அமுக்கக்கூடாது. வாழ்க்கை மாறினாற்றான் மனச்சாக்ஷிக்குச் சமாதான முண்டாகும்.

நாம் எம்மனிதர்களைக் கொடுமை செய்து வருத்துகின்றோமோ அவர்களையே வேறுவிதங்களிற் சந்தோஷப்படுத்தி விடலாம் என்றெண்ணி, அச் சாதாரண உழைப்பாளிகளை ஏமாற்றுதல், பலாத்காரம், புகழ்ச்சி முதலியவற்றால் எவ்வளவுதான் சமாதானப் படுத்த முயன்றாலும், திடீரென ஒருநாள் அவர்களுடைய கோபாவேசம் சமுத்திரம்போற் கொந்தளித்துப் பொங்கிவிடும். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மணியும் இவ்வதிருப்தி வளர்ந்துவருகிறது. இவர்களுடைய கோபமாகிய அலைபட்ட கடலிலே, கர்ச்சிக்கின்ற கடலிலே, நாம் அனைவரும் நசிக்கப்போகிறோம்.

தொழிலாளிகளின் புரட்சியும் கலகமும், அதனால் விளையும் அழிவும் கொலைகளும் சென்ற முப்பது ஆண்டுகளாகவே நம்மை அச்சுறுத்திவருகின்றன.

பற்பல உபாயங்களால் அக் கலகவுணர்ச்சியை நாம் தள்ளிவைத்து வந்திருக்கிறோமே யன்றிச் சாந்தப் படுத்தவில்லை. சரேலென ஒருநாள் கலகந் தொடங் கப் போகிறது.

ஐரோப்பாவின் நிலைமை இத்தகையது; ருஷ்யா வின் நிலைமையும் இவ்வாறே. நம்மால் இதைத் தடுக்க முடியாது. தங்களை நசுக்கும் வகுப்பினர் மீது, ஜார் அரசர் ஒருவர் நீங்கலாக, மக்களுக்கு வெறுப் பிருந்து வருகிறது; நம்மிடம் அவமதிப்புண்டா யிருக் கிறது; பகை மணிக்கு மணி வளர்ந்துவருகிறது.

சென்ற மூன்றுநான்கு வருஷங்களாக ருஷ்யா வில் பொருள்நிறைந்ததொரு சொல் பரவிவருகிறது. மக்ககள் தெருக்களில் நம்மைப் 'புல்லுருவி' யென்று தூற்றுகின்றனர். கொடுமை யிழைக்கப்பட்ட மக் களின் பகையும் அவமதிப்பும் நாளுக்குநாள் வளர, பணக்காரரின் தேகபலமும் தர்மபலமும் குன்றி வருகின்றன. பொய்யும் ஏமாற்றமும் தொலைந்து வருகின்றன. தங்கள் வாழ்க்கையைச் சீர்திருத்திக் கொள்ளாதவர்களும் அதில் விருப்ப மில்லாதவர்களும், "பெரும்பாலும் நமது காலத்தில் இக்கலகம் கிளம்பி விடாது. பின்னால் வருபவர்கள் எப்படியேனுந் தொலைந்து போகட்டும்" என்று வேண்டுமாயின் திருப்தி கொள்ளலாம். பணக்காரக் குருடர்கள் பெரும்பான்மையோர் இவ்விதமே எண்ணுகின்றனர். எது எப்படியிருப்பினும் அபாயம் அதிகரித்துவரு கிறது; பயங்கரமான கலகம் நெருங்கி வருகிறது.

பணக்காரர்கள் தங்கள் வாழ்க்கையைச் சீர்ப் படுத்திக்கொள்ள வேண்டுமென்பதற்கு மூன்று கார

ணங்கள் சொல்கிறேன்: முதலாவது, தன் நலனையும் தனது குடும்பத்தின் நலனையும் நாடுபவன் தற்போதைய நிலைமையில் திருப்திகொள்ளவே முடியாது. இரண்டாவது, நமது தற்போதைய நிலைமையில் மனச்சாக்ஷிக்குத் திருப்திகரமாக நடப்பது அசாத்திய மாகிவிட்டது. மூன்ருவது, நமது உயிருக்கே அபாயத்தை விளைவிக்கக்கூடிய கலகமொன்று நாடோறும் நெருங்கிவருகிறது. இக்கலக வுணர்ச்சியை வேறு எவ்வுபாயத்தாலும் தணிக்கமுடியாது. இம்மூன்று காரணங்களினுலும் பணக்காரர் தங்கள் வாழ்க்கையைச் செம்மைப் படுத்திக்கொள்ள வேண்டும். அதாவது, நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதை நிறுத்தி, நமது பிழைகளையும் வீண் பெருமையையுங் குறித்து இரங்கி, உழைப்பின் மேன்மையை யுணர்ந்து, சந்தோஷத்துடன் உழைக்க ஆரம்பிக்கவேண்டும்.

இதற்குச் சிலர், "நான் ஐந்து, எட்டு அல்லது பத்துமணி நேரம் உழைத்து விடுவதால் என்ன நடந்து விடப் போகிறது? என்னிடமுள்ள பணத்திற்காக ஆயிரம் பேர்கள் இவ்வேலைகளை என் பொருட்டுச் செய்ய ஆயத்தமா யிருக்கின்றனரே!" என்று கேட்கின்றனர்.

உழைப்பின் முதலாவது நன்மை யாதெனில், நாம் புத்துயிர் பெற்று ஆரோக்கியசாலிகளும், சாந்த சொரூபிகளும், அன்பு வடிவினர்களும் ஆவோம்; உண்மையான வாழ்வு இதுவென நமக்கு நனி விளங்கும். இரண்டாவதாக, மனச்சாக்ஷியென்று ஒன்று நமக்கிருப்பது உண்மையென ஒப்புக்கொண்டால், அதற்குத் திருப்தியும் சந்தோஷமும் உண்டாகும்;

முன்னர், நம் பொருட்டுப் பிறர்படுந் துன்பங்களைக் கண்டு ஓயாது வெந்துகொண்டிருந்த நெஞ்சத்தில், இப்போது நாமும் அவர்களுடைய வேலையைப் பங்கிட்டுக் கொண்டிருக்கிறோமென்றும், நமக்கும் பிறர்க்கும் ஜீவாதாரமான உழைப்பில் நாமும் அனுதினமும் ஈடுபடுகிறோமென்றும் மகிழ்ச்சியுண்டாகும்; பிறர்க்கு உபயோகமற்றிருந்ததனால் இதற்குமுன் இருந்த பாப உணர்ச்சியும் தாபமும் நீங்கும். மூன்றாவது, நாம் செய்யும் தீவினைகளுக்குப் பழிக்குப் பழி வாங்குங் காலம் வந்துவிடுமோ என்று அஞ்சாமல் கொடுமையில் ஆழ்த்தப்பட்டவர்களின் துவேஷத்தையுங் குறைக்கலாம்.

ஆனால், சிலர், "என்ன! அரிய பெரிய சாஸ்திரங்களையும், தேசீய ராஜீய சமூக வாழ்வின் தத்துவங்களையும் ஆராய்பவர்களும், மந்திரிகளாகவும் வித்துவான்களாகவும் கலைஞானிகளாகவும் விளங்கும் உயர்நிலையில் இருப்பவர்களும், பதினைந்து நிமிஷ நேரத்தைக் கூடப் பொன்னேபோற் போற்றுபவர்களுமாகிய நாமா செருப்பு துடைப்பது, உருளைக் கிழங்கு பயிரிடுவது, துணி துவைப்பது முதலான வேலைகளைச் செய்வது? நமது வீட்டு வேலைக்காரர்களும், மற்றும் ஆயிரக்கணக்கான சாதாரண மனிதர்களும் செய்யக் கூடிய வேலையையா நாம் செய்வது?" என்று வினவுகின்றனர்.

நான் ஒரு கேள்வி கேட்கிறேன். "அப்படியாயின் நமது உடையைநாமாக ஏன் உடுக்கவேண்டும்? நமது முகத்தை நாமாக ஏன் கழுவிக்கொள்ள வேண்டும்? தலைமயிரை நாமாகஏன் சீவிக்கொள்ளவேண்டும்?

நாமாகவே ஏன் நடப்பது? மாதர்களுக்குக் குரிச்சி களை நாமாக ஏன் எடுத்துப்போடுவது? கதவை நாமாக ஏன் மூடித் திறப்பது? சிநேகிதர்களை நாமாக ஏன் வண்டியிலேற்றி விடுவது? முற்காலத்தில் அடிமைகள் செய்துவந்த பல வேலைகளை இப்பொழுது நாமாக ஏன் செய்கிறோம்?

இவை நாமே செய்யக்கூடியவை, இவற்றைச் செய்வதால் இழிவொன்றுமில்லை, இவை நமது கடமை என்பதனாலேயே இவ்வேலைகளை நாம் செய்கிறோம். இக்காரணம் பற்றியே தேக உழைப்பும் நாமே செய்ய வேண்டியதுதான் என்பது விளங்கும்.

கைகால்கள் எதற்காக நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று உணர்ந்து வேலைசெய்வது பெருமையும் புண்ணியமும் உள்ளதோர்கடமையாகும். கைகால்களை உபயோகியாமல் கழுவிக் கழுவி அழுக்கின்றி வைத்துக்கொண்டு, சோற்றையும் சுருட்டையும் வாயில் திணித்துக்கொள்வதற்காக மாத்திரம் அவை ஏற்பட்டவையல்ல. இவ்வியற்கை விதியை நாம் மீறுவதால் எத்தனையோ ஏழை உழைப்பாளிகளைத் துன்பத்தில் ஆழ்த்துகிறோம். மனித சமூகத்தையே எதிர்த்து நிற்கும் ஒரு பெரிய பயங்கரக் கலகத்தைப் போக்குதற்கு உடலுழைப்பே சிறந்த உபதேசமும் பிரசாரமு மாகும்.

படித்தவனுக்கு உடலுழைப்பு அனாவசிய மென்பது ஒரு கோயிலைக் கட்டுவதற்கு ஒவ்வொரு கல்லாக அடுக்குவது அனாவசியம் என்பது போன்றதே. பெருந்தன்மையான எப்பணியும் அடக்கத்துடனும், இயல்பாகவும், ஆடம்பரமின்றியுமே செய்யப்படும்.

மின்னல், இடி, (துப்பாக்கி) வெடி முதலியவை இருக்குமிடத்தில் ஏதோ முக்கியமான வேலை நடை பெறுவதாய் நாம் நினைக்கிறோம். உண்மை யாதெனில், சத்தம் மிகுந்த இடத்தில் உபயோகமானது ஒன்றும் நடைபெறுதென்பதேயாம். பெருமைவாய்ந்த பணிகள் ஓசையின்றி வணக்கத்துடன் நடைபெறும். நமது வாழ்க்கையைச் சீர்திருத்திக் கொள்ளும் மிகப் பெருமை வாய்ந்த வேலையை வணக்கத்துடன் சந்தடியின்றிச் செய்யவேண்டும். நமது வாழ்க்கையின் இழிவை யகற்றுபவை பிறர் பொருட்படுத்தாதவையும், சிலசமயங்களில் பரிகசிப்பவையுமாகிய சாதாரணச் செயல்களே. பணக்காரர்களாகிய நமது வாழ்வு பாபமயமானது, அதர்மமானது, அபாயகரமான தென்றுணர்ந்தால், நாம் செய்ய வேண்டுவது இதுவே.

"நானும் இன்னும் ஏழெட்டுப் பேர்களும் உழைப்பை இழிவென்று கருதாது, அதனாற்றான் மனவமைதியும் மகிழ்ச்சியும் எய்தலாமென்றுணர்ந்து வேலைசெய்துவிட்டால் என்ன விளைந்து விடும்?" என்று சிலர் கேட்கலாம். முதலில், அவர்கள் உலகின்முன் இச்சிக்கலான பிரச்னைக்குப் பரிகாரம் கண்டவர்களாய் நிற்பர்; வாழ்க்கையின் பயனை அடைந்தவராவர்; மனச்சாக்ஷியின் திருப்தியை எய்தியவராவர்.

இரண்டாவது, இவர்களது வாழ்க்கையின் சந்தோஷத்தையும் நன்மையையும் நோக்கிக் காலக்கிரமத்தில் பிறரும் இவர்களைப் பின்பற்றுவர். சமூக நிலை, பொருளாதார நிலை முதலியவற்றின் தீர்க்க முடியாச் சிக்கல்கள் தாமே தீர்ந்துபோம்.

முற்காலத்தில் மாந்தர், பலாத்காரத்தாற் பிறரை அடிமைகளாக்கி வேலைவாங்கிவந்தனர்; இக்காலத்தில் நாம் சொத்தினுற் பிறரை அடிமைப்படுத்தி வேலை வாங்குகிறோம். சொத்துத்தான் எல்லாத் தீமைகளுக்கும் அடிப்படைக் காரணம். சொத்தை வைத்திருப்பவனுக்குச் சிலவித துன்பங்களுங் கெடுதிகளும், அதனுல் பிறர்க்கு வேறு சில தீங்குகளும் உண்டாகின்றன. சொத்துள்ளவர்க்கும் இல்லாதவர்க்கும் சச்சரவுங் கலகமு முண்டாகின்றன.

சொத்துத்தான் எல்லாக் கொடுமைகளுக்குந் தீமைகளுக்கும் மூலகாரணம். இவ்வாறிருந்தும் நமது சமூகத்தின் முழு முயற்சியும் அதைச் சேகரிப்பதிலேயே செலவாகிறது. சொத்தினுலேயே உலகத்திலுள்ள பாப காரியங்கள் நிகழ்கின்றன. சொத்தின் பொருட்டுத்தான் தேசங்களும் அரசாங்கங்களும் சண்டையிடுகின்றன. ரைன் நதிக்கரைக்காகவும், ஆபிரிக்கா சைனு பால்கன் தீபகல்பம் முதலான தேசங்களின் நிலத்திற்காகவும் சண்டை நிகழ்கிறது. பாங்கர்களும், வியாபாரிகளும், முதலாளிகளும், நிலச் சொந்தக் காரர்களும் பாடுபடுவதும், தங்களையும் பிறரையும் வருத்திக் கொள்வதும் இச் சொத்தின் பொருட்டேயாம். அரசாங்க உத்தியோகஸ்தர்களும், வர்த்தகர்களும், ஜமீன்தார்களும் கஷ்டப்படுவதும் ஏமாற்றுவதும் கொடுமை புரிவதும் இச் சொத்திற்காகத்தான். நீதி மன்றங்களும், போலீசும் இச் சொத்தைப் பாதுகாப்பதற்காகத்தான். சிறைத் தண்டனையும் தீவாந்தர சிக்ஷையும் சொத்தைப் பாதுகாப்பதற்காகவே விதிக்கப் படுகின்றன. இத்தனைத் தீமைகளுக்கும் சொத்தே காரணமாயிருந்தும் உலகனைத்

தும் இதைப் பிரித்துக் கொள்வதிலும் காப்பாற்றுவதி லும் முனைந்திருக்கிறது.

ஆகவே, சொத்தென்பதென்ன ? சொத்து உண்மையாகவே மனிதனுக்கு உரியதென்றெண்ணுவது இயல்பாகி விட்டது. சொந்தமாயிருப்பதாற்றான் அது சொத்தெனப் படுகிறது. நமது வீடு, நமது நிலம் என்பது சந்தேகமின்றிப் பிழையும் குருட்டெண்ணமுமாம். சொத்தென்பது பிறரை நம் பொருட்டு வேலை செய்யுமாறு வற்புறுத்தும் இயல்புள்ள ஒரு சாதனமேயாகும். பிறனொருவனது ஆள்வினை எப்படி என்னுடையதாகும் ?

தனது ஆணைக்குட்பட்டதைத் தன்னுடையதென்று சொல்வது வழக்கமாகிவிட்டது. தனது உடலைத் தவிர வேறெதையும் தன்னுடையதென்று உரிமை பாராட்டுவது தவறு. இவ்வாறு உரிமை பாராட்டுவதால் ஆசாபங்கம் உண்டாகிறது ; அதனால் மனிதன் தன்னையும் பிறரையும் வருத்திக்கொள்கிறான். மனைவி மக்களும், அடிமைகளும், சொத்துக்களும் தன்னுடையவென்று மனிதன் சொல்லிக் கொண்ட போதிலும் உண்மை அவனது பிசகை விளக்குகிறது. இக்குருட்டு நம்பிக்கை ஒழியவேண்டும், இன்றேல் தானும் வருந்திப் பிறரையும் வருத்தநேரும்.

தற்காலம் நாம் பேருக்கு மாத்திரம் அடிமையை ஒழித்து விட்டோமென்று சொல்லிக்கொண்டு பணத்தைச் சேகரித்து வைத்துக்கொள்கிறோம். அதாவது பிறர் நமக்குக் குற்றேவல் புரியச் செய்வதற்குரிய வழியைத் தேடிக் கொள்கிறோம்.

மனைவிமக்களையும் அடிமைகளையும் குதிரைகளையும் நமக்கு உரியவை யென்று பாராட்டுவதெல்லாம் வெறுங்கதையே யாகும். இக்குருட்டு நம்பிக்கையிற் சிக்கியவன் வருந்துவான். எனதுடல் என் மனப்படி நடப்பதுபோல் என் மனைவிமக்கள் நடக்க முடியாது. உண்மையில் எனதென்று பாராட்டிக் கொள்ளக் கூடியது இவ்வுடலொன்றேயாகும். பணம் நமக்குரியதென்று எண்ணுவதும் தவறே. எனது உணர்ச்சியுடன் சம்பந்தப்பட்டிருப்பதும், என் மனப்படி நடக்கக்கூடியதும் உடலொன்றே யாதலின், அதுவே என் உண்மைச் சொத்து.

உடலைத் தவிர மற்றவைகளைத் தம்முடையதாகக் கொண்டாடுபவர்க்கு அதனால் வருந் தீங்குகள் தெரிவதில்லை; இவ்வுரிமை யுணர்ச்சியால் நன்மை யிருப்பதாகவே அவர்கள் கருதுகின்றனர். ஆனால் ஆலோசித்துப் பார்த்தால் இக்குருட்டு நம்பிக்கையால் விளையுந் தீமைகள் புலனும்.

இதற்கு ஒரு சாதாரண உதாரணம்: என்னைப் போன்ற மற்றொரு மனிதனை எனது சொத்தாகப் பாவித்துக் கொள்வதாக வைத்துக்கொள்வோம். இக் குருட்டு நம்பிக்கையினால் எனக்கு வேண்டிய உணவைச் சமைத்துக்கொள்ள நான் பழகவில்லை. சரிவரப் பார்த்தால், எனதென்று கொண்டாடக்கூடிய உடலுக்குச் சமையற்றொழில் கற்பித்திருக்கவேண்டும். சமையற்காரன் என்னைவிட்டு ஓடிவிட்டாலும் அல்லது இறந்துவிடினும் நான் கவலையில் மூழ்க நேரிடுகிறது.

கட்டிடங்கள், துணிமணிகள், நிலங்கள், பணம் முதலியவற்றைச் சொந்தமெனப் பாராட்டுவதனாலும்

கவலையுந் தீங்குமுண்டாகின்றன. எனக்குச் சொந்தமான புத்தகசாலையென்றும், சொந்தமான துணிமணிகளென்றும், சொந்தமான பணமென்றும் பாராட்டிக் கொள்வதனால் எனது உண்மைச் சொத்து எதுவென்பதை மறக்கிறேன். எனது ஆணைக் கடங்கிச் சொன்னபடி நடக்கும் உடலைக்கொண்டு உழைக்கலாமென்பதை மறந்துவிடுகிறேன்.

நாம் ஒரு சொல்லுக்குத் தவருகப் பொருள் கொள்ளாத மட்டும் அதற்குக் குறிப்பிட்ட பொருளொன்று என்றும் உண்டு. சொத்து என்றால் என்ன பொருள்? எனக்கே தனிமையாகக் கொடுக்கப் பட்டதென்றும், எனக்கே முழுதும் உரியதென்றும் பொருள். அதை நான் விரும்பும் வண்ணம் உபயோகிக்கலாம். வேறெவரும் அதை என்னிடமிருந்து பறிக்கவொண்ணது. சாகும்வரை அது என்னுடையதாகவே இருக்கும். அதை முன்னுக்குக் கொண்டுவரவும் வளர்க்கவும் நான் பாடுபடவேண்டும். இத்தகைய சொத்து நமது உடலை விட்டு வேறொன்றில்லை.

நம்முடையவென்று நாம் கருதும் பிற பொருள்களுக்கும் மேற்கூறிய தன்மைகளிருப்பதாக எண்ணுவது வீண் எண்ணமேயாகும். இப்போலிச் சொத்தின் பொருட்டுத்தான் புவிமீது போர்களும் தூக்குமேடையும், தீர்ப்பும், சிறையும், கொலையும் மனித வகுப்பின் நாசமும் நிகழ்கின்றன.

"பணத்திற்காக உழைக்காமல், உழைப்பு க்ஷேமந்தரும் மனித தர்மம் என்னும் எண்ணத்துடன் பத்துப்பேர்கள் உழுதல், விறகு வெட்டுதல் முதலான

வேலைகளைச் செய்து வந்தால், அதனால் என்ன நன்மை யுண்டாகி விடும்?" என்று சிலர் கேட்கின்றனர்.

அதனால் விளையும் நன்மை இதுவே. இத்தகைய பத்துப்பேர் வேண்டாம்; ஒருவனே போதும். அவன் தன்வாழ்க்கை மூலமாகவே பல்வகைத் துயர் களினின்றும் மாந்தர் விடுதலை யுறுதற்குரிய நெறியை விளக்குபவனாவான். உழைப்பது மானிட தர்ம மென்று கருதி வேலைசெய்பவன் துன்பங்களுக் கெல்லாம் உறைவிடமாகிய சொத்தைப்பற்றிய பொய் யெண்ணத்தைத் துறந்திருப்பான். சொத்தைக் காப்பதற்காக நிலவும் உத்தியோக வர்க்கமும் ஒழிந்து விடும். இவ்வுத்தியோக வர்க்கத்தால் தங்களுக்குத் தீமையே யன்றி நன்மையில்லை யென்பதை மக்கள் அறிவர்.

உழைப்பைச் சாபமெனக் கருதாது, சுகத்தின் இருப்பிடமாக, க்ஷேமநிதியாகக் கருதுபவனுக்குத் தனதுடலினும் பிறிதொரு சொத்து உபயோகமற்றது மாத்திரமன்றிப் பெரும்பாரமும் தடையுமாகும். எனதுணவை நானே சமைத்துக் கொள்வதிற் பிரியங் கொண்டால், வேறொருவன் எனக்காகச் சமைப்பது திருப்தியா யிராது. உழைப்பே வாழ்வெனக் கொண்ட வன் தன் வாழ்நாள் முழுதும் சுறுசுறுப்பா யுழைத்து வருவான். நாளுக்குநாள், பிறருழைப்பைத் தன் பொருட்டு அவன் எதிர்பாரா நிலைமை எய்தும். அனாவசியமான தேவைகள் அவனுக்கிரா; சொத்தை அவன் விரும்பான்.

வாழ் நாளெல்லாம் நன்குழைப்பவனுக்குத் தனி யறைகள் தேவையில்லை; மேஜை, குரிச்சி, விலை மிக்க

துணிமணிகள் தேவையில்லை. உயர்ந்த உணவும் வண்டியும் நாடகமும் அவனுக்கு வேண்டாம். உழைப்பைக் கடமையாகவும், மகிழ்ச்சி தருவதாக வுங் கருதுபவன் பிறரை வேலைவாங்கித் தனதுழைப் பைச் சுருக்கிக் கொள்ளமாட்டான்.

வாழ்வின் தத்துவம் உழைப்பென்று உணர்ந்த வன் உழைப்பில் திறமையும் பொறுமையும் மேன் மேலு மெய்தி, மேன்மேலும் அதிகமாய்ப் பாடுபட்டுத் தனது காலத்தைப் பயனுடையதாக்கிக் கொள்வதி லேயே கண்ணுங்கருத்துமா யிருப்பான். வாழ்க்கை யின் நோக்கம் உழைப்பேயன்றிச் சொத்துச்சேர்ப்ப தன்று எனத் தேர்ந்தவனுக்கு வேலை செய்யுங் கருவி களைப்பற்றிக் கூடக் கவலையிராது. நல்லகருவி கிடைத் தால் அதைக்கொண்டு வேலை செய்வான்; சாதா ரணக்கருவி கொண்டு வேலைசெய்யவும் அவன் சலிக்க மாட்டான்; நீராவி ஏரிருந்தால் அதைக்கொண்டு உழுவான்; அஃதின்றேல் குதிரை பூட்டியும் உழு வான்; அதுவுமின்றேல் சாதாரண நாட்டுப்புறத்து ஏரையும் பிடிப்பான். அதுகூடக் கிடைக்காவிடில் மண் வெட்டியாற் கொத்துவான்; எப்படியும் அவன் தனது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வான். அதாவது, மாந்தர்க்கு உபயோகமான உழைப்பில் தன் காலத் தைப் பயன்படுத்தி நிறைமகிழ்ச்சி பெறுவான். பொரு ளீட்டுதல் கருதி அம்முயற்சியில் ஈடுபட்டுழைப்பவனி னும் இவன், உள்ளும்புறமும், எவ்வளவோ மேன்மை யுற்றிலகுவான். வெளிநிலையை நோக்கின், இவனுக் குத் தேவையொன்று மிராது. உழைப்பை இவன் பொருட்படுத்தாதது கண்டு, யாரும், அருவியைத் திருப்பி ஆலையை யோட்டுவதுபோல, இவனது உழைப்

யைத் தங்களுக்குப் பயன்படுத்திக்கொள்ள விரும்புவர்; இவன் மனமார உழைப்பவனென்பது கண்டு இவனுக்கு வேண்டிய உணவுமுதலானவைகளைத் தயங்காதளிப்பர். சொத்துச் சேர்ப்பவர்களை எவரும் இப்படிக் கவனியார்.

மனிதனுக்கு வேண்டுவது உண்ணவுணவும் உடுக்கத்துகிலுமே யென்றிருப்பவனது உள்ளம் சொத்துத் தேடுபவனது சிந்தைபோலன்றி, எப்போதும் அமைதியாகவும் சந்தோஷமாகவு மிருக்கும். சொத்துத் தேடுகிறவனுக்கு மனமார எவரும் ஒன்றை ஈயார். உழைப்பவனுக்கோ உழைப்பிற்கேற்ற ஊதியமுண்டு. இத்தகையோர் பலவீனமுறினும், வயது முதிர்ந்துவிடினும், சாகக்கிடந்தாலும் மக்களது அன்பு நிறைவையும் அனுதாபத்தையும் பெறுவர்; அவர்களதுள்ளமும் திருப்தி நிறைந்திருக்கும்.

இதன் விளைவு யாதாகுமெனில், இவ்வுலகில் அரைப்பைத்தியக்காரர்களென்றும், விபரீதமானவர்களென்றுங் கருதப்படும் சிலர் உழவு முதலிய வேலைகளைச் செய்துகொண்டும், மற்றவர்கள் படித்தவர்களென்னும் பெயருடன், குதிரை சவாரி செய்துகொண்டு, நாடோறும் பத்துமணிநேரத்தை வீணாக்கிக்கொண்டும் வருவர்.

இரண்டாவது, இவ் அரைப்பைத்தியங்கள் உலகத்திற் சொத்துக்காகத் துன்பப் படுவதும், பிறரை வருத்துவதும் பிசகென்றும், அதனால் துக்கமேயன்றிச் சுகமில்லையென்றும், ஒருவனது உண்மைச் சொத்து அவனது புத்தியும் உடலுமே யென்றும், பொய்ச் சொத்தைக் குறித்து வீணாகப் பாடுபடுவதும்

காலத்தைப் போக்குவதும் மடமையென்றும் மாந்தர்க்கு விளக்கிக்காட்டும்.

மற்றுமொரு பயன் யாதெனில், பொய்ச் சொத்துக்களை உதறிய பின்னரே மெய்யாகிய (உடலாகிய) சொத்தைச் சரிவர உபயோகிப்போம். அதனால் உலகிற்கு நூறு பங்கு அதிக நன்மை யுண்டாகிறது. நமக்கும், இதுகாறும் அனுபவிக்காததும், மனத்தால் நினையாததுமான இன்பமுண்டாகும்.இவ்வாறு உழைப்பவன் பலவானும், உபகாரியும், அருளுடையவனுமாகிறான். தனது சொந்த உழைப்பினாலேயே பிழைக்குமிவன் எல்லோருக்கும் சகோதரனாகவும், எல்லோரும் விரும்புபவனாகவும், எல்லோர்க்கும் பிரியமானவனாகவும் ஆகிறான்.

இத்தகைய ஒன்று அல்லது பத்துப்பைத்தியங்களைப் பார்த்தாற்றான் மனிதர்களுக்குச் சொத்தென்னும் மாயை மீதுள்ள குருட்டு நம்பிக்கை அகலும்; அதனால் துன்பவிடுதலையையும் க்ஷேமமார்க்கத்தையும் உணர்வர்.

இத்தகையோன், தன்னோடிணங்காதவர் நடுவேயிருப்பின் என்ன செய்வது? படகோட்டிகள் நதியை எதிர்த்துப் படகை யோட்டுகின்றனர். தான் ஒருவனாகப் படகைத் தள்ள முடியாதென்று கைவிட்டு விடும் படகோட்டி யொருவனிருக்கின்றானா? உண்பதும் உறங்குவதுமேயன்றி நாம் செய்யவேண்டும் வேலை வேறுண்டென்பதை ஒப்புக்கொள்ளும் எவனும் அக்கடமை எதுவென்றுணரலாம். குறித்ததிசை நோக்கி முழுப் பலத்துடன் ஓடத்தை யோட்டினால்

அன்றிச் சேரிடஞ் சேரமுடியாது. பொதுவாக, உழைப்பில் ஈடுபடுபவர் வேலையும் ஓடக்காரன் வேலை போன்றதே. நாமனைவரும் செல்லவேண்டுந் திசை ஒன்றே. வாழ்க்கையினின்றும், யுக்தி மனச் சாக்ஷிகளினாலும், அறிவுமிக்க முன்னோர் உபதேசங் களினின்றும் அத்திசை எதுவென் றறிந்துகொள்கி ரோம். உழைக்க விரும்பாதவரே இவ்விஷயம் விளங்க வில்லை யென்பர்.

ஆகவே, இதன் விளைவு என்னவாகும்? இக் கொள்கையில், முதலில் ஒருவன் சேர்வான்; அதைப் பார்த்து மற்றொருவனும், மூன்றாவ தொருவனுமாகச் சான்றோரனைவரும் ஒன்றுசேர்வர். அதைக் கண்டு அவர்கள் ஏன் அப்படிச் செய்கிறார்களென்றுகூட விசாரியாது பொதுமக்கள் அவர்களைப் பின்பற்றிச் செல்வர்.

முதன்முதல், கடவுளாணையைக் கொண்டு செலுத் துவதற்காக உழைப்போருடன் அரை நம்பிக்கையுள்ள வர்கள் பாதி மனத்துடன் சேருவார்கள். அதன் பின், முன்செல்லும் உத்தமர்களிடமுள்ள நம்பிக்கை யினாற் பொதுமக்கள் அவர்களைப் பின்தொடர்வர். இவ்வாறு மாந்தர் நாசவழி நீங்கி, நல்லவழி யெய் துவர்.

இக்காரியம் விரைவில் நிறைவேற வேண்டு மெனில், நமது வகுப்பினரும் அதற்கடுத்த வகுப்பின ரும் கொல்லைப் புறத்தைச் சுத்தமாக்கும் வேலையை, இழிவென்றிகழாது, செய்ய முற்படவேண்டும். புறக் கடையைச் சுத்தஞ் செய்வது இழிவல்ல; ஆனால் நாம் அசுத்தப்படுத்திய கொல்லையைச் சுத்தஞ் செய்யும்படி

நம்மைப் போன்றவர்களும் நம் சகோதரர்களுமாகிய பிறரை வற்புறுத்துதலே இழிவு. சாதாரண ஜனங்கள் வெறுங்காலோடு நடக்கும்போது, அவர்களுக்கு அடுத்தாற்போலச் செருப்புக்காலுடன் நாம் நடப்பது இழிவு. பிரெஞ்சு பாஷையோ, சமீபத்திற் பிரசுரமான நாவலின் சமாசாரமோ தெரியாதிருப்பது இழிவன்று; தான் தின்னும் ரொட்டியை எவ்வாறு செய்வதென்றறியாமையே இழிவு. கஞ்சிப் பசையற்ற, அல்லது சலவை செய்யாத உடையை யணிவது இழிவன்று; தனது சோம்பருக்கு அறிகுறியாய் விளங்கும் சலவையுடை தரிப்பதே இழிவு.

எனது ஞாபகத்திற் கெட்டிய காலத்திற்குள் விந்தைமிகு மாறுதல்கள் நிகழ்ந்துள. சாப்பிடும் ஒவ்வொருவர் குரிச்சியின் பின்னும் கையில் தட்டுடன் ஒருபையன் நிற்பதும், சுருட்டெடுத்துக் கொடுப்பதற்காக அறையில் ஒருபையனோ பெண்ணோ காத்திருப்பதும், முன்னர் வழக்கமாயிருந்தது இப்பொழுது ஆச்சரியமா யிருக்கிறது. ஆனால், நாம் எப்போதாவது சவாரி போவதற் கென்று குதிரைகளைத் தீனிபோட்டுக் கொழுக்க வளர்ப்பதும், ஒரு நண்பரைக் காணச் சிறிது தூரம் செல்வதாயினும் சாரட்டிலேயே செல்வதும், ஒரேமனிதன் ஐந்து அறைகளை உபயோகித்து வருவதும், ஒருமாது தனது உடைக்காகப் பத்து அல்லது நூறு அல்லது ஆயிரக் கணக்காகச் செலவழிப்பதும் நமக்கேன் விந்தையாகத் தோன்றவில்லை?

சிலர் ஒன்றுஞ் செய்யாது, அங்கு மிங்குங் குதிரை சவாரி செய்துகொண்டும், புகைகுடித்து

விளையாடிக்கொண்டு மிருப்பதும், ஒருபட்டாளம் ஆட்கள் இவர்களுக்குச் சோறு போடுவதும் சௌகரி யங்களைச் செய்து கொடுப்பதுமே வேலையாயிருப் பதும் விந்தைமிகு விஷயங்களன்றோ? நடனத்தையும் பாட்டையும் பற்றிக் கிழவர்கள் சம்பாஷிப்பதும் எழுதுவதும், வேறுசில வெறியர்கள் அழகிய பாட்டுக் காரி அல்லது நாட்டியக்காரியைத் தரிசிக்கும் பொருட்டு விரைவதும் வியக்கத்தக்கவை யன்றோ! பதினாயிரக்கணக்கான சிறுவர்களும் சிறுமிகளும் ஒருவேலைக்கும் பயன்படா வண்ணம் பழக்கப்படுவது ஒரு விந்தையல்லவா? இவர்கள் பள்ளிக்கூடம் போய் வரும்போது புத்தகங்களைத் தூக்கிவருவதற்குக்கூட வேலையாட்களை அமர்த்துவதுண்டு.

கைதேர்ந்த சமையற்காரர்களாற் சமைக்கப் பெற்ற அறுசுவை யுண்டியைப் பல வேலையாட்கள் பரிமாற வுண்பதும், சிறிது தூரம் நடப்பதற்குக் கூடச் சோம்பிக்கொண்டு வண்டியிற் செல்வதும், உழைப்பிற்குதவா உடைகளை யணிவதும், (ஏழைகள் ஒரு பொன்னுக்காக உயிரை விடும்போது) நூறு அல்லது நூற்றைம்பது பொன்விலையுள்ள வாத்தியம் வாங்கி வாசிப்பதும், (மனிதர்கள் பசியால் வாடும் போது) ரொட்டியும் பாலும் ஊட்டி நாய்களை வளர்ப்பதும், வீணாக மெழுகுவர்த்திகளை எரிப்பதும் (வெறும் வெளிச்சம் போடுவதும்), அவசியமின்றி அடுப்பெரிப்பதும் இழிவாகக் கருதப்படும் காலம் வருகிறது; இவற்றை யெல்லாம் மிக்க அவமதிப் புடன் நோக்குங் காலம் விரைந்து நெருங்குகிறது. ஒரு நாடகக் காட்சிக்காக ஒரு பொன் அல்லது ஆறணாக்கூடக் கொடுப்பது முடியாமற் போகுங்

காலம் விரைவில் வருகிறது. உழைப்பைப் பற்றிய நியமம் எப்பொழுது பொதுமக்கள் கருத்தாகிறதோ அப்பொழுது இவ்வாறெல்லாம் நடக்கும்.

---

## அத்தியாயம் 39

வேதத்திற் கூறிய வண்ணம் ஆணுக்கு ஒரு விதியும் பெண்ணுக்கொருவிதியும் ஏற்பட்டிருக்கின்றன. ஆணுக்கு உழைப்பும், பெண்ணுக்குக் குழந்தைகளைப் பெற்று வளர்க்கும் வேலையும் இயல்பு. பித்தப்பை எவ்வாறு இடம் மாருதோ, அவ்வாறே இந்நியமமும் என்றும் ஒருபடித்தாயிருக்கிறது. இதை மீறுவதாயின் சாக வேண்டியதுதான். ஆண் தனது நியமத்தை மீறினால் உடனே இறப்பான்; பெண் சற்றுப் பொறுத்துத் தண்டனை யடைகிருள்.

எல்லோரும் சேர்ந்து இந்நியமத்தை மீறினால் மனிதவர்க்கமே நசித்து விடும். பெண்கள் இதை மீறினால் அடுத்த தலைமுறை தலையெடாது நாசமடையும். சில ஆண்களும் பெண்களும் இதை மீறுவதனால் மனித வகுப்பே அழிந்து விடாதாயினும் அவ்வாறு மீறுபவர்களை நாம் ஆணிலோ பெண்ணிலோ சேர்த்தெண்ணுவதற்கில்லை.

பிறரைப் பலாத்காரஞ் செய்யக்கூடிய நிலைமையிலிருந்தவர்கள் பலவாண்டுகளுக்கு முன்னரே இந்நியமத்தை மீறலாயினர்; நாளுக்கு நாள் இப் பைத்தியம் முற்றி, முடிவில் இவ் விதியை மீறி வாழ்வதே தங்கள்

நோக்கமென்றும் இவர்கள் கொண்டுவிட்டனர் எல்லா வேலைகளையும் இயந்திரங்கள் செய்துவிடும்; மனிதர்கள் சுக போகங்களை நுகர்தற்காகவே பிறந்தவர்களென்பதுதான் அக் கொள்கை.

பெண்களிற் பெரும்பாலர் தங்கள் நியமத்தை மீறவில்லை. சிலர் வேசைத் தொழில் புரிகின்றனர், வேறு சிலர் கருவை அழித்துக் கொள்கின்றனர். ஆனால் இத் தகையோர் மிகச் சிலரே. உயர்குலப் பெண்கள் தங்கள் நியமத்தைக் கடைப்பிடித் திருக்கின்றனர்; உயர்குல ஆண்களோ தங்கள் நியமத்தை மீறிவிட்டனர். ஆகவே பலமும் திடமும் பெற்றிருக்கும் மாதர், தங்கள் நியமத்தை மீறிவிட்ட மதியிழந்த மாந்தரை எப்போதும் ஆண்டுவருவர்.

கருத் தரியாப் பாரிஸ் நகர மாதர் நாகரிக முறைகளனைத்தையுங் கையாண்டு, கண்டவர் யாவரும் காம வலையிற் சிக்குறும் அழகு படைத்திருப்பதாகப் பலர் கூறுகின்றனர். இது முற்றிலுந் தவறு; உண்மைக்கு நேர் எதிரிடை. மனிதனை வென்றவள் குழந்தை பெறுக் காரிகையல்லள். ஆண் தனது கடமையை நிறைவேற்றுதிருக்கத் தனது கடமையைத் தான் நிறைவேற்றிய தாயே அவனை ஜயித்திருக்கிறாள்.

தீயவுபாயங்களால் கருத்தரியாது காத்துக் கொண்டு தனது தோளழகாலும் கூந்தலழகாலும் ஆணை மயக்கும் பெண் அவனை வெல்பவளல்லள்; ஆணாற் கெடுக்கப்பட்டவள் அவள்; அவனால் தன் போன்ற நிலைமைக்குக் கொண்டுவரப்பட்டவள். இத்தகைய ஆடவரும் பெண்டிரும் தங்கள் கடமையினின்றும் வழுவிப் புத்தியை யிழந்தவராவர்.

இப்பெரிய பிழையினின்றும் 'மாதர் சுதந்தரம்' என்னும் ஆச்சரியகரமான மடமை உற்பத்தியாயிருக்கிறது. "ஆண்கள் தங்கள் நியமமாகிய உழைப்பை மீறியிருக்க, நாங்கள் மட்டும் எங்கள் சுமையைச் சுமந்தே செல்ல வேண்டுமென்பது சரியன்று. உழைப்பதுபோற் பாசாங்கு செய்துகொண்டு பாங்கிகளிலும், மந்திராலோசனைச் சபைகளிலும், கலாசாலைகளிலும், ஆராய்ச்சிச் சாலைகளிலும் நீங்களிருந்து வருவதுபோலவே, நாங்களும் எங்கள் கடமையை நிறைவேற்றுவதுபோல் நடித்தவாறு காமத்தைத் திருப்தி செய்து கொள்வதற்காகவே ஜீவிப்போம்" என்பதே இச்சுதந்தரத்தைப் பற்றிய சுருக்கம்.

உழைப்பைக் கைவிட்ட ஆண்களுள்ள இடத்திலேயே 'மாதர் உரிமை' என்னும் பேச்சு ஆரம்பித்தது; அங்கேதான் அது இருந்தும் வருகிறது. ஆடவர் தங்கள் கடமையை மேற்கொண்டால் இப்பேச்சு இருந்தவிடந் தெரியாமல் மறைந்துவிடும். தமக்குச் சொந்தமான தவிர்க்கொணுக் கடமையொன்றிருக்க, அதை விட்டு நீங்கிச் சுரங்கம் வெட்டவும் நிலத்தை யுழவும் பெண்டிர் வரமாட்டார்கள். வேலை அல்லது உழைப்பென்று பணக்காரர்கள் கூறும் ஏமாற்றத்திற்றான் தங்களுக்கும் பங்குவேண்டுமென்று பெண்டிர் கேட்கின்றனர்.

நமது வகுப்புப் பெண்டிர் ஆடவரைக் காட்டிலும் பலசாலிகளாயிருப்பது அவர்களது மோகவலையால் அல்ல; ஆணுக்கு நிகராய் வேலை செய்வதாலுமல்ல. தமது சக்தி முழுவதையும் உபயோகித்து உயிருக்குக் கூட அபாயம் வரக்கூடிய கடமையைச் செய்து

வருவதே அவர்களது பலத்தின் காரணம். ஆடவனோ தன் கடமையாம் உழைப்பினின்று தன்னை விடுவித்துக் கொண்டுவிட்டான்.

ஆனால், எனக்கு நினைவு தெரிந்த காலம் முதலே பெண்ணும் தனது கடமையினின்றும் சிறுகச் சிறுக வழுவத் தொடங்கி விட்டாள். நாடோறும் இத்தகையோர் தொகை அதிகரித்து வருகிறது. இங்ஙனம் தனது கடமையினின்றும் விலகிய பெண் தனது பெருமை தான் வீசும் மோகவலையிலும், ஆணைப் போல் கூரிய புத்தி படைத்துளதாகக் காட்டிக் கொள்வதிலுமே யிருப்பதாகக் கருதுகிறாள். குழந்தை பெறுவதால் இவை யிரண்டுங் குன்றுவதாகக் கருதி ஸயன்ஸின் உதவிகொண்டு கருவை யழித்துக்கொள்ளும் பற்பல உபாயங்களைக் கையாளுகிறாள். இதன் பயனாகப் பணக்கார வகுப்புப் பெண்டிர் இதுகாறும் கண்ணியமுள்ள தாய்களாகவும் பெருமை யுள்ளவர்களாகவு மிருந்தது தொலைந்து, அவர்களுக்கும் தெருக்களிற் சுற்றிக்கொண்டிருக்கும் பெண்டிருக்கும் பேதமில்லாது போய்விட்டது. நாளுக்கு நாள் இவ்வழக்கம் பரவி வருவதால் பணக்கார மாதர் அனைவரையுமே இவ்வழக்கம் சூழ்ந்து கொள்ளுமோ என்று நினைக்கும் படி யிருக்கிறது. இதனின்றும் நம்மை விடுவித்துக் கொள்ள விரும்பினால் இன்னும் அதற்குக் காலமிருக்கிறது.

ஐயோ! பெண்டிர் தங்கள் பெருமையையும் கண்ணியத்தையும், சக்தியையு முணர்ந்து தங்கள் கணவர்களையும் சகோதரர்களையும் சந்ததிகளையும் சீர்திருத்த முற்பட மாட்டார்களா? மனித வர்க்கத்தைக்

கரையேற்ற முற்படார்களா? மாதர்களே! இவ்வுலகத்தில் மாந்தர் உயிர்பிழைக்க வேண்டுமெனின், தீய பழக்கங்களி னின்று உய்யவேண்டு மெனின், அது உங்கள் கையினாலேயே ஆகவேண்டும்.

தங்களைக் கோலாகலமாய் அலங்கரித்துக்கொண்டு ஆண்களை மயக்கிச் சிற்சில சமயம் தங்கள் எண்ணத்திற்கு மாறாக, அஜாக்கிரதையால் மன வருத்தத்துடன் கருவுற்றுக் குழந்தை பெற்றுப் பாலூட்டும் தாதியிடம் அதைப் போட்டுவிட்டோடும் மாதர்களால் அணுவளவும் நமக்கு நன்மையில்லை. உபந்நியாசங்களைக் கேட்பதற்கு ஓடிக்கொண்டு, தற்கால ஸயன்ஸைக் கற்றுக் குழந்தை பெறுவதால் தங்கள் அபிவிருத்தி கெட்டுவிடுமென்று எண்ணியுள பெண்களாலும் உலகத்திற்கு யாதொரு நலனும் விளையப்போவதில்லை. இவ்வுபாயங்கள் தெரிந்திருந்தும் மக்களைப் பெறுவது தங்கள் கடமை யென்றுணர்ந்து, உலக நலனுக்காக, அதன் கஷ்டங்களை அனுபவித்துவரும் தாய்களாற்றான் உலகம் நற்கதியுறும். தற்காலம் நம்மை யழிப்பதற்காக எதிர்நிற்கும் பேரபாயங்களி னின்றும் நம்மை விடுவித்துக் காத்தல் இத்தகைய கடமைப்பற்றுள்ள தாய்களாலேயே முடியும்.

இறைவனாணைக் குட்பட்டு நடக்கும் பெண்டிரும் தாய்களுந்தான் சீர்குலைந்திருக்கும் இவ்வுலகில் அருள் வழி நிற்பவராவர். இவர்களது வாழ்க்கை யுதாரணத்தாற்றான் ஆடவர்க்கும் தங்கள் கடமையைச் சரிவர நிறைவேற்றும் புத்தி உண்டாகவேண்டும்.

கற்பரசிகளே! ஆனந்தத்தை முழுவதும் உணர்ந்தவர்கள் நீங்களே. கடவுளாணையை நிறைவேற்று

பவரின் ஆனந்தம் இத்தகைய தென்பதை யுணர்ந்தவர் கள் நீங்களே. கணவன்பாற் பூணும் அன்பு வரை யற்றது, அழிவில்லாததென்றும், அதனின்றும் குழந் தையிடம் அன்பு பிறக்கிறதென்றும் நீவிர் அறிவீர். ஈசனாணையைப் பணிவுடனும் பொறுமையுடனும் நிறை வேற்றுபவர் நீவிரே. ஆடவர் சிலர்போல வேலை செய்வதாக நீங்கள் நடிப்பதில்லை. ஆதலின், ஈச்வ ராக்ஞையை நிறைவேற்றுவதாற் கிடைக்கும் வெகு மதியையும் ஆனந்தத்தையும் நீங்கள் அறிவீர்கள்.

நீங்கள் ஆவலுடனும் அச்சத்துடனும் நம்பிக்கை யுடனும் ஒன்பது மாதம் கருவேதனை யுற்றுப் பொறுக் கொணுக் கஷ்டத்தை அமைதியுடன் அனுபவிக்கிறீர் கள். உண்மையாகப் பாடுபடுவது யாதென்றும் அதன் சந்தோஷகரமான பயன் யாதென்றும் உங்க ளுக்கே தெரியும். கஷ்டப்பட்டுக் குழந்தை பெற்ற தோடு நில்லாது மீண்டும் கஷ்டப்படுகிறீர்கள். குழந் தைக்குப் பால் கொடுப்பது, பராமரிப்பது முதலாம் வேலைகளைக் கவனிக்கிறீர்கள். தந்தை தாயினுந் தலை சிறந்த இன்பமளிப்பதும், இன்றியமையாததுமான துயிலையுந் துறந்து, பல மாதங்கள், பல வருஷங்கள், இரண்டு நாட்கள் சேர்ந்தாற்போல் நல்லுறக்க மின்றி யிருக்கின்றீர்கள். குழந்தை நோய்வாய்ப் படின், பன்னாட்கள் சேர்ந்தாற்போல் தூக்கமற்றுக் குழந் தையை மார்போடணைத்து அதன் துயர் சகியாது குழம்பி இரவெலாம் இங்கு மங்குமாக நடந்தவாறிருக் கிறீர்கள். இவற்றையெல்லாம் பிறர் பாராது, புகழ்ச்சி யையும் வெகுமதியையும் எதிர்பாராது செய்கிறீர்கள்; ஏதோ பெரிய காரியத்தைச் செய்துவிட்டோ மென் றெண்ணாது, கேவலம் கடமை யென்றே செய்கிறீர்

கள். பிறர் புகழ்ச்சிக்காகச் செய்யும் போலி வேலை யெது வென்றும், கடவுளாணையெனச் செய்யும் வேலை யெதுவென்றும் உங்களுக்குத் தெரியும்.

எக்குழந்தையின் பொருட்டு இவ்வளவு பாடு படுகிறளோ, அதுவே பின்னர் நன்றியறிதலற்றுப் போயினும், தன்னைக் கோபித்து வருத்தினும் அவற்றை யெல்லாம் உண்மைத் தாய் ஒருபோதும் கவனிக்கவே மாட்டாள். இவ்வாறு, சொல்லொணுப் பல கஷ்டங்களையும் பொறுத்துக்கொண்டு, உண்மைப் பெண்மணி பல குழந்தைகளைப் பெற்றெடுத்து வளர்க்கிருள்.

இத்தகைய தாய் குழந்தைகள் வேண்டாமென மாட்டாள். உழைப்பாளி அரைகுறையாய் வேலை செய்து மிகுதியை வேருெருவன் செய்யட்டு மென்று விடமாட்டான்; அவ்வாறே உண்மைத் தாய் தான் பெற்ற குழந்தையைத் தாதியிடம் ஒப்படைக்க மாட்டாள். உழைப்பாளிக்கும் உண்மைத் தாய்க்கும் தங்கள் தங்கள் வேலையைச் செய்யச்செய்ய மேன்மேலும் மகிழ்ச்சி யுண்டாகும்.

இவ்வாருெழுகும் தாய் தன் கணவனையும் சகோதரர்களையும் மக்களையும் தன்னைப்போலவே உழைக்குமாறு தூண்டுவாள்; சுயநல மறுப்புள்ளதும் பிறர் பார்க்காததும், வெகுமதியற்றதும், சிலசமயங்களில் உயிருக்கே அபாயத்தை விளைவிப்பதுமாகிய வேலையைச் செய்வதே மனிதர் கடமையென்றும் அதனுலேயே சந்தோஷமுண்டாகு மென்றும் எடுத்துரைப்பாள். மனிதர்களுடைய கண்ணியத்தையும், தகுதியையும் இதைக் கொண்டுதான் அவள் நிச்சயிப்பாள். தன் சந்ததிகளையும் இவ்வழி பயிற்றுவாள்;

மக்கட்பேறுதல் பெரிய தொல்லை யென்றும் வெறுப்பை யூட்டும் விரும்பாச் சம்பவமென்றும், சுக போகங்களைக் கூடியமட்டும் நுகர்தலே வாழ்க்கையின் நோக்கமென்றும், ஸயன்ஸுகளையும் கலைகளையும் கற்பதே மேலான வேலையென்றும் எண்ணுந் தாய் தன் குழந்தைகளுக்கு மிகவும் புஷ்டியான சுவையுணவுகளை யூட்டி, ஆடம்பர வுடைகளை யணிவிப்பாள்; சுயநல மறுத்துப் பாடுபட வேண்டுமென்று உபதேசியாமல் உழைப்பைத் தவிர்க்கும் உபாயங்கள் கற்றுக்கொடுப்பாள். புத்தியைப் பறிகொடுத்த மாதே, கணவனுந் தானுமாகப் போலிவேலையிற் பிரியங்கொள்வாள்; தன் மகளுக்கும் அத்தகைய புருஷனையே தேடுவாள். இவள் மனிதரை அவர்களது உண்மை யோக்கியதையைக் கொண்டு மதிக்காமல் அவர்களது சொத்து, பிறரை வேலைவாங்குந் திறமை முதலியவற்றாலேயே மதிப்பாள்.

கடவுளாணையை யுணர்ந்த உண்மைத் தாய் தன் மக்களை அதன்பொருட்டுப் பழக்குவாள்; அவர்கள் மீதூண், அதிகவுடை, அநாவசியமான சௌகரியங்கள் முதலிவற்றிற் பிரியம் வைப்பது கண்டால் மனஞ் சகியாள். இவை யாவும் கடவுளாணையை நிறைவேற்றுதற்குப் பெருந்தடைகளன்றோ? உழைப்பினின்றுந் தப்பிக்கும் உபாயத்தை யுபதேசியாது, அதிகமாகப் பாடுபடும்படியே கற்பிப்பாள்.

குழந்தைகளுக்கு என்ன கற்பிப்பது, அவர்களை எதற்காகப் பழக்குவதென்றல்லாம் அவள் கவலைப்படாள். மனிதர்களின் கடமை யிதுவென்று அவளுக்குத் தெரியும்; அதையே அவள் போதிப்பாள்

தன் கணவன் போலியுழைப்பில் ஈடுபட்டிருந்தால், குழந்தைகளும் அவனைப் பின்பற்றிவிடுமோ என்றஞ்சி இரட்டிப்புக் கவலையுடன் கணவனை நல்வழி திருப்ப முயல்வாள். இத்தகையவள் தன் பெண்ணுக்குக் கைகளை வெள்ளையாக வைத்திருக்கும் நாகரிக புருஷனைக் கணவனாய்த் தேராது உழைப்பாளியும், யோக்கியனுமாகிய புருஷனையே தேர்வாள். பிறரை வருத்தித் தாம் உழையாதிருப்போரை இவள் மதியாள்; உயிரைக் கொடுத்துழைப்பவர்களையே மதிப்பாள்.

உண்மைத்தாய் தான் பெற்ற குழந்தைகளைத் தானே பாலூட்டி வளர்ப்பாள்; தானே அவைகளைக் குளிப்பாட்டி உண்பிப்பாள்; குழந்தைகளுக்குத் தேவையானவற்றைக் கற்பிப்பதும், நன்மதி புகட்டுவதும், அவைகளுட னுறங்குவதும், அவைகளுக்குத் தங்கள் வேலைகளைத் தாங்களே செய்யப் பழக்கிக் கொடுப்பதுமா யிருப்பாள்; தன் வாழ்க்கையின் நோக்கம், அதுதானெனக் கருதுவாள்.

இத்தகைய தாய் தன் குழந்தைக்குச் சொத்தும் பணமும் பட்டமும் வேண்டுமென விரும்பமாட்டாள். சுயநலம் நீங்கிப் பிறர் நலனுக்காக ஓயாது பாடுபடுவதாலேயே உலகத்திற்கு நன்மை பிறக்குமென்று அறிந்து தன் மக்களை இதே லக்ஷ்யத்தை நிறைவேற்றத் தகுதியுள்ளவர்களாகப் பழக்குவாள். தனது கடமையை எதுவென்று அவள் பிறரிடம் கேட்க மாட்டாள். வேண்டியவெல்லாம் தனக்கே தெரியுமாதலின், எதற்குமவள் அஞ்சாள். மனிதப் பிறவி யுற்றவரே உணர்தற் கியலும் உத்தம நற்கதி நின்று, களங்கமிலா நேர்மை யுள்ளத்துடன் தனது கடமையைத் தாழ்மை

யுடன் நிறைவேற்றும் தாய், ஒரே லக்ஷ்யத்தை நோக்கிச் செல்லும் மனிதவர்க்கம் அனைத்திற்கும் சந்தேகம் களைந்து வழிகாட்டும் விண்மீன் எனத்தகுவாள்.

தன்னுயிரினும் அருமைமிகு குழந்தைகளைப் பெற்று வளர்த்து, அவ்வழி தன் கடனாற்றிக் கடவுளாணையை நிறைவேற்றிய தாய் தன்னைத் தோற்றுவித்த இறைவன் முன் சாகுந் தறுவாயில் மனவமைதியுடனும் மகிழ்ச்சியுடனும், “ஈசா! உன் ஊழியக்காரி சாந்தியுடன், உயிர் நீங்க அருள்புரி!” என்று பிரார்த்திக்க முடியும்.

மாந்தர் எய்துதற்குரிய உயர்கதி யிதுவே; உயர் நலன்தரு தருமமும் இதுவே.

தங்கள் கடமையை இவ்வாறு சரிவர நிறைவேற்றும் மாதரே அரசாளுவோரையும் ஆளுந்திறனுடையராவர். புதுத் தலைமுறைகள் உண்டாவதும் உயர் கருத்துக்கள் தோன்றுவதும் பரவுவதும் இத்தகைய தாய்களாற்றான். தற்காலம் நம் முன்னிற்கும் பயங்கரத் தீமைகளினின்றும், பாபங்களினின்றும் விடுதலையுறல் இத்தகைய தாய்களின் உயர் முயற்சியையே பொறுத்துளது.

ஆம், இவை யாவும் உண்மை. மாதர்களே! தாய்களே! உலகம் கடைத்தேறலும் அதன் கதி மோக்ஷமும் வேறெவர் கையிலு மில்லை; உங்கள் கையிற்றானுளது.

3166

முற்றிற்று

3468.

# சக்தி மலர்

சக்தி மலர்ப் பதிப்பு நூல்கள் தமிழ்மொழிக்கும் தமிழ் நாட்டிற்கும் ஏற்ற உயரிய நற்கருத்துகளை தெளிவான எளிய நடையில் வெளியிட எழுந்தனவாகும். இக்கருத்துகள் பிற நாட்டு நூல்களிற் காணப்பட்டாலும் அவையும் மொழி பெயர்க்கப்பட்டு இப்பதிப்புகள் வாயிலாய் வெளியிடப்பெறும்

இப் புத்தகம் ருஷியப் பெரியார் லியோ டால்ஸ்டாயின் அனுபவக் களஞ்சியமாகும். மக்கள் கவலையில்லாது வாழும் வகையை அவர் மிகத் தெளிவாக விளக்கிக் காட்டியுள்ளார். இவ்வரிய நூலைத் திருவருணை, அறிஞர் ரா. விசுவநாதன் அழகாகவும் எல்லாருக்கும் விளங்கும் படியாகவும் முதனூலேபோன்று எளிய தமிழ் நடையில் மொழிபெயர்த்திருக்கிறார்.

சக்தி காரியாலயம்
52, அரமனைக்காரத் தெரு
" சென்னை "